



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்டியல்

(சிறுகதைத் தொகுதி)

தர்கா நகர்
சுலைமா சமி இக்பால்

வெளியீடு
ACMI Padhippaham
எக்மி பதிப்பகம்
19. கமந்தெனிய வீதி,
கிரிங்கதெனிய, மாவனல்லை, இலங்கை.
தொ.பேசி 035 2246494 - 071 8396397
Gmail: acmipublication@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் ஏனைய நூல்கள்........

**வைகறைப் பூக்கள்** (சிறுகதைத் தொகுதி) 1987
(கல்ஹின்னை தமிழ் மன்ற வெளியீடு)

**மனச் சுமைகள்** (சிறுகதைத் தொகுதி) 1988
(கல்ஹின்னை தமிழ் மன்ற வெளியீடு)

**திசை மாறிய தீர்மானங்கள்** (சிறுகதைத் தொகுதி 2003)
(உடதலவின்னை சிந்தனை வட்ட வெளியீடு)
மத்திய மாகாண கல்வி அமைச்சினால் பாடசாலை நூலகங்களுக்கு உகந்ததென தெரிவு செய்யப்பட்டு தங்கப் பதக்கமும் பரிசும் வழங்கப்பட்டது

**ஊற்றை மறந்த நதிகள்** (சமூக நாவல் 2009)
(மாவனல்லை எக்மி பதிப்பக வெளியீடு)
சர்வதேச பரிசு பெற்றது
2010 ஆம் ஆண்டிற்கான அரச சாகித்திய விழாவில் பாராட்டுப் பத்திரம் பெற்றது.
இந்நூல் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டது.

**நந்தவனப் பூக்கள்** (சிறுவர் கதைகள் 2015)
(மாவனல்லை எக்மி பதிப்பக வெளியீடு)
பாடசாலை நூலகப் புத்தகமாக வெளிவருவதற்கு கல்வி அமைச்சு அனுமதியும் அங்கீகாரமும் வழங்கியது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : உண்டியல் (சிறுகதைத் தொகுதி)
ஆசிரியர் : தர்கா நகர் சுலைமா சமி இக்பால்
முகவரி : 19, கமந்தெனிய வீதி,
கிரிங்கதெனிய, மாவனல்லை
தொலைபேசி : 035-2246494, 071-8396397
உரிமை : ஆசிரியருக்கு
ISBN : 978-955-1825-15-7
விலை : 400\=
முதல் பதிப்பு : 2018 ஜுன்
அட்டைப்படம் : எம்.ஐ அஷ்பாக் அஹமத் - நூர்ஜஹான் உவைஸ்
வெளியீடு : எக்மி பதிப்பகம்
19, கமந்தெனிய வீதி
கிரிங்கதெனிய, மாவனல்லை.
மாவனல்லை.
அச்சகம் : பாஸ்ட் கிரபிக்
: ஹஸன் மாவத்தை, மாவனல்லை

| | |
|---|---|
| Title | : Undiyal (Short Story) |
| Author | : Dharga Nagar Sulaima Sami Iqbal |
| Address | : 19, Gamandeniya Road, Kiringadeniya, Mawanella. |
| Telephone Number | : 035-2246494 - 071-8396397 |
| Copy Right | : Author |
| ISBN | : 978-955-1825-15-7 |
| Price | : 400\= |
| Language | : Tamil |
| First Edition | : 2018 June |
| Cover Page | : M.I Ashfaq Ahamad - Noorjahan Uwais |
| Published By | : ACMI Publication 19, Gamandeniya Road, Kiringadeniya, Mawanella. |
| Printed By | : Fast Graphic 077-9788070 : Hassan Mawattha, Mawanella. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூல்...

மர்ஹூம்களான
என்னை வாழ வைத்த உடன் பிறந்த நானா
*ஏ.எஸ்.எம் மஹ்றூப்,*

என் மைத்துனரும், ஆசிரியரும்
ஊடகவியலாளருமான
*எம்.யூ.எம் ஹனீப்,*

திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலைய
ஸ்தாபகரும், ஆயுட்காலத் தலைவருமாக பணி புரிந்த
*என் ஜிப்ரி ஹனீபா,*

பேருவளை ஜாமியா நளீமிய்யாவின் சிரேஷ்ட
விரிவுரையாளரும், எழுத்தாளருமான சகோதரர்
*எச்.ஐ கைருல் பஷர் நளீமி* M.A

என் எழுத்துக்களின் அபிமானத் தம்பி
*அப்துல் வாரிஸ் மௌலவி,*

என் அன்பு மாமியார்
*ராஹிலா உம்மா அப்துல் காதர்,*

அபிமானத்திற்குரிய
*கவிஞர் ஏ. இக்பால்*

ஜரீனா முஸ்தபாவின் கணவர்
*அல்ஹாஜ் முஸ்தபா*

ஆகியோருக்கே

***சமர்ப்பணம்***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசாரங்களால் புகழாரங்களை அடையவிரும்பாத பெண் படைப்பாளி சுலைமாசமி இக்பால்

ஈழத்து இலக்கிய வரலாற்றில் பெண்படைப்புலகம் மிகவும் குறுகிய பரப்பைக் கொண்டது. இதனால் பெண் படைப்புகள் மீது அதீத அவதானங்களும் ஆர்வமான நோக்குகளும் எழுத்துலகில் இயல்பாகவே இருந்து வருவதனை நாம் காணலாம்.

இவ்வாறு பெண்படைப்பிலக்கியங்கள் மீது கூடியகவனம் எடுத்துக் கொள்வதற்கும் காரணம், எம்மத்தியில் உருவாகின்ற பெண்படைப்பாளிகளை காத்திரமான இலக்கிய அடைவுக்குள் கொண்டு சேர்த்துவிட வேண்டும் என்கின்ற ஒரு தேவையும், இலக்கிய செயற்பாடுகளில் தொடர்ச்சியான ஈடுபாட்டை அவர்கள் கொண்டிருக்க வேண்டும் என்கின்ற ஓர் அவாவும் எமக்குள் இருக்கிறது என்பதுதான்.

அந்த வகையில் 40 வருடங்களாக இலக்கியபடைப்புலகில் கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரைகள் என பல்துறைசார் எழுத்துக்களை எழுதி நான்கு தசாப்தகால இலக்கிய தொடர்ச்சியையும் அதன் மீதான ஈடுபாட்டையும் கொண்டிருக்கின்ற சுலைமா சமியை இலக்கிய உலகம் இலகுவில் மறந்துவிட முடியாது.

ஒரு பெண் இலக்கிய உலகில் 40 வருடங்கள் தொடர் எழுத்தில் இருப்பது என்பது சாமானிய விடயமல்ல. தன்னைச் சுற்றி இருக்கின்ற குடும்ப உறவுகளையும் குடும்ப பொறுப்புக்களையும் சரியாகப் பேணிக்கொண்டு, எழுத்தையும் தன்னை விட்டு விலகாது பேணிவருவது என்பது மிகுந்த சவால்கள் நிறைந்த வெற்றிதான். அந்த வெற்றியைப் பெற்ற சுலைமா சமி இக்பாலை முதலில் நாம் பாராட்ட வேண்டும்.

சுலைமா சமி இக்பால் என்னுடன் மிக நீண்டகால இலக்கிய நட்பும் சகோதர உறவும் கொண்ட ஒருவர். அவருடைய எழுத்துக்கள் மிக யதார்த்தமும் எளிமையும் கொண்டவை. அவைமக்களின் இயல்பான வாழ்க்கை முறைகளின் விசித்திரங்களையும், சமூக அவலங்களில் இன்னல்களையும், வலுவிழந்த அங்கவீனர்களின் நெருக்கடியான வாழ்வியல் குணங்களையும் வெளிப்படுத்தவல்லன.

ஏலவே, மூன்று சிறுகதைத் தொகுதிகளை எமக்குத் தந்த சுலைமா சமி இக்பால் இன்று தனது நான்காவது சிறுகதைத் தொகுதியான "உண்டியல்" என்ற நூலையும் எமது வாசிப்பின் முன் நீட்டுகிறார்.

இத்தொகுதியில் உள்ள சிலகதைகளை என்னால் மேலோட்டமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க முடிந்தாலும் அதற்கான இலக்கிய அந்தஸ்த்தைக் கொடுப்பதற்கான குறிப்புக்களை எழுதுவதற்கான கால அவகாசம் இல்லாத நிலை எனக்கிருந்தபோதிலும். சுலைமா சமியின் இலக்கிய அடையாளத்தையும் அவருடைய எழுத்துக்களையும் யாராலும் குறைத்து மதிப்பிட முடியாது என்கின்ற திடமான நம்பிக்கையை நான் எப்போதும் கொண்டிருக்கின்றேன்.

இதுவரை அவர் பெற்றிருக்கின்ற பரிசுகளும், விருதுகளும், பாராட்டுக்களும் இலக்கியமதிப்பீடுகளை முறையாகச் செய்கின்ற அமைப்புகளின் ஊடாக பெறப்பட்டவை எனும் போது, அவருடைய படைப்புகளுக்கான அங்கீகாரமும் அதற்கான வெற்றியும் அவரை ஒரு முழுமையான படைப்பாளியாக உயர்ந்த இலக்கிய அந்தஸ்த்துடன் எம்மை பார்க்க வைத்திருக்கிறது.

இலக்கிய படைப்புலகிற்கு அப்பால், சுலைமா சமி இக்பால் தனது வானொலி பங்களிப்பாக1984 களிலிருந்து சுமார் பத்து வருடங்களாக நடாத்திவந்த "மாதர் மஜ்லிஸ்" பெரும் வரவேற்பினை பெற்ற மிகமுக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும். பரந்த வாசகர் நேயர்களை இதன் மூலம் அவர் தனக்கென பெற்றிருக்கின்றார். இதன் மூலம் வானொலித் துறையிலும் தனது ஆளுமைத் தடத்தினை அவர் நன்கு பதித்திருக்கிறார்.

எல்லாத் துறைகளிலும் கால் பதித்து ஒருபெண் படைப்பாளியாக தனது இலக்கிய இருப்பையும் அதன் தொடர்ச்சியையும் காப்பாற்றி தன்னாலும் எழுத்துலகில் நிலைத்து நிற்க முடியுமா? என தங்களுக்குள் அச்சத்தோடு கேள்வி கேட்டுக் கொள்கின்ற புதிய தலைமுறை பெண் படைப்பாளிகளுக்கு ஓர் உதாரணமாக காட்டுவதற்கு சுலைமா சமியும் பொருத்தமானவர்தான்.

சுலைமா சமி இக்பால் பிரசாரங்களால் புகழாரங்களை அடைய விரும்பாத தன்னடக்கமான ஒருவர். அவருடைய இலக்கிய பயணம் அவருடைய வாழ்க்கைப் பயணம் போல் இனிமையானதாக அமைந்திருக்கிறது. தன்னோடு தொடர்ந்த இந்த இலக்கியப் பணிதன்னுடைய பிள்ளைகளோடும் தொடரவேண்டும் என்று தனக்கான இலக்கிய வாரிசுகளை அவர் பெற்றிருக்கின்றார்.

அவருடைய எழுத்தும் இலக்கியபணியும் இன்னும் நீண்டு செல்லப் பிரார்த்திப்போம்.

**கரம் ஏந்தியவாறு**
**ரவூப் ஹக்கீம், எம்.பி.**

தலைவர்- ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் ஆளுமை மிக்க படைப்பாளி

இலங்கையின் குறிப்பிடத்தக்க ஒரு பெண் எழுத்தாளராகத் தம்மை வளர்த்து வந்திருப்பவர் சுலைமா சமி இக்பால் அவர்கள். களுத்துறை மாவட்டத்தின் தர்கா நகர் மீரிபென்னையைத் தமது பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் மாவனல்லையை வசிப்பிடமாகக் கொண்டிருக்கிறார். கடந்த நான்கு சகாப்தங்களாக ஈழத்து எழுத்துலகில் தமது ஆக்கங்களால் புகழ் பெற்று வருகிறார் பெருமளவில் இவர் ஒரு சிறுகதை எழுத்தாளராகவே அறிமுகமாகி இருப்பினும் காலப்போக்கில் நாவலாசிரியராகவும் பரிணமித்துள்ளார். அத்தோடு இவர் ஒரு கவிஞரும் கூட. தினகரன் பத்திரிகை ஊடாக 1977 இல் எழுத்துலகில் இவர் கால்பதிக்கத் தொடங்கினார். இலங்கை வானொலியின் மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சியின் முக்கிய பிரதித் தயாரிப்பாளராகவும் இருந்துள்ளார்.

தர்கா நகர் களு / அளுத்கம வீதி முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலையின் பழைய மாணவியாகிய இவர், சில காலம் அப்பாடசாலையின் ஆசிரியையாகவும் பணியாற்றியுள்ளார். சமூகப் பணியிலும் இயல்பாகவே ஆர்வம் கொண்டுள்ள இவர், விழிப்புலன் அற்றோருக்கான கல்விநெறியில் பயிற்சி பெற்று சிலகாலம் திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்திலும் கடமை புரிந்துள்ளார்.

எழுத்துத் துறையில் இயல்பாகவே ஈடுபாடு கொண்டுள்ள இவர், பல்வேறு பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய, சர்வதேச ரீதியில் நடத்தப்பட்ட போட்டிகளிலும் கலந்து கொண்டு, பரிசில்களையும், பதக்கங்களையும் தமதாக்கிக் கொண்டுள்ளார். அத்தோடு, விருதுகளும், பட்டங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதுவரையில் வைகறைப் பூக்கள் (1987) மனச்சுமைகள் (1988) திசை மாறிய தீர்மானங்கள் (2003) ஆகிய இவரது சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. இவர் ஊற்றை மறந்த நதிகள் (2009) என்ற நாவலையும் எழுதி வெளியிட்டுள்ளார். இவரது நந்தவனப் பூக்கள் (2015) என்னும் சிறுவர் இலக்கியமும் நூல் வடிவம் பெற்றுள்ளது.

சுலைமா சமி இக்பாலின் பிள்ளைகளும் எழுத்தாற்றலும், கலை ஆர்வமும் கொண்டவர்களாக விளங்குவது மகிழ்ச்சிக்கும், பாராட்டுக்கும் உரியது. இவரின் மகள் இன்ஷிராஹ் இக்பால் பூ முகத்தில் புன்னகை (2009) என்னும் சிறுகதைத் தொகதியையும், நிழலைத் தேடி...! (2014) என்ற நாவலையும் இளம் வயதிலேயே வெளியிட்டிருப்பது மகிழ்ச்சியை ஏற்படுத்துவதோடு, வாழ்த்துக்கும், பாராட்டுக்கும் உரியது. அதே போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது மற்றொரு மகள் இன்ஷிபா இக்பால் எழுத்தார்வம் உள்ளவராகவும், மகன் அஷ்பாக் அஹமத் சிறந்த ஓவியராக விளங்குகின்றமையும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

ஒரு முறை தினகரன் பத்திரிகையும், கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியமும் இணைந்து நடத்திய இலக்கிய விழாவில் அன்றைய மத்திய மாகாண கல்வி அமைச்சர் வீ. இராதா கிருஷ்ணன் அவர்களால் இன்நூலாசிரியர் சுலைமா சமி இக்பால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். அந்த நிகழ்வில் நானும் கலந்து கொண்டதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. அன்று தான் சுலைமா சமி இக்பால் பற்றி நன்கு தெரிந்து கொண்டேன். இலங்கைக்குக் கிடைத்த குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளர்களில் இவரும் ஒருவர் என்ற பதிவு அன்று முதல் என் மனதில் எற்பட்டது.

இவரது சிறுகதைத் தொகுதியை வாசிக்கத் தொடங்கியதில் இருந்து இலங்கையின் சிறந்து முஸ்லிம் பெண் எழுத்தாளர்களில் ஒருவர் என்ற பதிவு மாத்திரம் அன்றி, நமது நாட்டின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவர் என்ற கருத்தும் என் மனத்தில் ஏற்பட்டது. இத் தொகுதியில் இடம் பெற்றுள்ள அனைத்து சிறுகதைகளும் என்னைக் கவர்ந்தவையே. ஆயினும் சில சிறுகதைகள் என்னை மிகவும் கவர்ந்து விட்டன. ஊனம், குருவியே குருவாக...! மனித நேயம், சுமை...! இங்கேயும் ஒரு ஹஜ் ..., கல்லுக்குள் ஈரம்..., வாழ்க்கை வட்டம், இவர்களும் மனிதர்களே...! சமுதாயமே பதில் சொல் ...! தாயைத் தத்தெடுத்தவர்கள்...! தாயின் பயணம் ஆகியவை அவை. இவை சுலைமா சமி இக்பாலின் அற்புதமான படைப்புகள்.

அவரது ஊனம் என்ற சிறுகதை, அவர் திஹாரிய அங்கவீனர் நிலையத்தில் பணியாற்றிய போது எற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் அமைந்த அருமையான படைப்பு. நல்ல குணநலன்களுடன் சிறந்த ஆசிரியையாகவும் விளங்கும் ஜரீனா கறுப்பு நிறத்தவள் என்ற காரணத்தினால் அவளுக்கு பேசிவரும் திருமணங்கள் தடைப்படுகின்றன. அவளை, அதே அங்கவீனர் நிலையத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் ஸிராஜ் விரும்புகிறான். அவன் கண் தெரியாதவன் என்ற காரணத்தால், ஜரீனா அவனைத் திருமணம் செய்ய விரும்பவில்லை. திருமணப் பேச்சுக்கள் தோல்வியில் முடிந்ததால் காலம் கடந்த நிலையில் ஸிராஜை திருமணம் செய்ய விரும்புகிறாள். ஆனால், காலப் போக்கில் அழகான இளம் பெண்ணைத் திருமணம் செய்து குழந்தையுடன் அவள் வீட்டுக்கு வருகிறான் ஸிராஜ். அவர்களை வரவேற்ற ஜரீனா தன் மனதுக்குள் பின்வருமாறு நினைத்துக் கொள்கிறாள். "கண்கள்ல ஊனம் உங்களுக்கல்ல. கண்பார்வை இல்ல என்கிறதுக்காக உங்க அன்பை உதாசீனம் செய்த எனக்கும், நிறத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து என்னப்போல இளம் பெண்களுக்கு கல்யாண


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு கிடைக்காமச் செய்யும் இந்தச் சமுதாயத்துக்கும் தான் கண்கள்ல ஊனம்'' உளவியல் அம்சங்களோடு இணைந்த சிறந்த சிறுகதை இது.

குருவியே குருவாக...! இன்னொரு நல்ல படைப்பு திருமணத்துக்கு முன் ஏழைத் தந்தை ஒருவர், தமது வீட்டின் அரைவாசியை எழுதித் தருவதாகக் கூறிய வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போனதால், தனது மனைவியையும், பிள்ளையையும் விட்டுப் பிரிந்து வாழும் லாபிர், ஜீவனாம்ச வழக்கின் போது காதி நீதிமன்றத்து மின்விசிறியில் கூடுகட்டி வாழும் குருவிகளின் செயலால் மனம் திருந்தி, மீண்டும் குடும்பத்தோடு வாழ முயல்வதைக் கலையழகுடன் காட்டுகிறது.

கிராம சேவகர் முஹம்மது ஆரச்சி ஒரு சிங்களக் குடும்பம் மீது காட்டிய மனிதநேயம் ஓர் இக்கட்டான சூழ்நிலையில் அவருக்கே நன்மையைத் தருவதாக அமைந்ததைக் காட்டும் இன்னோர் அழகான சிறுகதை மனிதநேயம். மனிதநேயம் எவ்வளவு உயர்வானது என்பதை இக்கதை சமுதாயத்துக்கு உணர்த்துகிறது. மனிதநேயத்தைக் காட்டும் பிறிதொரு கதை, மனிதம் மரணிப்பதில்லை என்பதாகும்.

எழுத்தாளர் சுலைமாவின் எழுத்தாற்றலை சிறப்பாக அம்பலப்படுத்தும் பிறிதொரு சிறுகதை சுமை...! ஷலீம் - ஷியாமா குடும்பத்தில் அடுத்தடுத்து நான்கு பெண் பிள்ளைகள் ஐந்தாவதும் பெண்பிள்ளைதான். என 'ஸ்கேன்' கருவி தெரிவிக்கிறது. ஸலீம் கருக்கலைப்புச் செய்யமாறு மனைவியை வற்புறுத்தவே, அவனது வற்புறுத்தலுக்காக அவள் விருப்பம் இல்லாமலே கருக்கலைப்பு மருந்துகளை உட்கொள்கிறாள். அவர்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக ஆண் குழந்தை பிறக்கிறது ஆனால், தாய் இறந்து விடுகிறாள். குடும்பப் பொறுப்பை மூத்த பெண் ஏற்கிறாள். கருக்கலைப்பு மருந்துகளின் காரணமாகக் குழந்தை மூளை வளர்ச்சி குன்றிப் பிறந்திருக்கிறது என்று வைத்தியர் தெரிவிக்கிறார். ஐந்தாவதாகவும் பெண் குழந்தை பிறப்பதைச் சுமையென்று கருதினான் ஸலீம். ஆனால் ஆண் குழந்தை ஒன்று கிடைத்தும் அவனது தவறான போக்கால் மனைவியை இழந்தும், மூளை வளர்ச்சி குறைந்த பிள்ளையைப் பெற்றும் சுமைகளைச் சுமக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டான். அதேவேளை இக்கதை இன்னொன்றையும் புலப்படுத்துகிறது. பெண்பிள்ளைகளைச் சுமை என்று ஸலீம் கருதிய போதிலும் மனைவியை இழந்த நிலையில், அவனது மூத்த பெண்பிள்ளையே குடும்பச் சுமையைச் சுமக்க முன்வருகிறாள். இச்சிறுகதைக்கு ஈழத்துச் சிறுகதை உலகில் தனியான ஓர் இடம் உண்டு.

இங்கேயும் ஒரு ஹஜ் என்ற சிறுகதையும் இன்னொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்க படைப்பு. சுனாமியால் ஏற்பட்ட அழிவின் காரணமாகத் தென்னிலங்கையில் இருந்து கிழக்கிலங்கை நோக்கி வாகனங்களில் நிவாரணப் பொருட்கள் ஏற்றிச் செல்லப்படுகின்றன. முஸாதிக் ஹாஜியார் ஹஜ்ஜுக்குப் போவதற்காகத் தாம் சேகரித்து வைத்திருந்த பணத்தைச் சுனாமியால் பாதிக்கப்பட்ட யாருக்காவது வழங்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறார். தமக்கு ஏற்கனவே தெரிந்தவரான காஸிம் ஹஸரத்தை இடையிலே சந்திக்கிறார். தாம் அவருக்கு முன்னர் செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டதோடு, சுனாமியால் பாதிக்கப்பட்ட அவருக்குப் பெருந்தொகைப் பணத்தையும் கொடுத்து, அவரது ஒரு பெண் பிள்ளையைத் தமது இளைய மகனுக்குத் திருமணம் செய்து கொடுக்கவும் விரும்புகிறார். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதன் மூலம், அந்நாட்டிலேயே ஒரு ஹஜ்ஜை முஸாதிக் ஹாஜியார் நிகழ்த்துகிறார்.

கல்லுக்குள் ஈரம் என்பதும் பிறிதொரு நல்ல சிறுகதை. சேவைச் செம்மல் அல்ஹாஜ் ஆப்தீன் ஊரில் முக்கியமான புள்ளி. அவரின் அண்ணன் அமீன், ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்ததமையால், தந்தை கரீம் ஹாஜியார் சொத்து முழுவதையும் இளைய மகன் ஆப்தீனுக்கே எழுதி வைக்கிறார். தாம் நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் மூத்த மகன் அமீனுக்குச் சொத்தில் பாதியைக் கொடுக்குமாறு ஆப்தீனிடம் தெரிவிக்கிறார். ஆனால், ஆப்தீன் அண்ணன் குடும்பத்துக்குச் சொத்தில் பாதியைக் கொடுக்காமல் தாம் வைத்துக் கொள்கிறார். ஒருமுறை தாம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் நிகழ்வு ஒன்றில் சிறப்பாகப் பேசிய தமது அண்ணன் மகனின் பேச்சைக் கேட்டு மனம் மாறிய அவர், சொத்தில் பாதியை அண்ணன் குடும்பத்துக்குக் கொடுக்கத் தீர்மானிக்கிறார்.

வாழ்க்கை வட்டம் என்ற சிறுகதை ஒரு தந்தையின் வீண் பிடிவாதம் எந்த அளவுக்கு ஒரு குடும்பத்தையே பிரித்து வைத்து ஒரு பிள்ளையின் மனத்தையும் பாதிக்கிறது என்பதைக் காட்டுகிறது. ஈற்றில் தந்தையின் நிலைப்பாட்டை எதிர்க்கத் துணியும் போது, தந்தை மனம் திருந்துகிறார். இதுவும் ஒரு குறிப்பிடத் தக்க படைப்பாக அமைந்துள்ளது.

“இவர்களும் மனிதர்களே” என்பதும் இத்தொகதியில் உள்ள இன்னொரு குறிப்பிடத் தக்க சிறுகதை. நிஸார் - பரீதா தம்பதியினர் கிராமம் ஒன்றிலிருந்து ரமீஸாவை அழைத்து வந்து வீட்டில் வேலைக்காரியாகவே நடத்துகின்றனர். அவளைப் படிக்க வைத்து நன்றாகக் கவனிப்போம் என அவளின் தந்தைக்கு அவர்கள் அளித்த வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை. அவள் அந்த வீட்டுக்கு வந்த பின்னர் பிறந்த இரு அங்கவீனமான பெண் பிள்ளைகளையும் அவளே பராமரிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்போக்கில் அந்த வீட்டிலிருந்து அவள் வெளியேற விரும்பிய போதிலும், மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் உதவ முன் வந்த போதிலும் தனது பராமரிப்பில் வளர்ந்த அந்த இரு அங்கவீனப் பிள்ளைகளையும் கருத்தில் கொண்டு தனது முடிவை மாற்றுகிறாள். ரமீஸாவின் மனிதாபிமானம் இச்சிறுகதைக்கு உச்சத்தைக் கொடுக்கிறது.

"சமுதாயமே பதில் சொல்...!" என்ற சிறுகதையில், ஒரு ஏழைக் குடும்பத்தின் பரிதாப நிலைக்குச் சமுதாயமே காரணம் என்பது விமர்சனபூர்வமாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. இயல்பாகவே ஏழ்மைச் சூழ்நிலையில் வாழ்ந்த குடும்பம் குடும்ப வறுமை காரணமாகக் குடும்பத் தலைவனின் தற்கொலையின் பின் மேலும் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்படுவதையும், சமுதாயம் பாராமுகமாக இருப்பதையும் இக்கதை உணர்த்துகிறது. சமுதாய உணர்வுடன் படைக்கப்பட்ட ஒரு நல்ல சிறுகதை இது.

"தாயைத் தத்தெடுத்தவர்கள்...." என்ற கதை, சமுதாயத்தின் இன்னொரு பக்கத்தைக் காட்டுகின்றது. பெற்ற பிள்ளைகள் பலர் இருந்தும் ஒரு தாய் வயோதிபர் இல்லத்தில் சேர்க்கப்படுகிறாள். நோய் வாய்ப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறாள். பிள்ளைகள் யாரும் வந்து பார்க்காத நிலையில், முன்னர் தங்கள் வீட்டில் வேலை செய்து, தங்களுக்கு தாய் போல நடந்து தங்களைப் பராமரித்த அப்பெண்மணியை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த குடும்பத்தவர்கள் தம் தாயாகத் தத்தெடுத்துக் கொண்டனர்.

இச்சிறுகதைத் தொகுதியில் இறுதியாக இடம் பெற்றுள்ள கதை "தாயின் பயணம்" ராபியா உம்மா நீண்ட காலமாகக் கணவருடன் சேர்ந்து ஹஜ்ஜுக்குச் செல்ல விரும்பியிருந்தாள். ஆனால், கணவர் எதிர்பாராத விதமாகத் திடீரென காலமாகி விடுகிறார். ஹஜ்ஜுக்காகச் சேர்த்திருந்த பணத்தை மூத்த மகன் முஸ்தபாவிடம் கொடுத்து வைக்கிறாள். அவனோ அப்பணத்தை வைத்துக் கொண்டு தனது வியாபாரத்தை விஸ்தரிக்கிறான். தாயின் ஹஜ் பயணம் கைகூடவில்லை. நோய்வாயப்பட்ட தாய், தனது விருப்பம் நிறைவேற்றப்படாத நிலையில் மகனிடம் புதிய வேண்டுகோள் ஒன்றை விடுத்து விட்டு காலமாகி விடுகிறார். அந்தத் தாய்க்காக வாசகர்கள் நிச்சயம் இரங்கவே செய்வர்.

சுலைமா சமி இக்பாலின் சிறுகதைகள் முஸ்லிம் சமுதாயத்தின் பல பக்கங்களையும் பார்க்கின்றன. அவை குடும்ப, சமுதாயப் பிரச்சினைகளை அலசுவதோடு, விமர்சனமும் செய்கின்றன. இலக்கியம் ஏதோ ஒரு வகையில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும் இருப்பது வரவேற்கத்தக்கது. அதனையும் அவரின் படைப்புக்கள் செய்ய முனைகின்றன. இவற்றோடு, இலக்கியப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புகள் வாசகர்களின் சுவை உணர்வையும் கவனத்தில் கொள்ள வேண்டும். சத்துள்ள உணவாக இருந்தாலும், சுவையாக இருக்க வேண்டும். அப்போதுதான் அதனை ரசித்து உண்ண முடியும். இலக்கியங்களும் அப்படித்தான். கனதியும் வேண்டும் கலையழகும் வேண்டும். எழுத்தாளர் என்ன சொல் வருகிறார் என்பதோடு, எப்படிச் சொல்கிறார் என்பது முக்கியமானது. இலக்கியத்தில் கலை அழகை ஏற்படுத்துவது, எழுத்தாளரின் எழுத்தாற்றல் ஆகும். சுலைமா சமி இக்பாலின் எழுத்தாற்றல் நிறைவாகவே உள்ளது அதனால்தான் அவரின் படைப்புகள் வாசகரினதும், விமர்சகரினதும் கவனத்தை ஈர்க்கின்றன.

சுலைமா சமி இக்பாலின் படைப்புகளில் முக்கியமான இன்னொரு விடயம், முஸ்லிம் பேச்சு வழக்கை அதன் இயல்பு குன்றாமல் சிறப்பாகப் பயன்படுத்துவதாகும். அது அவரின் படைப்புக்களுக்கு இயல்பாகவே உயிரோட்டத்தை நல்குகிறது. எழுத்தாளர்களின் எழுத்தாளுமையை மேம்படுத்துவதில், அவர்கள் கையாளும் பாத்திரங்களின் பேச்சு வழக்கும் முக்கிய பங்கினை வகிக்கிறது.

சுலைமா சமி இக்பாலின் இச்சிறுகதைத் தொகுதி, அவரின் மற்றைய நூல்களைப் போல் இலக்கிய உலகில் தனக்குரிய மதிப்பைப் பெறும் என்பதில் சந்தேகம் இல்லை. அவர் மென் மேலும் தனது படைப்புக்களால், ஈழத்து இலக்கியத்தை வளம்பெறச் செய்ய வேண்டும். அவருக்கு மட்டுமன்றி, அவரின் குடும்பத்து இளைய வாரிசுகளுக்கும் இப்பொறுப்பு உண்டு.

**பேராசிரியர் : துரை மனோகரன்**

முன்னால் தமிழ் துறைத் தலைவர்
பேராதனைப் பல்கலைக் கழகம், பேராதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகம் சார்ந்த சிறுகதைகள்

நாற்பது வருடங்களாக இலக்கிய உலகில் உலாவந்து கொண்டிருக்கும் ஒரு நாமம்தான் சுலைமா சமி இக்பால். இக்கால கட்டத்தில் இவர் எழுதிய ஆக்கங்கள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதைப் பொறுத்தே இவரது நிலைப்பு உறுதி பெற முடியும்.

வைகறைப் பூக்கள் (சிறுகதை - 1987) மனச் சுமைகள் (சிறுகதை - 1988) திசை மாறிய தீர்மானங்கள் (சிறுகதை - 2003), ஊற்றை மறந்த நதிகள் (நாவல் 2009), நந்தவனப் பூக்கள் (சிறுவர் இலக்கியம் - 2013) போன்ற நூல்களைத் தந்துள்ளார். வானொலி நிகழ்ச்சிகள், குரல் வழிக் கதை போன்ற வெளிப்பாடுகளும் செய்துள்ளார்.

சுலைமா தர்கா நகரைப் பிறப்பிடமாகவும் மாவனல்லையை வசிப்பிடமாகவும் கொண்டவர். ஒருவருடைய மண் என்பது எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பதைப் பொறுத்து தீர்மானிக்கப்படுவதில்லை. பிறப்பின் பரம்பரையும் இளமை வாழ்வனுபவங்களும் எந்த மண்ணாகப் பார்க்கப்படுவது பொதுப் பார்வையாகும். உண்மையான படைப்பாளி அந்த மண்ணோடு ஒன்றி நின்றே படைப்பாக்கம் செய்வான். யதார்த்த இலக்கியவாதிகள் கடைசிவரை தமது மண்வாசனையை விட்டுக் கொடுத்ததில்லை. புதுமைப் பித்தன், ராஜநாராயனன், சிதம்பா ரகுநாதன், கே. டானியல், தெளிவத்தை ஜோஸப் இப்படி அப்பட்டியல் தொடரும்.

மற்றவர்களுக்கு விளங்காமல் போய்விடுமோ என்று கருதி, தமது பேச்சுவழக்கிலிருந்து தூரமாகிவிடும் எழுத்தாளர்கள் பலர் உள்ளனர். தன் பிள்ளை அழகாக இல்லை என்பதற்காக, அழகானதொரு பிள்ளையை தன் பிள்ளையாய்க் காட்ட முயலும் தாயைப் போல....

ஒரு படைப்பாளி குறிப்பிட்டதொரு வட்டார வழக்கைத்தான் கையாள வேண்டுமென்று எந்த நியதியும் கிடையாது. யாழ்ப்பாண எழுத்தாளர்களான நந்தி, பெனடிக்ற் பாலன், தி. ஞானசேகரன் போன்றோர் மலையக பேச்சு வழக்கில் நாவல்கள் எழுதியுள்ளனர். மலையக எழுத்தாளரான ப. ஆப்தீன் அனுராதபுர பேச்சு வழக்கில் நாவல் எழுதியுள்ளார். அவ்வாறே சுலைமாவும் தர்கா நகர் பேச்சு வழக்கில் மாத்திரமன்றி, மாவனல்லை வழக்கிலும் சிறுகதைகள் எழுதியுள்ளார்.

எவ்வாறாயினும் சுலைமா சமி இக்பால் தன் இலக்கிய பயணத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கிறார் என்றே சொல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக முஸ்லிம் பெண்கள் ஆற்றல் சார் துறைகளில் ஈடுபாடு கொள்வது திருமணத்தோடு இடைநிற்கும் துர்ப்பாக்கியத்தை இவர் வென்றெடுத்துள்ளார். எழுத்துத் துறையிலும் பெண்களின் பணி சமூகத்திற்கு தேவையென்பதை, மார்க்க அறிஞரான இவரது வாழ்க்கைத் துணை விளங்கித் துணை நிற்பது உண்மையில் ஆதர்ஷமான விடயமாகும்.

அதே போன்று தமது பிள்ளைகளுக்கும் பாலூட்டி, சோறூட்டி, கலை - இலக்கிய உணர்வூட்டி வளர்த்து, இன்று முழுக் குடும்பமுமே கலா ரசனையில் லயித்திருக்கின்றது.

* * *

"உண்டியல்" என்ற இச்சிறுகதைத் தொகுப்பில் பதினேழு கதைகள் அடங்கியிருக்கின்றன. இக்கதைகளின் நோக்கு, போக்கு, உருவ உள்ளடக்கத்தைப் பொறுத்து, வசதிக்காக சிலவகை நிலைப்பாட்டுக்குள் கொண்டு வரலாம்.

தனி மனிதன், குடும்பம், அயலவர் என்று விரிந்து கிடக்கும் சமூகக் களத்தில் நிலவும் பல்வேறு குறைபாடுகள், அநீதிகள், பிரச்சினைகள், சிக்கல்களை கூர்மையாக அவதானிக்கும் திறன் கதாசிரியையிடம் காணப்படுவதை குருவியே குருவாக, சுமை, கல்லுக்குள் ஈரம், வாழ்கை வட்டம், இவரகளும் மனிதர்களே போன்ற கதைகளில் அவதானிக்கலாம்.

குறிப்பிட்ட மக்கள் மத்தியிலிருந்து மேற் கிளம்பும் பேசு பொருளை, இயல்பான சூழல்... நிஜமான கதா பாத்திரங்கள்... பொறுத்தமான சம்பவக் கோர்ப்பினூடாக வெளிப்படுத்தி, தனது இலக்கை நோக்கி முனைப்பாக்கி முத்தாய்ப்பு வைக்கிறார். இவரது கற்பனை வளத்தையும் அதைச் சிறப்பாகப் பிரயோகிப்பதையும் நயந்து வியக்க முடிகிறது.

"கல்லுக்குள் ஈரம்" என்ற கதையிலே மூத்த சகோதரன் மீது தந்தை கொண்ட கோபத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி, முழுக் குடும்பச் சொத்தையும் தனக்குள் அமுக்கிக் கொண்ட ஒரு தம்பியின் கதை பேசப்படுகிறது. சகோதரன் காலமாகி மனைவி - பிள்ளைகள் அநாதரவாகிய பின்பும். தம்பியின் நிலையில் மாற்றம் வரவில்லை. போதாக்குறைக்கு அவர் ஊரிலே பெரிய பிரமுகரும்கூட. மீலாத் விழாவொன்றுக்கு அதிதியாகச் சென்றிருந்த போது அங்கே ஒரு மாணவனின் பேச்சைக் கேட்டு மனம் நெகிழ்ந்து போகிறார். அது தன் சகோதரனின் மகனே என்பதையும் பின்னர் அறிகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே மனமாற்றத்தின் மூலம் சொத்துப் பிரச்சினை தீர்வதைப் பார்க்கிறோம். மகிழ்ச்சிதான். இப்பிரச்சினை சமூகத்தில் பரவலாகக் காணப்படுவதை நாம் அறிவோம். சொத்துப் பகிர்வு பற்றி இஸ்லாம் தெளிவாகச் சொல்கிறது. அநாதைச் சொத்து பற்றி திட்டவட்டமாகவே எடுத்துக் கூறுகின்றது. சக்காத், சதகாவை விதியாக்கியிருக்கிறது. சமத்துவம், சகோதரத்துவம் பற்றியெல்லாம் பேசுகிறது.

தனி நபர் மன மாற்றங்களை விட, சமூக மன மாற்றத்தையும் அதற்கான செயல் திட்டங்களையும் நோக்கி முன்னகர்த்தும் வகையில் படைப்பாளியின் எழுத்து வன்மை பிரயோகிக்கப்படுவது முக்கியமாகும்.

தனிப்பட்ட பிரச்சினைகளாகவும் அதே வேளை சமூகப் பிரச்சிகைளாகவும் அமைந்த விடயங்கள் மீதும் சுலைமாவின் கவனம் சென்றிருப்பதை இப்படியும் ஒரு ஹஜ், பலிக்கடாக்கள், தாயின் பயணம், தொப்பி போன்ற கதைகளிலே காணலாம்.

சுனாமியால் வீடிழந்த ஹஜரத்துக்கு ஹஜ் பயணத்தை இடைநிறுத்தி, அந்தப்பணத்தை அடிப்படைத் தேவையான வீடமைக்க கொடுப்பதை இப்படியும் ஒரு ஹஜ் என்ற கதை ஓங்கி ஒலிக்கிறது. அதிகம் அதிகமாக பல கோணங்களிலும் எழுதப்பட வேண்டிய ஒரு விடயம் இது.

இன்று ஹஜ் - உம்ரா என்பது பாரிய வியாபாரமாக மாறி யுள்ளது. ஹஜ் முகவர்களிடையே சண்டை சச்சரவு, வழக்குகள் எல்லாம் நடைபெறுகிறது பயணிகள் ஏமாற்றப்படுகின்றனர். பண மோசடிகள் வேறு.

சுன்னத்தான ஹஜ் - உம்ராக்களால் வருடாந்தம் செலவிடப்படும் கோடிக்கணக்கான பணத்தால் எவ்வளவோ சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம். பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைப்பதை விட பயணத்தை ஊக்குவிப்பதற்கான பயான் பணிகள் ஏராளம்.

இப்படியான சந்தர்ப்பங்களில் படைப்பாளி தன் சமூகப் பொறுப்பை சரியாகச் செய்ய வேண்டிய கடமைப்பாட்டுக்கு உட்படுகிறார். இதற்கு மேற்படி கதை நல்ல உதாரணமாகும்.

மனி நேயம், தாயைத் தத்தெடுத்தவர்கள் மனிதம் போன்ற கதைகள் இன்னொரு கோணத்தில் பார்க்கப்பட வேண்டியவை.

நமது நாடு பல இன, மதங்களைக் கொண்ட நாடு. பல பண்பாடுகள் கலக்கும் போது, ஒவ்வொரு சாராரும் விலகி ஒதுங்கி வாழ்வதென்பது சாத்தியமானதல்ல. மாறாக ஒருவரை ஒருவர் புரிந்து இணைந்து வாழ்தல் வேண்டும். முப்பது வருட யுத்தம் தந்த ஆய்வுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகள், பன்முகப்பண்பாடு வளர்க்கப்பட வேண்டும் என்பதை விதந்துரைக்கின்றது.

தத்தமது தனித்துவ அடையாளங்களை பாதுகாத்துக் கொண்டு, முடிந்த வரை இணைந்து வாழ்வதும் மனித நேயம் சார்ந்ததே என்பதை விளங்கிக் கொண்டால் சரி.

"தாயைத் தத்தெடுத்தவர்கள்" என்ற கதையிலே, ஒரு வைத்தியசாலையில் ஒருவருக்கொருவர் துணை நிற்பதில் இனமோ மதமோ குறுக்கே நிற்கவில்லை, மனித மனப் பாங்கே மேலோங்கி நின்றதென்பதை கதாசிரியர் சிறப்பாகச் சித்தரித்துள்ளார். மென் மேலும் வளர்க்கப்பட வேண்டிய பன்மைத்துவப் பார்வைக் கோணம் இது. மேற்சொன்ன வகை மாதிரியான கதைகளுக்கு அப்பால் ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது, குறிப்பிடத்தக்க சிறப்புச் சிறுகதைகளில் தலைப்புக் கதையான உண்டியலும் ஒன்று.

அமோகமாக சிகரட் புகைக்கும் பழக்கமுடைய நசீர் பிள்ளைகளின் வற்புறுத்தலால் அதனைக் கைவிடுகிறார். அதற்கு செலவிடும் பணத்தை நாளாந்தம் ஒரு உண்டியலில் இட்டு வந்தார். இயற்கை அனர்த்தத்திற்கு அக்குடும்பம் உள்ளாகிறது. வீட்டு இடிபாடுகளுக்குள்ளிருந்த அந்த உண்டியல் ஒரே சொத்தான அவன் கண்களில் படுகிறது.

சம்பவக் கோர்ப்பு, பல்வேறு உணர்வு வெளிப்பாடு, வாழ்வின் திருப்பங்கள், குடும்ப அங்கத்தவர் தொடர்பாடல், நம்பிக்கைளின் வெற்றி போன்ற விடயங்களின் சங்கமமாக கதை வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்தொகுப்பினூடாக இவர் மேலும் கவனயீர்ப்புப் பொறுவார் என்பது நிச்சயம்.

* * * *

சுலைமா சமி இக்பாலின் ஆக்கங்கள் இலங்கையின் எல்லா பத்திரிகை - சஞ்சிகைகளிலும் வெளிவந்தவண்ணமுள்ளன.

பெண் படைப்பாளிகள் என்று எந்த வகையில் பேசினாலும், இவரது பெயரை எவரும் தடுத்துவிட முடியாது.

"ஜீவநதி" பெண்கள் சிறப்பு மலர் - 2017 இல் இவரைப் பற்றி திக்குவல்லை ஸப்வான் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார்.

தர்கா நகருக்கும் களுத்துரை மாவட்டத்துக்கும் மட்டுமன்றி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவனல்லைக்கும் தக்க நற்பெயரை ஈட்டிக் கொடுத்த பெருமை இவரைச் சாரும்.

பிரதேச செயலாளர் மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரையிலும், சர்வதேச ரீதியாகவும் தனது புலமைக்காய் சான்றிதழ்... விருது... பொற்கிழி... தங்கப்பதக்கம் என்று வேண்டிக் குவித்துள்ளவர்.

ஆனால் ஒரு படைப்பாளி எவ்வளவு எழுதியிருக்கிறார் என்பதோ, எத்தனை பட்டங்கள், பரிசுகள் வாங்கியிருக்கிறார் என்பதோ, படைப்பின் கனதியை தீர்மானிப்பதில்லை என்பதையும், சுய திருப்தி அடைந்து கொள்வது வளர்ச்சிக்கு வழியல்ல என்பதையும் சுலைமா நன்றாக அறிந்து வைத்தள்ளார்.

இன்று சிறுகதை உருவ உள்ளடக்க ரீதியாக பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. பல்வேறு கருத்தியல்கள் சிறுகதைகளையும் பாதித்துள்ளது. கருவே இல்லாமல் கதைகள் எழுதப்படுகின்றன. நேர்கோட்டுப் போக்கும் கட்டுக்கோப்பும் அவசியமில்லை என்று வந்து விட்டது.

இவற்றையெல்லாம் ஒரு சிறுகதைப் படைப்பாளி கண்டு கொள்ளால் கடந்து போய்விட முடியாது. காணாதது போல் இருந்து விடவும் இயலாது.

எதுவெல்லாம் நமது படைப்புத் தொழிலுக்கு துணை நிற்கின்றனவோ, அவற்றையெல்லாம் நம் உள் வாங்கி எமது அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்தாக வேண்டும்.

சுலைமா சமி இக்பாலின் இலக்கிய எதிர் காலம் மென் மேலும் பிரகாசமாக அமையும் என்பது எனது நம்பிக்கை.

**திக்குவல்லை கமால்**
10.01.2018

dickwellekamal@gmail .com
0716386955 - 038 2292118


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

மதிப்புக்குரிய எழுத்தாளர் சுலைமா சமி இக்பால் அவர்களது ஆறாவது நூலான உண்டியல் சிறுகதைத் தொகுப்புக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இலக்கியக் குடும்பம் ஒன்றின் தாயாக விளங்கும் சுலைமா சமி இக்பால் அவர்களை நான் கடந்த பல வருடங்களாக நன்கு அறிவேன். நான் பாடசாலை மாணவனாக இருக்கின்ற காலத்திலேயே இவரது எழுத்துக்களைப் பத்திரிகைவாயிலாக படித்திருக்கிறேன். அதன் மூலம் சுலைமா சமி இக்பால் எனும் பெயர் எனக்கு நன்கு பரிச்சயமானதொன்று. பின்னர் விடிவெள்ளி பத்திரிகைக்கு தனது ஆக்கங்களை அனுப்பியதன் ஊடாக நேரடியாக அறிமுகமான இவர், என்னை ""மகன் மகன்"" என அன்பாக அழைப்பதன் மூலமாக மிகவும் நெருக்கமானதொரு உறவைப் பேணி வருகிறார்.

இலக்கியத்தின் மீதான இவரது தீராத தாகம் என்னை எப்போதும் வியக்க வைப்பதுண்டு. வயோதிப காலத்திலும் சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்ற நிலையிலும் கூட என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆக்கங்கள் தொடர்பில் உரையாடுவார். அதற்கப்பால் குடும்ப நலன்கள் தொடர்பில் கேட்டறிந்து கொள்வார்.

நான் ஏலவே குறிப்பிட்டது போல தனது கணவர் மற்றும் பிள்ளைகளையும் இலக்கியத்துறையில் ஊக்குவிக்கின்ற இலக்கியத் தாயாக இவர் விளங்குகிறார். கணவர் மௌலவி இக்பால் அவர்களையும் எழுதத் தூண்டுவதுடன் அவரது ஆக்கங்களையும் பத்திரிகைக்கு அனுப்பி வைப்பார். அதேபோன்றுதான் தனது வழியில் மகள் இன்ஷிரா இக்பாலையும் இலக்கியப் படைப்பாளியாக வார்த்தெடுத்திருப்பதும் இங்கு குறிப்பிட்டுக் கூறத்தக்கதாகும்.

மாணவப் பருவத்திலேயே நூல்களை வெளியிடக் கூடிய அளவுக்கு அவருக்கு தைரியத்தையும் வழிகாட்டலையும் வழங்கியவர் என்ற வகையில் சுலைமா சமி இக்பால் அவர்கள் ஏனைய பெற்றோருக்கும் இலக்கியவாதிகளுக்கும் முன்மாதிரியாக விளங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் நான்கு தசாப்த காலமாக எழுத்துப் பணியில் தடம்பதித்திருக்கும் சுலைமா சமி இக்பால் அவர்களது சிறுகதை, கட்டுரை, கவிதை, நாவல், வானொலிப் பிரதியாக்கம், ஆய்வு எனும் பல்வேறு வகைப்பட்ட நூற்றுக் கணக்கான ஆக்கங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவந்திருப்பதும் இதற்காக பல்வேறு விருதுகளை வென்றுள்ளமையும் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளமையும் இவரது எழுத்துக்குக் கிடைத்த அங்கீகாரமாகும்.

ஓர் ஆசிரியராகவும் சமூக அக்கறை கொண்ட தாயாகவும் விளங்கியவர் என்ற வகையில் சமூகத்தில் கண்டுகொள்ளப்படாத பக்கங்களை தனது ஆக்கங்களின் கருவாகக் கொள்வதே இவரது இலக்கியப் படைப்புகளின் வெற்றிக்கு காரணம் எனக் கருதுகிறேன்.

அந்த வகையில் விழிப்புலனற்றோர் மற்றும் விசேட திறன் கொண்டவர்களுடனான தனது அனுபவங்களை கதைகளாக மாற்றி சமூகத்தின் கவனத்தை ஈர்த்தமை பெரிதும் மெச்சத்தக்க பணியாகும்.
சகோதரி சுலைமா சமி இக்பால் அவர்களது இலக்கியப் பணி மேலும் தொடர வாழ்த்துவதுடன் அவரது தேகாரோக்கியத்துடன் கூடிய நீண்ட ஆயுளுக்காகவும் பிரார்த்திக்கிறேன்.

மிக்க அன்புடன்,
**எம்.பி.எம். பைறூஸ்**

ஆசிரியர், விடிவெள்ளி
25.06.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

எல்லாப் புகழும், பெருமையும் ஏகன் அல்லாஹ்வுக்கே. அல்ஹம்துலில்லாஹ்.

எனது ஆறாவது நூலாகவும், நான்காவது சிறுகதைத் தொகுதியாகவும் வெளிவரும் இந்த உண்டியல் சிறுகதைத் தொகுதியை இலக்கிய உலகிற்குத் தருவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

எழுத்துப் பணி என்பது ஒரு புனிதமான சமுதாயப் பணியாகும். எனவே அதனை நாம் சமூகத்தின் மேம்பாட்டிற்காகவும், விழிப்புணர்ச் சிக்காகவும் பயன்படுத்த வேண்டும்.

இலக்கியவாதிகளின் எழுத்துக்கள் இலட்சியம் கொண்டவை. மனித உணர்வுகளை நிதர்சனமாகத் தொட்டுப் பேசும் ஆற்றல் இலக்கியவாதிகளுக்கு உண்டு. சமூக அவலங்களை உணர்ச்சிபூர்வமாக சுட்டிக் காட்டி சமூக சீர் திருத்தத்திற்கு வழி வகுப்பதில் சிறுகதை இலக்கியத்திற்கு பாரிய பங்குண்டு. எல்லாம் வல்ல அல்லாஹ் எனக்கு எழுத்தாற்றலையும், மானிடத்தை நேசிக்கும் மனதையும் தந்திருக்கின்றான் அல்ஹம்துலில்லாஹ்.

இந்த நூலில் நீங்கள் சந்திக்கும் பாத்திரங்கள் வெறும் கற்பனைப் பாத்திரங்கள் அல்ல. வழமை போன்றே இக்கதை மாந்தர்கள் உங்களுக்கு மிகவும் பரிச்சயமானவர்கள். வாழ்க்கைப் பாதையில் நாம் சந்தித்துக் கொள்ளும் நிஜமானவர்கள்.

ஆரம்பத்தில் எனது எழுத்து முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த என் அன்புப் பெற்றோரையும், உடன் பிறப்புக்களையும் இச்சந்தர்ப்பத்தில் கண்கள் பனிக்க நினைத்துப் பார்க்கின்றேன்.

திருமணத்துக்குப் பின் என்னை மென்மேலும் எழுதத் தூண்டுவதும் உற்சாகப் படுத்துவதும், என் வெற்றிக்குத் துணை நின்று உழைப்பதும் என் கணவர் அல்ஹாஜ் மௌலவி ஏ.ஸீஎம் இக்பால் அவர்கள்தான். அவர் இல்லாவிட்டால் நானும் இல்லை என் எழுத்தும் இல்லை. என் இலக்கிய வளர்ச்சிக்கு அவரின் பங்களிப்பு அபரிமிதமானது.

எங்கள் நாட்டைப் பொறுத்தவரையில் பல்லின மக்களும் வாழும் நாடு இது. இனங்களுக்கிடையே நல்லுறவும், புரிந்துணர்வும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தால்தான் நாமும் மக்களும் நன்றாக வாழ முடியும். எனவேதான் இனங்களை இணைக்கின்ற சிறுகதைகளையும் எழுதியிருக்கிறேன். அவற்றிற்காக பரிசுகளும் பெற்றிருக்கிறேன்.

மேலும் இருபத்தைந்து வருடங்களுக்கு முன் திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்தில் விழிப்புலன் இழந்த மாணவர்களுக்கு ஆசிரியப் பணி புரியும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. விழிப்புலன் இழந்தோருக்கான கல்வி நெறியில் பயிற்சி பெற்று அங்கு சில காலம் பணி புரிந்துள்ளேன். அந்தப் பாக்கியத்தை எனக்குத் தந்த அல்லாஹ்வுக்கு நன்றி கூறுவதுடன், நிலையத்தின் ஸ்தாபகரும், ஆயுட்காலத் தலைவருமான மர்ஹூம் அல்ஹாஜ் ஜிப்ரி ஹனிபா அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டவள்.

மாற்றுத் திறனாளிகளுடன் நெருங்கிப் பழகி அவர்களுக்குப் பணி செய்த நிகழ்வுகள் எனக்கு வாழ்க்கையில் மறக்க முடியாத விடயமாகும். வலுவிழந்தோர் படும் மனத்துயரங்கள், உணர்வுகள், எதிர்பார்ப்புக்கள், ஏக்கங்கள் என்பவற்றையும் பல கதைகளாக எழுதியதோடு ஏக்கத் தாகத்தோடு இருந்த கட்புலனற்றோருக்கு எனது படைப்புக்களையும் கெஸட் வடிவில் வழங்கி கதை படிக்க கட்புலன் தேவையில்லை என்ற மனோதிடத்தையும் கொடுத்துள்ளேன். எனது கதைகள், நாவல், மகள் இன்ஷிராஹ் இக்பாலின் படைப்புக்கள், ஜரீனா முஸ்தபாவின் படைப்புக்கள் என்பவற்றை இலங்கையின் பார்வையற்றோர் சங்கம் என்ற அமைப்பு குரல் வடிவில் இறுவட்டாகப் பதிவு செய்துள்ளது. இதனை எமது நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலுமுள்ள பார்வையற்றவர்கள் இவற்றைக் கேட்டுப் பயன் பெறுவது எமக்கு மகிழ்ச்சியான விடயமாகும்.

எனது எழுத்துக்களுக்கு பல நூற்றுக் கணக்கான வாசகர்கள் இருக்கிறார்கள். அதேபோல் 1984 - 1995 வரையான பத்தாண்டு காலப்பகுதியில் இலங்கை வானொலியின் மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சியின் பிரதித் தயாரிப்பாளராக இருந்து நான் எழுதியவற்றை எழுத, வாசிக்கத் தெரியாத நேயர்களும் மிகுந்த விருப்பத்தோடு கேட்டுப் பயன் பெற்ற விடயம் எப்போதும் என்னால் மறக்க முடியாது.

இந்நூலுக்குப் பல சிரமங்களுக்கு மத்தியில் இந்நூலுக்காக ஆசியுரை தந்திருக்கும் ஸ்ரீ-லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கள் அமைச்சருமான கௌரவ ரவுப் ஹகீம் அவர்களுக்கும், சிறப்புரைகள் தந்த பிரபல எழுத்தாளர் திக்குவல்லை கமால் அவர்களுக்கும், பேராதனைப் பல்கலைக் கழக முன்னால் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் துரை மனோகரன் அவர்களுக்கும், வாழ்த்துரை தந்திருக்கும் என் அபிமானப் பத்திரிகை விடிவெள்ளி ஆசிரியர் எம்.பி.எம் பைறூஸ் மகன் அவர்களுக்கும், பின் அட்டையில் என் கணவரைப் பற்றிய குறிப்புக்களை தந்துள்ள கலாபூஷணம் திக்குவல்லை ஸப்வான் அவர்களுக்கும், நூலுக்கான முன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப் படத்தை வரைந்த என் மகன் அஷ்பாக் அஹமத், அவருக்கு உதவியாக இருக்கும் நூர்ஜஹான் உவைஸ் ஆகியோருக்கும், எனது கதைகளை பிரசுரித்த தினகரன் வாரமஞ்சரி, தினக்குரல், விடிவெள்ளி, நவமணி ஆகிய பத்திரிகைகளுக்கும், ஜீவநதி பெண்கள் சிறப்பிதழுக்கும் என் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்புத்தகத்தை வெளியிட எண்ணம் தோன்றிய நேரம் முதல் இதுவரை அத்தனை சிரமங்களையும் தன் தலைமீது சுமந்து கொண்டு அயராது உழைக்கும் என் துணைவரும் எக்மி பதிப்பகத்தின் பணிப்பாளருமான மௌலவி ஏ.ஸீ.எம் இக்பால் அவர்களுக்கும், இந்நூலை அச்சிட்டுத் தந்த பாஸ்ட் கிரபிக் உரிமையாளர் நூறுல் அமீன் அவர்களுக்கும் ஊழியர்களுக்கும், என் எழுத்துக்கு எப்போதும் அன்பும் ஆதரவும் தந்து கொண்டிருக்கும் என் பிள்ளைகள் இன்ஷிராஹ் இக்பால் (சிறுகதை, நாவல் எழுத்தாளர்), இன்ஷிபா இக்பால், (எழுத்தார்வமுள்ளவர்), அஷ்பாக் அஹமத் (ஓவியர்), மருமக்களான ஷகீல் உபைத், ஷபீக் ஹுஸைன் ஆகியோருக்கும் என் மனம் நிறைந்த நன்றிகள்.

எனது சிறுகதைகளுக்கும், நாவலுக்கும் இதுவரை ஆதரவையும் வரவேற்பையும் தந்த வாசகப் பெருமக்கள் இந்நூலுக்கும் தருவார்கள் என எதிர்பார்க்கிறேன். நன்றி

**நுலாசிரியர்**

**- சுலைமா சமி இக்பால் -**

19,கமந்தெனிய வீதி,
கிரிங்கதெனிய, மாவனல்லை.
தொ.பேசி 035 - 2246494 - 071 -8396397



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே ...


| | கதைகள் | பக்கம் |
|---|---|---|
| 01 | உண்டியல் | 01 |
| 02 | ஊனம் | 08 |
| 03 | குருவியே குருவாக | 18 |
| 04 | மனித நேயம் | 25 |
| 05 | சுமை | 34 |
| 06 | மனிதம் மரணிப்பதில்லை | 42 |
| 07 | இங்கேயும் ஒரு ஹஜ் | 48 |
| 08 | பலிக்கடாக்கள் | 55 |
| 09 | கல்லுக்குள் ஈரம் | 64 |
| 10 | வாழ்க்கை வட்டம் | 71 |
| 11 | இவர்களும் மனிதர்களே | 79 |
| 12 | சமுதாயமே பதில் சொல் | 88 |
| 13 | தாயை தத்தெடுத்தவர்கள் | 96 |
| 14 | இதயத்தை தொலைத்தவர்கள் | 101 |
| 15 | தொப்பி | 106 |
| 16 | தாயின் பயணம் | 114 |
| 17 | மனிதம் | 120 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்டியல்...!

நஸீர் நிதானமாக வாகனத்தை ஓட்டிக் கொண்டிருந்தான். அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் காலியில் இருந்து புறப்பட்ட அந்த வேன் இப்போது களுத்துறை பிரதான வீதியில் ஓடிக் கொண்டிருந்தது. தன் கைக் கடிகாரத்தில் நேரத்தைப் பார்க்கிறான். அது காலை ஏழு மணியைக் காட்டியது.

நஸீர் காலியைச் சேர்ந்தவன். திருமணம் முடித்து மூன்று பிள்ளைகளின் தந்தை. பல வருடங்களாக அறபு நாட்டிலே சாரதியாகத் தொழில் பார்த்து விட்டு, இரண்டு வருடங்களாக சொந்த ஊரிலே வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

அவனின் கிராமத்தைச் சேர்ந்த தாலிப் நானாவின் மகனை அழைத்து வருவதற்காக, கட்டுநாயக்க விமான நிலையம் நோக்கியே இந்தப் பயணம்.

வாகனம் ஓடிக் கொண்டிருக்கிறது. பக்கத்தில் அமர்ந்திருந்த தாலிப் நானா,

"தம்பி ஒரு நல்ல ஹோட்டலுக்கு முன்னால நிப்பாட்டுங்க. ஏதாவது சாப்பிட்டுட்டு டீ குடிச்சிட்டுப் போகலாம்..." என்று கூறவே, அவனும் ஹோட்டல் ஒன்றின் முன் வாகனத்தை நிறுத்தினான். இருவரும் இறங்கி அங்கே சாப்பிட்டு விட்டு பயணத்தைத் தொடர்ந்தனர்.

பொருட்களின் விலையேற்றம் தொடங்கி, உலக அரசியல் வரை இருவரும் அலசிக் கொண்டே பயணப்பட்டனர். இடையில் தாலிப் நானா சேட் பொக்கட்டில் கையை விட்டு ஒரு சிகரட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டவர், இன்னொன்றை நஸீரிடம் நீட்டினார். லேசாகப் புன்முறுவல் செய்து கொண்ட அவன்,

"நான் சிகரட் புகைப்பதில்ல... ஆனா... ஒரு காலத்தில என்னப் போல சிகரட் புகைச்சவங்க யாரும் இருக்க ஏலாது..." என்றவனை வியப்போடு பார்த்தவர்,

"தம்பி... நான் சின்ன வயசுல - பொடியன் காலத்துல இந்தப் பழக்கத்த பழகின. நான் இன்டைக்கு வரைக்கும் இத விட முடியாம


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறேன். எப்படியோ கஷ்டப்பட்டு ரெண்டு கிழமைக்கு பல்லக் கடிச்சிக்கிட்டு இருப்பன். கொஞ்ச நாளைக்குத் தான். திரும்பவும் தொடங்கிடுவன். நீங்க எப்படித் தம்பி இந்தப் பாழாப் போன பழக்கத்த விட்டீங்க...?" கேள்வி கேட்டார் அவர்.

"அதெல்லாம் பெரிய கத... எல்லாத்துக்கும் காரணம் மனம் தான்..." என்று கூறிய நஸீர் தனது கடந்த கால அனுபவங்களை அவரோடு பகிர்ந்து கொள்ளத் தொடங்கினான்.

* * *

நஸீர் சிறுவனாக இருக்கும் போது அவன் தந்தை பக்கட் கணக்கில் சிகரட் புகைப்பதைக் கண்டிருக்கிறான். பல தடவைகள் அவனிடமே பணத்தைக் கொடுத்து சிகரட் வாங்க கடைக்கு அனுப்புவார் அவர். சில நேரங்களில் அவர் பத்திரிகையில் மூழ்கியவாறு சிகரட்டைப் பற்றவைத்துக் கொண்டு வரும்படி அவனிடமே கொடுப்பார். விளையாட்டுக்காக ஓரிரு தடவைகள் வாயில் வைத்து சிகரட் புகையை இழுத்தும் பார்த்திருக்கிறான். சிறுவர்களோடு விளையாடும் போது கடதாசியை சுருட்டி சிகரட் புகைப்பது போலச் செய்திருக்கிறான். இந்தப் பழக்கங்கள் நாளடைவில் பெற்றோரின் பணத்தைத் திருடி சிகரட் பிடிக்கும் அளவுக்கு அவனைப் பழக்கி விட்டது.

வாலிபனாகி அவன் சுயமாக உழைக்கத் தொடங்கிய போது உழைக்கும் பணத்தில் பாதி சிகரட்டுக்காகக் கரைந்தது.

"மகன்... இந்தப் பழக்கம் அவ்வளவு நல்லதல்ல. இப்பிடி சிகரட் குடிச்சி நோயாளியாகவா பாக்கிறாய்...? அடுத்தவூட்டு ஆரிபு நானாவுக்குக் காச நோய் வந்ததும் சிகரட் குடிச்சித் தான்..." என எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டாள் அவனன்னை. இருந்தாலும் பலன் பூஜ்யமாகவே இருந்து விட்டது.

திருமணத்தின் பின் மனைவியும் அது பற்றி எவ்வளவோ சொல்லி விட்டாள். ஒரு நாளைக்குக் குறைந்தது பத்து சிகரட்டுக்களாவது அவன் புகைத்துத் தள்ளுவான்.

"இந்தப் பாருங்கோ... இந்தப் பழக்கத்த விடுங்கோ... காசையும் நாசமாக்கி நோயையும் தேடவா பாக்குறீங்க... சிகரட் புகைக்கிறத்தால கென்சரும் வருமாம். நீங்க புகைக்கிறதால உங்களுக்கு மட்டுமல்ல,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களைச் சுத்தியுள்ள எல்லோருக்குமே கெடுதி தான். அதுக்கு செலவழிக்கிற சல்லிய சேமிச்சா எவ்வளவு பிரயோசனமா இருக்கும்..." இப்படி மனைவியும் கூறிப் பார்த்து விட்டாள்.

அவனோ எதையாவது கூறிச் சமாளித்து விட்டு மீண்டும் முருங்கை மரத்தில் ஏறி விடுவான்.

அவனது மூன்றாம் மகள் இப்போது ஆறாந் தரத்தில் கற்றுக் கொண்டிருந்தாள். ஒரு நாள் அவன் மாலையில் வீடு திரும்பும் போது வாசலில் வைத்தே அவள்,

"வாப்பா இன்டைக்கு ஒரு முக்கியமான நாள். இன்டைக்கு என்ன நாள் என்டு சொல்லுங்க...?" எனக் கேட்டு விட்டாள்.

உடனே அவன் ஏதோ பெரிய கண்டு பிடிப்பைக் கண்டு பிடித்தவன் போல் முன் பின் யோசிக்காமல்,

"இது கூடவா எனக்குத் தெரியாது! இன்டைக்கு எனக்குப் பிறந்த நாள்..." என்று கூறிய போது தன் முத்துப் பற்களைக் காட்டி கலகலவெனச் சிரித்த அவள்,

"வாப்பா அது சரிதான். அதோட இன்டைக்கு புகைத்தல் எதிர்ப்புத் தினம், உங்களுக்கு ஒரு பிறந்த நாள் பரிசு ரூமில் வைத்திருக்கேன்..." என்று கூறிய அவள் சிட்டாகப் பறந்து விட்டாள்.

வீட்டுக்குள் நுழைந்தவனை, சுவரில் மாட்டப் பட்டிருந்த அட்டை வரவேற்றது. அருகே போய் அதில் இருந்த வாசகங்களைப் படித்தான் அவன்.

"புகைத்தல் உடல் நலத்துக்குக் கேடாகும்" என்ற வாக்கியம் அழகாக எழுதப்பட்டிருந்தது. அதைப் படித்ததும் அவனுக்கு லேசாக ஒரு குற்ற உணர்வு. தன்னை சுதாகரித்துக் கொண்டு அறைக்குள் நுழைந்த போது, அங்கே மேசை மீது அழகிய முறையில் கட்டப்பட்ட ஒரு பார்சல் காணப்பட்டது. ஆவலோடு அதைத் திறந்து பார்த்த அவனுக்கு மேலும் அதிர்ச்சி.

'புகைத்தலால் ஏற்படும் தீமைகள்' தலைப்பைப் படித்ததும் அவனுக்கு வயிற்றைக் கலக்கியது. மெதுவாக சேட் பக்கட்டில் இருந்த சிகரட்டைக் கையில் மறைத்துக் கொண்டு மல சல கூடத்தை நோக்கி ஓடினான். அங்கே சுவரில் ஒரு வாசகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புகை நமக்குப் பகை" இதைப் படித்ததும் அவன் கையிலிருந்த சிகரட் கையை விட்டுக் கீழே நழுவியது. அதைக் காலால் மிதித்துக் கசக்கி விட்டுக் கடமையை முடிக்கச் சென்றான் அவன்.

அன்றெல்லாம் அவனது மனம் மிகவும் குழம்பிப் போயிருந்தது. யோசித்தான்,

"இப்போ பிள்ளைகள் ஓரளவு விவரம் தெரியத் தொடங்கி விட்டார்கள். நல்லது கெட்டது அவர்களுக்கும் தெரியும். இனிமேல் இப்பிடி நடக்க முடியாது. நான் செய்வது தவறு என்கிறது என் பிள்ளைகளுக்கு விளங்கிட்டுது. இனியும் நான் மாறாம இருந்தா பிள்ளைகள் என்ன மதிக்க மாட்டாங்க..." என மனதிற்குள் சொல்லிக் கொண்டான் நஸீர்.

அன்றிரவு சாப்பாட்டு நேரம் எல்லோரும் ஒன்றாகவே சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். திடீரென்று அவன் மகள்,

"வாப்பா ஒரு கேள்வி கேட்கப் போறன். அதாவது சிகரட் பத்த வச்ச பிறகு அதன் ஒரு நுனியில் இருக்கிறது நெருப்பு, மறு நுனியில் இருக்கிறது என்ன...?" என்று ஒரு கேள்வியைக் கேட்டு விட்டாள். அவன் திகைத்துப் போனான். பதில் கூற முடியாமல் விழித்தான். மனைவி ஓரக்கண்களால் அவனைக் கேலிச் சிரிப்புடன் நோக்கினாள்.

"பக்கட் கணக்குல புகைச்சி காசக் கரியாக்குறீங்க...! இது கூடவா தெரியல்ல...?" எனக் கேட்பது போல் தந்தையை நோக்கிய மகள்,

"ஒரு நுனியில் நெருப்பென்றால் மறு நுனியில் இருக்கிறது முட்டாளின் வாய்...!" என விடுக்கென்று கூறிய போது, அவனைத் தவிர எல்லோரும் வாய் விட்டே சிரித்தார்கள். அவனுக்கு அவமானமாகப் போய் விட்டது. இப்படி மனைவி மக்கள் முன் மாட்டிக் கொண்டு அவமானப்பட நேர்ந்தது கூட அவனுக்கு நியாயமாகவே பட்டது. உண்மையில் அவள் கூறிய விடயம் சிரிக்க மட்டுமல்ல, சிந்திக்கவும் வேண்டிய ஒன்று தான்.

இதன் பிறகு அவன் சிகரட்டைத் தொடவே இல்லை. நாளொன்றுக்கு பத்துப் பதினைந்து சிகரட் வரை ஊதித் தள்ளும் அவன் ஒரு முடிவையும் எடுத்துக் கொண்டான். அன்று இரவு வீடு வந்த அவன் இரண்டு கிலோ பால் பவுடர் டின் ஒன்றைக் கூடவே கொண்டு வந்து ஒரு உண்டியல் செய்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இனிமே சிகரட்டத் தொட மாட்டேன். அதுக்குச் செலவாகக் கூடிய சல்லிய இந்த உண்டியல்ல போடப் போறேன்" என்று மனைவியிடம் கூறியவன், அதே போல் செய்தும் வந்தான்.

ஒவ்வொரு நாளும் அவன் ஐந்து, பத்து ரூபாய் நாணயக் குற்றிகளை அதில் சேமிக்கத் தொடங்கினான். ஒரு நாளைக்கு குறைந்தது நூறு ரூபாயாவது அதிலிட அவன் தவற மாட்டான். உண்டியலும் நிறைந்து கொண்டே வந்தது.

* * *

நஸீரின் வாகனம் இப்போது கொழும்பை வந்தடைந்து விட்டது. காலை எட்டு மணியைத் தாண்டி விட்டிருந்தது. வாகனத்திலே இருந்த வானொலிப் பெட்டியைத் திருகினான் அவன்,

"இன்று அதிகாலை சுமாத்திராத் தீவில் பூகம்பம் வெடித்ததால் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக இலங்கையின் கரையோரப் பகுதிகளான வடக்கு, கிழக்கு, தென் பகுதிக் கரையோரங்களில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே கரையோரப் பகுதிகளில் வாழ்வோர் தமது உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அந்த இடங்களை விட்டு அவசரமாக நகரும் படி அரசாங்கம் கேட்டுள்ளது"

இந்த அறிவித்தலைக் கேட்டதும் அவர்கள் ஆடிப் போனார்கள் வானொலியின் எல்லா மீட்டர்களிலும் இதே செய்திகளே ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தன. கொழும்பிலும் ஒரே பரபரப்பு. மக்கள் மூட்டை முடிச்சுகளைச் சுமந்து கொண்டு ஓடிக் கொண்டிருந்தார்கள். கடலிலும் வித்தியாசம் விளங்குகிறது.

"இந்த அனர்த்தம் காலி, மாத்தறை, அம்பாறைக் கரையோரங்களை வெகுவாகப் பாதித்துள்ளது. பல நூறு வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. நூற்றுக் கணக்கான உயிர்களைக் கடல் காவு கொண்டுள்ளது. வீதிகளிளும், ஊர்களுக்குள்ளும் பல அடி உயரத்துக்கு கடல் நீர் உட்புகுந்து வெள்ளம் போல் காட்சி தருகிறது. கரையோரம் முழுவதும் ஒரே அல்லோல கல்லோல நிலை" வானொலி அறிவித்துக் கொண்டே இருக்கிறது. நஸீருக்குத் தலையில் இடியே விழுந்தது போல் இருந்தது. கையிலிருந்த கையடக்கத் தொலைபேசியில் வீட்டுக்குத் தொடர்பு கொள்ள முயன்றான். முடியவில்லை. வாகனத்தை நிறுத்தி விட்டு 'கொமினிகேஷன்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றினுள் நுழைந்து தொடர்பு கொள்ள முயற்சித்தான். அதுவும் முடியவில்லை. பின் தனக்குத் தெரிந்தவர்களின் இலக்கங்களுக் கெல்லாம் முயற்சித்தான். தொலைபேசித் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப் பட்டிருந்தன.

அவனின் வீடு கடல் பிரதேசத்துக்கு அண்மித்து இருந்ததால் மனைவியையும் பிள்ளைகளையும் நினைத்து அவன் மனம் பதறிக் கொண்டிருந்தது. அவனின் நாவு அவர்களுக்காகப் பிரார்த்தித்துக் கொண்டது.

கொழும்பு வீதிகளில் எல்லாம் பொலிஸார் போக்கு வரத்துக்குத் தடை விதித்தனர். அவர்கள் வேனை கடல் பிரதேசம் அல்லாத இடமொன்றில் நிறுத்தி விட்டு அன்றிரவு முழுக்க பள்ளி வாசலிலே கழித்தனர். அவனால் உண்ணவோ உறங்கவோ முடியவில்லை. வானொலியைக் கேட்டபடியே தவித்துக் கொண்டிருந்தான். மனைவி மக்களிடம் பறந்து செல்ல அவன் மனம் துடித்துக் கொண்டிருந்தது. மறுநாள் பல தடைகளுக்கு மத்தியில் ஊரை வந்தடைந்தான். வழி நெடுகிலும் சுனாமியின் சுவடுகளை, இயற்கையின் சீற்றத்தைப் பார்க்க முடிந்தது. வாகனம் ஊருக்குள் நுழைந்த போது, ஊரின் நிலை காண அவன் கண்கள் கண்ணீரை வடித்தன. ஊருக்குள் இன்னும் நீர் நிறைந்து காணப்பட்டது. பல கட்டிடங்களும், வீடுகளும் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டிருந்தன. நீர் நிறைந்த கண்களோடும், பதறிய நெஞ்சோடும் தன் வீட்டை நோக்கி ஓடினான். அவனின் வீடும் இயற்கையின் சீற்றத்துக்கு ஆளாகி அரைகுறையாக காட்சியளித்தது. அவனது வீட்டை இந்தக் கோலத்தில் கண்டபோது அவன் சோகத்தில் சிலையாக நின்றான். மனைவி மக்களைப் பிரிந்து பல வருடங்களாக அறபு நாட்டில் பாடுபட்டு உழைத்து சிறுகச்சிறுகச் சேமித்து கட்டிய வீடு அது. அவனால் தாங்க முடியவில்லை. உள்ளே எட்டிப் பார்த்தான். வீட்டில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

பலரிடமும் விசாரித்துக் கொண்டு பைத்தியம் பிடித்தவன் போல் அங்குமிங்கும் ஓடியோடித் தேடினான். இறுதியில் ஒரு பாடசாலையை வந்தடைந்த போது அங்கே அவனது மனைவியும், பிள்ளைகளும் கூட்டத்தோடு கூட்டமாக அழுத முகங்களோடு காட்சியளித்தனர். ஓடிச் சென்ற அவன் அவர்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கண்ணீர் வடித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது குடும்பத்தினரை உயிரோடு பார்த்ததில் அவனுக்கு உள்ளூர ஆறுதல். சிறிது நேரம் அவர்களோடு இருந்து விட்டு வீட்டுப் பக்கம் திரும்பவும் வந்தான். உடைந்த நிலையில் அரைகுறையாகிப் போன வீட்டுக்குள் நுழைந்தான். வீட்டிலிருந்த பல பெறுமதி மிக்க பொருட்களும் அங்கே இருக்கவில்லை. எல்லா வற்றையும் நீர் அடித்துச் சென்றிருந்தது. ஒரு நீண்ட பெருமூச்சுடனும், ஏங்கிய உள்ளத்துடனும் நின்றவனின் கண்களுக்கு கட்டிட இடிபாடுகளுக்கிடையே தென்பட்ட அந்தப் பொருள் இன்ப அதிர்ச்சியைத் தந்தது. ஒரே பாய்ச்சலில் பாய்ந்து சென்று அந்த உண்டியலைக் கையிலெடுத்து அப்படியே நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். அவன் கண்களிலிருந்து நீர் வடிந்து கொண்டிருந்தது. தன் மன உணர்வுகளை வெளிப்படுத்தத் தெரியாதவனாக தடுமாறிக் கொண்டிருந்த அவனது உதடுகள் விம்மித் துடித்தன.

இப்போது அவனுக்கு இந்த இழப்புக்கள் யாவும் இழப்புக்களாகவே தெரியவில்லை... ஏன்...? அது அவனுக்கே புரியவில்லை.

**2006 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய இலக்கிய கலை விழா கேகாலை மாவட்டம், சபரகமுவ மாகாணத்தில் முதல் பரிசு பெற்று தேசிய ரீதியில் மூன்றாவது பரிசு பெற்ற கதை.**

**நன்றி : தினகரன் வார மஞ்சரி 19.11.2006**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனம்...!

வீட்டை விட்டு வீதியில் இறங்கிய ஜரீனா அவசரமாக நடக்கத் தொடங்கினாள். மழை வேறு லேசாகத் தூறிக்கொண்டிருந்தது. கைக்கடிகாரத்தை ஒருமுறை பார்த்துக் கொள்கிறாள். நேரம் காலை 7.30 மணி. வேகமாக வந்தவள் மூச்சிறைத்தபடி அந்த அங்கவீனர் நிலையத்தினுள் நுழைகிறாள்.

"அப்பாடா..... ஒருவாறு வந்துட்டேன்" நிம்மதியாக மூச்சுவிட்டபடி நிமிர்கிறாள். அங்கே நிலையத்திலுள்ள வாய் பேசமுடியாத மாணவர்கள் சைகை மூலம் ஸலாம் கூறுகிறார்கள் பதிலுக்கு அவளும் சைகையாலேயே கூறிக்கொண்டு அவளது வகுப்பறையை நோக்கி நகர்கிறாள். அவளது வருகையை காலடியோசை மூலம் உணர்ந்து கொண்ட அவளது விழிப்புலனிழந்த மாணவர்கள் "டீச்சர் அஸ்ஸலாமு அலைக்கும்" என்று ஸலாம் கூறுகிறார்கள். வஅலைக்கும் ஸலாம் பதிலுக்கு அவளும் கூறிக்கொள்கிறாள்.

ஜரீனா ஒரு ஆசிரியை. அங்கவீனர்களுக்கான கல்வி நெறியில் பயிற்சி பெற்று ஊரிலேயுள்ள அந்த அங்கவீனர்களுக்கான நிலையத்தில், அந்தப் பரிதாபத்துக்குரிய ஜீவன்களுக்கு கற்பித்துக் கொடுக்கும் பணி அவளுடையது. கற்பிப்பதோடு அவள் தனது பணியை மட்டுப்படுத்தாது அவர்களுக்கு எந்தெந்த விதத்திலெல்லாம் உதவி செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்து அவர்களின் அன்பையும் அபிமானத்தையும் பெற்றிருந்தாள்.

ஜரீனா குடும்பத்தில் மூத்தவள். அண்மையில்தான் அவளது இருபத்தெட்டாவது பிறந்த தினம் வந்து போனது. இருந்தாலும் அவள் வாழ்வில் அந்த வசந்தத்திற்குரிய மணநாள் மட்டும் இன்னும் வந்து சேரவில்லை. அதற்குக் காரணமும் உண்டு. அதாவது தோலின் நிறம் தான் அதற்குத்தடையாக இருந்து கொண்டிருக்கிறது. அவள் அன்பு, அறிவு, குண ஒழுக்கங்களிலும் சிறந்தவளாகவே இருந்தாலும், அவளின் உள்ளம் வெள்ளையாக இருந்தபோதும், அவளின் தோல் நிறம் என்னவோ மிகக் கருமையாக அமைந்து விட்டது. சிலர் சிவப்பாகவும் சிலர் கருப்பாகவும் இருப்பது இறைவனின் செயல் அல்லவா? அதற்கு அவளென்ன செய்ய முடியும்.! அதுவரை பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களிலிருந்து அவளைப் பெண்பார்க்க வந்திருப்பார்கள். அவர்கள், இவர்கள் சிரமப்பட்டு மேசை நிறையச் செய்து வைத்திருக்கும் உணவுகளை வயிறார உண்டுவிட்டுப் போனார்களே தவிர, இவர்கள் மனமார சந்தோசப்படும் செய்தியை இதுவரை தரவில்லை பெண்ணின் நிறம் கருப்பு என்று கூறி அனைவரும் ஒதுங்கிப் போய் விட்டார்கள்.

மற்றவர்களைப் போல் மணம் முடித்து கணவனோடு சந்தோசமாக வாழ வேண்டும், பிள்ளைகள் பெற வேண்டும், அவர்களின் தொல்லைகளால் சுகம் பெற வேண்டும் என்று அவளுக்கும் மனம் நிறைய ஆசைகள், கனவுகள் இருக்கத்தான் செய்கின்றன.

"எனக்கென்று ஒருவர் பிறந்திருப்பார்...." என்ற நம்பிக்கை அவள் மனதை ஆறுதல் படுத்திக்கொண்டிருந்தது.

"டீச்சர்.... டீச்சரும்மா ...." கூறிக்கொண்டே வந்த அந்த ஐந்து வயது நிரம்பிய பார்வையற்ற பாலகன் அவளருகே வந்து அவள் முந்தானையை பிடித்தபடி அவள் மடியில் சாய்ந்து கொண்டான். தாய்ப் பசுக்குரிய பாசத்தோடும், பரிவோடும் அவனை அணைத்துக் கொண்ட ஜரீனா அவனைத் தடவிக் கொடுத்தாள். அந்த நிலையத்திற்கு சில வாரங்களுக்கு முன் வந்து சேர்ந்தவன் தான் ஷியாம் எனும் அந்தப் பாலகன். அவனை அவன் பெற்றோர் இந்த நிலையத்திலே விட்டுப் போகும் போது பிரிவுத் துயரில் அவர்களும் அழ சிறுவனும் ஓவென்று அழ அவளுக்கும் அழுகையே வந்து விட்டது.

"நீங்க கவலப்படாம, யோசிக்காமப் போங்க..... நான் என் புள்ள போல இவனைக் கவனிக்கிறன். இவன் நல்லாப் படிச்சி எதிர் காலத்தில இன்னொருத்தருட நிழல்ல வாழாம சொந்தக் கால்ல நிற்கனுமென்டா இவன் இங்க படிக்கணும். தொழில் பயிற்சிகளப் பெறணும். உங்க புள்ள நல்லா வரணுமென்டா நீங்க இந்தப் பிரிவ தாங்கத்தான் வேணும். பிறவியேலேயோ, இடை நடுவிலேயோ ஏற்படுகிற இந்த அங்கவீனம் என்கிறது இயலாமை அல்ல. இப்படியானவங்களுக்கிட்ட நிறைய திறமைகளிருக்கு. நாம் இங்க கொடுக்கிற கல்வி அறிவும், தொழில் பயிற்சிகளும் இவங்க நாளைக்கு பிறருக்கிட்ட கைநீட்டி வாழாம சுயமாக உழைத்து வாழ்றதற்கு நிச்சயமாக வழி காட்டும். அதனால நம்பிக்கையோடு நிம்மதியாகப் போய் வாங்க..." என்ற ஜரீனாவின் அறிவு பூர்வமான அன்பான பேச்சு அவர்களை ஆறுதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைய வைத்தது. அன்றிலிருந்து இந்தச் சிறுவனுக்கு அவள் டீச்சர் மட்டுமல்ல. டீச்சரும்மாவுங் கூட. அவள் காட்டிய அன்பிலும், பரிவிலும் அவன் அவளோடு மிகவும் நெருக்கமாக ஒட்டிக்கொண்டு விட்டான்.

இப்படியாக அந்த வலது குறைந்த மாணவர்களோடு இரண்டறக் கலந்து அவர்களின் பணிகளிலே மூழ்கிப் போவதால் தனது வாழ்வின் கவலைகளைக்கூட தற்காலிகமாக அவளால் மறக்க முடிந்தது.

எல்லோரும் வகுப்பிற்கு வந்து விட்டார்கள். அவளின் வகுப்பில் ஆக மொத்தம் ஒன்பது பேர்தான். ஒன்பது பேருமே பார்வையற்றவர்கள். இவர்களுக்கு கற்பிப்பதென்பது சற்று சிரமமான விடயம்தான். அன்புள்ளமும், பொறுமையும் உள்ளவர்களால்தான் இப்படியானவர்களுக்கு கற்பிக்க முடியும்.

எல்லோரும் படிப்பதற்குத் தயாராக இருந்தார்கள். ஏதோ நினைத்துக் கொண்டவள் எழுந்து அவர்களின் விடுதி அறைக்குள் போய் அவர்கள் மாற்றி வைத்திருந்த உடைகளை எடுத்து வந்து கொடிகளிலே போட்டு விட்டு மீண்டும் வகுப்பிற்குள் நுழைந்தாள்.

"டீச்சர்....நேத்து வீட்டிலிருந்து வந்த கடிதத்த வாசிச்சிக் காட்டினீங்க இன்டைக்கு அதுக்கு பதிலெழுதிப் போடணும்......" நினைவு படுத்தினான் ஸலீம் என்ற மாணவன்.

"டீச்சர்..... புத்தகம் ஒன்டு இருக்கு. அத வாசிச்சிக் காட்டோணும்....." இது மற்ற மாணவன் ஒருவனின் விண்ணப்பம்.

"சரி....எல்லாம் செய்வோம். இப்ப பிரைல் போட எடுத்து நான் சொல்றத எழுதுங்க..." என்று கூறிய அவள் சில சொற்களைக் கூற, அவர்களும் பிரைல் எழுத்தில் எழுதத் தொடங்கினார்கள்.

அப்பால் உட்கார்ந்தபடி பிரைல் போடை வைத்துக் கொண்டு மும்முரமாக எழுதிக் கொண்டிருந்தார் ஸிராஜ் ஆசிரியர். இவர்கூட விழிப்புலன் இல்லாதவர். ஏற்கனவே யாழ்பாணத்தில் படித்து விட்டு நாட்டு நிலமை காரணமாக இங்கே வந்து பணி புரிபவர்.

"சேர்....மிச்சம் நேரமாக அப்படி மும்முரமாக என்னதான் எழுதிக் கிழிக்கிறீங்க....?" நகைச் சுவையாக கேட்டு வைத்தாள் ஜரீனா. திடுக்கிட்டு நிமிர்ந்த அவர், "ஒரு முக்கியமான கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறன்" என்று கூறியவர் மீண்டும் தனது காரியத்தில் ஈடுபடத் தொடங்கிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறைவனிடம் கையேந்துங்கள் அவன், இல்லையென்று சொல்லுவதில்லை" என்ற இனிய பாடல் வரிகள் திடீரென்று வர அவள் திரும்பினாள். அங்கே அவளின் மாணவன் பர்ஸான் பாடிக்கொண்டிருந்தான். பிறவியிலேயே பார்வையை இழந்து விட்டாலும் எல்லோரையும் கவர்ந்து நெகிழச் செய்யும் இனிய குரல் வளம் அவனிடம் நிறைந்திருந்தது.

பகலுணவுக்கான நேரம் வந்து விட்டது. பிள்ளைகள் எல்லோரும் சாப்பாட்டு அறையை நோக்கி நடந்தார்கள். அவளும் எழுந்து சில அடிகள் நடந்ததும் அதை உணர்ந்து கொண்ட ஸிராஜ் ஆசிரியர் "டீச்சர் கொஞ்சம் வாங்க....." என்று அழைக்க மீண்டும் அவ்விடம் நகர்ந்தவள், "என்ன சேர் ... என்ன வேணும் சொல்லுங்க" எனக் கேட்க "இந்தக் கடிதத்த வாசிச்சி பாருங்க டீச்சர்...." அவர் கூறிய போது அவள் கொஞ்சம் தயங்க அதைப் புரிந்து கொண்டவன், "இது உங்களுக்கு எழுதிய கடிதம் தான் வாசிச்சிட்டு நல்ல பதிலாத் தாங்க...." என்று கூறி அந்த பிரைல் கடிதத்தை அவளிடம் கொடுத்து விட்டு அவர் போய் விட்டார்.

அந்தக் கடிதத்தை கையில் வைத்தபடி சில கணங்கள் அப்படியே நின்றவள், மெதுவாக உட்கார்ந்து குற்றெழுத்தில் வடிக்கப்பட்ட அந்தக் கடிதத்தை தொட்டுத் தொட்டு வாசிக்கத் தொடங்கினாள்.

என் அன்பிற்கும் அபிமானத்திற்கும் உரிய ஜரீனா டீச்சருக்கு!

உங்களை என் வாழ்க்கையில் சந்திக்கக் கிடைத்தது, பழகக் கிடைத்தது அனைத்தையும் நான் பாக்கியமாகக் கருதுகிறேன். நான் இயற்கையிலேயே கண் பார்வையிழந்தவன். இது உங்களுக்குத் தெரியும். நான் உங்களைக் கண்களால் கண்டவனல்ல. மனக்கண்ணால் மட்டுமே உங்களை நான் பார்க்கிறேன். உங்கள் உருவம் எப்படி இருக்கிறது என்பது எனக்கு முக்கியமல்ல. உங்கள் உள்ளத்தை நான் மிகவும் அறிந்து வைத்திருக்கிறேன். நீங்கள் எனக்கும், என்னைப் போன்ற இந்த ஜீவன்களுக்கும் செய்கின்ற உதவிகள், அர்ப்பணிப்புடன் கூடிய பணிகள், எம்மீது நீங்கள் காட்டுகின்ற கருணை, கரிசனை-இவை காரணமாக என் இதயத்தில் இமயமாகி நிற்கிறீர்கள்.

நான் ஒரு குருடன். எதிர் காலத்தில் எனக்கு ஒரு அன்பான மனைவி - பாசத்தோடு பணிவிடை செய்யக்கூடிய துணைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைப்பாள் என்பது சந்தேகமே. இப்படி எழுதுகிறேன் என்று தப்பாக நினைத்து விடாதீர்கள். சில தினங்களாக எனக்குள் ஒரே சிந்தனையாக இருக்கிறது. நானும் நீங்களும் வாழ்க்கையில் இணைந்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென யோசிக்கிறேன். முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா...? என்று நீங்கள் கேட்க மாட்டீர்கள் ஏனென்றால் உங்கள் மனதைப்பற்றி எனக்கு நன்கு தெரியும். ஒரு வேளை என்னை நீங்கள் ஒரு சுயநலவாதியாக நினைக்கவும் கூடும். ஆமாம் இது கூட ஒரு சுயநலம் தான்.

உங்கள் முடிவு எதுவானாலும் அதனை எழுதுங்கள். பதிலை எதிர் பார்க்கிறேன். கடிதத்தை படித்து முடித்தவளுக்கு அந்த மழையிலும் வியர்த்தது. உடல் லேசாக நடுங்கியது மனதில் உள்ளதை அவர் எழுத்தில் வடித்துத்தந்து விட்டார். அதற்காக அவரில் குறைகாணவோ, அவர் மீது கோபப்படவோ அவளால் முடியவில்லை. எல்லாவற்றையும் மீறி அவர் மீது அளவு கடந்த பரிதாபமே அவளுக்கு ஏற்பட்டது.

“இதற்கு என்ன பதிலை சொல்லப் போகிறேன்” என்று சிந்தித்த போது அவளுக்கு தலை வலித்தது. அந்த இடத்தில் தொடர்ந்து இருக்க முடியாதவளாய் அரைநாள் லீவில் வீடு போய்ச் சேர்ந்தாள்.

“நான் அங்கவீனர்களின் மீது அளவு கடந்து அன்பு காட்டுவது, அவர்களுக்குப் பணி செய்வது அனைத்தும் உண்மைதான். அதற்காக இரண்டு கண்களிலும் பார்வை இல்லாத ஒருவரை மணந்து எனது வாழ்வைத் தியாகம் செய்யக்கூடிய பண்பட்ட மனம் எனக்கிருக்கிறதா...? இல்லையே...! அப்படியே நான் அதற்கு உடன்பட்டாலும், என் பெற்றோர், உடன் பிறப்புக்கள் இதனை விரும்புவார்களா.....? நிச்சயமாக இது ஒருநாளும் நடக்க முடியாது. அவரின் மனம் நோகாதபடி ஏதாவது பொய் ஒன்றைக் கூறித்தான் இதிலிருந்து விடுபட வேண்டும்” என்று முடிவு செய்து கொண்டாள்.

மறுநாள் வகுப்பிற்கு வந்தாள் ஜரீனா. அங்கே ஒரு மூலையில் உட்கார்ந்தபடி ஸிராஜ் சிந்தனை வயப்பட்டிருந்தார். பிள்ளைகளை விளையாட்டு மைதானத்திற்கு அழைத்துப்போய் அவர்களுக்குத் துணையாக வாய் பேசமுடியாத மாணவர்கள் இருவரை அங்கே வைத்து விளையாட விட்டு விட்டு மீண்டும் வகுப்பிற்கே வந்தாள். எதையும் நேரடியாகப் பேசித் தீர்ப்பது நன்மை பயக்கும் என்பதால் மெதுவாக பேச்சைத் தொடங்கினாள்.

“சேர்... நீங்க தந்த கடிதத்தப் படிச்சிப்பார்த்தன். உங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பத்த நீங்க ஒளிக்காம எழுதியிருந்தீங்க. அதுக்காக நான் வருத்தப்படல்ல. ஏன்ட பதில் உங்களுக்கு வருத்தத்த தராம இருக்கோணும் என்று ஆசைப்படுறன். உங்க மேல்ல அப்படியான ஒரு எண்ணம் எனக்கில்லை. ஒரு சகோதரனாக த்தான் உங்கள நான் நினைக்கிறன், மதிக்கிறன். அது மட்டுமில்லாம எனக்கு தூரத்து உறவினர் ஒருவரப் பேசி இருக்கிறாங்க. உங்களுக்கு நிச்சயமாக நல்ல மனைவி ஒருத்தி கட்டாயமாகக் கிடைப்பா. என்ன மன்னிச்சிடுங்க." என்று நிலத்தைப் பார்த்தபடி கூறியவள், சற்றே நிமிர்ந்தாள். அப்படியே இடிந்து போனாள். மூடிய இரண்டு கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தோட நின்றிருந்தார் ஸிராஜ்.

"நான் எபபோதுமே அதிர்ஷ்டம் இல்லாதவன் தான். நீங்க எங்கிருந்தாலும் சந்தோசமாக வாழோணும்." என்று உடைந்த குரலில் அவர் கூறியது அவள் இதயத்தை கசக்கிப் பிழிவது போன்றிருந்தது.

நாட்கள் வேகமாக ஓடின. எப்படியோ வருடங்கள் சில ஓடி மறைந்தன. வேறு ஒரு இடத்தில் தொழில் வாய்ப்புப் பெற்று ஸிராஜ் அந்த நிலையத்தைவிட்டே போய் விட்டார்.

ஆரம்பத்தில் கடிதம் மூலம் எப்போதாவது தொடர்பு கொண்டவர், இப்போதெல்லாம் எழுதுவதே இல்லை. நீண்ட நாட்களாக அவரைப்பற்றிய எந்தத் தகவலும் அவளுக்குத் தெரியவில்லை. அவளது வேலைச் சுமைகள் காரணமாக அதனை அறிந்து கொள்ள முயற்சி எடுக்கவும் அவளுக்கு வாய்ப்பில்லாமல் போய் விட்டது.

இப்போது அவளுக்கு வயது முப்பத்தேழு. பெருமூச்சு விட்டபடி கண்ணாடி முன் போய் நிற்கிறாள். தலையில் சில வெள்ளை முடிகள் கண்சிமிட்டிச் சிரிக்கின்றன. முகத்தில் கூட லேசான சுருக்கம். நிறமாக வேண்டுமென்பதற்காக பல வகைக் கிரீம்களை முகத்திற்கு பூசிய போதும் அதே பழைய நிறம் அப்படியே இருந்தது.

நேற்றுக்கூட ஒரு இடத்திலிருந்து அவளைப் பெண்பார்க்க வந்திருந்தார்கள். எழுபதாவது தடவையாக அவள் பெண் பார்க்கும் படலத்திற்கு தயாராகியிருந்தாள்.

அவளுக்குக் கீழேயிருந்த இரண்டு தங்கைகளும் கூட இப்போது திருமணம் முடித்து குழந்தை குட்டிகளோடு வாழ்கிறார்கள். இவள் மட்டும் இன்னும் அப்படியே. அந்த ஏமாற்றத்தை அவளால் ஜீரணிக்க முடியலில்லை. ஒவ்வொரு இரவுகளும் அவளுக்குக் கண்ணீர் இரவுகளாகவே கழிந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று வந்திருந்த மாப்பிள்ளை கூட இவளைப் போன்றே கருப்பு நிறமானவர். அவரின் நிறத்தை கண்டபோது, "இந்தக் கலியாணமாவது சரிவராதா...!" என்ற நப்பாசை அவளுக்கு. ஒவ்வொரு தடவையும் இம்முறை சரிவரும், இம்முறை சரிவரும் என்று எதிர்பார்த்து, எதிர்பார்த்து ஏமாந்தவள்தான் ஜரீனா. இன்று காலைதான் அது விடயமாக புரோக்கர் டெலிபோன் பண்ணியிருந்தார்.

"அவங்களுக்கு எல்லாமே ஓகே தான். மாப்பிள்ளையாவது கொஞ்சம் நிறமாயிருந்திருந்தா இந்தக் கலியாணத்துக்கு விருப்பப்பட்டிருப்பாராம். இருவரும் டாக்காக இருக்கிறதால பிறக்கும் குழந்தைகளும் அதே நிறமாக பிறக்குமென்று பின்வாங்கி விட்டார்கள்...." என்று கூறியபோது அவளுக்குச் சற்று சிரிப்பாகவுமிருந்தது.

"நீங்களே கருப்பு நிறம் அதுல வேற உங்களுக்கு வெள்ளை நிறப் பொண் தேவையோ,...? வெள்ளப் பொண் தேவையாயிருந்தா நீங்க வீடு வீடாகப் போக வேணாம் பீச், பீச்சாகப் போங்க.....!" என்று கத்த வேண்டும் போல் இருந்தது அவளுக்கு.

"கருப்புத்தான் எனக்குப்புடிச்ச கலரு" என்று கவர்ச்சியாகப் பாடுகின்றவனும் தனக்கென்று வரும் போது வெள்ளையைத்தானே தேடுகிறான்....! எல்லாருமே வெள்ளப் பொண்ணுகளையெ தேடினா... என்னைப்போல கலர் குறைஞ்சவங்க கதி என்ன....? அவங்களுக்கு வாழ்க்கையே இல்லையா....?

பணத்துக்காகவும், அழகுக்காகவம், அலைந்து திரிகின்ற ஆடவர்களை நினைத்த போது அவளுக்கு வெறுப்பாகவும் வேதனையாகவும் இருந்தது.

திடீர் என்று ஏதோ நினைத்துக் கொண்டவள், எழுந்து போய் அவளின் பழைய புத்தகங்களுக்குள் எதையோ தேடத்தொடங்கினாள். சில நிமிடங்களில் அவள் தேடிய பொருள் கைக்குக் கிடைக்கவே அதனை ஆர்வத்தோடும், பக்தியோடும் எடுத்துக் கொண்டு தனது அறைக்கு வந்தாள்.

அது ஒரு கடிதம். சில வருடங்களுக்கு முன் ஸிராஜால் எழுதப்பட்ட பிரைல் கடிதம் அது. அதை கையிலேந்திய அவள் அந்தக்கடிதத்தை விரல் நுனிகளால் தொட்டுத் தொட்டுப் படிக்கத் தொடங்கினாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து ஓடியது. அந்தக் கடிதத்தை அப்படியே நெஞ்சோடு சேர்த்துக் கொண்டாள். சில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிடங்கள் சோகம் தீரும் வரை விக்கி, விக்கி அழுதவள் ஒரு தீர்மானத்துடன் எழுந்தாள்.

பிரைல் போடை கையிலெடுத்து அதில் கடதாசியைச் செருகி பிரைல் எழுத்துக்களில் கடிதம் எழுதத் தொடங்கினாள்.

என் இதயத்தில் நிறைந்திருக்கும் ஸிராஜ் அவர்களுக்கு!

நலமாக இருக்கிறேன். நான் இன்னும் தனி மரமாகவே வாழ்கிறேன். அன்று என்னுடைய நிறத்தையோ, அழகையோ பார்க்காது நீங்கள் என்னிடம் எமது திருமணம் பற்றி விருப்பம் கேட்டு எழுதினீர்கள் அதற்கு நான் ஏதேதோ எழுதி உங்களிடமிருந்து நழுவி விட்டேன்.

மனம் திறந்து சொல்கிறேன் இது வரை என்னைப் பெண்பார்க்க எழுபதுக்கும் மேற்பட்ட இடங்களிலிருந்து வந்தார்கள், போனார்கள். அவர்கள் எல்லோருமே அழகையும், நிறத்தையும் காரணம் காட்டி யாருமே என்னை மணமுடிக்க முன் வரவில்லை. அவர்கள் வரும் போதெல்லாம், அவர்களுக்குரிய சிற்றுண்டிகளுக்கும், உணவுகளுக்கும் நாம் செலவழித்த செலவை கணக்கிட்டுப் பார்த்தால் அந்தப் பணத்தில் இரண்டு ஏழைப் பெண்களுக்கு திருமணமே நடத்தி முடித்திருக்கலாம்.

என் முகத்தைப் பார்க்காது என் அகத்தை மட்டுமே பார்த்து என்னை மண முடிக்க வேண்டுமென்று விரும்பியவர் நீங்கள் ஒருவர் மட்டுமே. என் மனதில் ஏற்பட்ட ஊனம் காரணமாக அதைக்கூட நான் அலட்சியம் செய்த பாவியாகி விட்டேன். உங்களைத் தவிர உலகத்தில் இந்தக் கருப்பிக்கு வாழ்வு தரக்கூடியவர் இனிமேல் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

இப்போது உங்களுக்கு மனைவியாக வாழ மனப்பூர்வமாக ஆசைப்படுகிறேன் உங்கள் சுக துக்கங்களில் பங்கு போட்டு உங்கள் காலடியில் கிடந்து உங்களுக்கு பணி செய்வதை பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். உங்களுக்கு விழியாகவும், வழியாகவும் வாழ ஆசைப்படுகிறேன் எனக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள். உங்கள் பதிலுக்காக ஆவலுடன் காத்திருக்கிறேன்.

கடிதத்தை எழுதி மீண்டும் ஒரு முறை படித்து விட்டு ஸிராஜின் வீட்டுக்கு அதனை முகவரியிட்டு தபாலில் சேர்த்து விட்டாள். இப்போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கு மனம் பாரம் குறைந்து லேசாக இருந்தது. நிம்மதியாக மூச்சு விட்டாள்.

எப்படியோ ஒருவாரம் ஓடி மறைந்து விட்டது ஸிராஜிடமிருந்து பதில் கடிதத்தை எதிர் பார்த்தவளுக்கு ஏமாற்றம். இருந்தாலும் மனதை தேற்றிக் கொண்டாள்.

அது ஒரு சனிக் கிழமை. வீட்டின் முன் தபாற்காரனின் மணியோசை கேட்டு வெகு ஆவலோடு ஓடோடிச் சென்றாள். அந்த ஒரு கணத்தில் ஓராயிரம் கற்பனைகள் அவள் மனதில் தோன்றின. அவன் கொடுத்த கடிதத்தைப் பெற்றவளுக்கு ஏமாற்றமாக இருந்தது. அது அவள் எதிர் பார்த்த கடிதமல்ல. தம்பிக்கு யாரோ அனுப்பிய கடிதம்.

மீண்டும் அவள் மனதை சோகம் கௌவிக் கொண்டது. மாலை மங்கி இருட்டியது, அவள் வாழ்கையைப்போல. அன்றிரவெல்லாம் அவளுக்கு உறக்கமே வரவில்லை. பொழுது புலர்ந்தது. முற்பகல் பதினொரு மணியிருக்கும். வீட்டின் முன் முச்சக்கர வண்டியொன்று நிறுத்தப்படும் ஓசை கேட்டு ஜன்னலால் எட்டிப் பார்த்தாள் ஜரீனா. அவள் கண்களையே அவளால் நம்ப முடியவில்லை. அதிலிருந்து மெதுவாக இறங்கினார் ஸிராஜ். அடுத்து கையில் ஒரு குழந்தையுடன் ஒரு அழகான இளம் பெண் இறங்கி ஸிராஜை மிக நெருக்கமாக அரவணைத்துப் பிடித்தபடி வீட்டை நோக்கி நடந்து வருகிறாள். ஒரு கணத்தில் அவளுக்கு எல்லாமே புரிந்து விட்டது. எதிர்பார்ப்புக்கள் நிறைந்த அவள் இதயம் வெடித்துச் சிதறுவது போன்ற உணர்வு அவளுக்கு. இருந்தாலும் தன்னை சுதாகரித்துக் கொண்டு முன்பக்கம் ஓடி வந்து அவர்களை வரவேற்கிறாள்.

"வாங்க சேர்... வாங்க.... வாங்க சிஸ்டர்...வாங்க..."

"டீச்சர்....இவதான் என் வைப். இவன் எங்கட மகன். நீங்க அன்டைக்கு சொன்ன மாதிரி நல்லதொரு மனைவி எனக்குக் கிடைச்சிட்டா." என்று ஸிராஜ் கூற, இதயத்தில் முள் ஒன்று தைத்தது போலிருந்தது அவளுக்கு.

"நீங்க ரொம்ப அதிர்ஷ்டம் செஞ்சவர். கண்கள்ல ஊனம் உங்களுக்கல்ல. கண்பார்வை இல்ல என்கிறதுக்காக உங்க அன்பை உதாசீனம் செய்த எனக்கும், நிறத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் போல இளம் பெண்களுக்கு கல்யாண வாழ்வு கிடைக்காமச் செய்யும் இந்த சமுதாயத்துக்கும் தான் கண்கள்ல ஊனம்." எனத் தனக்குள்ளேயே கூறிக்கொண்ட ஜரீனா வழிந்து விழத் தயாராகிய கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள்.

பிரைல் போட் :- கண்பார்வை இல்லாதவர்கள் எழுதுவதற்காகப் பாவிக்கும் உபகரணம்.

பிரைல் எழுத்து :--கண்பார்வை இல்லாதவர்கள் எழுதும் எழுத்து வடிவம்.(குற்றெழுத்து.)

**2008 ஆம் ஆண்டு சபரகமுவ மாகாண கலை இலக்கிய விழாவில் முதல் பரிசு பெற்ற கதை.**

**நன்றி : தினகரன் வார மஞ்சரி 2009.04.19**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவியே குருவாக.....!!

பானு எந்தக் கவலையுமின்றி முற்றத்தில் தன் வயதையொத்த சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். வாசல் திண்ணையில் உட்கார்ந்தபடி சிந்தனை வசப்பட்டிருந்தாள் கரீமா.

“ம்...நானும் இப்பிடி ஒரு கொழந்தையாக ஈந்திருந்தா எந்தக் கவலயும், கஷ்டமும் எனக்கு ஈந்தீச்சாது.....!” என நினைத்துக் கொண்டிருந்தவளின் இதயத்திலிருந்து நீண்டதோர் பெருமூச்சு வெளியானது. கணவனை நினைத்த போது அவள் விழியோரங்களில் நீர் முட்டிக் கொண்டு வந்து விட்டது.

கரீமா ஒரு இளம் தாய். ஏழைப் பெற்றோருக்குப் பிறந்த மூத்த பெண் அவள். அவளுக்குக் கீழே திருமணத்திற்காகக் காத்திருக்கும் தங்கைகள் இருவர். மருந்துக்குக் கூட ஆண் சகோதரர்கள் கிடையாது. அவளின் வாப்பா ரஷீது நானா மேசன் வேலை செய்பவர்களுக்கு கையாளாக தொழில் புரிபவர். எப்படியோ மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்து மூத்த மகளுக்குத் திருமணத்தை நடத்தி விட்டார். இருந்தும் நிம்மதியாக மூச்சு விட அவரால் முடியவில்லை. சில காலம் எந்த விதப் பிரச்சினைகளுமின்றி வாழ்ந்து வந்த கரீமாவின் கணவன் லாபிர் திடீரென்று அவர்களின் தலையில் குண்டொன்றைத் தூக்கிப் போட்டான்.

“கரீமா இங்க பாரு... இவ்வளவு நாளும் பேசாம ஈந்த. ஒன்ன நான் கலியாணம் முடிச்சிய நேரம் ஓன்ட வாப்பா ஊட்டுல அரவாசிய எனக்கு எழுதித் தாரன்டு சென்ன. ஆனா இன்னம் எழுதித் தரல்ல. எனக்கு இப்ப தொழில்ல கொஞ்சம் கரச்சல். அத எழுதித் தந்தா ஈடு வெச்சாவது தொழில செய்யேலும்.... நான் கேட்டன்டு வாப்பாட்டச் செல்லு.” அவன் திடீரென்று அப்படிச் சொன்னதும் ஆடிப் போனாள் கரீமா.

“இங்க பாருங்கோ.... வாப்பா அப்ப அப்பிடிச் சென்னதான். தங்கச்சிமாருட கல்யாண விஷயம் முடிஞ்சதும் ஊட்ட எழுதித் தாரோண்டு. ஆனா அதுக்கு முன்னால அதக் கேக்கியதோ, ஈடு வெச்ச நெனச்சியதோ ஞாயமில்ல. நீங்க கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ....” அவள் அழாக் குறையாக அவனிடம் நியாயம் கேட்ட போதும் அவன் அசையவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊட்ட எழுதித் தந்தாத் தான் நான் உன்னோட ஈச்சிய. இல்லாட்டி என்ன எதிர் பாக்க வேணாம்..." என்று கூறி விட்டுப் போனவன் தான் அதன் பின் அவன் வரவேயில்லை. தன் ஒரே மகள் பானுவைப் பார்க்கும் ஆசை கூட அவனுக்கு வராதது கரீமாவுக்கு கவலைக்கு மேல் கவலையைக் கொடுத்தது.

நாட்களின் நகர்வில் ரஷீது நானாவுக்கு விஷயம் தெரிந்த போது துடித்துப் போனார். இதைப் பற்றி தன்னிடம் எதுவும் கூறாத மகளைக் கடிந்து கொண்டார்.

"புள்ள கரீமா... இது ஓன்ட வாழ்க்கப் பிரச்சின. தாரன்டு சென்னதக் குடுக்கத் தானே வேணும் மகள். நாளைக்கே ஊட்டுல அரவாசிய எழுதிக் குடுக்கோம்...." என்று அவர் கூறிய போது,

"வாப்பா மடத்தனமாப் பேச வேணாம். இப்ப ஊட்ட எழுதிக் குடுத்தா அவர் அத ஈடு வெச்சியோண்டு. அதுக்குப் பொறகு நாங்க எல்லாரும் கொமர்ப் புள்ளைகளோட ரோட்டுக்குத் தான் எறங்கோனும். அதனால அவசரப்பட வேணாம். இப்பிடி ஊட்டுக்காகவும், சொத்துக்காகவும் ஈனமெரக்கமில்லாம நடக்கியவர நம்பேலுமன்...? அவர் வராட்டியும் பரவாயில்ல. நானும் ஏன்ட புள்ளையும் இந்த ஊட்டுல ஒரு மூலையில ஈந்துட்டுப் போற. குடும்பப் பொறுப்பில்லாத மனுஷனுக்கு எனத்துக்கன் பொண்டாட்டி புள்ள....? அவரு இப்ப ஊடட்டுலிருந்து பெய்த்து மூணு மாசமாகீட்ட. இந்தப் புள்ளையிட செலவுக்குச் சரி ஒரு நூறு ரூவா அனுப்பினன்....? இல்லயே...!" என்று கூறிய அவள் வீட்டை எழுதிக் கொடுப்பதை எதிர்த்து நின்றாள்.

அதன் விளைவு விரைவிலேயே தெரிந்து விட்டது. அவன் அவளை விவாகரத்துச் செய்வதற்காக காதி நீதி மன்றத்துக்கு விண்ணப்பித்து விட்டான். இது பற்றிய அறிவித்தல் அவளுக்கு வந்த போது அதிர்ந்து போனாள் கரீமா.

"மகள் மருமகன் கேட்டத்த குடுக்கோம். இப்ப ஓன்ட வாழ்க்க தான் பாழாகப் போற....!" என்று அவர் பதறியபடி அவளின் அனுமதியைக் கோரிய போதும், அவள் அதே முடிவையே கூறிவிட்டாள்.

இப்போது சில மாதங்களாக அவளும், முதலாம் தரத்தில் கல்வி கற்கும் பானுவும் வாப்பாவுக்கு சுமையாகிப் போனார்கள். அவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சிறிய உழைப்பில் மகளையும், பேத்தியையும் கண்கலங்காமல் பார்த்துக் கொண்டார். தானும் தனது பிள்ளையும் தனது தகப்பனுக்கு சுமையாக வாழ்ந்து வருவது அவளுக்குக் கவலையைத் தர தனது பிள்ளைக்கு கணவரிடமிருந்து செலவு பெற்றுத் தரும்படி காதி நீதிமன்றத்திற்கு அவள் எழுதிய போது நீதிமன்றம் அவனிடமிருந்து மாதம் ஆயிரத்து ஐநூறு ரூபாவை அவளுக்குப் பெற்றுக் கொடுத்தது.

மாதங்கள் சில கடந்தன. சில தடவைகள் அவன் போட்ட விவாகரத்து வழக்கிற்காக அவளும் நீதிமன்றம் போய் வந்தாள். இதுவரை நீதவான் ஒரு முடிவையும் கொடுக்கவில்லை. வழக்குத் தொடர்ந்தபடி இருந்தது. அப்படி விரைவாக அவர்கள் தீர்ப்போ, தலாக்கோ கொடுக்க மாட்டார்கள். ஆகுமாக்கப்பட்ட காரியங்களில் அல்லாஹ்வுக்கு மிக வெறுப்பானது இந்தத் தலாக் தானே...! எனவே முடிந்த வரையில் முயற்சி செய்து தம்பதிகளைச் சேர்த்து வைப்பதற்காகவே அவர்கள் பாடுபடுவார்கள்.

பிள்ளையின் செலவு சம்பந்தமாக சனிக் கிழமை நீதி மன்றம் வரும்படி காதியார் அவர்கள் இருவருக்குமே கடிதம் அனுப்பியிருந்தார். அன்றிரவே உம்மா அவனிடம் கூறிவிட்டாள்,

“லாபிரு.... இங்க பாரு செலவுக்குக் குடுக்கிய சல்லி போதா அது இதென்டு செல்லி சல்லி கழட்டப் பாக்கியோன்டு நீ மனமெறங்காத. இப்ப குடுக்கியது போதும். அதுக்கு மேல்ல ஒரு சதமும் தரத்துக்கு வசதியில்லயென்டு செல்லு”

“நான் ஒன்டும் ஏமாளியல்ல ஒரு சதம் சரி கூடக் குடுக்கியல்ல. நான் தாரன் உம்மா? ஒங்கட மகன்....” என்று கூறிக் கொண்டவன் மறுநாட் காலை நீதிமன்றம் புறப்பட்டான்.

காதி நீதிமன்றம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. விவாகரத்து வழக்கு, ஜீவனாம்ச வழக்கு என்று தமது பல்வேறு பிரச்சினைகளுக்காகவும் பலர் அங்கு வந்து அமர்ந்திருந்தார்கள். சின்னச் சின்ன சில்லறைப் பிரச்சிகைளைக் கூட பெரிதாக்கிக் கொண்டு தலாக் வரை சென்றவர்களும் அங்கே அமர்ந்திருந்தார்கள். காதியாரும், ஜூரிகளும் ஒவ்வொருவராக உள்ளறைக்கு அழைத்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். ஏனையவர்கள் அந்தப் பெரிய ஹாலில் உட்கார்ந்திருந்தார்கள். லாபிரும் ஒரு வசதியான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கையில் அமர்ந்து கொண்டான். கரீமா வந்திருக்கிறாளா? என அவன் மெதுவாக நோட்டமிட்டான். ஒரு மூலையில் அவளும் அவளின் வாப்பாவும் உட்கார்ந்திருந்தார்கள். அதிக நேரம் செல்லவில்லை. அவன் உள்ளே அழைக்கப்பட்டான்.

"லாபிர்.... ஒங்கட மகள் இப்ப ஸ்கூலுக்கும் போற. அவட சாப்பாடு, உடுப்பு, படிப்பு, மருந்துச் செலவு என்டு எல்லாச் செலவுக்கும் மாதத்துக்கு நீங்க குடுக்கிய ஆயிரத்து ஐநூறு ரூவாவும் போதா. அதக் கூட்டித் தரச் செல்லி அவங்க கடிதம் அனுப்பி ஈச்சி. நீங்க இதப் பத்தி எனத்தியன் செல்லிய. இந்தக் காலத்துல நீங்க குடுக்கிய சல்லி புள்ளைட செலவுக்கு போதா என்டு தான் நாங்களும் நெனச்சிய....!" காதியார் கூறி முடிக்கமுன்,

"மன்னிச்சிக்கொங்கோ காதியார்...! ஏன்ட வசதிக்கு ஏத்த மாதி தான் என்னால குடுக்கேலும். அதுக்கு மேல்ல ஒரு ரூவாவும் குடுக்க எனக்கு வசதியில்ல. இதத் தான் நான் செல்லிய...." என்று முடிவாகக் கூறினான் அவன்.

"சரி... சரி... அங்கல பெய்த்து ஈந்துக் கொண்டு கொஞ்சம் யோசிச்சிப் பாருங்கோ. கோட் முடிய முன்னுக்கு ஒங்கட முடிவ எங்களுக்கு செல்லுங்கோ...." என் அவன் யோசிப்பதற்கு அவகாசம் கொடுத்தார் காதியார்.

ஹாலில் போய் உட்கார்ந்து கொண்ட லாபிர் மதிய நேர உஷ்ணத்தின் கொடூரத்தால் அவஸ்தைப் பட்டான். அவனுக்கு வியர்த்து வடிந்தது. அங்கே பலரும் அவனைப் போன்றே உச்சி வெயிலின் உஷ்ணத்தால் அவதிப் பட்டுக் கொண்டிருந்தார்கள். அவன் மேலே பார்த்தான். மின் விசிறி சுற்றவில்லை. சுவிட்ச் அருகே கையைக் கொண்டு போனான் அவன். அப்போது பக்கத்தில் இருந்தவர்,

"பேனப் போட வேணாம் ஹாஜி. பேன்ட செறகுக்கு மேல்ல குருவி கூடு கெட்டி ஈச்சி. அதுல குஞ்சுகளும் ஈச்சி. பேன் சுத்தினா அந்த குருவிகளுக்குத் தான் ஆபத்து. அதச் சொட்டி பேனப் போட வேணாம்" என அவனைத் தடுத்தார் அவர். அப்போது தான் அவனும் அதை அவதானித்தான். குருவியொன்று அங்கே அழகானதொரு கூட்டைக் கட்டியிருந்தது. அந்தக் கூட்டுக்குள்ளிருந்து குஞ்சுகள் கீச்..கீச் எனச் சத்தமிட்டன. தாய்க்குருவி குஞ்சுக் குருவிகளுடன் கூட்டுக்குள்ளே அவற்றிற்கு காவலாக இருந்தது. தந்தைக் குருவி அடிக்கடி அவர்களின் தலைக்கு மேலால் பறந்து போவதும் வருவதுமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு நேரமும் சும்மா உட்கார்ந்து கொண்டிருந்தனுக்கு அந்தக் குருவிகளைப் பார்த்த போது சுவாரஷ்யமாக இருந்தது. வெகு நேரமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

கூட்டம் குறைந்து கொண்டிருந்தது. பின்னால் திரும்பிப் பார்த்தான். கரீமாவும் அவள் வாப்பாவும் போயிருந்தார்கள். கூட்டம் முடியும் வரை அங்கேயே உட்கார்ந்திருந்தான் லாபிர். அவனுக்கு பொழுது போகவில்லை. எனவே அந்தக் குருவிகளின் நடவடிக்கையை ரசித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான்.

அவன் அந்தக் குருவிக் கூட்டையும், குருவிகளின் நடமாட்டத்தையும் கண்டு இப்போது அரைமணி நேரமிருக்கும். அந்தத் தந்தைக் குருவி வெளியே பறந்து போவதும், இரண்டு நிமிடத்துக்குள் தன் சொண்டுகளில் இரையைக் கௌவிக் கொண்டு வந்து குருவிக் குஞ்சுகளுக்கு ஊட்டுவதும், திரும்பவும் பறந்து போய் மீண்டும் இரையுடன் வந்து ஊட்டுவதுமாக நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. இந்த அரைமணி நேரத்துக்குள் குறைந்தது பதினைந்து தடவைகளாவது அந்தக் குருவித் தந்தை தன் குஞ்சுகளுக்கும், தாய்க் குருவிக்கும் உணவைக் கொண்டு வந்து ஊட்டியிருக்கும்.

அத்தனை நேரமும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு திடீரென்று தலையில் மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது. மூளையில் ஏதோ தட்டுப்பட்டது போல் ஒரு உணர்வு. அவன் சிந்தனை வயப்பட்டான்.

"அ.்.றிணையான அந்த ஐந்தறிவு கொண்ட குருவிக்குள்ள பாசமும், நேசமும், கடமையுணர்வும், முயற்சியும் ஆறறிவு படைத்த எனக்கும், என்னைப் போன்றவர்களுக்கும் இல்லாமல் போனதேன்? அந்தக் குருவி தன் குஞ்சுகளுக்கு இரண்டு நிமிடங்களுக்கு ஒரு தடவை - எத்தனை தடவைகள் வெளியே சென்று உணவு தேடிக் கொண்டு வந்து ஊட்டி விட்டது...! அந்த ஆண்குருவி தன் மனைவிக் குருவிக்கும் தன் குஞ்சுகளுக்கும் உணவு கொடுப்பதில் கஞ்சத்தனம் செய்யவில்லை. சோம்பலின்றி சுறு சுறுப்பாகப் பறந்து திரிந்து தன் கடமையை ஒழுங்காகச் செய்கிறது... ஆனால் நான் எனக்கென்றே வாழ்ந்து கொண்டிருக்கும் அன்பு மனைவிக்கும், என் இரத்தத்தில் உருவாகிய என் குழந்தைக்கும் உழைத்துக் கொடுப்பதில், உணவு கொடுப்பதில் எவ்வளவு கீழ்த்தரமாக நடந்து விட்டேன்....? என் பிள்ளையின் செலவுகளுக்கு போதாத தொகையைக் கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை எவ்வளவு கஷ்டப்படுத்தி விட்டேன்...? இத்தனை நாளும் ஒரு கணவனுக்குரிய, தந்தைக்குரிய கடமைகளை நான் ஒழுங்காகச் செய்தேனா...?" என்பதை நினைக்க நினைக்க அந்த ஐயறிவு படைத்த குருவி தன்னைவிட பன்மடங்கு மேல் என்பது அவனுக்கு விளங்கியது. தன்னைப் பற்றி சிந்திக்கச் சிந்திக்க அவனுக்கு வேதனையாகவும், வெட்கமாகவும் இருந்தது.

உடல் புல்லரிக்க, உணர்வுகள் கொந்தளிக்க நீர் நிறைந்த கண்களுடன் மேலே பார்த்தான் லாபிர். அங்கே இன்னொரு பறவை கூரை முகட்டருகே போவதும் வருவதுமாக இருந்தது. அது என்ன செய்கிறது என்பதைக் கூர்ந்து நோக்கினான் லாபிர். அந்தக் குருவி தன் சொண்டுகளில் சிறு துரும்புகளையும், குச்சிகளையும் ஒவ்வொன்றாகச் சுமந்து வந்து கூடு கட்டிக் கொண்டிருந்தது. இப்போது அவனுக்கு மேலும் ஒரு உண்மை உறைக்க அப்படியே கல்லாய் நின்றிருந்தான் லாபிர். மற்றவர்களின் இருப்பிடத்துக்கு ஆசைப்படாது தனது குடும்பத்திற் கென்று பொறுப்புடனும், முயற்சியுடனும் கூடு கட்டிக் கொண்டிருக்கும் அந்தப் பறவையின் முன் தன்நிலை எவ்வளவு கேவலமானது என்பதைப் புரிந்து கொண்டான் லாபிர்.

"அந்த ஏழைகள்ட ஊட்டப் பறிச்சிக் கொள்ள நெனச்ச... நான் எவளவு பெரிய அநியாயத்த செய்யப் பாத்தன்...! அல்லா பாதுகாத்துட்ட. ஈக்குப் பொறகு எனக்கு அவங்கட ஊடு தேவல்ல. ஏன்ட பொண்டாட்டி புள்ளைக்கு நானே கஷ்டப்பட்டு ஒழச்சி ஊடு கெட்டோணும். அந்த அஞ்ஜறிவு படச்ச குருவிகளால அல்லாஹ் ஏன்ட கண்ணத் தொறந்துட்ட.... அல்ஹம்து லில்லாஹ். நான் குடுத்த விவாக ரத்து வழக்க வாபஸ் வாங்கிக் கொண்டு இன்டைக்கே அங்க பெய்த்து அவங்களோட சேந்து வாழோணும். ஏன்ட பொண்டாட்டி புள்ளய மட்டுமல்ல அந்த முழுக் குடும்பத்துக்கும் என்னால ஏன்டிய ஒதவிகள செய்யோணும்" என்ற தீர்மானத்துடன் எழுந்து நின்றான் லாபிர். அப்போது தான் கூட்டம் முடிந்து அங்கே வந்த காதியார்,

"லாபிர்... புள்ளேட செலவு விஷயத்த யோசிச்சு பாத்தா....? சரி.... இப்ப எனத்தியன் செல்லிய...?" என ஆவலோடு கேட்க,

"நல்லா யோசிச்ச ஹாஜியார். நான் போட்ட விவாகரத்து வழக்க வாபஸ் வாங்கிக் கொள்ளிய. இன்டைக்கே அங்க பெய்த்து ஏன்ட பொண்டாட்டியோட சேந்து வாழப் போற...." என்று அவன் கூறக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற அவனுக்கு என்ன நடந்ததென்று புரியாமல் நின்றிருந்தார் காதியார்.

மேலே பார்த்தான் லாபிர். வாழ்க்கையின் தத்துவத்தை அவனுக்குப் புரிய வைத்த அந்தக் குருவிகள் கீச்.... கீச்.... என்று அவனை வாழ்த்தியபடி அவனது தலைக்கு மேலால் பறந்து சென்றன. தெளிவான மனதுடன் கரீமாவின் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான் லாபிர்.

**2010 ஆம் ஆண்டு கேகாலை மாவட்ட தேசிய இலக்கிய விழாவில் முதல் பரிசு பெற்ற கதை.**

**2010 ஆம் ஆண்டு களுத்தரை மாவட்ட அஹதிய்யா பாடசாலையால் வெளியிடப்பட்ட "முஜாஹதா" மீலாத் விழா மலரில் பிரசுரமான கதை.**

**நன்றி தினரன் வார மஞ்சரி 10.03.2013**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயம்...!

இரண்டு இன மக்களும் காலம் காலமாக ஒற்றுமையாக வாழ்ந்து வந்த அந்த ஊருக்கு யார் கண்தான் பட்டதோ தெரியவில்லை. சில தினங்களுக்கு முன் இரண்டு தனிப்பட்டவர்களுக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதம் அடிதடியில் தொடங்கி இரண்டு சமூகங்களுக்கிடையிலுமான சண்டையாக விஸ்வரூபம் எடுத்து விட்டது. விளைவு பல கடைகள் தீக்கிரையாகின. வீடுகள் சிலவும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. விலை மதிக்க முடியாத ஓரிரு மனித உயிர்கள் கூட அநியாயமாகப் பலியாகின. நகரெங்கும் புகை மண்டலமாகக் காட்சியளித்தது. கடைகள் இழுத்து மூடப்பட்டன. மக்கள் அன்றாட தேவைகளுக்குக்கூட பெரும் சிரமத்தை அனுபவித்தனர். வீட்டுக்கு வெளியே வந்தால் என்ன நடக்குமோ என்ற பயத்தால் பலரும் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர்.

ஓய்வு பெற்ற கிராம சேவகரான முஹம்மது ஆரச்சி வீட்டு ஜன்னலூடாக வெளியே பார்த்தார். வீதி வெறிச்சோடிக் காணப்பட்டது. இடைக்கிடையே பொலிசாரின் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள்" கேட்ட வண்ணமிருந்தன. யன்னலை மூடிவிட்டு கவலையோடு அப்பால் நகர்ந்தார் ஆரச்சி.

முஹம்மத் ஆரச்சியின் வீடு நகருக்கு அண்மித்த கிராமப்பகுதி ஒன்றில் தான் உள்ளது. முஸ்லிம்கள் அவ்வளவாக இல்லை. ஏழெட்டு முஸ்லிம் வீடுகள் மட்டுமே அந்த இடத்தில் இருந்தன. ஏனையவை அனைத்தும் பெரும்பான்மையின மக்களுடையவை. இருந்தாலும் அந்த மக்கள் இவர்களுடன் மிகவும் அன்பாகவும், அன்னியோன்ய மாகவும் நடந்து வந்தார்கள். அவர்கள் இனமத வேறுபாடுகளைக் கடந்து ஒருவர் சுகதுக்கங்களில் மற்றொருவர் பங்கு பற்றி ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள். விஷேட பண்டிகை நாட்களிலும், வைபவங்களிலும் எல்லோரும் இணைந்திருப்பார்கள். தினமும் செய்யும் உணவு வகைகளைக்கூட ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வார்கள்.

நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் வந்து விட்டால் போதும். அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கும் சேர்த்தே இவர்கள் சமைப்பார்கள். இப்படி எந்த வேறுபாடுகளுமின்றி இரண்டறக் கலந்து வாழும் மக்கள் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மது ஆரச்சி நெடு மூச்செரிந்தவாறு கதிரையில் அமர்கிறார்.

“எவ்வளவு ஒற்றுமையாக வாழ்ந்த மக்கள் நாங்கள்! ஏன் இப்படியொரு கஷ்டம் எங்களுக்கு வரணும்? யார் யாரோ உதவாக்கரைகள் செய்கின்ற விஷமங்களால் முழுச் சமூகத்துக் குமல்லவா பாதிப்பு? என் வாப்பா, அப்பாமார் காலம் தொட்டே முஸ்லிம்களுக்கு அவர்களிடத்தில் எவ்வளவு பெரிய மதிப்பு இருந்திச்சி...! முஸ்லிம்கள் நம்பிக்கையானவங்க, நாணயமானவங்க என்று எப்பவுமே அவங்க நம்பினாங்க. அதனால எந்தப் பொருளையும், பணத்தையும் கூட முஸ்லிம்களிடம் தான் நம்பிக்கையாக வைத்தாங்க. அவர்களின் புது வருஷம், திருநாட்களிலெல்லாம் அவர்கள் எங்களிடம் தான் கைவிஷேசம் வாங்குவாங்க. என்னையே எடுத்துக் கொண்டாலும் அவர்களுக்கு என் மேல தனி மரியாதை. குடிச்சிப் போட்டு தலைகீழாக நடக்கிறவன்கூட என்னக் கண்டா மரியாதையாக ஒதுங்கிப் போவான். அப்படிப்பட்ட ஜனங்கள்ட மனசில விஷத்தக் கலந்தது யாரு?” ஆரச்சியின் கவலை கட்டுக்கடங்காமல் இருந்தது.

இந்தச் சில தினங்களாக அவரும் வீட்டை விட்டு வெளியே இறங்கவில்லை. வீட்டில் மனைவியையும், பெண் மக்கள் இருவரையும் தனியே விட்டு விட்டு வெளியே செல்லவும் பயமாக இருந்தது.

குமர்ப் பிள்ளைகளை வைத்துக் கொண்டு ஆரச்சியும், அவர் மனைவியும் நெருப்பின் மீது இருப்பதைப் போன்று தவித்துக் கொண்டிருந்தார்கள். கிராமத்தைக் கடந்து வெளியூர்களிலிருக்கும் உறவினர் வீடுகளுக்காவது செல்லவும் முடியவில்லை. அழகான பெண்மக்கள் காடையரின் கண்களில் பட்டு விட்டால் அதுவேறு விபரீதமாகப் போய்விடலாம். எனவே யாராலும் தனக்கு எந்த ஆபத்தும் வராது என அவர் நினைத்ததாலும் வீட்டைப் பூட்டிக் கொண்டு வீட்டிலேயே இருந்தார்கள்.

இதற்கிடையில் அந்த அயலில் வாழும் முஸ்லிம் வீடொன்றுக்கு எவரோ இரவோடிரவாக தீயிட்டு விட்டார்கள். அந்த வீட்டிலிருந்தவர்களும் உயிரைக் கையில் பிடித்தபடி ஆரச்சியின் வீட்டில் தஞ்சமடைந்து விட்டார்கள். வழமையாக அன்பாகப் பழகும் அயலவர்கள் கூட அமைதியாக இருந்து விட்டார்கள். காடையர்களின் அச்சுறுத்தல் காரணமாக அவர்களால் இம்மக்களுக்கு எந்த ஆதரவும் தர முடியவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரச்சியின் வீட்டிலுள்ளவர்கள் தொடர்ந்து எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாதபடி வருவது வரட்டும் என்ற நிலையில் விரக்தியோடும், வேதனையோடும் இருந்தார்கள்.

இன்னும் நகரில் அமைதி ஏற்படவில்லை. இந்த நிலையில் அன்று அந்தி சாயும் நேரம். ஆரச்சியின் வீட்டுப் பின் வாசற்கதவு தட்டப்படுகிறது. பதட்டத்தோடு அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்கிறார்கள். கதவைத் திறப்பதற்காக முன்னே நகர்ந்த ஆரச்சியை மனைவியும், பிள்ளைகளும் தடுக்கிறார்கள். எல்லோர் முகத்தரிலும் பீதி. தைரியத்தை வரவழைத்துக் கொண்ட ஆரச்சி,

"யாரது...?" கேட்கிறார்.

"ஆரச்சி மஹத்தயா... நான் தான் கதவத் திறவுங்கோ..." என வயதான ஒரு பெண்ணின் குரல் ஒலிக்கிறது. மெதுவாகக் கதவைத் திறக்கிறார் இவர். அங்கே வயதான சிங்களப் பெண் ஒருவர் நிற்கிறார். ஆரச்சியால் அவரை இனங்காண முடியவில்லை. குழப்பத்தோடு நோக்குகிறார் அவர்.

"ஆரச்சி மஹத்தயா நான் அவசரமாகப் போகணும். ஒரு விஷயத்த உங்ககிட்ட சொல்லிவிட்டுப் போக வந்தேன். காடையர் கூட்டமொன்று உங்க வீட்ட தாக்க வர்றதாக கேள்விப் பட்டேன். அதுதான் சொல்லிட்டுப்போக வந்தேன். எப்படியாவது நீங்க வீட்டிலுள்ளவங்களக் கூட்டிக் கொண்டு எங்கயாவது பத்திரமாகப் போயிடுங்க. அமைதி ஏற்பட்ட பிறகு வீட்டுக்கு வாங்க" என்று கூறிவிட்டு நகர முற்பட்டவளை இடைமறித்த ஆரச்சி,

"அம்மா... எங்க மேல்ல இருக்கிற அக்கறையால இவ்வளவு தூரம் இங்க வந்து சொல்லிட்டீங்க. நீங்க யாரு என்று தெரிஞ்சுக்கலாமா?" என்று கேட்டபோது,

"ஆரச்சி மஹத்தயா என்னத் தெரியல்லயா? நான் தான் பியதாஸவின் மனைவி. நீங்க எங்களுக்கு எவ்வளவோ நன்மை செஞ்சிருக்கீங்க. இன்டைக்கு என் பிள்ளைகளும், நானும் நல்லா நிம்மதியா வாழுறோமென்றால் அதுக்குக் காரணமே நீங்க தான். உங்களுக்கு ஒரு துன்பமென்றால் அதை நாங்க தாங்க மாட்டோம்" என்று கண்கள் பனிக்கக் கூறிய அந்தப் பெண்ணை நன்றியோடு நோக்கினார் முஹம்மது ஆரச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரத்தில் அவள் விடை பெற்றுச் சென்று விட்டாள். இருந்தாலும், பழைய நினைவுகளிலிருந்து அவரால் விடுபட முடியவில்லை.

* * *

அப்போது அவருக்கு முப்பது வயதிருக்கும். கிராம சேவகர் பதவி கிடைத்து சில ஆண்டுகளுக்குள் அந்த ஊருக்கு இடமாற்றம் வர புது ஊரில் குடியேறினார் அவர். இளைஞனான அவருக்கு ஒரு வீட்டில் தங்குவதற்கு அறையொன்று கிடைத்து விட்டது. அது சிங்கள மக்களுடன் கொஞ்சம் முஸ்லிம் மக்களும் கலந்து வாழும் ஊர். நாளடைவில் முஹம்மது ஆரச்சியை அவ்வூர் மக்களுக்கு மிகவும் பிடித்து விட்டது. காரணம் அவர் யாருக்கு எந்த வேலை தேவைப்பட்டாலும் முகம் சுளிக்காமல் செய்வார். கடமை நேரத்தில் எப்போதும் அலுவலகத்திலே இருப்பார். லஞ்சம் அது இது என்று எதுவும் கிடையாது. தொழிலில் பொறுப்பும் நேர்மையும் மிக்கவர். இதனால் எல்லோருக்கும் அவர் மீது தனி மதிப்பு இருந்தது.

அன்றொரு நாள் குடிசன மதிப்பீடு ஒன்றை ஊரில் செய்ய வேண்டிய பணி அவருக்கிருந்தது. வீடு வீடாகச் சென்று தகவல்களைத் தேடி பதிவு செய்து கொண்ட அவர், ஊரில் ஒதுக்குப்புறத்தில் அதுவும் மலையொன்றின் மீதிருந்த ஒரு வீட்டுக்குப் போக வேண்டி இருக்கவே தன்னுடன் செல்வதற்காக ஊரிலுள்ளவர்களில் சிலரை அழைத்துப் பார்த்த பொழுது யாரும் அவருடன் வர விரும்பவில்லை. காரணம் கேட்ட போது,

“அந்த வீட்டுக்காரன் ரொம்பக் கெட்டவன், கொலைகாரன், இப்போ அவன் சிறைல இருக்கிறான். அதனால் ஊரில் யாரும் அந்தக் குடும்பத்த மதிக்கிறதில்ல, யாரும் அவர்களோட தொடர்பும் இல்ல. அந்தக் குடும்பத்த நாங்க சமூகத்திலிருந்து ஒதுக்கி வச்சிருக்கோம்...” என்று அவர்கள் கூறிய போது, அதனை முஹம்மது ஆரச்சியால் ஜீரணிக்க முடியவில்லை. ஒருவன் செய்த குற்றத்திற்காக முழுக்குடும்பத்தையும் தண்டிப்பது அநீதமானது என்றே அவர் உள்ளுணர்வு கூறியது. நேரிலேயே போய்ப் பார்த்து விடுவோம் என்று முடிவெடுத்துக் கொண்ட அவர் தனியாகவே அந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் குடிசை வீட்டுக்கு முன் சில நிமிடங்கள் தயங்கி நின்றார். பார்வையால் அந்த வீட்டைப் படம் பிடித்துக் கொண்டார்.

அது ஒரு மண் குடிசை "இப்போதும் விழத்தயார்" என்பது போல் அந்தக் குடிசை காணப்பட்டது. நீண்ட காலமாக மாற்றப்படாத ஓலைக் கிடுகுகள் கூரையில் தொங்கின. சில நிமிடங்களின் பின்

"பியதாஸ.... பியதாஸ...." எனப் பெயர் கூறி அழைத்தார். நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க பெண்ணொருத்தி உள்ளேயிருந்து எட்டிப் பார்த்தாள். ஆள்பாதி ஆடைபாதியாக இருந்த அவளைப் பார்த்த போதுஅவளின் வறுமை நிலை வெளிப்படையாகத் தெரிந்தது. எங்கிருந்தோ சிட்டாகப் பறந்து வந்த இரு சிறுவர்கள் அவரின் முன்னே வந்து நின்றனர். அழுக்குப் படிந்த, கிழிந்து தொங்கும் அரைக்கால் சட்டையை மட்டுமே அணிந்திருந்த அவர்களிடமிருந்து துர் நாற்றம் வேறு வீசியது. மூக்கிலிருந்து வடிந்ததைத் தோள்பட்டையில் துடைத்துக் கொண்ட அவர்கள் ஆரச்சியைப் புதினம் பார்த்தனர். தாயின் பின்புறமிருந்து பதினைந்து வயது மகள் ஒருத்தி மெல்ல எட்டிப் பார்த்தாள்.

"அம்மா நான் இந்த ஊர் கிராம சேவகர்" தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார் முஹம்மது ஆரச்சி.

ஆரம்பத்தில் அவரைப் பயத்தோடு பார்த்த அவள், இப்போது உள்ளே அழைத்தாள். வீட்டின் முன்பக்கம் வெளியே நட்டப்பட்டிருந்த பலகை இருக்கையில் அவர் அமர்ந்து கொண்டார். சில நிமிடங்கள் அந்தப் பெண் மனம் திறந்து பேசியதில் இருந்து அந்தக் குடும்பம் பற்றிய உண்மைகளை அவர் உணர்ந்து கொண்டார்.

வறுமையோடு வாழ்ந்த அந்தக் குடும்பத் தலைவன் வறுமை காரணமாக ஊரில் சில சில திருட்டுக்கள் செய்தது உண்மைதான். ஒரு நாள் அவன் மனைவியிடம் பாலியல் வல்லுறவு செய்ய வந்த ஒரு காமுகனின் தலையில் அடித்த போது அவன் மரணமடைந்ததால் கொலைக் குற்றத்திற்கு இவன் ஆளானான். இதனால் ஊர் அந்தக் குடும்பத்தை ஒதுக்கியது. உழைத்துத் தருபவன் சிறை சென்றதால் அந்தக் குடும்பம் வறுமைப் புயலில் பலமாகச் சிக்கித் தவித்தது. அவள் ஊருக்குள் உழைக்கப் புறப்பட்டபோது, யாரும் அவளுக்கு வேலை கொடுக்கவில்லை. அரசாங்கம் கொடுக்கும் சமூர்த்தி உதவியும் அவர்களுக்கில்லை. உண்ண உணவின்றி மாற்றி உடுக்க உடையின்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் படிப்பதற்கு வழியின்றி அவர்கள் விதியின் பிடியில் சிக்கித் தவித்தார்கள். சில வேளைகளில் பிள்ளைகளுக்கும் நஞ்சு கொடுத்து விட்டுத் தானும் தற்கொலை செய்து கொள்வோமா என்று கூட அவள் சிந்தித்ததுண்டு.

அந்தக் குடும்பத்தின் சோகக் கதையை அவள் கூறி முடித்த போது ஆரச்சி நெகிழ்ந்து போனார். அவர் விழியோரங்களில் நீர் நிறைந்தது. அதை வெளிக்காட்டிக் கொள்ளாதவாறு விடை பெற்றார் அவர். அதன் பின் அந்தக் குடும்பத்தின் துயரமே மனதெல்லாம் நிறைந்திருந்தது.

நேராகக் கடை வீதிக்குச் சென்ற அவர் சம்பளப் பணத்தில் அவர்களுக்குரிய உடுகுணிகள், உணவுப் பொருட்கள் மரக்கறி வகைகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு மீண்டும் அதே வீட்டுக்குப் புறப்பட்டார்.

அவர் கொண்டு சென்ற பொருட்களை கண்ணீரோடு பெற்றுக் கொண்ட அந்தப் பெண் அவரின் காலில் விழுந்து வணங்கினாள்.

“வேண்டாம் தாயே நானும் உன்னைப் போல மனிதன் தான், என்ன தெய்வமாக்கிடாதே!” எனத் தடுத்தார் அவர்.

“எங்க இனசனமே எங்களுக்கு உதவாத நேரம் ஒரு முஸ்லிம் எங்களுக்கு உதவி செஞ்சிருக்கீங்க. உங்களுக்கு பெரிய மனசு. இந்த மனித நேயத்த, மனிதாபிமான உதவிய நாங்க என்டைக்கும் மறக்க மாட்டோம்” என்று நாத்தழுதழுக்க கூறியவளை இடைமறித்த அவர்,

“அம்மா இது எங்க கடமை. ஒரு மனிதனுக்கு இன்னொரு மனிதன் செய்ய வேண்டியதத்தான் நான் செஞ்சேன்...” என்றவர் அங்கிருந்து திரும்பி வந்து ஊரிலுள்ள படித்தவர்கள், வசதியுள்ளவர்களை ஒன்று கூட்டி அந்தக் குடும்பத்தின் அவல நிலையையும், அன்றாட தேவைகளைக் கூட நிறைவு செய்ய முடியாத அந்தக் குடும்பத்தின் வறுமை நிலையையும் சுட்டிக் காட்டி, சமூகம் அந்தக் குடும்பத்திற்கு உதவ வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியதோடு இது ஒரு மனித நேயம் மிக்க ஒரு சேவை என்றும் கூறிய போது, பல வாக்குவாதங்களின் பின் அனைவரும் அங்கு போய்ப் பார்ப்பது என்ற முடிவுக்கு வந்தனர்.

ஒரு தினம் அந்த இடத்திற்கு அவர்கள் பயணப்பட்ட போது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வீட்டினரின் நிலையைக் கண்டு எல்லோருக்கும் மனதில் கசிவு பிறக்கவே செய்தது.

ஒரு வாரத்திற்குள் அவர்களுக்குரிய வறுமை நிவாரணம் வந்து குவியத் தொடங்கியது. ஒரு சமூக சேவை இயக்கம் முன் வந்து அந்த வீட்டை ஒழுங்காக இரண்டு அறைகளுடன் கட்டிக் கொடுத்தது.

ஊர்ப் பாடசாலைக்குச் சென்ற ஆரச்சி பிள்ளைகளை அந்தப் பாடசாலையில் சேர்த்ததோடு, அவர்களுக்குரிய சமுர்த்தி உணவு முத்திரையையும் பெற்றுக் கொடுத்து விட்டார்.

இப்போது அந்தக் குடும்பம் சந்தோசமாக வாழ்ந்து வந்தது. அவள் ஊரிலுள்ள வீடுகளில் வேலை செய்து வந்தாள். இந்த மாற்றத்தால் மிகவும் மகிழ்ந்தவர், மனநிறைவு கொண்டவர் நமது ஆரச்சி தான்.

இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன. இப்போது ஆரச்சி அதே ஊரில் திருமணம் முடித்து ஒரு வீட்டையும் கட்டி நிம்மதியாக வாழ்ந்து வந்தார். ஒரு நாள் அந்த சிங்களப் பெண் ஒரு மனிதனுடன் அவரைத் தேடி - நாடி வந்தாள். அவனைப் பார்த்ததும் அவளின் கணவனாக இருக்க வேண்டும் என அவர் நினைத்துக் கொண்டார். அவள் அவனை அறிமுகப்படுத்தி முடியுமுன், அவரின் கால்களில் விழுந்து வணங்கினான் அவன்.

"நீங்க மட்டும் என் குடும்பத்துக்கு உதவல்லைன்னா எப்பவோ என் குடும்பம் செத்துப் போயிருக்கும். சத்தியமாகச் சொல்கிறேன். இனிமேல் நான் எந்தக் குற்றமும், பாவமும் செய்ய மாட்டேன். நிச்சயமாக நான் நல்ல மனிதனாக வாழ்வேன்..." எனத் திருந்திய உள்ளத்தோடு ஆரச்சியின் கால்களைப் பிடித்துக் கொண்டு கண்ணீரோடு கூறிய அவனை ஆதரவோடு அணைத்து வாழ்த்தினார் முஹம்மது ஆரச்சி.

அதன் பின் அவனைப் பற்றி எந்தக் குற்றச்சாட்டும் அவருக்கு வரவில்லை. வருடங்கள் பல கழிந்து விட்டன. இப்போது ஆரச்சியும் ஓய்வு பெற்று வீட்டிலேயே இருந்து விட்டார்.

பியதாஸவின் பிள்ளைகள் நன்றாகப் படித்து உத்தியோகத்தில் இருப்பதாகவும், ஊருக்கு வெளியே அவர்கள் திருமணம் முடித்து குடும்பமாக வாழ்வதாகவும் கேள்விப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது பியதாஸவின் மனைவியைத் திடீரெனக் கண்ட போது, பழைய நினைவுகளில் மூழ்கிப் போய் விட்டார் அவர். இரவாகியது. இவர்கள் அன்றிரவைப் பயத்துடனே கழித்தனர். யாராலும் தூங்க முடியவில்லை. எந்த நேரமும் எந்த ஆபத்தும் வரலாம் என்பதால் விழித்தே இருந்தார்கள்.

மறுநாள் பொழுது விடிந்து இரவாகியது. நேரம் பத்து மணியைத் தாண்டியிருக்கும். கதவு பலமாகத் தட்டப்படுகிறது. எல்லோர் முகத்திலும் அச்சம்.

"ஆரச்சி மஹத்தயா... ஆரச்சி மஹத்தயா... கதவத் திறங்கோ..." ஒரு ஆண் குரல் கம்பீரமாகக் கேட்கிறது. கூடவே இன்னும் பல காலடிச் சத்தங்களும் கேட்கின்றன. எல்லோர் முகத்திலும் மரண பீதி. மீண்டும் அதே குரல்.

"ஆரச்சி மஹத்தயா... கதவத் திறவுங்கோ... நான் பியதாஸவின் மகன் ரஞ்சித் வந்திருக்கேன்... பயப்படாம கதவத் திறவுங்கோ..."

இப்போது தான் போன உயிர் திரும்பி வந்தது போல் இருந்தது அவருக்கு. தைரியமாகக் கதவைத் திறந்தார். அங்கே... வாட்டசாட்டமான இளைஞன் ஒருவன் முன்னே நிற்க, அவன் பின்னால் பல இளைஞர்கள் நிற்கின்றார்கள்.

கையோடு கொண்டு வந்திருந்த அரிசி மூடைகளையும், உணவுப் பொருட்களையும் உள்ளே கொண்டு வந்து வைத்து விட்டு அவன் பேசுகிறான்.

"ஆரச்சி மஹத்தயா... நீங்க இந்த மக்களுக்கு எவ்வளவோ நல்லது செஞ்சிருக்கீங்க. அதுவும் தனிப்பட்ட முறையில என் குடும்பத்திற்கு நிறைய உதவி செஞ்சிருக்கீங்க. இன்டைக்கு நாங்க சமூகத்தில தலை நிமிர்ந்து வாழ்றதற்குக் காரணமே நீங்கதான். உங்களுக்கு எந்தத் துன்பமும் வர நாங்க அனுமதிக்க மாட்டோம். உங்களுக்காக உயிரையும் தர நான் தயார். இன்னும் இரண்டொரு நாளையில நிலம சீராகி விடும். அது வரைக்கும் நானும் எனது நண்பர்களும் உங்களுக்கும், மற்ற முஸ்லிம்களுக்கும் பாதுகாப்புத் தர வந்திருக்கோம். ஊர்ல கலவரம் என்று கேள்விப்பட்டதும் கொழும்பிலிருந்து ஓடி வந்தேன். அம்மா எல்லாம் சொன்னாங்க. உடனே இங்க வந்தேன். இனிமேல் உங்களுக்கு கவலை வேண்டாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிம்மதியாத் தூங்குங்க...” என்று அவன் கூறக் கூற அவரால் உணர்வுகளை அடக்க முடியவில்லை. அவர் உதடுகள் துடித்தன. பேசுவதற்கு நா எழவில்லை. உணர்வுகளின் மேலீட்டால் பேச்சே வராமல் தேம்பிய அவரை அன்போடும், ஆதரவோடும் அரவணைத்துக் கொண்டான் அந்த மனித நேயமிக்க இளைஞன்.

**2007 ஆம் ஆண்டில் அரசியல் அமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு நடத்திய சிறகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை.**

**2010 ஆம் ஆண்டில் இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச சிறுகதைப் போட்டியில் சிறப்புப் பரிசு பெற்று அதே ஆண்டு நர்கிஸ் சஞ்சிகையில் பிரசுரமான கதை.**

**நன்றி தினகரன் வார மஞ்சரி 21.05.2006 (தினை விதித்தால் என்ற பெயரில்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமை...!

முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துச் சிதற கடும் கோபத்துடன் உள்ளே நுழைந்தான் ஸலீம். அவனின் வாயிலிருந்து கடுமையான, அசிங்கமான வார்த்தைகள் வந்து விழுந்தன. அவன் கத்திய கத்தலில் கதி கலங்கிப் போனாள் ஷியாமா.

"நல்ல காலம் புள்ளைகள் ஊட்டுல இல்லாத நேரம். இந்த மனுஷனுக்கு எனத்த புடிச்சோ தெரியா... பொம்புளப் புள்ளயன்டா அப்பிடி ஒரு வெறுப்பு..." மனதிற்குள் நினைத்துக் கொண்டவள் பயம் கலந்த பார்வையோடு அவனை நோக்கினாள்.

"இங்க பாரு ஷியாமா. அடுக்கடுக்கா நாலு பொம்புளப் புள்ளைகளப் பெத்துப் போட்டாய். இந்த முறையும் உன் வயித்துல ஈரது பொம்புளப் புள்ளதான் என்டது 'ஸ்கேனுல' தெரிஞ்சுட்டுது. இனி ஒரு நிமிஷமும் என்னால பொறுக்கேலா... இந்தப் புள்ள எங்களுக்கு வேணாம். இதக் கருவிலேயே கலச்சிரோணும். எனக்குத் தேவ ஆம்புளப் புள்ளதான். எனக்குத் தெரிந்த வைத்தியர் ஒருவர் ஈக்காரு. நாளைக்கு அவர்கிட்ட போவோம்" அவன் தீர்க்கமாகக் கூறிவிட்டான்.

"வேணாங்க. இந்தப் புள்ளய மட்டும் பெத்துக் கொள்றன்.இந்தக் குழந்தயக் கலச்சி பாவத்த சொமக்க எனக்கேலா. நாங்க இப்பிடி செஞ்சா அது ஒரு கொலைக்குச் சமன். ஒங்களக் கெஞ்சிக் கேட்டுக் கொள்றன். தயவு செஞ்சி அந்தப் பாவத்த நாங்க செய்ய வேணாம்..." கண்ணீரோடு அவன் கால்களில் விழுந்தாள் ஷியாமா.

"எழும்புடி நாயே... அடுக்கடுக்கா நாலு பொம்புளச் சிறுக்கிகளப் பெத்துப் போட்ட நீ ஒரு ஆம்புளச் சிங்கத்தப் பெத்துத் தரல்லையே... நீயெல்லாம் ஒரு பொண்டாட்டி... ஒனக்கெல்லாம் ஒரு புள்ள..." என்ன பேசுகிறோம் என்று புரியாத நிலையில் பிதற்றிக் கொண்டிருந்தான் அவன்.

"ஆம்புளப் புள்ளயையும், பொம்புளப் புள்ளயையும் தாறது அல்லாட வேல... எங்களால ஒன்டுமே செய்ய ஏலா... பொம்புளப் புள்ளயென்டா ஒங்களுக்கு ஏன் இப்பிடி ஒரு கசப்பு? பொம்புளப் புள்ளயென்டா ஏதோ ஒரு சுமை என்டு நீங்க நினைக்கிற. அப்பிடி நெனச்ச வேணாம். ஆம்புளப் புள்ளைக்கு மாதிரி அதுகளுக்கும் தலை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுல மூள, கை, கால், அறிவு எல்லாமே இருக்கு. அல்லாஹ் எந்த உசிரையும் வீணாகப் படைக்க மாட்டான்." தனக்குத் தெரிந்ததைக் கூறினாள் ஷியாமா.

"போதும் போதும் நிப்பாட்டு. செய்தத்தையும் செஞ்சீட்டு பெரிய வீராப்பும் பேசுற கழுத. அடுத்தவூட்டப்பாரு. எல்லாமே ஆம்புளச் சிங்கங்களப் பெத்து வச்சிருக்கு."

"ஆம்புளப்புள்ள பெத்துப் போடுறது பெரிசல்ல. எந்தப் புள்ளயப் பெத்தாலும் அதுகள ஒழுங்கா வளக்கோணும். அதுதான் முக்கியம். எங்கட ஊட்டயே எடுங்கோ. எங்கட உம்மா வாப்பாவுக்கு நாங்க ஆறு பேரும் பொம்புளப் புள்ளகதான். மருந்துக்கும் ஆம்புளப் பொறவி இல்ல. இருந்தாலும் வாப்பாவும் உம்மாவும் எங்கள நல்லா வளத்து ஆளாக்கினாங்க. தங்கச்சிமாரு டீச்சர்கள். தாருக்கும் எந்தக் கொறையும் இல்ல. பொம்புளப் புள்ளைகள் ஈக்குற வீட்டுக்கு அல்லாஹ் அதிகமாக பரக்கத்துச் செய்கிறான்." என்று அவள் கூற அவனுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது.

"சும்மா ஒலராமப் போடி. இவங்கட பெமிலி பெரிய ரோயல் பெமிலி. பொம்புளப் புள்ளைகள் உள்ள வீட்டுக்குத் தான் பரக்கத்தாம். எல்லாத் தரித்திரமும் அங்கதான் இருக்கு. பரக்கத்தும் அரக்கொத்தும். அதுதான் நான் இங்க கஷ்டப்பட்டுக் கொண்டீர..." அவனின் பேச்சுக்களால் கவலையடைந்த ஷியாமா,

"இங்க பாருங்கோ... நீங்க அல்லாவ மறந்து பேசுற. தயவு செஞ்சி இப்பிடியான பேச்சுக்களப் பேச வாணாம்."

"சரி பேசல்ல. ஆனா இந்தப்புள்ள எங்களுக்கு வாணாம். இதக் கலச்ச விருப்பப்படாட்டி நீ பெத்துக்கோ. ஆனா நா இங்க ஈக்க மாட்டன். இதுதான் ஏன்ட முடிவு..." தீர்க்கமாகக் கூறிய கணவனைக் கண்ணீரோடு பார்த்தாள் ஷியாமா.

அவள் எவ்வளவோ கெஞ்சி விட்டாள். கண்ணீர் விட்டுக் கதறியும் கேட்டு விட்டாள். அவன் மசியவில்லை. அவன் தந்த மருந்து வகைகளை உண்ண வேண்டிய நிர்ப்பந்தம் அவளுக்கு ஏற்பட்டு விட்டது. இருந்தாலும் அவள் மனம் அழுது கொண்டே இருந்தது.

"யா அல்லாஹ்... தெரிஞ்சிக் கொண்டே இந்தப் பாவத்துக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளாகிட்டேன். ஏன்ட வயித்திலுள்ள கொழந்தய, நீ தந்தீக்குற இந்த அமானிதத்த கலச்ச வேணுமென்டு அவர் புடிவாதமா ஈர. இந்தக்கரு கலையாம பாதுகாக்க உன்னால தான் ஏலும். ஆக்கவும் அழிக்கவும் கூடியவன் நீதான். அதனால இந்தக் கொழந்தய எனக்குத் தந்துடு நாயனே...” எனக் கண்ணீரோடு பிரார்த்தித்துக் கொண்டாள் ஷியாமா.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. வாரங்கள் மாதங்களாகின. கரு கலையட்டும் என்பதற்காக உட்கொண்ட எந்த மருந்துகளுக்கும் பலன் கிடைக்கவில்லை. அவளின் வயிற்றிலுள்ள கரு கொஞ்சமும் அசைவதாக இல்லை. அவளுக்கு ஆறு மாதங்களும் முடிந்து விட்டன.

அவளின் பிரசவத்திற்கு இன்னும் ஒரு மாதமே இருந்தது. பிறக்கப் போகின்ற புதிய ஜீவனை அவன் மனம் ஒரு துளியும் வரவேற்கத் தயாராக இல்லை.

அன்று பிள்ளைகள் எல்லோரும் பாடசாலை போய் விட்டார்கள். ஸலீமும் தொழில் விடயமாக வெளியில் போய் விட்டான்.

“இன்னம் ஒரு மாசத்துல கொழந்த கெடச்சிடும். அதுக்குப் பொறகு அவர் புள்ளைட மொகத்தப் பாத்து சந்தோசப் படுவாரோ, இல்லாட்டி கோவப்பட்டு ஊட்ட ரெண்டு படுத்துவாரோ தெரியா... நாயனே இந்தப் புள்ளயால எந்தப் பிரச்சினையும் வரப்படாது. இந்தப் புள்ளய ஏத்துக் கொள்ற மனச அவருக்குக் குடு நாயனே...” எனக் கண்ணீரோடு கருணையாளனிடம் பிரார்த்தித்துக் கொண்ட ஷியாமா ஏதோ நினைத்துக் கொண்டவளாய் எழுந்து போய் அலுமாரியைத் திறந்தாள். உள்ளே இருந்த மென்மையான துணியொன்றை எடுத்து வந்து குழந்தைக்கான சட்டைகளை வெட்டத் தொடங்கினாள்.

“அவர் ஊட்டுக்கு வாரத்துக்கு முந்தி ரெண்டு சட்டைகளையாவது தச்சி வச்சோணும்.” என நினைத்துக் கொண்டவள், கையூசி கொண்டு தைக்கத் தொடங்கினாள். ஒரு சட்டையைக் கூட அவள் பூரணமாகத் தைத்து முடிக்கவில்லை. அதற்குள் திடீரென வீட்டுக்குள் புகுந்தான் ஸலீம். அவளின் கையிலுள்ள குழந்தைச் சட்டையைக் கண்டதும் அவனுக்குக் கோபம் தலைக்கேறி விட்டது.

“நீ சொன்னாக் கேக்க மாட்டாய். பொறக்கப் போற புள்ளைக்கு புதுச்சட்ட தச்சுரியா...? அப்ப ஏன்ட பேச்ச தட்டிட்டு அந்தப் புள்ளய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெத்து வளக்கப் போற... அப்பிடித் தானே...!" எனக் கத்தியவாறு அவளின் கையிலுள்ள சட்டையைப் பிடுங்கி தூர எறிந்தான் அவன். தன்னுடைய கையிலிருந்த குழந்தையைப் பறித்து தூர எறிந்தது போன்ற பிரமைக்குள்ளானாள் அவள். அவளால் உணர்வுகளை அடக்க முடியவில்லை. அவளையும் மீறி அழுகை பொத்துக் கொண்டு வர அசைவற்று நின்றிருந்தாள் ஷியாமா.

"மாப்புளேட பேச்சக் கேக்காத ஒனக்கு நல்ல பாடம் ஒன்டு படிப்பிச்சிறன். இங்க பாரு... ஒனக்கு நான் வேணுமென்டா புள்ளயப் பெத்து தாருக்காவது கொடுத்துடு. இந்தப் புள்ள வேணாம். நான் ஊட்டுக்கு வரோணுமென்டால் இந்தப்புள்ள இங்க ஈக்கப்படாது." என்று கூறியவன் தனது உடுதுணிகள் சிலவற்றை எடுத்துச் சுருட்டி பேக் ஒன்றில் போட்டுக் கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பி விட்டான். அவன் போவதையே பார்த்துக் கொண்டு செய்வதறியாது நின்றிருந்தாள் ஷியாமா.

"பத்து மாசம் சுமந்து பெத்து புள்ளய தாருக்காலும் குடுக்கேலுமா...? சரி கலியாணம் முடிச்சி பத்து வருஷமாகியும் இன்னும் புள்ள இல்லாம ஈர ஏன்ட மூத்த தங்கச்சிக்கு இந்தப் புள்ளயக் குடுத்திட்டாச் சரி. அவக்கிட்ட ஏன்ட புள்ள வளரட்டும். என்ட புள்ளைக்கு என்னப் போல பாசத்தக் குடுக்கக் கூடியவங்க ஏன்ட பொறவிகள் தானே. ஏன்ட தங்கச்சிக் கிட்ட புள்ள இருந்தா வேண்டிய நேரம் புள்ளய பாக்கவும் ஏலும்." என மனதுக்குள் முடிவெடுத்துக் கொண்டாள் அவள்.

பிரசவத்துக்கான நாள் நெருங்க நெருங்க அவளின் மனக் கவலைகளும் கூடிக்கொண்டே சென்றன. உடலாலும் உள்ளத்தாலும் அவள் மிகவும் நொந்து போயிருந்தாள். எந்த நேரம் என்ன நடக்குமோ என்ற பயத்துடனும், கவலையுடனும் ஜடமாக வாழ்ந்து கொண்டிருந்தாள் ஷியாமா.

அன்று வீட்டை விட்டுப் போன கணவன் இன்னும் வீட்டுக்கு வரவில்லை. பிள்ளைகள் வாப்பாவைக் கேட்ட நேரமெல்லாம் அவள்,

"வாப்பா தொழில் ஒன்டுக்குப் பெய்த்தீர. கிட்டத்துல வாரோண்டு." என்று அவர்களைச் சமாளித்து வந்தாள். இருந்தாலும் பதினைந்து வயதான மூத்த மகளுக்கு ஏதோ கொஞ்சம் புரிந்தது போல் இருந்தது. அவளுக்கும் தாயைக் காணும் போதெல்லாம் கவலைதான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்மா... வாப்பாக்கு இந்தப் புள்ளேல புரியம் இல்லாட்டி அத சாச்சிக்கு குடுப்போம். சாச்சிக்கிட்ட ஈந்தா எங்களுக்கிட்ட ஈர மாதிரி தானே..." என தாய்க்கு ஆறுதல் கூறினாள் அவள்.

பிரசவத்திற்கான நாளும் வந்தது. அன்றெல்லாம் அவளுக்கு வயிற்றில் ஒரே வருத்தமாக இருக்க, அவளை உறவினர்கள் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போனார்கள். பிரசவத்தின் போது மிகவும் சிரமப்பட்டாள் அவள். உயிரைக் கொடுத்து உயிரை எடுக்கும் விடயமாச்சே இது. சில மணி நேரங்கள் கழிந்தன. லேபர் ரூமிலிருந்து குழந்தையின் அழுகை ஒலி கேட்டது. அவள் அரை மயக்கத்தில் இருந்தாள். நிமிடங்கள் நகர்ந்து செல்ல பக்கத்தில் வந்த மருத்துவத் தாதி அவளின் தோள் மீது தட்டி,

"இந்தாம்மா பாரு உன் குழந்த. உனக்கு மகன் பொறந்திருக்கான்." என்று கூறியபடி அவளின் முகத்திற்கு நேரே குழந்தையை தூக்கிக் காட்டினாள். குழந்தையின் முகத்தைக் கண்டதும் அவள் வேதனைகளும், துயரங்களும் பஞ்சாகப் பறந்தன. ஸ்கேன் மெஷின் கூறியதற்கு மாற்றமாக கிடைத்திருப்பது ஆண் மகன் என்று அறிந்த போது அவள் மகிழ்ச்சிக்கு அளவே இல்லாமல் போய் விட்டது.

பெண் குழந்தை தான் கிடைக்கப் போகிறது என்ற நினைப்பில் மடத்தனமான முறையில் நடந்து கொண்ட கணவன், மகன் கிடைத்திருக்கும் செய்தி தெரிந்தால் ஓடோடி வருவான் என்பது அவளுக்குத் தெரியும். எனவே அவளைப் பார்க்க வந்த உறவினர் மூலம் கணவனுக்குத் தகவல் அனுப்பினாள் ஷியாமா.

தனது மனைவிக்கு ஆண் குழந்தை கிடைத்திருக்கும் செய்தியை அவனது கையடக்கத் தொலைபேசி மூலம் அறிந்து கொண்ட போது வாழ்வில் என்றுமே அடைந்திராத இன்ப உணர்வுக்கு ஆளானான் ஸலீம்.

உடனடியாக கடைக்குச் சென்று குழந்தைக்குத் தேவையான பொருட்களையும், மனைவிக்கென பால், பழம் என்று பல்வேறு பொருட்களையும் வாங்கிக் கொண்டு அவசரமாக ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தான். பௌர்ணமி நிலவாய் அவன் முகத்தில் அப்படியொரு பிரகாசம்.

உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டோட மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திருக்கும் கட்டிலை நோக்கி ஓடினான் ஸலீம். மகனைக் கண்டதும் அவனின் முகத்தில் காணப்படும் மகிழ்ச்சியைக் காண அவளுக்கு நிம்மதியாகவும், ஆறுதலாகவும் இருந்தது.

மிக்க ஆசையோடும், ஆர்வத்தோடும் தொட்டிலில் படுத்திருந்த குழந்தையைக் கையிலெடுத்து உச்சி மோந்தான் அவன்.

அவன் செயல்களை மலர்ந்த முகத்தோடு பார்த்துக் கொண்டிருந்த ஷியாமா அவனைப் பக்கத்தில் அழைத்தாள்.

"நீங்க ஆசப்பட்ட மாதிரி ஒரு மகன, ஆம்புளச் சிங்கத்த பெத்துத் தந்துட்டேன். இப்பதான் எனக்கு நிம்மதியா ஈக்கு... நீங்க..." அதற்கு மேல் அவளுக்கு வார்த்தைகள் வரவில்லை. உடம்பு நடுங்கத் தொடங்கியது. கண்கள் மேலே சொருகத் தொடங்கின.

"ஷியாமா..." என்று சூழலை மறந்து கத்தி விட்டான் ஸலீம். அவன் கத்தலையும், கதறலையும் கேட்டு ஓடோடி வந்த தாதியர்கள் உடனடியாக டாக்டரை வரவழைத்தார்கள். அவளைப் பரிசோதித்துப் பார்த்த டாக்டர்,

"அவங்க இறந்துட்டாங்க. இனி கடமையச் செய்யுங்க..." என்று கூறிய போது அந்த ஆஸ்பத்திரிக் கட்டிடமே அதிரும்படி கதறி அழுதான் ஸலீம்.

"ஷியாமா... நீங்க புள்ளத்தாச்சிப் பொம்புள என்டும் பாக்காம ஒங்கட மனச மிச்சம் நோவிச்சேன். இப்ப ஆம்புளப்புள்ள ஒன்ட பெத்துத் தந்துட்டு நீங்க பெய்த்தீங்களே உம்மா... நீங்க இல்லாம இந்தப் புள்ளைகள நான் எப்பிடித் தான் வளக்கப் போறனோ...!" என மனதுக்குள் புலம்பி அழுதான் ஸலீம்.

தாயின் பிரிவைத் தாங்க முடியாத பிள்ளைகள் மிகவும் நொந்து போய் விட்டார்கள். மனைவி இல்லாத வாழ்க்கையை நினைக்க நினைக்க அவன் வேதனைகள் எல்லை மீறின. அவனது மனச்சாட்சி அவனை அணுவணுவாகச் சித்திரவதை செய்து கொண்டிருந்தது.

தாய்பாலுக்காகவும் தாயின் அரவணைப்புக்காகவும் ஏங்கியழும் குழந்தையைப் பார்க்கும் போதெல்லாம் அவன் கண்கள் கண்ணீரை வடிக்கும். எப்படியோ புட்டிப்பாலை குழந்தைக்கு அருந்தப் பழக்கி விட்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனின் பிள்ளைகள் எல்லோரும் பதினைந்து வயதுக்குக் கீழ் பட்டவர்கள். குழந்தையைப் பராமரிக்கவும், தொழிலுக்குப் போகவும் அவனுக்குச் சிரமமாக இருந்தது. இதனைப் புரிந்து கொண்ட மூத்த மகள்,

“வாப்பா... இதுக்குப் பொறகு நான் ஸ்கூலுக்குப் போகல்ல. தம்பியையும், தங்கச்சிமாரையும் பாக்க வேணும் சோறாக்க வேணும், உடுபுடவைகளக் கழுக வேணும். நான் ஊட்டுல ஈக்குறன். நீங்க வேலைக்குப் போங்கோ...” எனக் கூறிவிட்டாள். அதுவே அவனுக்கும் சரியாகப் பட்டது.

“இந்தப் புள்ளைகள நல்லா வளக்க வேண்டிய பாரத்த ஏன்ட தலையில வெச்சிட்டு அவ மௌத்தாப் பெய்த்தா. புள்ளைகள அதுகள்ட மனசு நோகாம பாத்துக் கொள்ளோணும்.” என உறுதி செய்து கொண்டான் ஸலீம்.

மூத்த மகள் அவளுக்குத் தெரிந்த விதத்தில் சமையல் வேலைகளைச் செய்வதோடு இளையவர்களின் உடுப்புக்களையும் கழுவி, வீட்டு வேலைகளையும் செய்து வந்தாள். தாயில்லாத இடத்தில் தாயாக நின்று அந்தச் சேயே பணி செய்வதைப் பார்க்கப் பார்க்க அவன் கண்கள் ஈரமாகும். குழந்தைக்குப் பாலை தயாரித்துக் கொடுப்பது, பராமரிப்பது, தூங்க வைப்பது என்று அவளே அனைத்தையும் செய்து வந்தாள்.

“அடுக்கடுக்கா நாலு பொம்புளப் புள்ளகளப் பெத்துட்டன்டு முட்டாள் தனமாக அந்த சீதேவிட மனச நோவிச்சேன். இப்ப பொம்புளப் புள்ள தானே உம்மாட எடத்துல நின்டு பொறுப்பாக எல்லாத்தையும் செய்ற... நான் ஒரு மடையன்.” எனத் தனக்குள்ளேயே நொந்து கொண்டான் ஸலீம்.

குழந்தைக்கு ஒரு மாதமாகி விட்டது. குழந்தைக்கு ஒரு மாதமாகியதும் அதன் உடல் முழுவதையும் பரிசோதிப்பதற்காக குழந்தையை ஆஸ்பத்திரிக்கு எடுத்து வருமாறு கூறியிருந்தார்கள். அன்று காலையிலேயே குழந்தையை எடுத்துக் கொண்டு அங்கு போனான் ஸலீம். ஒரு மாதம் பூர்த்தியான குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அவனது முறை வந்த போது குழந்தையுடன் உள்ளே நுழைந்தான் ஸலீம். குழந்தையை பலவிதத்திலும் பரிசோனைக்கு உட்படுத்தினார் டாக்டர். அவரின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தில் ஏதோ அதிருப்தியின் சாயல் தென்பட்ட போது மிகவும் கலவரமடைந்த அவன், அவர் முகத்தையே ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

"மிஸ்டர் ஸலீம்... ரொம்பக் கவலையான விஷயம் ஒன்டச் சொல்லப் போறன். இந்தக் குழந்த அவங்கட உம்மாட வயித்துல ஈக்குற நேரம் இதக் கலைக்கிறதுக்கு மருந்து மாத்திரைகள் குடுத்தீங்களா...?" டாக்டரின் இந்தத் திடீர் கேள்வியால் மிரண்டு போனான் ஸலீம். டாக்டரை நேருக்கு நேர் பார்க்கத் திராணியற்றவனாய் நிலத்தையே பார்த்துக் கொண்டிருந்த அவன், 'ஆம்' என்பதற்கு அடையாளமாக தலையை மேலும் கீழும் ஆட்டினான்.

"மிஸ்டர்... நீங்களே உங்கட கொழந்தைக்கு அநியாயத்தச் செஞ்சிட்டீங்க... நீங்க செஞ்ச பாவத்தால எந்தக் குத்தமும் செய்யாத இந்தப் பச்சக் கொழந்த தான் தண்டனைய அனுபவிச்சப் போகுது. இந்தக் குழந்த உங்களுக்கு சுகத்தத் தராது. காலமெல்லாம் இது உங்களுக்குச் 'சுமை' தான்..." டாக்டர் முடிக்குமுன் குறுக்கிட்டவன்,

"என்னத்த டொக்டர் செல்ற...? ஏன்ட புள்ளைக்கு என்ன...? செல்லுங்கோ டொக்டர் செல்லுங்கோ..." பதறினான் ஸலீம்.

"கருவக் கலைக்கிறதுக்காக பாவிச்ச மருந்துகள்ட தாக்கத்தால குழந்தைட மூள வளர்ச்சி பாதிப்படைஞ்சிட்டுது. வயசு போகப் போக உடம்பளவுல இந்தக் குழந்த வளர்ந்தாலும் இதுட மன வளர்ச்சி கொறஞ்சி தான் ஈக்கும். இன்னம் முப்பது வருஷம் போனாலும் ரெண்டு வயசுக் குழந்தைக்கு உள்ள அறிவு தான் இதுக்கு இருக்கும்..." டாக்டர் கூறக் கூற மரமாக, சிலையாக, எல்லாமே அவனாக உணர்வுகளற்று நின்றிருந்தான் ஸலீம்.

**சபரகமுவ மாகாண இலக்கிய விழாப் சிறுகதைப் போட்டியில் 2011 ஆம் ஆண்டு இரண்டாம் பரிசு பெற்ற கதை.**

**2011 ஆம் ஆண்டு ஜமாஅதே இஸ்லாமியின் பெண்கள் பிரிவால் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் சிறப்புப் பரிசு பெற்ற கதை.**

**நன்றி விடிவெள்ளி 22.06.2016**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் மரணிப்பதில்லை

பார்வையாளருக்கான நேரம் முடிவடைந்து விட்டது. என்னைப் பார்ப்பதற்காக வந்த கணவரும், பிள்ளைகளும் போய் விட்டார்கள். மனசெல்லாம் ஒரே வலி, பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொள்கின்றேன்.

"ஹேனியா" ஆப்ரேஷனுக்காகக் காத்திருக்கும் நோயாளி நான். இங்கு வந்து வாரங்கள் இரண்டு கடந்தும் இன்னும் ஆப்ரேஷன் நடைபெறவில்லை. இதன் பிறகு அது நடந்து, சுகம் கிடைத்து வீடு போய்ச் சேர இன்னும் எத்தனை வாரங்கள் செல்லுமோ....? இந்த ஸ்ட்ரைக் மட்டும் இல்லா விட்டால் எனக்கு எப்போதோ ஆப்ரேஷன் முடிந்திருக்கும்.

நான் வைத்தியசாலைக்கு வந்து மறு தினமே சம்பள உயர்வு கோரி வைத்தியர்கள் வேலை நிறுத்தம் செய்து விட்டார்கள். ஸ்ட்ரைக்கை நினைக்கும் போது டாக்டர்கள் மீது எனக்கு கோபம் கோபமாக வருகிறது. மற்றவர்களைப் போல் இவர்களும் தமது புனிதமான பணியை பணத்துக்காக பலியாக்கி விட்டார்களே....? இந்த வைத்தியர்களின் திடீர் வேலை நிறுத்தத்தினால் நோயாளிகள் படும் சிரமங்கள், அவஸ்தைகள் கொஞ்சமானதல்ல.

ஒன்றரை வயது சின்ன மகனின் சிங்கார முகம் என் சிந்தையிலே நிறைந்திருக்கிறது. உண்மையில் அவனை பிரிந்திருப்பது தான் எனக்கு பெரிய கொடுமையாக இருக்கிறது. அவனை நினைக்கும் போதெல்லாம் கண்கள் பனிக்கின்றன. முந்தானையால் மெதுவாக் கண்களைத் துடைத்துக் கொள்கிறேன். அப்போது என் தோளை ஒரு கரம் ஆதரவாகப் பற்றுகிறது. திரும்புகிறேன். அங்கே லோகாம்பாள் புன்னகைத்தபடி நிற்கிறாள்.

"தங்கச்சி அழுறீங்களா....? என்னம்மா செய்றது. இப்பிடி ஆஸ்பத்திரி வழியாக கஷ்டப்பட வேண்டும் என்பது எங்கட தலையெழுத்து. நானும் இந்த இடத்துக்கு வந்து ரெண்டு மாசமாகுது. என்ன ஆப்பரேஷனுக்கு எடுக்குறாங்க இல்லையே... ரெத்தம் தந்தாத்தான் ஒப்பரேஷன் நடக்கும் என்டு சொல்லிட்டாங்க" அலுத்துக் கொள்கிறாள் அவள்.

அந்த பெண்ணுக்கு ஐம்பது வயதிருக்கும் கழுத்திலே கழலை, பெரிய அளவிலே முன் பக்கம் தள்ளிக் கொண்டிருக்கிறது. ஒரே மகனைத் தவிர யாருமில்லாத ஏழைத்தாய். வெளியே இருந்து ரத்தம் எடுக்கக்கூடிய பணவசதியும் அவளுக்கில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வாட்டிலே தோட்டத்து பெண்கள் பலரும் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடன் வைத்தியர்கள் நன்றாக நடந்துகொண்டாலும், ஒரு சில தாதிகளும் சிற்றூழியர் சிலரும் நடந்து கொள்ளும் முறை நன்றாகவே இல்லை. அப்பாவி நோயாளிகளைப் பார்த்து கடிக்காத குறையாக எப்போதுமே குரைத்துக் கொண்டிருப்பார்கள். மொழி புரியாவிட்டாலும் ஏச்சு, வெற்றிலை போட்டுச் சிவந்த வாயைக் கண்டாலும் ஏச்சு, அவர்களைப் பார்த்து ஒரு கிண்டல், நக்கல், ஏளனச் சிரிப்பு வேறு. நாட்டின் முதுகெலும்பான இந்த உழைப்பாளி சமூகமான தோட்டத்து மக்களை ஏன் இவர்கள் மனிதர்களாகவே மதிப்பதில்லை...? மனிதர்களில் இத்தனை ரகங்களா...? என்பதை என்னால் நினைத்துப்பார்க்கவும் முடியவில்லை. அப்பாவி மக்களை நோவிக்கின்ற அவர்களைத் தட்டிக் கேட்க, நியாயம் கேட்க மனசு துடித்தாலும், பெரும்பான்மை மொழியை ஒழுங்காகப் பேசத் தெரியாத நான் அப்படியே அடங்கிப் போகின்றேன்.

வைத்தியசாலை வாழ்வென்பது மறக்க முடியாதது. இப்போது என்னுடன் இங்குள்ள வைத்தியர்கள், தாதிமார், நோயாளிகள் எல்லோருமே பரிச்சயமாகி விட்டார்கள். எனக்கு இன்னும் கட்டில் கிடைக்கவில்லை. பகல் முழுக்க வாங்கிலே உட்கார்ந்து விட்டு இரவில் தரையில் பாயை விரித்து அந்த ஓரேபாயில் சிங்களச் சகோதரி சிரியானியுடனும், தமிழ்ச் சகோதரி லோகாமபாளுடனும் சயனிப்பேன். உணவு உண்ணும் போது கூட சிரியாணி வட்டக்காய், கருவாட்டுக் கறியையும், லோகாம்பாள் இட்டிலி தோசை என்றும் எனக்கு ஆசையுடன் தருவார்கள். எனது வீட்டிலிருந்து வரும் உணவுகளை அவர்கள் விரும்பிச் சாப்பிடுவார்கள். உண்மையிலேயே வைத்தியசாலை என்று வந்து விட்டால் இனம், மதம், மொழி இவற்றுக்கு அப்பால் மக்களை உள்ளத்தால், உறவுகளால் இணைக்கின்ற ஒரு பொது இடம், ஒருவருக் கொருவர் கொடுத்து, உதவி செய்து ஒருவரை ஒருவர் தாங்கி மகிழும் ஓர் இடம்.

காலை எட்டு மணியாகி விட்டது. வாட்டில் ஒரே பரபரப்பு. சிற்றூழியர்கள் ஓடியோடி துப்பரவு செய்வதில் ஈடுபடுகிறார்கள். இன்னும் சில நிமிடங்களில் வாட்டைப் பார்ப்பதற்காக டாக்டர் வந்து விடுவார் என்பதற்கு அடையாளமிது.

எப்போதுமே தோட்ட மக்களைக் கண்டால் எரிந்து விழும் எரிச்சல்காரியான எக்னஸ், பத்தாம் இலக்கக் கட்டிலில் காலுடைந்த நிலையில் படுத்திருக்கும் பாப்பாத்திக் கிழவியின் மீது பாய்ந்து விழுவது நன்றாகக் கேட்கிறது. புனிதமான ஒரு பணிக்காக வந்து இருக்கின்ற இவர்கள் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்களோ...?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதோ... டக்... டக்.... என்ற சப்பாத்து ஓசையுடன் கம்பீரமாக டாக்டர் வருகிறார். அவரைப் பின்தொடர்ந்து தாதிகள் இருவரும், சிற்றூழியரான எக்னஸும் சுறுசுறுப்பாக வருகிறார்கள். ஒவ்வொரு நோயாளியையும் கவனித்து விட்டு வாங்கிலே உட்கார்ந்து இருக்கின்ற எங்களிடம் வருகிறார் டாக்டர்.

அவசரமாக எழுந்து கொண்ட லோகாம்பாள்,
"கும்பிடுறேன் சாமி....." என்று கைகூப்பியபடி,
"தொர.. என்ன இன்னமுமே ஒப்பரேஷன் செய்யலீங்க.. ரத்தம் தர தாருமில்லையே.... எனக்கு வசதியில்லிங்க..." என்று பரிதாபமாகக் கூற டாக்டரும் புன்னகைத்தபடி,

"மயக்க மருந்து குடுக்கிறவங்க ஸ்ட்ரைக்கு, அது முடிஞ்சதும் ஒப்பரேஷன் நடக்கும்." என்று கூறி விட்டு நகர்கிறார்.

கோபத்தோடு அவளிடம் வந்த எரிச்சல்காரி எக்னஸ்,

"ஒனக்கெல்லாம் ரத்தம் தரமாட்டோம், எங்கட பொடியன்கள ஒங்க ஆட்கள் தான் யாழ்பாணத்துல கொல்றான்கள்." என்று முகத்தில் பாய்ந்து ஏசி விட்டு செல்கிறாள். நான் அப்படியே அதிர்ந்து போய் நிற்கிறேன். என் அதிர்ச்சியைப் புரிந்து கொண்ட சிரியாணி.

"இந்த எக்னஸின் அக்காட மகன் ஆமி. அவன் யாழ்ப்பாணத்துல பயங்கரவாதிகளுடன் யுத்தம் செய்ற நேரம் செத்துப் போயிட்டான். அந்தக் கவலையிலதான் அவள் இப்படி கண்டபடி பேசுறாள்." என்று விளக்கம் தந்த போது எக்னஸின் மனத்தாக்கம் எனக்குப் புரிந்தது. இருந்தாலும், இந்த இடம் பலி வாங்குவதற்குரிய இடமல்லவே. யாரோ செய்த குற்றத்திற்காக இந்த அப்பாவி ஜனங்கள் தண்டிக்கப்படுவது என்ன நியாயம். ? பாவம். வடக்கு மண்ணையே மிதித்திராத இந்த மலையக மண்ணின் பிள்ளைகள் செய்யாத குற்றத்திற்காகத் தண்டனை அனுபவிப்பதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

மறுநாள் பொழுது விடிந்தது. வைத்தியர்கள் வேலை நிறுத்தத்தை கைவிட்டு விட்டார்கள். அன்றே என்னையும் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தினார்கள்.

சத்திர சிகிச்சை முடிந்து என்னை வாட்டிற்கு கொண்டு வந்தார்கள். என்னால் உடம்பை அசைக்க முடியவில்லை. வயித்திலே அப்படி ஒரு வருத்தம். இரவெல்லாம் இருமலும், வாந்தியும் வேறு அவஸ்தைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தியது. எழுந்திருக்க முடியாத என் பக்கத்தில் விழித்திருந்து என்னைக் கவனித்தவர் லோகாம்பாள் தான். கழுத்திலும், மனதிலும் வருத்தத்தைச் சுமந்திருக்கும் அந்தப் பெண் சற்றும் அருவருப்படையாது நான் விட்ட வாந்தியை சுத்தம் செய்தாள். இனம், மதம் அத்தனையும் கடந்து உதவி செய்த அந்தப் பெண்ணிலே இருந்த மனித நேயத்தைக் கண்டு கண்கள் பனித்தன.

மறு நாள் வாட்டிலே இருக்கின்ற நோயாளியான இந்திராவின் கணவன், லோகாம்பாளுக்கு ரத்தம் கொடுக்க முன் வந்ததால் அவளுக்கும் இரு தினங்களில் ஆப்ரேஷன் நடந்து முடிந்தது. இப்போது மனதுக்கு நிம்மதியாக இருக்கிறது. கட்டிலிலே இணைத்திருந்த எனது டிக்கட்டை எடுத்து வாசித்த போது அதில் பரமசிவம் என்ற தமிழரால் அன்பளிப்பு செய்யப்பட்ட இரத்தமே என் உடம்பினுள் ஏற்றப் பட்டுள்ளது. ஆதே போல் லோகாம்பாளின் உடம்பில் சிரிபாலவின் இரத்தமும், சீலாவதியின் உடம்பில் அப்துல்லாஹ்வின் இரத்தமும் ஏற்றப்பட்டிருந்தது. நாம் சிங்களவர், நாம் தமிழர், நாம் முஸ்லிம் என்று இனங்களால் பெருமை பேசுபவர்களை நினைத்த போது சிரிப்பாக வருகிறது. ஏனென்றால் மொத்தத்தில் எல்லாமே ஒரே இரத்தம் என்பது தானே உண்மை. எல்லா இரத்தமும் ஒன்றாகக் கலந்த பின் எமக்குள் வேற்றுமையுணர்வுகள் வரலாமா...? எல்லோருமே இரத்தத்தின் இரத்தங்களே.

அந்த ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே வருவதற்காக நாட்களை எண்ணிக் கொண்டே இருக்கிறேன். இருந்தாலும் என்னுடைய காயங்கள் இன்னும் குணமடையவில்லை.

அன்று பொழுது புலர்ந்து காலை ஒன்பது மணியிருக்கும். வாட்டில் ஒரே பரபரப்பு. டாக்டர்களும், தாதிமார்களும், ஊழியர்களும் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கினர். எல்லோர் முகத்திலும் பதற்றம். சில நிமிடங்களில் காரணம் புரிந்து விட்டது.

மலைப் பிரதேசத்தில் பயணம் செய்து கொண்டிருந்த பஸ் வண்டியொன்று பாரிய பள்ளத்தில் விழுந்து விபத்துக் குள்ளாகிய போது அதில் பயணப்பட்ட பலரும் காயத்துக் குள்ளாகி, சிலரின் நிலமை மிகவும் கவலைக்கிடமாகிப் போக ஐந்தாறு பேர் அந்த விபத்தில் ஸ்தலத்திலேயே உயிர் துறக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. காயப்பட்டவர்கள் வாட்டில் அனுமதிக்கப் பட்டார்கள். காலுடைந்தவர்கள், கையுடைந்தவர்கள், தலையில் காயப்பட்டவர்கள் என பட்டியல் நீண்டிருந்தது. பாவம் அனைவருமே தோட்டத்தின் உயிர்நாடிகளான தொழிலாளிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரமாக இரத்தம் ஏற்றப்பட வேண்டியவர்கள், உடனடியாக சத்திர சிகிச்சைக்குற்படுத்தப்பட வேண்டிய வர்கள் என பல நோயாளர்கள். அந்தக் காட்சிகளை அவர்கள் படுகின்ற வேதனைகளைப் பார்க்கப் பார்க்க மனமெல்லாம் பதறியது. வைத்தியர்களும், தாதிகளும் பம்பரமாகச் சுழன்றனர். தேவையான இரத்த வகைகள் இரத்த வங்கியில் இல்லையென்றும் பேச்சடிபடுவது கேட்கிறது. எனது பக்கத்து கட்டிலில் பரிதாபமான நிலையில் ஒரு பெண் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறாள். நிறைமாத கற்பிணியான அவளுக்கு இரத்தம் ஏற்றப்படவும் வேண்டும், ஆப்ரேஷன் செய்யப்படவும் வேண்டும். இருந்தாலும் இந்தப் பெண்ணுக்குரிய இரத்தம் வங்கியில் இல்லாத நிலை. தாயையும், பிள்ளையையும் காப்பாற்ற வேண்டிய போராட்ட நிலையில் டாக்டர்கள் போராடினர்.

அந்த இடத்திற்கு ஓடோடி வந்த டாக்டர் குலதுங்கவின் முகத்தில் ஒரு பிரகாசம். இரத்த வங்கியை நோக்கி உற்சாகத்துடன் விரைந்தார் அவர். அவரின் இரத்தம் இவளுக்குப் பொருந்தியிருக்க வேண்டுமென யூகித்துக் கொண்டேன்.

சில நிமிடங்கள் கரைந்தன. பரபரப்பாக ஓடிவந்த தாதியர் அந்தப் பெண்ணை ஆப்ரேஷன் தியேட்டருக்கு எடுத்துப் போய் விட்டார்கள். சில மணி நேரங்களின் பின், ஆப்ரேஷன் செய்யப்பட்ட நிலையில் தாயையும், குழந்தையையும் வாட்டிற்கு கொண்டு வந்தார்கள். இப்போதுதான் எமக்கெல்லாம் போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது. சில நிமிடங்களில் டாக்டர் குலதுங்க அந்தப் பெண்ணிடம் வந்து சுகம் விசாரித்தார்.

டாக்டரைக் கண்ட அந்தப் பெண் தன் கைகளைக் கூப்பியபடி,

"நீங்க மனசு வச்சு ரத்தம் தந்து என்னையும் என் பிள்ளையையும் காப்பாத்திட்டீங்க சாமி. என்னப் பொருத்த வரைக்கும் நீங்க டாக்டரல்ல தெய்வம்" என்று கண்ணீர் வடித்தாள். அவளின் தலையை ஆதரவாகத் தடவிய டாக்டர்,

"நான் ஒரு டாக்டர் என்ன தெய்வமாக்கிடாதே தாயே..! என் கடமையைத்தான் நான் செஞ்சேன்." என்று கூறிவிட்டு அப்பால் நகர்ந்தார். மனிதன் மதங்களால் இனங்களால் மாறுபட்டிருந்தாலும் மனித நேயம் மரணிக்கவில்லை என்பதற்கு இது சான்றுதானே.

அன்றைய விபத்தில் ஆபத்தான நிலையில் உள்ளவர்களுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்ததானம் செய்ய விரும்புபவர்கள் தாராளமாக அதனைச் செய்யலாம் என்று பொது அறிவித்தல் விடுக்கப்பட்டது.

அன்று காலை எனக்கு டிக்கட் வெட்டி விட்டார்கள். இனி நான் வீட்டிற்குப் போகலாம். என்னை அழைத்துப் போகக் கணவர் வருவார். இந்த இரத்த தானத்தில் அவரும் நிச்சயமாகக் கலந்து கொள்வார். ஏனென்றால், இப்படியான பரோபகாரச் செயல்களில், சேவைகளில் அதிக விருப்பம் கொண்டவர் அவர்.

நான் எனது பொருட்களை எடுத்துக் கொண்டு வாட்டை விட்டு வெளியே வந்து ஆஸ்பத்திரியின் முன் பக்கம் கணவருக்காக காத்திருக்கிறேன்.

இரத்த வங்கியின் பக்கம் என் பார்வை செல்கிறது. அங்கே ஒரு நீண்ட வரிசை. பார்வையாளருக்குரிய நேரம் வந்து விட்டது. அந்த வரிசை நீண்டு கொண்டே செல்கிறது.

அதோ என் கணவர் உற்சாகமாக வருகிறார். நீண்ட நாட்களின் பின் என்னை வீட்டுக்கு அழைத்துப் போகப் போகின்ற மகிழ்ச்சி அவர் முகத்தில்.

கணவரிடம் விடயத்தை கூறியபோது, அவரும் உற்சாகத்தோடு அந்த வரிசையில் இணைந்து கொள்கிறார். சில நிமிடங்கள் கழிந்திருக்கும். அந்த வரிசை மெதுவாக நகர்ந்து கொண்டிருக்கிறது. கணவரின் பக்கம் என் பார்வையை வீசுகிறேன் அங்கே அவரின் பின்னால் நிற்பது..... என்னால் என்னையே நம்ப முடியவில்லை. ஆச்சரியமாக இருக்கிறது.

இத்தனை நாளும் தோட்டத்து மக்களைக் கண்டால் எரிந்து விழும் எரிச்சல்காரியான எக்னஸும் இரத்த தானம் செய்வதற்காக அந்த வரிசையில் நிற்கிறாள். கல்லுக்குள் ஈரமா....? இந்தப் புயலுக்குள்ளும் தென்றலா...?

**மலை நாட்டு எழுத்தாளர் மன்றம் நடத்திய தேசிய சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்ற கதை.**

**நன்றி தினக்குரல் 20.01.2013**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கேயும் ஒரு ஹஜ்...

அந்த அதிகாலைப் பொழுதிலும் கூட பள்ளிவாசல் முன்பாக ஒரே பரபரப்பாக இருந்தது. அங்கே மூன்று லொரிகளும், ஒரு வேனும் நிறுத்தப்பட்டிருந்தன. ஊர் ஜமாஅத்தைச் சேர்ந்த இளைஞர்கள் அந்த லொரிகளில் நிவாரணப் பொருட்களை ஏற்றுவதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

கடந்த இருபத்தாறாம் திகதி ஏற்பட்ட அந்த இயற்கை அனர்த்தத்தை நினைத்துப் பார்க்கிறேன். மனசு நொருங்கிப் போகிறது. எத்தனை இழப்புக்கள்...? எத்தனை மரணங்கள்...? எத்தனை சோகக் கதைகள்...?

எங்கள் இரத்தங்களுக்கு, உடன் பிறப்புக்களுக்கு ஏற்பட்டு விட்ட இந்த அனர்த்தினால் சமுதாயத்தில் தான் எத்தனை மாற்றங்கள்? கருங்கல்லையும் கசிந்துருகச் செய்து மனித மனங்களிலே பல நற்சிந்தனைகளை, நற்குணங்களை, உயர்ந்த பண்புகளை, இனமத வேறுபாடுகளைக் கடந்து மனித நேயத்தை அதிகமாகவே மிக அதிகமாகவே விதைத்து விட்ட அந்த அற்புதத்தை என்னவென்பது...?

"இயற்கையின் சீற்றம் நடைபெற்ற தினத்திலிருந்து பாதிக்கப்பட்டோருக்காக உடலாலும், பொருளாலும் உதவிக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்கும், ஏனைய அத்தனை பேருக்கும் யா அல்லாஹ் நீ கிருபை செய்வாயாக! அவர்களின் செயல்களை, உதவிகளை அங்கீகரித்து நற்கூலி கொடுப்பாயாக...!" எனது உதடுகள் பிரார்த்தித்துக் கொள்கின்றன.

"எல்லா சாமான்களையும் லொரிகள்ள ஏத்திட்டீங்க தானே! அங்க போகத்துக்கு பேரு குடுத்தவங்க வந்து வேனுல ஏறிக்கொங்கோ...! பள்ளிவாசலின் இன்றைய ரெஸ்டியான ரபீக் ஹாஜியார் குரல் கொடுக்கிறார். நானும் என்னை சுதாகரித்துக் கொண்டு அந்த வாகனத்தில் ஏறிக் கொள்கிறேன்.

வாகனங்கள் நான்கும் ஒன்றன் பின் ஒன்றாக ஓடிக் கொண்டிருக்கின்றன. அளுத்கமை, பேருவலை, மக்கொன, களுத்துறை, பாணந்துறை, மொரட்டுவை என்று பல ஊர்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து சென்று கொண்டிருக்கிறோம். சுனாமியின் சீற்றத்தினால் சீரழிந்த அந்தக் கடலோரப் பகுதிகளை ஒழுங்காகப் பார்க்க முடியவில்லை. கண்களைக் கண்ணீர் திரையிட்டிருந்தது. கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொள்கிறேன்.

அன்றைய தினத்திற்குமுன் எவ்வளவு அழகாக இருந்த கடலோரப் பிரதேசம் இப்போது அலங்கோலமாகவும், மயானமாகவும் காட்சி தருகிறது. வேரோடு பிடுங்கப்பட்டு விழுந்து கிடக்கும் மரங்களையும், வெறும் தரையாகக் காட்சி தரும் மீனவர்களின் இருப்பிடங்கள் இருந்த பகுதியையும் பார்க்கப் பார்க்க மனதைச் சோகம் கசக்கிப் பிழிகிறது.

"யா அல்லாஹ்! ஓன்ட நாட்டம் இல்லாம அணுவும் அசையாது. ஆக்கவும், அழிக்கவும் நீ தான் வல்லவன். இத நாங்க ஏத்துக்கொள்ளிய... இது எங்களுக்கு பெரும் சோதனை. எங்கட பிழைகளையும், பாவங்களையும் மன்னித்திடு நாயனே! ரஹ்மானே! கருணையானவனே இப்பிடியான சோதனைகளை விட்டும் இயற்கை சீற்றங்ளை விட்டும் எங்களப் பாதுகாப்பாயாக!" என் மனம் கண்ணீரோடு பிரார்த்தித்துக் கொள்கிறது.

எங்கள் வாகனங்கள் கிழக்கு மாகாணத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. என் மனதைப் போன்று மடியிலுள்ள கைப் பையும் எனக்குப் பாரமாகவே படுகிறது. ஒரு நல்ல நோக்கத்தை மனதிலே இருத்திப் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறேன். என் நோக்கம் நிறைவேறி விட்டால் மனதிலுள்ள பாரம் மிகவும் குறைந்து விடும்.

புனித ஹஜ்ஜுக்காக ஹஜ்ஜாஜிகள் புறப்படத் தயாராகி விட்டார்கள். சில தினங்களுக்கு முன் வரை நானும் ஹஜ்ஜுக்காகச் செல்லத் தீர்மானித்துத் தான் இருந்தேன். இது எனக்கு இரண்டாவது முறை. பத்து வருடங்களுக்கு முன் அந்தப் புனித பயணத்தை மேற்கொண்டவன் நான். இருந்தும் மீண்டும் ஒரு தரம் அந்தப் பாக்கியத்தை அடைந்து விட வேண்டுமென ஒரு காலத்தில் துடித்தேன்.

மீண்டும் ஒரு ஹஜ் செய்வதற்காக கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்த பணம் மடியிலே இருக்கிறது. ஹஜ்ஜுக்கான எல்லா ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருந்த போது தான் இந்த அனர்த்தம் நாட்டில் ஏற்பட்டது. சொந்த நாட்டிலே எங்கள் இரத்தங்கள் பசியோடும், தாகத்தோடும் மாற்றி உடுக்க மறு உடை இன்றி சொந்தங்களையும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தங்களையும் வீடு வாசல்களையும் இழந்து அகதி வாழ்க்கை வாழும் போது இரண்டாவது முறை இந்தப் பயணம் எனக்குத் தேவை தானா...? சிந்தித்தேன். முடிவில், பயணத்தை ரத்துச் செய்து விட்டு அந்தப் பணத்தையும் சுமந்து கொண்டு இப்போது பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் பயணம் செய்து கொண்டிருக்கிறேன்.

உடுதுணிகளும், அத்தியாவசிய உணவுப் பொருட்களும், தேவையான மருந்துப் பொருட்களும் பல பகுதிகளிலிருந்தும் நூற்றுக் கணக்கான லொரிகளில் பாதிக்கப்பட்டோருக்குச் சென்று கொண்டிருக்கின்றன. இனி அவர்களுக்குத் தேவை அடுத்த கட்ட உதவியான இருப்பிட உதவிகளே.

சொந்தங்களையும், சொந்த இருப்பிடங்களையும் இழந்து மனோ ரீதியாக பாதிக்கப்பட்டு அகதி முகாம்களில் அவதிப்பட்டுக் கொண்டிருப்போருக்கு இனி இருப்பிட வசதிகள் தான் முடிந்தவரை செய்து கொடுக்கப்பட வேண்டும். ஒரு குடும்பத்திற்கோ, இரண்டு குடும்பங்களிற்கோ என்னால் அந்த இருப்பிட வசதிகளைச் செய்து கொடுக்க முடிந்தால் மிகவும் சந்தோசப்படுவேன்.

எங்கள் வாகனங்கள் சாய்ந்தமருதுவில் இருக்கின்ற அகதி முகாம் ஒன்றின் முன் தரித்து நிற்கின்றன. எங்கள் வாகனத்தைச் சுற்றி ஒரு பெரிய கும்பலே கூடிவிடுகிறது. எப்படியெல்லாம் வசதி வாய்ப்புக்களோடு வாழ்ந்தவர்கள் இப்போது ஒரு வேளைச் சாப்பாட்டுக்குக் கூடப் படுகின்ற அவலத்தைப் பார்த்த போது மனம் நெகிழ்ந்து போனது. வயோதிபர்களும், பெண்களும், ஆண்களும், இளைஞர்களும், குழந்தைகளும் அங்கே தீப்பெட்டியில் அடுக்கப்பட்ட தீக்குச்சிகளைப் போல் காணப்படுகின்றனர். பெற்றோரை இழந்த குழந்தைகளும், குழந்தைகளைப் பறிகொடுத்த பெற்றோர்களும், முழுக்குடும்பத்தையும் இழந்தவர்களும் கணவனை, மனைவியை இழந்தவர்கள் என்று அங்கே அத்தனை பேருமே ஒவ்வொரு வகையிலும் இழப்புக்களைச் சந்தித்தவர்களாகவே காணப்பட்டார்கள்.

யாரை யார் தேற்றுவது? யாருக்கு யார் ஆறுதல் சொல்வது? அத்தனை முகங்களிலும் நீண்ட சோகம் முக்காடிட்டிருந்தது. எங்களைக் கண்டதும் தாய்க்குலம் அழுது புலம்பியது. இத்தனை சோகங்களுக்குள்ளும் எந்தக் கவலையும் அறியாது சிரித்தபடி ஓடியாடி விளையாடும் சின்னஞ்சிறுசுகள் கிழிந்த கடதாசிப் பெட்டியில் ஒருவனை உட்கார வைத்து இழுத்து விளையாடும் சின்ன மொட்டுக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் நகர்கிறது. எமது வாகனங்களில் கொண்டு வந்த பொருட்களை இறக்கி, அகதிமுகாமில் உள்ள மேற்பார்வை யாளர்களின் உதவியோடு பகிர்ந்து கொடுக்கத் தொடங்கினோம். ஒவ்வொருவராக வந்து நிவாரணப் பொதிகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். அடுத்து ஒரு வயோதிபர் மெதுவாகத் தள்ளாடியபடி வருகிறார். தலையிலே தொப்பியணிந்து நீண்ட ஜுப்பா சாரனோடு என் முன் வந்தவரை நோக்கி நிவாரணப் பொதியை நீட்டியபடி அவர் முகத்தை ஏறிட்டுப் பார்க்கிறேன். மின்சாரத்தை தொட்டவன் போல் ஒரு கணம் அதிர்ந்து நிற்கிறேன். எங்கேயோ.... எப்போதோ பார்த்த முகம்! பளிச்சென ஞாபகம் வருகிறது.

"நீங்க......... காஸிம் ஹஸரத் தானே!" என் குரலிலே ஒரு வித நடுக்கம்.

"ஆமாங்க நீங்க யாரு தம்பி....? அவர் என்னை அடையாளம் தெரியாதவராகக் கேட்கிறார்.

"ஹஸரத்... நான் முஸாதிக் ஹாஜியார்." என்கிறேன். "எந்த முஸாதிக் ஹாஜியாரு....?" நெற்றியைச் சுருக்கி என் முகத்தை ஊடுருவிப் பார்த்தவாறு கேட்கிறார்.

"ஞாபகம் வரல்லயா? நான் அளுத்கம முஸாதிக் ஹாஜியார் நீங்க இருபது வருஷத்துக்கு முன்னால் எங்கட ஊர்ப் பள்ளில கதீபாக இருந்த. அங்க நான் ரெஸ்டியாக இருந்த" நான் கூறி முடிக்க முன்பே அவருக்கு என்னை அடையாளம் தெரிந்து விட்டது.

"ஆ... நீங்களா......?" என அவர் ஒரு மாதிரியாக இழுத்த போது குற்ற உணர்வு என்னைக் குடையத் தொடங்கியது. நானே தொடர்கிறேன்.

"ஹஸரத் என்ன மன்னிச்சிக் கொள்ளுங்கோ அன்டைக்கு பள்ளி ரெஸ்டி என்ட கர்வத்துல ஒரு சின்ன வாக்குவாதத்துக்காக ஓங்களப் பலிவாங்க நெனச்சி, நீங்க செய்யாத ஒரு குத்தத்த ஓங்கட மேல்ல சுமத்தி வேலய விட்டு ஓங்கள ஊட்டுக்கு அனுப்பின. அதுக்குப் பொறகு நான் அதுக்காக மிச்சம் மன வருத்தப்பட்டேன். பத்து வருஷத்துக்கு முன்னால ஹஜ்ஜுக்குப் போற நேரம் ஓங்களுக்கிட்ட மன்னிப்புக் கேட்டுக்கொள்ள தேடி வந்தேன். ஓங்கட ஊருல நீங்க இருச்சல்ல. இன்டைக்கு ஓங்கள இந்த நிலையில சந்திப்பேன் என்று மனாவிலேயும் நெனச்சிருக்கல்ல. இப்பதான் ஏன்ட மனசுட பாரம் கொறஞ்ச மாதிரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈச்சி" என்று கூறிய படி அவரை அணைத்து முஸாபஹா செய்து கொள்கிறேன். அவரும் என்நெஞ்சிலே முகம் புதைத்து விம்முகிறார்.

"எல்லாமே போச்சி ஹாஜியார். எனக்கென்றிருந்த ஒரே மகனும் ஏன்ட பொன்சாதியும் தண்ணீல போயிட்டாங்க. அவங்க ஜனாஸா கூடக்கிடைக்கல்ல." கூறும் போதே அழுகை வெடித்துச் சிதறியது.

"வீடுவாசல் எல்லாமே போச்சு. கல்யாணத்துக் கிருக்கிற குமறுகள் மூனு பேரும் நானும் தான் மிஞ்சிருக்கோம்." கூறிய படி கேவிக்கேவி அழுகிறார் அவர். என் கண்களிலிருந்தும் மடை திறந்த வெள்ளம் போல் கண்ணீர் கரையுரண்டு ஓடுகிறது. அவரை இறுக அணைத்து ஆறுதல் கூறுகிறேன்.

"ஹஸரத்.... எல்லாமே அல்லாட செயல்தான் நீங்க எங்களுக்கு எவ்வளவு பயான் பண்ணி ஈச்சிய, நீங்களே இப்படி பேசியது நல்லமா? பொறுமையாய் இரீங்கோ. எரக்கமுள்ள ரஹ்மான் தாரையும் கையுடமாட்டான். நடந்தது நடந்துட்ட. இதுக்குப் பொறவாவது நல்லது நடக்க துஆச்செய்வோம்" எனக் கூறிய படி அவரை உட்கார வைக்கிறேன்.

"ஹஸரத் நான் ஒரு நல்ல காரியத்த செய்யோனும் என்ட நிய்யத்தோட இங்க வந்த ஆயிரக்கணக்கானவங்க அகதிகளாக இருச்சிய இந்த இடத்துல என்னால முடிஞ்சத தாருக்குச் செய்த என்ட கேள்வியோட தான் வந்த. இப்ப விட கிடச்சீட்ட..." என்ற என்னை ஆச்சரியமாக பார்த்தவர் எதுவும் புரியாமல் நிற்க நானே தொடர்கிறேன்.

"இந்த வருஷமும் நான் ஹஜ்ஜுக்குப் போக நாடியிருந்த. நாட்டுல இந்த அனர்த்தம் நடந்ததும் ஏன்ட எண்ணத்த மாத்தி பயணத்த கென்ஸல் பண்ணிட்டு சல்லிய கையோட கொண்டு வந்தீச்சிய, இந்தாங்கோ புடிங்கோ. இதுல மூனுலட்சம் ரூபா இருச்சி, இதால நீங்க வீடொன்ற கட்டிக் கொள்ளுங்கோ என்று நான் கூறி நிறுத்திய போது இதுகனவா நனவா என நம்ப முடியாதவராக தடுமாறினார். அவரால் பேச முடியவில்லை. தொண்டையில் ஏதோ அடைத்துக் கொண்டது போல் சிரமப்பட்டார். என் கைகள் இரண்டையும் பிடித்துக் கொண்டு விம்மினார் அவர்.

"ஹாஜியார் உங்களுக்கு அல்லாஹ் ரஹ்மத்தும் பரக்கத்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யனும். இன்ஷா அல்லாஹ் உங்களுக்கு ஆயிரம் ஹஜ் செஞ்ச நன்ம கிடைக்கும். தனியொரு முஸாதிக் ஹாஜியாரால இங்கிருக்கிற எல்லாருக்கும் வீடுகட்டிக் கொடுக்க முடியாது. இது எனக்கு தெரியும். இருந்தாலும் இந்த பணத்த வச்சி எனக்கு மட்டுமல்ல இன்னும் ரெண்டு மூனு குடும்பத்துக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பேன்." எல்லாவற்றையும் இழந்து நொந்து போயிருக்கும் நிலையிலும் அவருக்கிருக்கின்ற பரந்த உள்ளததை நினைத்து வியந்தேன்.

"ஹாஜியார் என்னுயிர் உள்ளவரைக்கும் உங்கள நான் மறக்கமாட்டேன். ஒங்கல போல எங்கட சமூகத்துல இருக்கிற ஒவ்வொரு வசதிபடச்சவங்களும், திரும்பத் திரும்ப பல தடவைகள் ஹஜ் உம்ரா செய்பவர்களும் லட்சக்கணக்குல செலவழித்து, கல்யாண வைபவங்கள ஆடம்பர விருந்துகள செய்றவங்களும் ஆடம்பரமான முறையில் வீடு வாசல்கள கட்டுறவங்களும் இப்படி பட்ட எல்லாருமே மனசு வச்சா இந்த முகாம்கள்ள இருக்கிறவங்க ஒரிரு மாதங்களுக்குள்ளேயே தங்களுக்கென்று வீடுகள அமச்சிக்கொள்ளலாம்...." அவரின் வார்த்தைகளில் நிறையவே நியாயம் இருப்பதை உணர்கிறேன்.

"ஹஸரத் இன்னொரு முக்கியமான விஷயம் இருச்சி. ஏன்ட கடைசி மகன் வெளிநாட்டுல இருச்சிய. அடுத்த மாசம் வார. ஒரு ஏழை பெண்ண இல்லாட்டி ஒரு அநாதையை கல்யாணம் முடிக்கோணும், பெண் பாருங்கோ என்று எழுதியிருச்சிய, அப்ப நான் இதுக்கு அவ்வளவு விருப்பப் படல்ல. இப்ப யோசிச்சியன், உங்களுக்கும் மூனு மகள்மார் இருச்சிய. உங்கட ஒரு மகளே ஏன்ட மருமகளாக இருச்சட்டுமே" என நான் என் முடிவைக் கூறிய போது அதிர்ச்சியில் உரைந்து நின்றார் ஹஸரத்.

"உண்மையாகத்தான் சொல்றீங்களா ஹாஜி?" என அவர் நா தழுதழுக்கக் கேட்டபோது,

"ஏன்ட மகன் வந்ததும் மகனோட நான் இங்க வாறேன். ஒங்கட மூத்த மகள்தான் ஏன்ட மருமகள்" என்று உறுதியாக நான் கூறிய போது என் கரங்களைப் பிடித்து தன் கண்களிலே ஒற்றிக்கொண்ட அவர் குழுங்கிக் குழுங்கி அழுகிறார். நான் அவரை அணைத்து ஆதரவோடு அவர் முதுகை தடவிக்கொடுக்கிறேன்.

தன்னை சுதாரித்துக் கொண்ட அவர் "ஹாஜி நாங்க இந்த சுனாமிட சுவடுகள மட்டுமல்ல, உங்க உயர்ந்த உள்ளத்தையும் உயிர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள வரைக்கும் மறக்க மாட்டோம்." என்று கூறியவர் தன் கைகள் இரண்டையும் நெஞ்சிக்கு நேரே உயர்த்தி,

"யா அல்லாஹ் நிச்சயமாக நீ இரக்கமுள்ளவன். கருணையுள்ளவன், அழிவையும் ஆக்கத்தையும் தரக்கூடியவன். எனக்கொரு வழியகாட்டிய நாயனே அதுபோல இங்குள்ள எல்லாருக்கும் வழியையும் நல்ல வாழ்க்கையும் தந்துவிடு நாயனே." என கண்ணீர் மல்க பிரார்த்திக்கிறார். அந்தப் பிரார்த்தனையில் நானும் இணைந்து கொள்கிறேன்.

எமது வாகனங்கள் ஊர்த்திரும்ப தயாரான நிலையில் நானும் வேனில் ஏறிக்கொள்கிறேன். இப்போது என் மனதிலுள்ள பாரம் எல்லாம் குறைந்து மனம் அமைதியாக இருக்கிறது. புனித ஹஜ் கடமையை செய்து விட்டு திரும்பும் அல்லாஹ்வின் நல்லடியாருக்கிருக்கின்ற மன அமைதியும். ஆத்ம சுகமும் என்னுள் பரவிக்கிடக்கிறது.
அல்ஹம்துலில்லாஹ்

**நன்றி நவமணி 23.01.2005**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலிக்கடாக்கள்...

"மக கதீஜா... இப்பிடியே யோசிச்சிட்டு இருந்தா என்னம்மா அர்த்தம்...? நல்லதொரு முடிவச் சொல்லம்மா...! கல்யாணம் கட்டி மூனு மாதம் கூட வாழல்ல... அதுக்குள்ள ஒனக்கு இப்பிடி ஒரு விதி நடந்து போச்சு...! அதுக்காக இப்ப வந்திருக்கிற சம்பந்தத்தையும் தட்டிக் கழிச்சா என்னம்மா அர்த்தம்....? நானும் உன் வாப்பாவும் கண்ண மூடுறதுக்கு முன்னால நீயும் உன் குழந்தையும் நல்லா வாழ்றத நாம பாக்கனும்மா...! தயவு செஞ்சி இந்தக் கல்யாணத்த வேணாமென்று மட்டும் சொல்லிவிடாதே!" தன் ஒரே மகள் கதீஜாவின் முன் கண்ணீருடன் கெஞ்சி நின்றாள் அவளன்னை பாத்திமா.

அன்னையின் நிலை காண மிகவும் பரிதாபமாகவே இருந்தது கதீஜாவுக்கு. இந்தக் கெஞ்சலும், மன்றாட்டமும் இன்று நேற்று நடப்பதல்லவே...! சுமார் ஐந்தாண்டு காலமாகவே நடக்கும் கதை தான் இது. இத்தனை நாளும் தாய்க்குப் பிடிகொடாமல் தப்பித்து வந்தாலும் ஏனோ தாயின் நிலை காணக் கதீஜாவின் உள்ளம் நெகிழவே செய்தது.

"உம்மா...! என்னக் கொஞ்சம் நிதானமாக யோசிக்க விடுங்கம்மா...! வாழ்க்கைல ஏமாந்து போனவள் நான். என்னால அவசரமா முடிவெடுக்க முடியாதும்மா. அதனால என்ன யோசிக்கவிடுங்க..! என்ற மகளை இடைமறித்த அவளன்னை.

"மக.. இந்தப் பதிலத்தானேம்மா அஞ்சு வருஷமா நீ சொல்லிட்டு வாறே...! ஒன் நன்மைக்காகத்தான் இத்தன நாளும் சொல்றேன். ஒரு பொண்ணால தனியா வாழ முடியாதும்மா....! தயவு பண்ணி நல்லா யோசிச்சிப் பார். உன் விருப்பத்தத் தந்திட்டா இந்த விஷயத்த நிம்மதியா முடிச்சிடலாம்." என்று கூறிவிட்டு அவளன்னை அவ்விடம் விட்டு அகன்ற போது நீண்டதோர் பெருமூச்சு அவளிடமிருந்து வெளியேறியது. அத்துடன் சோகம் நிறைந்த அவளது கடந்த காலமும் நினைவில் மின்னியது.

அன்புப் பெற்றோருக்கு ஒரே மகளாகப் பிறந்தவள் தான் கதீஜா. அழகும், அறிவும், நல்லொழுக்கமும் நிறைந்த கதீஜா பள்ளிப்படிப்பை முடித்த கையோடு அவளுக்குத் திருமணம் செய்து வைக்க ஆசைப்பட்ட அவள் பெற்றோர் அவளுக்கு மாப்பிள்ளை தேடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படலத்தில் இறங்கினார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் அவ்விடம் நாடி வந்த புரோக்கர் கரீம் காக்கா அவள் பெற்றோரிடம்,

"நல்லதொரு மாப்பிள்ளை இருக்கிறாரு. ஆள் ரொம்ப நல்லவரு. அழகான பொண்ணயிருந்தாப் போதும், சீதனமே வேணாம் என்று சொல்லிவிட்டாரு. உங்க மகளுக்கு ரொம்பத் தகுதியான மாப்பிள்ளை சொந்த ஊரென்றால் கொஞ்சம் தூரம் தான். இங்கிருந்து நூறு மைலுக்கு அப்பால் இருக்கும். ஆள் தொழில் விஷயமா இப்போ இங்கு தான் தங்கியிருக்கிறாரு, அதனால எளிமையான முறைல, ரொம்பச் சின்னதாக இங்கேயே கல்யாணத்த வச்சிக் கொள்ளலாம் என்கிறாரு. நீங்க மாப்பிள்ளையை பார்த்திட்டு முடிவச் சொல்லுங்க என்று கூறியதோடு இவர்கள் மாப்பிள்ளையைப் பார்ப்பதற்காக ஏற்பாடுகளையும் செய்து விட்டார்.

குறிப்பிட்ட தினத்தில் கதீஜாவின் பெற்றோர் புரோக்கர் கரீம் காக்காவுடன் மாப்பிள்ளை தங்கியிருக்கும் இடத்தை அடைந்தார்கள். ஒரே பார்வையில் அவர்களுக்கு மாப்பிள்ளையைப் பிடித்துவிட்டது. முப்பது வயது மதிக்கத்தக்க, அழகான வாட்டசாட்டமான, அடக்கமான இளைஞர் ஒருவரை எந்தப் பெண்ணின் பெற்றோருக்குத் தான் பிடிக்காது...? பூரண மனநிறைவுடன் விடைபெற்ற அவர்கள் திருமண வாழ்வில் ஈடுபடப் போகும் மணமக்கள் ஒருவரையொருவர் பார்த்து விடுவது இன்னும் நலம் என்பதால் குறிப்பிட்ட தினமொன்றில் மாப்பிள்ளையைத் தமது வீட்டுக்கே அழைத்து வரும்படி புரோக்கரிடம் கூறி விட்டுச் சென்றார்கள்.

அதன்படி ஒரு தினம் மாப்பிள்ளை இர்ஷாத் புரோக்கருடன் அங்கு வந்தார். இர்ஷாதும் கதீஜாவும் ஒருவரை ஒருவர் நேரிலேயே கண்டு கொண்டனர். கதீஜாவுக்கு ஒரே பார்வையில் இர்ஷாதைப் பிடித்து விட்டது. இனியென்ன...? ஒரிரு தினங்களில் மிகவும் எளிய முறையில் அவர்களது திருமணம் நடைபெற்றது.

நாட்கள் மெதுவாக நகர்ந்தன. கதீஜாவின் இல்லற வாழ்வு மிகவும் இனிமையாக அமைந்திருந்தது. தனது கணவனாக வரக் கூடியவர் எப்படி அழகுள்ளவராகவும், அறிவுள்ளவராகவும், நல்லொழுக்கமுடையவராகவும், அன்புள்ளம் கொண்டவராகவும் இருக்க வேண்டுமென அவள் எதிர்பார்த்திருந்தாளோ, அப்படியே அவளது இலட்சியக் கணவனாக இர்ஷாத் இருந்தான். தன்னைப் போல் பாக்கியசாலி உலகில் யாரும் இருக்க முடியாது என்ற நினைப்பே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதீஜாவை உள்ளூரப் பூரிப்படைய வைத்தது. கதீஜா எப்போதும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டாள். மகளின் மகிழ்ச்சி கண்டு பெற்றோரும் மகிழ்ந்தார்கள்.

இரண்டு மாதங்கள் கழிந்தன. கதீஜாவுக்கு லேசான தலை சுற்றலும் வாந்தியும் ஏற்படத் தொடங்கியது. இன்னும் சில மாதங்களில் பேரப் பிள்ளையைக் காணப் போகும் மகிழ்ச்சி அவளின் பெற்றோருக்கு. அவர்களுக்கு மட்டுமா...? கதீஜாவுக்கு, அவள் கணவனுக்கு இப்படி எல்லோருக்குமே ஒரே மகிழ்ச்சி தான்.

இரண்டு தினங்கள் ஓடி மறைந்தன. ஒரு நாள் கதீஜாவை நெருங்கிய அவள் கணவன்.

"கதீஜா... நான் இன்டைக்கு எங்க ஊருக்கு போகப் போறேன். ஒரு கிழமைல உம்மாவையும், கூட்டிக் கொண்டு வருவேன். உங்களையும் கூட்டிப் போகத்தான் நெனச்சிருந்தேன். ஆனால் நீங்க இப்போ இருக்கிற நிலைமைல தூரப் பயணம் அவ்வளவு நல்லதில்ல. அதனால நான் மட்டும் போயிட்டு வாறேன். பத்திரமாக இருங்க....!" என்று கூறி அவன் விடை பெற்ற போது, அந்தச் சின்னச் பிரிவைக் கூடத் தாங்க முடியாதவளாக அவன் மார்பில் முகம் புதைத்து விம்மினாள் கதீஜா. அவளது தலையை ஆதரவுடன் தடவிக் கொடுத்து, அவள் கண்ணீரைத் துடைத்து ஆறுதல் கூறிவிட்டுப் பயணமானான் இர்ஷாத்.

தன்னுயிரே தன்னைவிட்டுப் பிரிந்து விட்டது போல் துயருற்றாள் கதீஜா. அந்த ஏழு நாட்களும் அவளுக்கு ஏழு வருடங்கள் கழிவது போல் இருந்தது. அந்தச் சில தினங்களாக அவளொரு நடைப்பிணமாகவே காட்சியளித்தாள். ஏழாவது நாளான போது அவள் நிலையில் மிக முன்னேற்றம் காணப்பட்டது. முகத்திலும், அகத்திலும் ஒரே மகிழ்ச்சிப் பிரவாகம், தன் அன்பு ஜீவனைக் காணப் போகும் ஆர்வத் துடிப்பு அவளது கண்களிலே பளிச்சிட்டது. அவளில் என்றுமில்லாத சுறுசுறுப்பு ஓடிவந்து புகுந்து கொண்டது.

வழமையை விட விஷேமான முறையில் சமையலைத் தயாரித்து தன்னையும் அலங்கரித்து மன்னவனின் வரவுக்காகக் காத்திருந்தாள் கதீஜா. ஆனால் கிடைத்தது ஏமாற்றம் தான். அடுத்த நாள் வந்தது. மறுநாளும் வந்தது. இப்படியே நாட்கள் மேலும் நகர்ந்தன. கணவனை எதிர்பார்த்து காத்திருந்த கதீஜாவின் கண்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரும், ஏமாற்றமும் நிரம்பி வழிந்தன. சோகங்களுக்கே சொந்தமாகிப்போன கதீஜா தன்னிலை மறந்தாள்.

ஒரு மாதம் ஓடி மறைந்த போது அவனிடமிருந்து அந்தக் கடிதம் வந்து சேர்ந்தது. கடிதத்தை ஆவலோடு பிரித்துப் படித்த கதீஜா கதிகலங்கிப் போனாள்.

"அன்பின் அப்பாவிக் கதீஜாவுக்கு,

இத்தனை நாளும் என்னை எதிர்பார்த்து ஏமாந்திருப்பாய். என்னால் இனிமேல் அங்கு வரவே முடியாது, என்னை மன்னித்து விடு நான் ஏற்கனவே திருமணமானவன். எனது ஊர் கண்டி என்று குறிப்பிட்டேன். எனது ஊர் நிச்சயமாக அதுவல்ல. முகவரியில்லா மொட்டைக் கடிதம் நான். வயிற்றிலுள்ள கருவைக் கலைத்து விட்டு யாரையாவது மணமுடித்து வாழவும்.

இப்படிக்கு
அன்பின் இர்ஷாத்

கடிதத்தைப் படித்து முடித்த கதீஜா தன் நினைவிழந்து நிலத்திலே சரிந்தாள். அவள் மயக்கம் தெளிந்து எழுந்த போது அவளது பெற்றோர் அவளுக்கு எவ்வளவோ ஆறுதல் கூறியும் அவளை ஆறுதல் படுத்தவே முடியவில்லை. இலேசில் ஆறுதல் அடையக் கூடிய சாதாரண விஷயமா இது? நினைக்க, நினைகக நினைவு தடுமாறியது கதீஜாவுக்கு தான் இப்படி மோசம் போவேனென்று கனவிலாவது அவள் நினைக்கவில்லையே! சிந்திக்கச் சிந்திக்க உலகமே அவளுக்கு வெறுமையாகத் தோன்றியது. வாழவும் முடியாமல், சாகவும் முடியாமல் விதியின் கைகளிலே சந்தனக் கட்டை போல் அறைபட்டாள் அவள்.

இப்படியே வேதனையிலும், விரக்தியிலும் நாட்கள் நகர்ந்தன. தம் மகளுக்கு நேர்ந்த அநியாயத்தையும், ஏமாற்றத்தையும் நினைக்க நினைக்க அவளது பெற்றோர் கவலைக் கடலில் மூழ்கிப் போயிருந்தார்கள். நடந்ததை நம்ப முடியாமலும், நம்பாமல் இருக்க முடியாமலும் தடுமாறிய அவளுக்கு இது ஒரு கனவாக அல்லது பொய்யாக இருக்கக் கூடாதா...! என்ற நப்பாசை வேறு. இப்போது அவள் ஐந்து மாதக் கர்ப்பிணியாக இருந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றும் வழமைபோல் தன் நிலை குறித்துக் கண்ணீருடன் சிந்தித்துக் கொண்டிருந்தாள் கதீஜா அப்போது தான் கையில் பத்திரிகை ஒன்றுடன் பரபரப்பாக ஓடி வந்த அவள் தந்தை,

"மகள்.... இந்தச் செய்தியப் பாரும்மா... இது அந்த அநியாயக்காரன் தானே...!" என்று புகைப்படத்துடன் வெளியாகியிருந்த அந்தச் செய்தியைச் சுட்டிக் காட்டினார். நெஞ்சு துடிக்க, கைகள் நடுங்க, பத்திரிகையை வாங்கியவள், அங்கே தன் பார்வையை மேய விட்டாள். அதில், அவளை ஏமாற்றிய துரோகியின் இடுப்பளவு புகைப்படம் ஒன்றுடன் "பல பெண்களை ஏமாற்றிய மன்மதன் உங்களிடமும் வரலாம். எச்சரிக்கையாக இருங்கள்." என்ற தலைப்பில செய்தி வெளியாகிருந்தது. மேலும் அச்செய்தியை ஆவலோடும் திகிலோடும் படித்தாள் கதீஜா.

"திருமணமாகதவராய் நடித்து சென்ற இடமெல்லாம் இளம் பெண்களை மணந்து, அவர்களின் இளமையை அனுபவித்து விட்டு இடைநடுவில் கைவிட்டு விடும் பழக்கமுடைய இந்த மன்மதன் பொது மக்களிடம் வகையாக மாட்டிய போது அடி, உதை பட்டு நையப்புடைக்கப்பட்டான். அழகாகவும், அடக்கமாகவும் தோற்ற மளிக்கும் இப்பேர்வழி உங்களிடமும் வரலாம். கவனமா யிருங்கள்." இந்தச் செய்தியைப் படித்தவர்களுக்கு தலை வலித்தது. இத்தனை நாளும் ஏதோ அறைகுறை நம்பிக்கையுடன் இருந்தவளுக்கு, தான் எவ்வித சந்தேகமுமின்றி முற்றாக வஞ்சிக்கப் பட்டிருப்பதை அறிந்த போது உலகமே தலை கீழாக சுற்றியது.

நாட்கள் ஓடிய வேகத்தில் கதீஜா ஒரு அழகான ஆண் குழந்தையைப பெற்றெடுத்தாள். முற்றாகத் தன் கவலைகளை மறக்க முடியாவிட்டாலும், அன்பு மகனின் பிஞ்சு முகத்தில் சிறிது ஆறுதலைக் கண்டாள் அவள்.

காலம் யாரைப் பற்றியும் கவலையுமின்றி தன்பாட்டில் ஓடியது. இப்போது கதீஜாவின் மகனுக்கு ஐந்து வயதாகி விட்டது. அவன் வளர வளர அவளது கவலைகள் புது வடிவமெடுத்தன.

"உம்மா... வாப்பா எங்கும்மா...? " என்று ஆவலோடு கேட்கும் போது அவள் அழுதே விடுவாள். அவள் அழுவதைக் காணும் குழந்தை எதுவும் புரியாமல் தானும் தாயோடு சேர்ந்து அழத் தொடங்கி விடுவான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாப்பா சவூதியில இருக்கிறாரு... கொஞ்ச நாள்ல வந்துடுவாரு" தாயின் இந்தப் பதிலைக் கேட்டுக் கேட்டுக் குழந்தைக்கும் அலுத்து விட்டது.

"ஹூம்... வாப்பாவக் கேட்டு மகன் தொல்ல தாறான். இன்னொரு கல்யாணம் கட்டச் சொல்லி உம்மா வற்புறுத்துறா...! நான் என்ன செய்வேன்...? உம்மா சொல்றதுலேயும் நியாயம் இல்லாமலில்லையே! அவங்க உயிரோட இருக்கும் வரை சரி...! அதுக்குப் பிறகு...? நினைக்கவே முடியவில்லையே...! நான் எனக்காக வாழாட்டாலும் என் மகனுக்காக, என்னைப் பெத்தவங்களுக்காக வாழத்தான் வேணும். உம்மாவும், வாப்பாவும் என் கவலைகளால ரொம்பவும் நொந்து போயிருக்காங்க. அவங்கள சந்தோஷப் படுத்தனும்...!" இப்படி அவள் நினைத்துக் கொண்டிருக்கையில்,

"உம்மா... என்ன பௌமி துரத்தி வாறான்...!" என்று கத்திக் கொண்டே ஓடி வந்த அவள் மகன் அவளைக் கட்டி அணைத்துக் கொண்டாள். அத்துடன் அவள் தனது கடந்த கால நினைவுகளிலிருந்து விடுபட்டு எழும் போதே அவளது அன்னையும் அங்கே வந்து விட்டாள்.

"மகள்... நான் சொன்ன விஷயமா நீ யோசிச்சி யாம்மா...? இப்போகூட புரேக்கர் வந்துட்டுப் போனாரு!" என்று கூறிவிட்டு ஆவலுடன் அவள் முகத்தை ஏறிட்டாள் அன்னை பாத்திமா.

"ஆமாம்மா...! யோசிச்ச நல்லதொரு விஷயம் வந்தா பாத்து ரெடி பண்ணுங்க...!" என்று அவள் கூறிய போது தன்னையே நம்பாதவளாக சந்தோஷத்துடன் செயல்படத் தொடங்கி விட்டாள் அவளன்னை.

* * *

கதீஜா ஸல்மானுக்கு வாழ்க்கைப்பட்டு ஐந்து வருடங்கள் கழிந்து விட்டன. சந்தோஷமுமில்லாத, கவலையுமில்லாத வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தாள் கதீஜா. ஸல்மானுடன் வாழும் இந்த ஐந்து வருட இல்லற வாழ்வின் பயனாக அவளுக்கு ஒரு பெண் குழந்தையும் பிறந்து விட்டது. அவளின் முதல் கணவனுக்குப் பிறந்த மகன் இப்போது பத்து வயதுச் சிறுவனாகப் பள்ளி சென்று கொண்டிருந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் வேகமாக ஓடியது. நாளடைவில் கணவன் ஸல்மானுக்கு எந்த வித நிரந்தர தொழிலும் இல்லாமல் போகவே அந்தக் குடும்பம் வறுமைப் புயலில் சிக்கி வாடியது.

நிரந்தரத் தொழிலில்லாமல், எந்தத் தொழிலுக்கும் முயற்சிக்காமல் வீட்டில் அடைபட்டுக் கிடந்த ஸல்மானின் உள்ளத்தில் புது யோசனையொன்று உதயமாகியது. அதன் விளைவு கதீஜா பலவந்தமாக அறபு நாட்டுக்குப் பணிப்பெண்ணாக அனுப்பப்பட்டாள். தன் விதியை நினைத்து நொந்தவளாக அரை மனதுடன் விமானமேறினாள் அவள்.

அறபு நாடு சென்ற கதீஜா தன் செல்வங்களின் நிகழ் காலத்தையும், எதிர் காலத்தையும் மனதிற் கொண்டு கடுமையாக உழைத்தாள். அறபு நாட்டில் அவள் சிந்திய வியர்வையும், கண்ணீரும் மாதா மாதம் ஸல்மானின் கையில் பணமாகப் புரண்டது.

கதீஜா அறபு மண்ணுக்கு வந்து ஈராண்டுகள் ஆன போது அவளின் தாயிடமிருந்து வந்த கடிதமொன்று அவளை இடியாகத் தாக்கியது.

என் வாழ்க்கையில் இரண்டாவது தடவையும் ஒரு பேரிடியா? என்பதைச் சிந்தித்த போது அவளுக்கு நினைவே தடுமாறியது. ஒருவாறு தன்னைச் சமாளித்து, மனதைக் கல்லாக்கிக் கொண்டவள், சில வாரங்களில் உழைத்துக் களைத்தவளாகத் தாயகம் திரும்பினாள். அங்கே அவளை அன்புடன் வரவேற்க அவள் கணவன் இருக்கவில்லை. அவனோ தன்னை மறந்து மனைவி மக்களை மறந்து இந்த உலகையே மறந்து மனைவியின் பணத்தில் மாதவி ஒருத்தியிடம் சுகம் அனுபவித்துக் கொண்டிருந்தான்.

"ஓ... இந்தக் கொடுமையை, வேதனையை கதீஜா எப்படித்தான் தாங்குவாள்...? தன் நிலை குறித்து அழுதழுதே அவள் உருகிப் போனாள். இத்தனை சோதனைகள் நடந்த பிறகும் தன் உடம்பில் உயிர் இன்னும் ஒட்டியிருப்பது தான் அவளுக்கு விந்தையாகப் பட்டது.

அதன் பின் அவள் கணவன் ஸல்மானைக் காணவேயில்லை. நாளடைவில் கையிலிருந்த சிறிது பணமும் கரையவே மீண்டும் பணிப்பெண் முத்திரையுடன் அறபு நாடு பயணமானாள் கதீஜா. அங்கு மூன்று வருடங்கள் உழைத்து விட்டுக் கைநிறையப் பணத்துடனும், பொருட்களுடனும் நாடு திரும்பினாள் அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது கதீஜாவின் மகன் பதினைந்து வயதடைந்து விட்டான். மகளோ எட்டு வயதுச் சிறுமியாக இருந்தாள்.

வாழ வேண்டிய வயதில் வசந்தத்தை எதிர் பார்த்து ஏமாற்றமடைந்த கதீஜா, தான், தன் பிள்ளைகள், வயோதிபப் பெற்றோர் என அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்தாள். மலர்ந்து மணம் பரப்ப வேண்டிய வயதில் இப்படியவள் தனிமைப்பட்டு வாழ்வதைக் கண்டு சகியாத பெற்ற மனம் துடித்தது. ஒரு நாள் அந்த அன்பு அன்னை,

"கதீஜா... நேத்து உன் புருஷன் ஸல்மானக் கண்டேன். அவராக வந்து என்னோட பேசினாரு. உன்னப் பத்தியும் கேட்டாரு...! திரும்பவும் உன்னோட வாழ விரும்புறாராம், உன் விருப்பத்தைக் கேட்டுச் சொல்லச் சொன்னாரு. நீ இப்பிடி தனிய வாழ்றதக் காண மனசே பொறுக்கல்லம்மா...! அந்த ஸல்மானோட சேர்ந்து வாழந்தா என்னம்மா...? இதுல உனக்கு இஷ்டமில்லைன்னா வேற யாராவது ஒருத்தரக் கல்யாணம் கட்டிச் சந்தோஷமா வாழப் பாரம்மா...! நானும் ஒன் வாப்பாவும் இன்டைக்கோ... நாளைக்கோ..." என்று கண்களைக் கசக்கியபடி தொடர்ந்த தாயை இடை மறித்த கதீஜா,

"போதும்மா... அந்தப் பேச்சையே விடுங்க... நான் இப்போ நிம்மதியா வாழ்றது பிடிக்கல்லைன்னா அந்தப் பேச்ச எடுங்க...! உங்க ஆசை, விருப்பம் எல்லாமே நியாயம் தாம்மா...! எந்தத் தாய்க்கும் இருக்கக்கூடியதுதாம்மா. இருந்தாலும் நான் இந்த விஷயத்துல சூடு கண்ட பூனையாகி விட்டவள். அதனால என்ன என் போக்குல விட்டுடுங்க. கேவலம்...! வாழ்க்கையில வறுமை வந்தவுடனே கட்டின பொண்சாதியக் கஷ்டப்படுத்தி அறபு நாட்டுக்கு அனுப்பிட்டு, துரோகம் செஞ்சவர இன்னொரு தடவ நம்ப முடியுமாம்மா...? அதனால அத விடுங்க...! வேறொரு கல்யாணமா...? அதையும் விடுங்க...! ரெண்டு பேரோட வாழ்ந்து ஏமாற்றப்பட்டவள் நான். மூனாமவரும் நல்லவராக இருப்பாருன்னு என்னம்மா நிச்சயம்...?" என்று அவள் கூறக் கூற எதுவுமே பேசாமல் மௌனமாக இருந்தாள் அன்னை பாத்திமா.

"நான் தனியா வாழ்றேனே என்று கவலப் படுறீங்களா...? எனக்கு உம்மா, வாப்பா இருக்காங்க ரெண்டு பிள்ளைகள் இருக்காங்க. இப்ப சொல்லுங்க...! நான் தனியாவா வாழ்றேன்...? உம்மா... இப்போ என் பிள்ளைகள் கூட வளர்ந்திட்டாங்க. அதுகள நல்லா வளர்த்து ஆளாக்கிட்டா அது போதும்மா...!" என்று அவள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவாகக் கூறி நிறுத்திய போது இத்தனையையம் கேட்டபடி அங்கே வந்த கதீஜாவின் மகன்,

"ஆமா... உம்மும்மா... உம்மா சொல்றது தான் ரொம்பச் சரி. அவங்க வாழ்க்கையில ரொம்ப கவலப்பட்டவங்க. அதனால இனியும் அவங்க ஏமாறவோ, கவலப்படவோ கூடாது. நான் கூட இப்போ சின்னக் குழந்தையல்லயே! என் படிப்பு முடிஞ்சி என் உம்மா, தங்கச்சி, உம்மும்மா, அப்பா எல்லாரையும் நானே உழைச்சிக் காப்பாத்துவேன்...!" என்று பெரிய மனிதத் தோரணையில் தீர்க்கமாகக் கூறிய போது பாய்ந்து சென்று தன் அன்பு மகனை நெஞ்சாரத் தழுவிக் கொண்டாள் கதீஜா.

**2007 ஆம் ஆண்டு சபரகமுவ மாகான கலை நிர்மானப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கதை.**

**மாவனல்லை கிரிங்கதெனிய முஸ்லிம் மாதர் சங்கத்தின் வெளியீடான அஸ் ஸஹ்ரா மலரில் ஜுலை 2007 இல் பிரசுரமானது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லுக்குள் ஈரம்...

எங்கள் ஊரே விழாக்கோலம் பூண்டு காணப்படுகிறது.

இன்று ஊர்ப் பாடசாலையில் மீலாதுன் நபி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட இருக்கிறது. சில தினங்களாக இதற்கான ஏற்பாடுகளில் அதிபர், ஆசிரியர்கள் உட்பட மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது.

ஊரிலே முக்கியமான புள்ளிகளில் நானும் ஒருவன். ஒரு சில நல்ல காரியங்களையும் ஊருக்காகச் செய்திருக்கிறேன். எனவே இன்றைய விழா நிகழ்வுகளுக்கு அதிதியாக அவர்கள் என்னையே அழைத்திருக்கிறார்கள். பேச்சாளர்கள் சிலரும் கலந்து கொள்ள இருப்பதாக அழைப்பிதழில் அச்சிடப்பட்டிருக்கிறது. என் பெயரைப் பெரிய எழுத்துக்களில் "சேவைச்செம்மல்" அல்ஹாஜ் ஆப்தீன் என அச்சிட்டிருந்தார்கள். எனக்குள் பெருமிதம் அந்த அழைப்பிதழைப் பார்த்தவாறு நான் என்னை மறந்துவிட்டேன். வாசலில் நிழலோட்டம் தெரிகிறது. திரும்பிப்பார்க்கிறேன்.

கையில் ஒரு குழந்தையுடன் நினறிருந்த அந்தப் பெண் யாரென்று அறிய அதிக நேரம் பிடிக்கவில்லை.

"ஏ... இங்க வந்த" முகத்தை கடுகடுப்பாக வைத்துக் கொண்டு வெறுப்போடு கேட்கிறேன். "மச்சான்.... ஒஹட நானாவும் மௌத்தாகி ரெண்டு வருஷம் ஆச்சி. சின்னதுகள வெச்சிக் கொண்டு மிச்சம் கஷ்டப்படுற. மூத்தவளும் வயசுக்கு வந்துட்ட. இவளவு நாளும் எங்களுக்கு ஊடு தந்திருந்தவங்க இந்த மாசத்தோட ஊட்டத் தந்துட்டு எங்கேயாவது போகச் சொல்ற. அதுதான் உங்களுக்கிட்ட வந்த..." அவள் கூறி முடிக்க முன்பே எனக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகிறது.

"அதுக்கு... இங்க ஏத்துக்கன் வாற....?" நான் கோபத்தோடு கத்துகிறேன். "மச்சான் கோவப்பட வாணம். நானாட சொத்துல கடுவாளயாவது எங்களுக்குத் தாங்கோ இல்லாட்டி இந்தப் பெரிய காணீல ஒரு மூலைல சரி குடிலொண்டு கெட்டித் தாங்கோ...!" சொல்லும் போதே அவள் கண்களிலிருந்து கண்ணீர் மளமளவென்று வடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இங்க பாருங்கோ.... இஹின ஈர ஊடு காணி எல்லாம் எனக்குத்தான் சொந்தம். அவருக்கு எந்தப் பங்கும் இல்ல. கடைசியாகச் செல்ற. இங்க சொத்துல பங்கு கேட்டு வர வாணம். இங்க வாரத்தால ஒரு பொரோசனமும் இல்ல. ஏலுமென்டா கோட்டுல பெய்த்து வழக்குப் போட்டு எடுத்துக்கொங்கோ...." எனக் கூறி கன்னத்தில் அறைந்தது போல் படாரென்று கதவை அடைக்கிறேன்.

"சரி... நான் போற. எத்தீன்கள்ட சொத்து நல்லமென்டால் நீங்களே வெச்சுக் கொள்ளுங்கோ. இதுக்குப் பொறவு நான் இங்க வாறல்ல. வழக்கு வம்பெல்லாம் தேவில்ல." கூறிவிட்டு அவள் போய் விட்டாள். அதன் பிறகும் என்னால் கடந்த கால நினைவுகளிலிருந்து விடுபட முடியவில்லை.

கரீம் ஹாஜியார் என்றால் ஊரில் தெரியாதவர்கள் இல்லை. அவர் தான் எங்கள் வாப்பா. நானும், என் நானாவும் மட்டும் தான் என் பெற்றோருக்குப் பிள்ளைகள். எங்களுக்கு பங்களா போன்ற வீடு. வீட்டைச் சுற்றி இரண்டு ஏக்கர் நிலம். அதிலே ஐம்பதுக்கு மேற்பட்ட தென்னை மரங்களும், சில பலா மரங்களும் உண்டு. வயல் காணி வேறு. எனவே வருவாய்க்குக் குறைவில்லை. நாமிருவரும் மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டோம். நாங்கள் வாலிபத்தை அடைந்து விட்டோம். பலரின் வாழ்விலும் ஏற்படும் காதல் என்ற அந்த மூன்றெழுத்து நானாவின் வாழ்விலும் ஏற்பட்டு விட்டது. நானா விரும்பிய பெண் வறுமைக்குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளையே திருமணம் முடிக்க வேண்டுமென நானா பிடிவாதமாக இருந்து விட்டார். வாப்பாவும் அது நடக்காது என் ஒரே பிடியாக இருந்து விட்டார்.

சில வருடங்களில் அந்தப் பெண்ணையே நானா பெற்றோரின் விருப்பமின்றி மணமுடித்தார். இதையறிந்த வாப்பா துள்ளினார். குதித்தார்.

"இதுக்குப் பொறகு அவன் எனக்கு மகனே இல்ல. இன்டைல இருந்து இந்த வாசப்படிய அவன் மிதிச்சப் படாது. ஏண்ட சொத்துல அவனுக்கு ஒண்டும் கொடுக்க மாட்டேன்." என்று கூறியது மட்டுமில்லாது வீடு காணி சொத்துக்கள் அனைத்தையும் என் பெயருக்கே எழுதி வைத்து விட்டார். இப்போது முழுச் சொத்துக்கும் அதிபதி நான் தான்.

காலம் ஓடிய வேகத்தில் பெற்றோர் ஒரு வசதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தில் எனக்குப் பெண் பார்த்து மணம் முடித்து வைத்தனர். சில வருடங்களில் நானும் நான்கு குழந்தைகளுக்குத் தந்தையானேன். சில வருடங்களில் வாப்பாவும் நோய்வாய்ப்பட்டார்.

நானா அமீனும், அவர் மனைவியும் நான்கைந்து குழந்தைகளுடன் அடுத்த ஊரில் கஷ்ட ஜீவியம் நடத்துவதாகக் கேள்விப்பட்டேன். நானும் அவருடன் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளவில்லை. ஒருநாள் பெருநாள் தினம் அவரைப் பள்ளி வாசலில் கண்டு விட்டேன். அவர் மிகவும் ஆசையோடும், ஆர்வத்தோடும் கைகளை நீட்டிக் கொண்டு எனக்கு ஸலாம் தர முன்னே வந்தார். நான் மெதுவாக நழுவி கூட்டத்தோடு கூட்டமாக மறைந்து வெளியே வந்து விட்டேன்.

ஒரு வேளை அவருடன் தொடர்பு கொள்ள நேரிட்டு அதனால் அவர் மீது பரிதாபம் ஏற்பட, அதன் காரணமாக சொத்து சுகங்களில் ஏதும் கொடுக்க நேரிட்டு விடுமோ என்ற பயம் எனக்கு. மனைவியும் ஒரு தடவை,

"இங்க பாருங்கோ... ஒஹட நானாவைக் கண்டா காணாதது மாதி இரீங்கோ... மொகம் குடுத்தா பெரிய கரச்சலாக போகும். கவனம்.." என எச்சரித்திருந்தாள்.

ஒருநாள் வாப்பாவுக்கு திடீரென வருத்தம் அதிகமாகி விட்டது. பாயும், படுக்கையுமாகி விட்டார். நானாவை ஆள் அனுப்பி வீட்டுக்கு வரவழைத்தார். நானாவும் வீட்டுக்கு வந்து வாப்பாவின் கட்டிலருகில் நின்று சிறுகுழந்தை போல அழுது கொண்டிருந்தார். வாப்பா அவரிடம்,

"மகன்... அன்டைக்கு எனக்கு வந்த கோபத்துலயும், ஆத்திரத்திலயும் எல்லாச் சொத்தையும் தம்பீட பேருக்கு எழுதீட்ட, என்ன மன்னிச்சிக்கோ... மகன் ஆப்தீன் இங்க வா... இந்த ஊடு, காணி, எல்லாச் சொத்துலயும் அரவாசிய நானாட பேருக்கு எழுதிக் கொடு மகன். என்ன ஆகிரத்து நாள்ள குத்தவாளியாக்காதே...!" என்று கூறியவர், சில நிமிடங்களில் நிரந்தரமாகவே கண்களை மூடிக்கொண்டார்.

வாப்பாவின் இறுதிக் கடமைகள் முடிவடைந்து விட்டன. நானாவும் மனைவி, மக்களோடு வந்திருந்தார். நானும் மனைவியும் அவர்களை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. முகம் கொடுத்துப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசவுமில்ல. எனவே அவர்கள் வாப்பாவின் மையத்தை அடக்கும் வரை இருந்து விட்டு, அன்றே புறப்பட்டு விட்டார்கள். எனக்கு ஓரே ஆறுதல், இருந்தாலும் இனி சொத்தில் பங்கு கேட்டு எந்த நேரத்திலும் வரலாம் என்ற பயம் எனக்குள் இருக்கவே செய்தது. ஆனால், நான் எதிர்பார்த்த படி எதுவும் நடக்கவில்லை. வருடங்கள் சில கழிந்தன. ஒரு நாள் திடீரென்று நானா என் முன்னே வந்து நின்றார்.

"வாப்பாவும் மௌதாகி அஞ்சு வருஷமாச்சு, இவளவு நாளும் வாப்பா சென்ன மாதி சொத்த எழுதித் தாரோண்டு எண்டு பார்த்துக் கொண்டு ஈந்த தம்பி... இப்ப ஏன்ட நிலம கஷ்டமாயீக்கி. சொந்த ஊடில்ல. ஒழுங்கான தொழிலும் இல்ல. இப்பவாவது வாப்பா சென்ன மாதி சொத்த எழுதித் தந்தா மிச்சம் உதவியா ஈக்கும்...." அவர் கூற வந்ததைக் கூறி முடிக்கும் முன்னே நான் கோபத்தில் வெடித்தேன்.

"இங்க பாரு. வாப்பா அன்டைக்கு அப்பிடிச் சென்னது உண்ம தான். அது அவர் நல்ல நெலைல சென்னதல்ல. அவருட நோய்க் கொணத்துல சென்னது. அதுக்காக எழுதித் தரேழுமா...? நல்ல கத. தொழில் செஞ்சி புள்ள குட்டியக் காப்பாத்த சீத்துவமில்ல. சொத்துக் கேட்க வந்துட்ட...! இங்க ஒண்டயென்டு சொல்ல ஒண்டுமில்ல. தயவு செஞ்சி இங்கே வராதே..." என விரட்டாத குறையாக நான் கூறியதும், மறுபேச்சு எதுவுமின்றி சில கணங்கள் கண் கலங்கி நின்றவர், அமைதியாக அந்த இடத்தை விட்டு வெளியேறினார். எனக்கு நிம்மதியாக இருந்தது. இந்தச் சம்பவத்தின் பின் அவரை நான் காணவேயில்லை. ஒருநாள் திடீரென்று என் உறவினர் ஒருவர் வந்து,

"உங்க நானா எக்ஸிடன் ஒன்டுல மௌத்தாகி விட்டாரு. மையித்தப் பாத்துட்டு வராட்டி சரியில்ல..." எனக் கூறி என்னை இழுக்காத குறையாக அழைத்துச் சென்றார். மையித்தை அடக்கியதும் நான் உடனடியாகத் திரும்பிவிட்டேன்.

இப்போது இரண்டு வருடத்திற்குப் பின் நானாவின் மனைவி வந்திருக்கிறாள். சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். இனி இந்தப் பக்கம் வரவே மாட்டாள்.

விழாவுக்குரிய நேரம் நெருங்கி விட்டது. தயாராகிக் கொண்டு பாடசாலை நோக்கிச் செல்கிறேன். விழா மண்டபம் அழகாகக் காட்சி தருகிறது. மண்டபம் மாணவர்களாலும் ஊர்மக்களாலும் நிறைந்து வழிகிறது. திடீரென ஒலிபெருக்கி அலறுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சேவைச் செம்மல் அல்ஹாஜ் ஆப்தீன் அவர்கள் வந்துகொண்டிருக்கிறார். அவர்களை நாம் அன்போடு வரவேற்று, மேடைக்கு அழைக்கிறோம். நான் மேடையில் எனக்காக ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்து கொள்கிறேன்.

மீலாத் விழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் நிகழ்ச்சிகள் மேடையில் அரங்கேறிக் கொண்டு இருந்தன. அடுத்தடுத்த ஊர்களைச் சேர்ந்த மாணவர்களும் நிறைய வந்திருந்தார்கள்.

அடுத்து பேச்சுப்போட்டியில் முதலிடம் பெற்ற பத்து வயது மதிக்கத்தக்க மாணவன் ஒருவன் பேசிக் கொண்டிருந்தான். ஆழமான பேச்சு. கணீரென்ற குரல்.

"அனாதையாகப் பிறந்து. அனாதையாகவே வளர்ந்து அனாதைகளை ஆதரித்த அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு அகில உலகுமே இன்று விழா எடுத்துக் கொண்டிருக்கின்றது.

அருமை நபிகளார் (ஸல்) அவர்கள் அன்னை ஹலீமா அவர்களால் பால் கொடுத்து வளர்க்கப்பட்டார்கள். ஹலீமா அவர்கள் தமது இரண்டு மார்பகங்களில் ஒன்றை ரஸுலுல்லாஹி (ஸல்) அவர்களுக்காகவும், மற்றொன்றை தமது மகன் அப்துல்லாக்காகவும் ஒதுக்கியிருந்தார்கள். ஒரு தடவை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பால் அருந்த முற்பட்ட போது அந்த மார்பில் இருந்து பால் வரவில்லை. இதையறிந்து குழந்தை மீது இரக்கப்பட்ட அன்னை ஹலீமா அவர்கள் தமது மகன் அப்துல்லாஹ் வழமையாகப் பால் குடிக்கும் மார்பில் குழந்தை குடித்துப் பசியாறட்டும் என அந்தப் பக்கமாகக் குழந்தையைப் பிடித்து பால் கொடுக்க முனைந்தார். ஆனால், அருமை நபிகளார் (ஸல்) அவர்களோ, அப்துல்லாஹ்வுக்குரிய அந்த மார்பிலிருந்து பாலைக் குடிக்கவேயில்லை. பார்த்தீர்களா அண்ணலாரின் முன்மாதிரியை...!

பால்குடிக்கும் குழந்தைப் பருவத்தில் கூட மற்றவர்களின் பொருளின் மீது ஆசைப்படாத, அனுபவிக்க விரும்பாத அண்ணல் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியை என்னவென்பது...?

ஆனால் நபிகளாரின் உம்மத்துக்கள் என்று எம்மைக் கூறிக் கொண்டு அவர்களுக்காக விழா எடுத்துக் கொண்டிருக்கும் எமது நிலையை சற்றேனும் யோசித்தீர்களா சகோதரர்களே! இன்று நாங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்து கொண்டிருக்கிறோம்...? பிறரின் சொத்துக்களை அனுபவிப்பதிலேயே குறியாக இருக்கிறோம். அண்டை அயலாரின் காணியைப் பிடித்துக் கொண்டு, அவர்களுக்கு சிரமம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அனாதைகளின் சொத்துக்களை அபகரித்துக் கொண்டு அவர்களை நடு வீதியில் நிர்க்கதி நிலைக்கு ஆளாக்கி வேடிக்கை பார்க்கிறோம்...!" சிறுவன் சற்றே நிறுத்தி விழியோரங்களில் முட்டிக் கொண்டு வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தொடர்கிறான்.

அவனின் பேச்சைக் கேட்கக் கேட்க என் மனதிலே ஒரு குறுகுறுப்பு, குற்ற உணர்வு. என்னைக் கசக்கிப் பிழிகிறது. என் மனச்சாட்சி என்னை அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறது. சிறுவனின் பேச்சு தொடர்கிறது.

"நானும் ஒரு அனாதை தான். ஆயிரமாயிரம் அனாதைகளின் சார்பாக பேசிக் கொண்டிருக்கிறேன். அனாதைகளை ஆதரியுங்கள், அனாதைகளுக்கு அநீதி இழைக்காதீர்கள். அவர்களின் சொத்துக்களை விழுங்காதீர்கள். நிச்சயமாக இது நெருப்பை விழுங்குவதற்கு சமமானதென அருமை நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே அனாதைகள் விடயத்தில் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்."

சிறுவன் உணர்ச்சி ததும்ப பேசிக் கொண்டிருக்கிறான். என்னால் இருக்கையில் இருக்க முடியவில்லை. முள்ளின் மீது உட்கார்ந்து இருப்பது போன்ற உணர்வு எனக்கு. இத்தனை நாளும் என் சகோதரனின் சொத்து விடயத்தில் நான் நடந்து கொண்டது எவ்வளவு கொடுமையானது, அநீதமானது என்பதை முதல் தடவையாக உணர்கிறேன். என்னால் அதற்கு மேலும் அங்கிருக்க முடியவில்லை. விழா முடியும் வரை பொறுமையின்றி தவித்துக் கொண்டிருந்தேன்.

"எங்கட ஊட்ட சுவர் போட்டு ரெண்டாக பிரிக்கனும். காணி, வயல் எல்லாச் சொத்தையும் ரெண்டாகப் பிரிச்சி அத நானாட புள்ளைகள்ட பேர்ல எழுதனும். விழா முடிஞ்ச உடனே அங்க போய் அவங்க எல்லாரையும் ஊட்டுக்கு கூட்டிக் கொண்டு வரணும்" என்ற முடிவோடு காத்திருந்தேன்.

விழாவின் இறுதிக்கட்டம் பரிசளிப்பு நேரம். பரிசில்களை வழங்கி வைப்பதற்காக தலைவர் என்னை அழைக்கிறார். எழுந்து நிற்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே பையன் பேச்சுப் போட்டியில் முதற்பரிசு பெறுவதற்கு வருகிறான். அவனைக் கண்டதும் என்னுள்ளே இனம் புரியாத ஒரு உணர்வு. சிறுவனாயிருந்தாலும் என்னைத் திசைமாற வைத்த வனல்லவா...! பரிசு கொடுக்கும் போது அந்தப் பையனின் தலையை ஆதரவோடு தடவி,

"மகன்... ஒங்கட வாப்பா தாரு... பேரென்ன...?" அன்போடு கேட்கிறேன்.

"வாப்பா பேரு அமீன். எக்ஸிடன்ல மௌத்தா கிட்டாங்க...!" குரல் உடைந்து வருகிறது. நான் அதிர்ச்சியில் உறைந்து விடுகிறேன். "அப்போ... இவன் என் நானாவின் மகனா...?" அது பொது மேடை என்பதையும் மறந்து அவனை வாரி அணைத்து முத்தமிடுகிறேன். அவன் எதுவும் பரியாமல் விழிக்கிறான்.

விழா முடிந்ததும் அவனையும் தேடிப் பிடித்து வாகனத்தில் ஏற்றிக் கொண்டு நானாவின் மனைவி மக்கள் இருக்கும் இடத்தை நோக்கி நல்ல செய்தியோடு செல்கிறேன்.

**2005 ஆம் ஆண்டு மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரி வெளியிட்ட மீலாத் விழா மலரில் (கல்லுக்குள் ஈரம் கசிகிறது என்ற பெயரில்) பிரசுரமானது.**

**நன்றி விடிவெள்ளி 21.05.2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வட்டம்

"வாப்பா... வாப்பா..."தூக்கத்தில் இருந்த ஷானாஸ் வாய் பிதற்றிக் கொண்டிருந்தாள். பக்கத்தில் படுத்திருந்த ஸபிய்யா மகளின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். குழந்தையின் உடல் நெருப்பாகக் கொதித்துக் கொண்டிருந்தது. அவசரமாக எழுந்து கொண்ட அவள் குழந்தையின் உடம்பை தண்ணீர் தொட்டு டவலால் ஒத்தி விட்டு அவளுக்குரிய மருந்துகளைத் தயார் படுத்தத் தொடங்கினாள். வாப்பாவை எழுப்பலாம் என்ற எண்ணத்துடன் அவரின் அறையை எட்டிப் பார்த்தாள் ஸபிய்யா. அவர் குறட்டை விட்டபடி நிம்மதியாக தூங்கிக் கொண்டிருந்தார்.

"ம்... அவருக்கெனத்தியன்... அவர் நிம்மதியாகப் படுக்கிய. ஏன்ட வாழ்க்கைய இப்பிடிக் கேள்விக் குறியாக்கீட்டு அவரு நிம்மதியா தூங்கிய. இந்த நேரம் அவரு - அதுதான் ஷானாஸ்ட வாப்பா கிட்ட ஈந்தா எவ்வளவு தைரியமா, ஆறுதலா ஈச்சுமன்..." என நினைத்த போது அவள் விழிகள் கலங்கி விட்டன.

நேற்று நடந்தது போல் இருக்கிறது. ஸபிய்யா அவள் கணவனைப் பிரிந்து இப்போது ஆறு வருடங்கள் ஆகின்றன.

ஸபிய்யா, சித்தீக் திருமணம் பெற்றோரால் பேசப்பட்டு அவர்களின் பூரண விருப்பத்துடன் நடந்தது தான். அவர்களின் வாழ்க்கை நிம்மதியாக ஓடிக் கொண்டிருந்தது.

சித்தீக் வசதியானவன், கடை வாகனங்கள் என்று அவன் உழைப்பு பெருகிக் கொண்டிருந்தது. அவர்களின் இனிய தாம்பத்தியத்திற்கு அடையாளமாக அடுத்தடுத்து இரண்டு பிள்ளைகளையும் பெற்றெடுத்தாள் ஸபிய்யா.

இரண்டு பிரசவங்களுக்குப் பின் அவளின் உடல் நிலை மிகவும் பலவீனமடைந்து விட்டது. இருந்தாலும் முடிந்தவரை கணவனுக்குரிய, குடும்பத்திற்குரிய கடமைகளை அவள் செய்து வந்தாள்.

நாட்களின் நகர்வில் மூன்றாவது குழந்தையையும் அவள் வயிற்றில் சுமந்து கொண்டிருந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது ஒரு நாள் திடீரென்று அவன்,

"ஸபிய்யா நா இன்னொரு கல்யாணம் முடிச்சத்துக்கு ஈச்சிய...! நீங்க எனத்தியன் செல்லிய...?" அவன் அவளிடம் கேட்டான்.

"எனத்தியன் வெளயாடியா...? நான் உசிரோட ஈச்சிய... ரெண்டு புள்ள ஈச்சி... மூனாவது வயித்துல. இப்ப எனத்துக்கன் ரெண்டாவது கல்யாணம்...? சும்மா வெளயாடாம போங்கோ..."

"இல்ல ஸபிய்யா உண்மையாகத் தான் செல்லிய. எனக்கும் வசதி வாய்ப்பு ஈச்சி. எங்கட ஊட்டாக்களும் இதத் தான் செல்லிய. நீங்க விருப்பப்பட்டாத் தான் நான் இத செய்வன். நான் அப்பிடி முடிச்சாலும் ஒங்களுக்கும், ஏன்ட புள்ளைகளுக்கும் ஒரு கொறையும் வெச்ச மாட்டன்..." எந்தவித ஒழிவு மறைவுமின்றி அவன் உள்ளத்தில் உள்ளதை அப்படியே அவளிடம் கூறி விட்டான்.

இதைக் கேட்டு அவள் ஒப்பாரி வைக்கவுமில்லை. கோபப்படவுமில்லை. சிந்தித்தாள்.

"இப்ப ரெண்டு மூனு வருஷமா நானும் நோயாளியாகிட்ட. உடம்பும் பலவீனமாயிட்ட. இந்த நிலையில அவரு இன்னொரு கல்யாணம் முடிச்சி சந்தோஷமாக வாழ்றதுல தப்பே இல்ல. அவருடைய உடம்புல பலமும் இருச்சி. ஏனைய வசதியும் ஈக்கு. சரி அவர் ஆசப்படுகிய மாதிரி ரெண்டாவது கல்யாணம் முடிச்சட்டும்" என்று முடிவெடுத்துக் கொண்டவள்,

"நீங்க இன்னொரு கல்யாணம் முடிச்சியத நான் தடுக்க மாட்டன். ஆனா... இந்த விஷயம் முடிஞ்சவரைக்கும் ஏன்ட வாப்பாவுக்கோ, எங்கட குடும்பத்துக்கோ தெரியாம ஈக்கட்டும்" என்று கூறி விட்டாள்.

தன் மன உணர்வுகளைப் புரிந்து கொண்டு வாழும் ஸபிய்யா அவன் இதயத்தில் இமயமாகிப் போனாள்.

தன்ட வாழ்க்கைய இன்னொரு பெண்ணோட பங்கு போட்டுக் கொள்ள எந்தப் பொம்புளையும் விரும்ப மாட்டாள். ஏன்ட சந்தோஷத்துக்காக வாழிய, ஏன்ட ஸபிய்யாவ உயிருள்ள வரைக்கும் என் மனசுல மட்டுமல்ல தலையிலும் சுமக்க வேணும் என முடிவெடுத்துக் கொண்டான் சித்தீக்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வாரங்களில் ஒரு ஏழைப் பெண்ணுக்கு வாழ்வு கொடுத்தான் சித்தீக். வாரத்தில் அரைவாசி நாட்கள் ஸபிய்யாவுடனும், மற்ற நாட்களில் மற்ற மனைவியுடனுமாக காலம் கடந்தது.

இப்போதெல்லாம் முன்னைவிட மிக அதிகமாகவே ஸபிய்யா மீது அன்பு காட்டினான் சித்தீக். அவனின் மூன்றாவது குழந்தையை சுமந்தபடி நிறைமாதக் கர்ப்பிணியாக இருக்கும் அவளுக்கு வேண்டியவைகளை யெல்லாம் செய்து அவளை அன்புடன் கவனித்தான் அவன்.

அன்று பகல் நேரம். சித்தீக் வீட்டிலே இருந்தான். அப்போது ஆவேஷத்துடன் உள்ளே நுழைந்தார் ஸபிய்யாவின் வாப்பா தாஹிர்.

"ஸபிய்யா... ஸபிய்யா... எங்க அவன்...? கோபத்துடன் குதித்தார் அவர்.

வாப்பாவின் வருகையும், கோபமும் ஸபிய்யாவுக்கு நன்றாகவே படவில்லை.

"வாங்க வாப்பா... இப்பிடி இரீங்கோ..."

"நான் ஈச்ச வரல்ல. ஓன்ட மாப்புள அந்தப் பொம்புளப் பொறுக்கி எங்கயன்...! செருப்பால அடிச்ச மாதிரி அவனுக்கிட்ட நாலு கேள்வி கேட்டுட்டு ஒன்னையும் புள்ளைகளையும் கூட்டிக் கொண்டு போகத் தான் வந்த..." என்று கூறும் போதே சித்தீக் அங்கு வந்து விட்டான்.

"வாங்க மாமா... வாங்க... இப்பதானா வாற...?" என்றவனை முறைத்த அவர்

"இப்பதான் ஒங்கட கபடித் தனம் தெரிஞ்ச... ஏன்ட புள்ள உசிரோட ஈச்சிய நேரம் இன்னொரு கல்யாணத்த முடிச்சி ஏன்ட மகள்ட வாழ்க்கைய நாசமாக்கிட்ட. நீயெல்லாம் ஒரு மனுஷனா...?" ஆத்திரத்தோடு புலம்பத் தொடங்கினார் தாஹிர்.

"வாப்பா நான் சொல்றதக் கொஞ்சம் கேளுங்கோ... அவரு கல்யாணம் முடிச்சது உண்மதான். ஏன்ட விருப்பத்தோட தான் அவரு அதச் செஞ்ச. ஆனா அவரு ஏன்ட வாழ்க்கைய நாசமாக்கல்ல. என்னையும், புள்ளைகளையும் நல்லாத்தான் வெச்சீச்சிய..." அவள் உண்மையை எடுத்துக் கூறினாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் இத ஒரு நாளும் நம்பல்ல. ஒன்னப் பயமுறுத்தி, ஏமாத்தித் தான் இப்பிடிச் செஞ்சீப்பான். இனி அவனோட ஒரு நிமிஷமும் நீ வாழக் கூடாது. இந்த நிமிஷமே புள்ளகளக் கூட்டிக் கொண்டு என்னோட வா. ஒன்னையும் புள்ளகளையும் பாக்க என்னால ஏலும்." தாஹிர் முடிவாகக் கூறிவிட்டார்.

அவரின் பிடிவாதக் குணத்தை அறிந்திருந்த ஸபிய்யாவும், சித்தீக்கும் அதிர்ந்து போனார்கள்.

"மாமா... இந்தச் சின்ன விஷயத்துக்காக இந்தப் பெரிய தண்டனைய தர வேணாம். ஸபிய்யாவையும், புள்ளகளையும் பிரிஞ்சி என்னால வாழ ஏலா..." அழாக் குறையாக கெஞ்சி நின்றான் சித்தீக்.

"கல்யாணம் முடிச்ச முந்தி அதப்பத்தி யோசிச்சி ஈச்சோணும். பொண்டாட்டி, புள்ளகளோட எரக்கமுள்ளவன் இன்னொரு கல்யாணத்த முடிச்சியோன்டன். மகள ஏமாத்தியது போல என்ன ஏமாத்த ஏலா ராஜா. ஸபிய்யா வாகனம் வந்தீச்சி. ஒடனே பொறப்படு. இப்ப நீயும், புள்ளகளும் என்னோட வராட்டி ஏன்ட மையத்துக்கும் வர வேணாம்" ஒரே முடிவாகக் கூறி விட்டார் தாஹிர்.

வாப்பாவின் பிடிவாதக் குணத்தையெல்லாம் தெரிந்து கொண்டிருந்த ஸபிய்யா பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு புறப்படத் தயாரானாள்.

"வாப்பாட மனச மாத்தி கூடிய சீக்கிரமே அவருக்கிட்ட வந்து சேந்திரோணும்" என்ற எண்ணத்துடன் தான் அவள் புறப்பட்டுச் சென்றாள்.

மனைவியும் பிள்ளைகளும் தன்னை விட்டுப் பிரிந்து செல்வதை அவனால் தாங்க முடியவில்லை. நெஞ்சம் பதற, கண்கள் கலங்க செய்வதறியாது கல்லாய் நின்றிருந்தான் சித்தீக்.

நாட்களின் நகர்விலே. கணவனுடன் சேர்ந்து வாழ முடியும் என்ற எண்ணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டிருந்தாள் ஸபிய்யா. மருமகனிடமிருந்து மகளைப் பிரிக்க வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தார் தாஹிர்.

அவனின் பிரிவால் அவளும், பிள்ளைகளும் பெரிதும் வருந்தினார்கள். மனதளவில் பாதிப்புக்குள்ளானார்கள். அதே போல் சித்தீக்கும் மிகவும் மனமுடைந்து போனான். இருப்பினும் மாமாவின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டருகிலுள்ள உறவினர் வீடு ஒன்றுக்கு இடைக்கிடை வந்து பிள்ளைகளையும் பார்த்து அவர்களுக்குரிய செலவுகளையும் கொடுத்தே வந்தான் அவன். தந்தையின் தடையை மீறி ஸபிய்யாவை மட்டும் அவனால் பார்க்க முடியவில்லை. அவள் பிறந்த வீட்டிலே ஒரு சிறைப் பறவையானாள்.

சில வாரங்களில் அவளுக்கு மூன்றாவது குழந்தையும் கிடைத்தது. தனக்கு ஒரு மகள் கிடைத்திருக்கும் செய்தியை அறிந்ததும் மருத்துவமனைக்கு ஓடினான் சித்தீக்.

"ம்..... தாரயன் பாக்க வந்த..? இதுக்குப் பொறகு அவ ஒங்களப் பாக்க மாட்டா... வந்த வழியப் பாத்து பெய்த்தால் நல்லம்... இன்னம் கொஞ்சம் நாள்ல, காதிக் கோட்ல சந்திச்சோம்..." என்று கூறி, அவனை அவமானப்படுத்தி அனுப்பினார் தாஹிர்.

வருடங்கள் சில ஓடின. மூத்த பிள்ளைகள் இருவருக்கும் வாப்பாவை நன்றாகவே தெரியும். ஆனால், இளையவள் ஷானாஸ் தந்தையைக் கண்டதே இல்லை. அவள் வளர வளரத்தான் ஸபிய்யாவுக்கு சங்கடமாகிப் போனது. அவள் அடிக்கடி வாப்பாவைப் பற்றிக் கேட்கத் தொடங்கி விட்டாள்.

"உம்மா... ஏன்ட வாப்பா எங்கேயன் உம்மா..? என்னப் பாக்க அவரு வாரல்லயா...?" இப்படி அவள் கேட்கும் போதெல்லாம்,

"வாப்பா வாரோண்டு மகள்... அவரு வெளிநாட்டுல ஈச்சிய..." என்று கூறி அவளை சமாதானப் படுத்தி வந்தாள்.

தாஹிர் வீட்டில் இல்லாத நேரங்களில் சித்தீக் வீட்டின் முன் வந்து வாகனத்தின் ஹோர்னை அடிப்பான். அவனின் மூத்த மகன்,

"ஏன்ட வாப்பா வந்தீச்சி..." என்று துள்ளிக் குதித்து வாப்பாவிடம் ஓடுவான். அவர்களின் செலவுக்கென்று பணமும், பொருளும் அவனிடம் கொடுத்துச் செல்வான். சித்தீக். அப்போது எல்லாம், உள்ளமும் உடம்பும் பதற அவனைக் கண்ணீருடன் மறைந்திருந்து பார்ப்பாள் ஸபிய்யா.

இரண்டாம் தரத்தில் கல்வி கற்கும் ஷானாஸும் தயக்கத்துடன் தூர நின்று சித்தீக்கைப் பார்ப்பாள். அவன் தன்னுடைய தந்தை என்பது அவளுக்கு இன்னும் தெரியவில்லை. நானாவுக்கு எல்லாம் வாப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறார். எனக்குத்தான் வாப்பா இல்லை என்று நினைத்து கவலைப்படத் தொடங்கியது அந்தப் பிஞ்சு மனம். அதன் விளைவு வாப்பாவைப் பார்க்க வேண்டும் எனப் பிடிவாதம் பிடிக்கத் தொடங்கி விட்டாள். என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறி நின்றாள் ஸபிய்யா.

அவர்தான் உன் வாப்பா என்று குழந்தைக்கு அறிமுகப் படுத்தினால் அதன் விளைவுகள் என்னவாகுமோ என குழம்பினாள் ஸபிய்யா. காலம் வரும், போது சந்தர்ப்பம் வரும் போது மெதுவாக உண்மைகளைக் கூறலாமென்ற நினைப்பில் அவளைச் சமாளித்து வந்தாள் அவள்.

அது ஒரு ஞாயிற்றுக் கிழமை காலை பத்து மணியிருக்கும். தாஹிர் கடை வீதிக்குப் போயிருந்தார். ஸபிய்யாவின் மூத்த பிள்ளைகள் இருவரும் பிரத்தியேக வகுப்புகளுக்குச் சென்றிருந்தார்கள். வீட்டில் அவளும், ஷானாஸும் மட்டும் தான் இருந்தார்கள். அப்போது வீட்டின் முன் வாகனத்தின் ஹோர்ன் சத்தம் கேட்கத் தொடங்கியதும் விளையாடிக் கொண்டிருந்த ஷானாஸ் முன் பக்கம் ஓடினாள். மறுகணம்,

"உம்மோவ்... நானட வாப்பா வந்தீச்சி..." என்று உற்சாகத்தோடு கத்தத் தொடங்கினாள். இதைக் கேட்ட அவளுக்கு மனசெல்லாம் வலித்தது. விழியோரங்களில் நீர் நிறைந்து விட்டது. அவனுக்கும் இதே நிலை தான்.

வாசலில் வெட்கத்துடன் தயங்கி நின்ற அவளை கையசைத்து அழைத்தான் சித்தீக். மெதுவாக வீட்டை விட்டு இறங்கி அவனிடம் சென்றாள் ஷானாஸ். காரை விட்டு இறங்கிய அவன் அவளைக் கைகளில் தூக்கி ஆரத்தழுவி முத்தமிட்டான்.

"மகள்... நான் நானாட வப்பா மட்டுமல்ல. ஒங்கட வாப்பாவும் நான் தான்..." என்று கூறிய அவன் மீண்டும் மீண்டும் அவளை முத்தமிட்டான். அவனின் பேச்சையும், செயலையும் கண்டு ஷானாஸ் இனம் புரியாத பாச உணர்வுக்குள் மூழ்கிப் போனாள்.

"மகள்... இன்டைக்கு ஒங்கட பொறந்த நாள். இது ஒங்களுக்கு ஏன்ட கிப்ட்" என்று கூறிய சித்தீக் அவளின் கழுத்தில் ஒரு தங்க மாலையை அணிவித்து கைகளில் இனிப்புக்களையும் கொடுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுச் சென்றான். இந்தக் காட்சிகளை ஜன்னல் சீலைக்குப் பின் மறைந்து நின்று கவனித்துக் கொண்டிருந்த ஸபிய்யா கண் கலங்கிப் போனாள்.

"இந்த வாப்பாட பிடிவாதம் பெய்த்து அவரோட எப்பதான் சேரக் கெடச்சுமோ...? என்று பெருமூச்சோடும், ஏக்கத்தோடும் காத்திருந்தாள் அவள்.

அன்று தந்தையை இனம் கண்டு கொண்டதிலிருந்து ஷானாஸுக்கு ஒரே சந்தோஷம்.

"எனத்துக்கன் உம்மா பொய் சென்ன...? நானாட வாப்பா தானே ஏன்டயும் வாப்பா...?" என்று எதுவும் புரியாத குழப்பத்தில் தாயிடம் கேட்கத் தொடங்கி விட்டாள் ஷானாஸ்.

"உம்மா... வாப்பா எனத்துக்கன் எங்கட ஊட்டுக்கு வாரல்ல. அவரு எங்களோட கோவமா...? ஏன்ட கூட்டாளிமார்ட வாப்பாங்க அவங்களோட தான் ஈச்சிய. அவங்கட வாப்பா தான் அவங்கள ஸகூலுக்கும் கூட்டிக் கொண்டு வாற. ஏன்ட வாப்பா என்ன எப்பவன் உம்மா ஸ்கூலுக்குக் கூட்டிக் கொண்டு போற..." என்று எப்போதும் வாப்பாவைப் பற்றியே பேசத் தொடங்கி விட்டாள் ஷானாஸ்.

எப்போதும் வாப்பாவின் நினைவாகவும், பேச்சாகவும் இருந்த ஷானாஸ் தூக்கத்தில் கூட வாய் பிதற்றத் தொடங்கி விட்டாள். பாடசாலையிலிருந்து அவளின் வகுப்பாசிரியை கூட ஸபிய்யாவைச் சந்தித்து,

"இப்ப ஷானாஸ் முந்தி மாதிரி இல்ல. படிப்புல கவனமும் இல்ல, சுறு சுறுப்பும் இல்ல. எப்ப பாத்தாலும் யோசிச்சிக் கொண்டே ஈச்சிய. அவட மனசில ஏதோ ஒரு கவல ஆழப்பதிஞ்ச மாதிரி தெரியுது. நீங்க கொஞ்சம் கவனீங்கோ" என்று கூறியதும் குழம்பிப் போனாள் ஸபிய்யா.

அன்றிலிருந்து அடிக்கடி நோய்வாய்ப்பட ஆரம்பித்தாள் ஷானாஸ்.

இப்போதும் அப்படித் தான். இரண்டு நாட்களாக விடாத காய்ச்சல். தூக்கத்தில் கூட "வாப்பா... வாப்பா..." என்று தான் அவள் வாய் பிதற்றினாள் ஸபிய்யாவுக்குப் பயமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென்று எழுந்து கட்டிலில் உட்கார்ந்து கொண்ட ஷானாஸ்,

"வாப்பா... வாப்பா... என்னக் கூட்டிக் கொண்டு போங்கோ..." என்று கதறியழத் தொடங்கி விட்டாள். அவளின் நிலை கண்டு பதறிப் போன ஸபிய்யா,

"வாப்பா வாரோன்டு மகள். நீங்க பேசாம படுங்கோ" என்று கண்ணீருடன் மகளைச் சமாளித்துக் கொண்டிருக்கும் போது தாஹிர் அங்கே வந்து நின்றார்.

பேரக் குழந்தையின் நிலை காண அவரின் மனமும் நெகிழ்ந்து போனது.

"வாப்பா இப்ப ஒங்களுக்கு சந்தோசம் தானே. என்னையும் அவரையும் தான் பிரிச்சீட்ட. இந்தப் புள்ளகளப் பத்தி, அதுகள்ட எதிர் காலத்தப் பத்தி நீங்க கொஞ்சமாவது யோசிச்சுப் பாத்தா...? வாப்பாவப் பிரிஞ்சி இந்தப் புள்ள படுகிய பாட்டப் பாருங்கோ... வாப்பா ஒங்கட கல்பு கல்லா...?" அதற்கு மேலால் அவளால் பேச முடியவில்லை. இத்தனை நாளும் பொறுமை காத்த அவள் உடைந்து போனாள். அவளையும் மீறி வாய் விட்டு கதறி அழுதாள்.

"ஏன்ட வரட்டு கௌரவத்தாலயும், வீணான புடிவாதத்தாலயும் கண்ட பலன் ஒன்டுமில்ல. இதுக்குப் பொறகாவது இந்தக் குடும்பத்த சேத்து வச்சாட்டி நான் மனிஷனே இல்ல..." என்ற முடிவுடன் எழுந்த தாஹிர் மருமகன் சித்தீக்கின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளத் தொடங்கினார். இனி என்றும் அவர்கள் வாழ்க்கையில் வசந்தம் தான்.

**நன்றி விடிவெள்ளி 07.02.2013**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களும் மனிதர்களே...!

அடுத்த வீட்டை எட்டிப் பார்க்கிறாள் ரமீஸா. வீடு ஒரே அமர்க்களமாக இருக்கிறது. எங்கும் ஒரே சந்தோசம். நாளை மறுதினம் அந்த வீட்டில் வேலை செய்யும் ரஹீமாவுக்குக் கல்யாணம். இதையிட்டு உண்மையில் ரமீஸாவுக்கும் சந்தோசம் தான். இருந்தாலும் தன் நிலையை நினைக்கும் போது அவளுக்கு அழுகை அழுகையாக வருகிறது. உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஏக்கப் பெருமூச்சு வெளியாகிறது.

இரண்டு தினங்களுக்கு முன் அடுத்த வீட்டுப் பெண் இங்கே வந்திருந்தாள்.அவளின் எஜமானி அம்மாவான பரீதாவிடம்,

"எங்கட ரஹீமாவுக்கு கல்யாணம் ஈச்சி. எல்லாரும் நேரத்தோட கட்டாயம் வரோணும் அவ தாருமில்லாத அனாதப் புள்ள. அதுட நல்லது கெட்டத நாங்கதானே பாக்கோணும். கேக்கோணுமென்டு நெனச்ச. கேக்கியதுக்கு ஒன்டும் நெனச்ச வேணாம். ஓங்கட ஊட்டுல ஈச்சிய ரமீஸாக்கு இன்னும் ஒன்டும் பாக்கல்லயா.?" என்று ஆவலோடு கேட்டாள்.

பரீதா என்ன கூறப் போகிறாள் என்பதை அறிய ரமீஸா காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டாள்.

"அதுதானே பாருங்கோ. மூத்த மகளும் கல்யாணம் முடிச்சி பொரினுக்கு பெய்த்த. ஊட்டுலயும் ஒத்தருமில்ல, ரமீஸாவுக்கு கல்யாணம் முடிச்சி அனுப்பீட்டா அதுக்குப் பொறகு இந்த ஏலாத புள்ளகள் ரெண்டையும் தாரென் பாக்கிய.?"

அவளின் பேச்சிலிருந்து கல்யாணம் என்பது தனக்கு எட்டாத ஒன்று என்பதைப் புரிந்து கொண்டாள் ரமீஸா.

தனக்கு எத்தனை வயது என்பதைக் கூடத் தெரியாதவள் ரமீஸா. இருந்தாலும் இப்போது அவளுக்கு இருபத்தைந்துக்கு மேல் இருக்கலாம். தன்னுடைய வயதோ பிறந்த திகதியோ அவளுக்குத் தெரியாது. தனது ஊர், பெற்றோர் யார் என்பதெல்லாம் கூட அவளுக்குத் தெரியாது. பெற்றோரின் முகங்கள் கூட அவள் ஞாபகத்தில் இல்லை. காரணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் சிறு பராயத்தில், ஆறு வயதிலேயே இங்கே அழைத்து வரப்பட்டவள் தான் ரமீஸா.

ஒரு குடிசை வீட்டில் இரண்டு மூன்று சின்னதுகளுடன் வாழ்ந்த ஞாபகம் சின்னதாக உள்ளத்தின் ஒரு மூலையில் இன்னும் நினைவில். யாரோ ஒருவரின் மரணத்துக்காக எல்லோருடனும் சேர்ந்து தானும் அழுத ஞாபகமும் சின்னதாக நினைவில். (அந்த யாரோ ஒருவர் தனது உம்மாவாகத் தான் இருக்க வேண்டும் என இப்போதெல்லாம் நினைப்பாள்.) அந்தக் குடிசை வீட்டுக்கு முன் பெரிய கார் ஒன்று வந்து நின்றது இன்னும் ஞாபக வீதியில் இருக்கிறது. அதில் வந்தவர்கள் இந்த வீட்டு எஜமானும், எஜமானியும் தான். தனது வாப்பா என்ற மனிதர் அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டு கண்ணீருடன் அவர்களிடம் ஒப்படைத்து "நோனா" தாயில்லாத புள்ள, ஒங்கட புள்ள மாதிரி வளக்கோணும்." என்று கண்ணீர் வடித்ததும்,

"கவலப்பட வேணாம். நாங்க புள்ளய படிச்ச வச்சி நல்லாக பாப்போம்" என்று அவர்கள் கூறியதும், உடனே தான் ஆசையோடு ஓடிப் போய் காரில் ஏறி ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து கொண்டு பயணம் சென்றதும் இன்னும் கனவைப் போல் அவள் மனதின் ஒரு மூலையில் நிற்கிறது.

அந்த வீட்டுக்கு அவள் வந்ததிலிருந்து பரீதாவை மெடம் என்றும் பரீதாவின் கணவன் நிசாரை சேர் என்றும் தான் அழைப்பாள். அவர்கள் அப்படித்தான் சொல்லிக் கொடுத்தார்கள். அப்போது அவர்களுக்கு. ஒரு மகள் மாத்திரமே இருந்தாள். அவள் படித்துக் கொண்டிருந்தாள்.

அவர்கள் அழைத்து வரும் போது சொன்னது போல் அவளைப் படிக்க வைக்கவில்லை. அவளுக்கு எழுத வாசிக்க எதுவுமே தெரியாது. பெயரைக்கூட எழுதுவதற்கு அவர்கள் பழக்கவில்லை. அவளின் வயசுக்கு மீறிய வேலைகளையெல்லாம் செய்வதற்கு அவள் கட்டாயப்படுத்தப் பட்டாள்.

அந்த வீட்டுச் சிறுமி பாடசாலைக்குச் செல்லும் போதெல்லாம், படிக்கும் போதெல்லாம் ரமீஸாவுக்கு ஆசையாக இருக்கும். இருந்தாலும் அவர்கள் மனம் வைக்காமல் அந்த ஆசை நிறைவேறவா போகிறது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமீஸா அந்த வீட்டுக்கு வந்து இரண்டு வருடங்களில் பரீதாவுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அது இரண்டு மூன்று வருடங்களாகியும் எழுந்து நடக்கவில்லை. பல டாக்டர்களிடம் அலைந்து திரிந்து பரிசோதித்த பின் தான் அந்தக் குழந்தை அங்கவீனக் குழந்தை என்பது அவர்களுக்குத் தெரிந்தது. அந்த நடக்க முடியாத குழந்தையுடன் மிகவும் கஷ்டப்படுபவள் ரமீஸா தான்.

இன்னும் சில வருடங்களில் மற்றுமொரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள் பரீதா. அந்தக் குழந்தையும் மூளை வளர்சியில்லாததாகவே பிறந்து விட்டது. இரண்டு பிள்ளைகளும் இப்படி ஊனமுற்றுப் பிறந்ததில் அவர்கள் உள்ளம் உடைந்து போனார்கள்.

பரீதாவின் மூத்த மகள் எந்தக் குறையுமின்றி நன்கு கற்று, அவளுக்குத் திருமணமும் நடைபெற்று அவள் கணவனுடன் வெளிநாடு போய் விட்டாள்.

ரமீஸா வளர வளர அவள் அந்த வீட்டின் முழு நேர வேலைக்காரியாகவே ஆகிவிட்டாள். பரீதாவும் நிசாரும் காலையிலேயே ஆபிஸுக்குப் போய் விடுவார்கள். காலை எழுந்தது முதல் இரவு படுக்கும் வரை சமையல், துணிகழுவுதல் தொடங்கி அங்கவீனப் பிள்ளைகளைக் கவனிப்பது வரை வீட்டில் அத்தனை வேலைகளும் ரமீஸாவின் தலையில் தான். அந்த வீட்டின் கிரைன்டர், மிக்ஸி, வொஷின் மெஷின் எல்லாமே அவள் தான்.

பல வேலைகளில் அவளுக்கு வாழ்கையே கசந்து போகும். அவளுக்கு எந்தச் சந்தோஷமோ, எந்தப் பொழுது போக்கோ, சுதந்திரமோ எதுவும் கிடையாது. வீட்டை விட்டு தம்பதியர் வெளியே போகும் போது அந்தப் பிள்ளைகளுடன் அவளையும் உள்ளே வைத்து கதவைப் பூட்டிக் கொண்டு சாவியைத் தங்களுடனே எடுத்து போவார்கள். இந்தச் சிறை வாழ்க்கை நீண்டு கொண்டேயிருந்தது.

இத்தனை காலமும் ஒரு புது உடுப்பைக் கூட அவள் அணிந்ததில்லை. மூத்த மகளும், தாயும் உடுத்து ஒதுக்கிய உடுப்புக்களே அவளுக்கு கைமாறின.

வீட்டுக்காரர் நிசார் கொஞ்சம் இரக்கம் உடையவர். ரமீஸா மீது அவருக்குப் பாசம் உண்டு. எனவே மனைவிக்குத் தெரியாமல் பல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்களில் உணவுப் பண்டங்கள், சொக்லட், சவர்க்காரம்,பவுடர் என்று கொண்டு வந்து கொடுப்பார்.

ஒரு தடவை பெருநாளைக்காக வீட்டிலுள்ளவர்களுக்கு உடைகள் வாங்கும் போது மனம் கேளாமல் ரமீஸாவுக்கு புது உடுப்பும், செருப்பும் கொண்டு வந்து கொடுத்தார். அவரின் இந்தச் செயல் மனைவிக்குப் பிடிக்கவில்லை.

"இதெனத்தியன் புதிய பழக்கம். அவளுக்கெல்லாம் புது உடுப்புத் தேவல்ல. செருப்பக் கால்லதான் போடோனும், தலைல தூக்கி வச்சப்படாது" என்றாள் வெறுப்போடு.

"இங்க பாரு பரீதா... அந்த ரமீஸா பாவம். நாங்க முழுக்க முழுக்க அவள்ட உழைப்ப சொரண்டி வாழிய. எங்கட ஊட்டுக்காக அவ மாடாகக் கஷ்டப்படுகிய. எங்கட புள்ளைகள்ட ஒரு வேலையையும் நீயோ, நானோ செய்தல்ல, எல்லாம் அவட தலைல தான். இன்டைக்கு அவ செய்த வேலைகளுக்கு மாதம் ஆறேழு ஆயிரம் குடுத்தாலும் போதா. நாங்க சம்பளமா குடக்கிய...? என்று அவர் முடிக்கு முன் குறுக்கிட்ட அவள்,

"எனத்தியன்... திடீரென்டு இப்ப பாவம் புண்ணியத்தப் பத்திப் பேசிய? நாங்க சம்பளம் குடுக்காட்டியும் மூணு நேரமும் வயிறு நெறய சாப்பாடு குடுக்கிய தானே..."

"ஓ... நீங்க குடுக்கிய சாப்பாட்டப் பத்தி எனக்குத் தெரியாவா...? எல்லாரும் திண்ட பொறகு கடைசியில தானே அவளுக்கு சாப்பாடு குடுக்கிய. சரி சரி அத உடுவோம். ஒரு நல்ல பெருநாளைக்கு மட்டும் சரி புதிய உடுப்பு உடுத்து சந்தோஷமாக ஈச்சட்டுமே...! பாவம் தானே அவளுக்கும் ஆசைகள் ஈச்சும் தானே! ரமீஸா எத்தீன் மாதிரி. அவளுக்கு நாங்க அநியாயம் செய்யப் படாது. யோசிச்சிப் பாருங்கோ. எங்கட ரெண்டு புள்ளைகளயும் அல்லா வழப்பமில்லாத புள்ளைகளாகத் தந்தீச்சி. இதுவும் அல்லாட கோபமோ... தாருக்குத் தெரியும்..." என்று அவர் கூறியதும் அவள் அதற்கு மேல் பேசாது அடங்கிப் போனாள்.

அவர்கள் அவளைப் பட்டினி போட்டு வதைக்காவிட்டாலும், இரும்பைச் சூடாக்கி உடம்பிலே வைத்துக் கொடுமை செய்யாவிட்டாலும் கூட அந்த அடிமை வாழ்க்கை அவளுக்குப் பிடிக்கவேயில்லை. அந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு பிள்ளைகளும் இவள் மீது மிகவும் அன்பு காட்டினார்கள். அது கள்ளமில்லாத அன்பு. தாத்தா... தாத்தா... என்று அவளை உரிமையுடன் அழைத்தார்கள். அவளுடனே தூங்கினார்கள். அந்தப் பிள்ளைகளுடன் இருக்கும் பொழுதுகளும், அவர்களுக்குப் பணி செய்யும் நேரங்களுமே அவளுக்குப் பிடித்தமான, ஆறுதல் தருகின்ற நேரங்களாகும். சொல்லப் போனால் அந்த ஜீவன்களுக்காகவே அவள் வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என்பது தான் உண்மை.

பல நேரங்களில் முகம் தெரியாத அவள் பெற்றோரையும், உடன் பிறப்புக்களையும் நினைத்துப் பார்க்கும் போது அவள் இதயமே வெடித்து விடும் போல் இருக்கும். இது வரை அவளைப் பார்க்க யாருமே வந்ததில்லை. அவர்களைப் போய்ப் பார்க்க ஆசைப்பட்டுக் கேட்டாலும் அந்த ஆசையையும் அவர்கள் நிறைவேற்றவேயில்லை.

அது ஒரு ஞாயிற்றுக் கிழமை. நிசார் வெளியே போயிருந்தார். பரீதா முன் ஹாலில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள். ரமீஸா உள்ளே வேலையாக இருந்தாள். திடீரென்று அங்கே ஓடி வந்த பரீதா அவளை இழுத்துப் பொய்,

"ரமீஸா நான் கதவத் தொறக்கும் வரைக்கும் பேச்சு, மூச்சுக் காட்டாம இந்த ரூமுக்குள்ளே இருச்சோனும்" என்று கூறி கதவை மூடி விட்டுப் போய் விட்டாள். அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவளுக்கு எதுவுமே புரியவில்லை. பரீதா முன் பக்கம் யாருடனோ பேசுவது அவளுக்குத் தெளிவாகக் கேட்டது.

"மிச்சம் கஷ்டப்பட்டுக் கொண்டு தான் இந்த எடத்தத் தேடிக் கண்டு புடிச்சி வந்த. ஏன்ட மகள் சொகமா ஈச்சியா? அவவ கொஞ்சம் பாத்துட்டுப் போகத் தான் நான் வந்த." இது ஒரு ஆண் குரல்.

"அவ நல்லாத் தான் ஈச்சிய. அவவ படிச்ச வெச்சோம். எங்கட புள்ள மாதிதான் நாங்க அவவ வெச்சீச்சிய. அவக்கு ஒவ்வொரு மாசமும் பேங்குல சல்லியும் போடிய. இப்ப அவ ஊட்டுல இல்ல. ஏன்ட மூத்த மகளோட கொழும்புல ஈச்சிய..." இது பரீதா.

"நல்ல சந்தோசம். மகளுக்கு கல்யாணம் ஒன்டும் பேசல்லயா?" இது ஆண் குரல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்ப கல்யாண வயசு தான். மாப்புள பாத்துக் கொண்டு தான் ஈச்சிய. கல்யாணத்துக்கு ஒங்களுக்கு செல்லிய. கட்டாயம் வாங்கோ..."

"நான் கட்டாயம் வாரன் மெடம். ஏன்ட புள்ள நல்லா சந்தோசமாக ஈந்தாச் சரி. அப்ப நான் போறன்..." கூறி விட்டு விடை பெற்றார் அவர்.

அவர்களின் பேச்சுக்குக் காது கொடுத்துக் கொண்டிருந்த ரமீஸாவுக்கு எல்லாமே புரிந்து விட்டது. வந்திருந்தவர் தனது தந்தை தான் என்பதை ஊகித்த போது அவள் கவலைகள் எல்லை மீறின. அவள் கண்கள் கண்ணீரை வடித்தன. உள்ளமோ பாச உணர்வுகளால் துடித்துக் கொண்டிருந்தது. அவளுக்குத் தலை வலித்தது. மயக்கம் வருவது போல் இருந்தது. மெதுவாக எழுந்து நின்று ஜன்னலினூடாக பார்வையை வீசினாள். அங்கே வீதியில் ஏமாற்றம் நிறைந்த தளர்ந்த நடையுடன் வயோதிபர் ஒருவர் சென்று கொண்டிருந்தார்.

ஓடிப் போய் அவரைக் கட்டி அணைத்து "வாப்பா" என்று கதறியழ வேண்டும் போல் இருந்தது அவளுக்கு. இருந்தாலும் அந்தச் சிறைப் பறவையால், கூண்டுக் கிளியால் அந்த அறையை விட்டு நகரவே முடியவில்லை. தந்தை சென்று மறையும் வரை கண்ணீருடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தவள், ஒரே ஒரு தடவையாவது பெற்ற தந்தையின் முகத்தைக் கூடப் பார்ப்பதற்கு பாக்கியமில்லாத தனது துர்ப்பாக்கியத்தை நினைத்து ஜன்னலிலே தலையை மோதிக் கொண்டாள்.

சில நிமிடங்களில் எதுவும் நடக்காதது போல் பரீதா வந்து கதவைத் திறந்தாள்,

"மெடம்... இங்க வந்து ஒங்களோட பேசினது தாரன்...?" கேட்டு விட்டாள் ரமீஸா.

"ஓ... அதா... அதெல்லாம் உனக்கு எனத்துக்கன்...? முஸாபர் ஒத்தர் வந்துட்டுப் போன... அது தான்..." சமாளித்தாள் பரீதா.

"மெடம்... வந்துட்டுப் போனது ஏன்ட வாப்பா தான். நீங்க பேசியத்தையும் நான் கேட்டுக் கொண்டு தான் இருந்த. மெடம்... ஒங்களுக்கெல்லாம் கல்புல ஈரமேயில்லையா...? மொகமே தெரியாத ஏன்ட வாப்பாவ ஒரே ஒரு தரமாவது பாக்க என்ன உட்டீச்சேலும் தானே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன்ட மனசுல ஈச்சிய கவல ஓங்களுக்குத் தெரியுமா...?" என்று கேட்கும் போது உடைந்து போனாள் ரமீஸா. முகத்தை மூடிக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள் அவள்.

"இங்க பாரு ரமீஸா... வாப்பாவப் பாக்கத்துக்கு ஒன்ன உட்டிருந்தா நீ வாப்பாவோட போக அடம் புடிச்சியோண்டு. இல்லாட்டி வாப்பா ஒன்னக் கூட்டிக் கொண்டு போரோண்டு. அதுக்காகத் தான் அப்பிடி ஒன்ன மறச்சி வெச்ச." சமாளித்தாள் பரீதா.

ஒரு வருடம் கழிந்து விட்டது. இப்போதெல்லாம் நிசார் அடிக்கடி நோய்வாய்ப்படலானார். தொழிலிருந்து ஓய்வு பெற்று வீட்டிலே இருக்கலானார். ஒரு நாள் ரமீஸாவைப் பக்கத்தில் அழைத்த அவர்,

"என்ன மன்னிச்சிடும்மா... மகள் நானும் தெரிஞ்சோ, தெரியாமலோ பல விஷயத்துலயும் ஒனக்கு அநியாயம் செஞ்சிட்டன். ஓன்ட பல உரிமைகள்ளையும் நாங்க கைவச்சி அதுகள் ஒனக்குக் கெடச்சாமச் செஞ்சீட்ட. ஓன்ட வாப்பாவுக்குக் குடுத்த எந்த வாக்கையும் நாங்க நிறைவேத்தல்ல. அடிப்படை உரிமையான படிச்சிய உரிமையைக் கூட ஒனக்கு நாங்க தரல்ல. சின்ன வயசுலயே ஒரு வேலக்காரியாக உன்ன நடத்தினோம். எல்லாத்துக்கும் மேலாக ஓன்ட குடும்பத்துல இருந்து ஒன்னப் பிரிச்சதுமல்லாம அவங்கள ஒனக்குக் காட்டித்தரவுமில்ல. ஓன்ட உழைப்புக்கு எந்தக் கூலியும் தரல்ல. கல்யாணம் முடிச்சி புள்ள குட்டிகளோட சந்தோசமாக வாழ வேண்டிய உனக்கு நாங்க அந்தக் கடமய செய்யல்ல. எங்கட சுயநலத்தத் தான் நாங்க முழுக்க முழுக்க பாத்தோமே தவிர ஒன்னப்பத்தி கொஞ்சமாவது யோசிச்சவேயில்ல. இந்தாம்மா... இது... ஓன்ட பேங்க் புத்தகம். ஏன்ட காணியொன்ட வித்து அந்தச் சல்லிய நேத்துத் தான் ஓன்டபேருல போட்டன். இந்தாம்மா... இதுல உன் வாப்பாவோட பேரு, எட்ரஸ் ஈச்சி. எப்பிடியாவது நீ ஓன்ட வாப்பாக்கிட்ட, குடும்பத்துல சேந்திரு..." என்று கூறியவாறு அவளின் கைகளில் வங்கிக் கணக்குப் புத்தகத்தையும் தந்தையின் முகவரியையும் கொடுத்தார் அவர். மிகவுமே மகிழ்ந்து போனாள் ரமீஸா. எப்படியாவது தந்தையைக் கண்டு அவருடன் சேர முடியும் என்ற நம்பிக்கை அவளை சந்தோசப்பட வைத்தது.

நாட்களின் நகர்விலே திடீரென்று வந்த இருதய வருத்தம் நிசாரை அல்லாஹ்விடம் அழைத்துச் சென்று விட்டது. தலைவனை இழந்த குடும்பம் தள்ளாடி நின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்கள் சில கடந்தன. அன்று பரீதா வீட்டில் இருக்கவில்லை. அவளை சந்திப்பதற்காக அயலில் உள்ள பெண் ஒருத்தி கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். கதவு வெளிப் பக்கம் பூட்டப்பட்டிருந்ததால் திறக்க முடியவில்லை. எனவே ஜன்னலருகில் நின்று கொண்டே அந்தப் பெண் ரமீஸாவுடன் கதைக்கத் தொடங்கினாள். அந்தப் பெண்ணுடன் பல தடவைகள் அவள் கதைத்திருந்ததால் அவளை ரமீஸாவுக்கு மிகவும் பிடித்திருந்தது. மிகவும் நம்பக் கூடிய பெண்ணாகவும் அவள் இருந்ததால் தன்னைப் பற்றிய விபரங்களையும், வாப்பாவைக் காண்பதற்கு வழி கிடைத்திருப்பதையும் அவளிடம் மனம் திறந்து கூறினாள் ரமீஸா. அதற்கு அவள்,

"ஒங்கட கத ரொம்பப் பரிதாபமாக ஈச்சி. ஏன்ட ஹஸ்பன் மனித உரிமைகள் ஆணைக்குழுவில தான் வேல செய்த. ஒங்களப் பத்திய விபரங்கள இந்த ஆணைக்குழுவுக்கு தெரியப்படுத்தினா நிச்சயமாக ஒங்களுக்கு நியாயம் கெடச்சும், இந்தச் சிறைல இருந்து விடுதலையும் கெடச்சும்" அவள் கூறி முடித்த போது மிகவும் மகிழ்ந்து போனாள் ரமீஸா.

"தாத்தா... இந்த உதவிய எனக்கு செஞ்சி தாங்கோ... உசிருள்ளவரைக்கும் ஒங்கள நான் மறக்கியல்ல." கண்கள் கலங்க நாத்தழுதழுக்க அவளின் கரங்களைப் பற்றிய படியே கூறினாள் ரமீஸா.

சில தினங்கள் கடந்தன. அது ஒரு பகல் வேளை. பரீதாவின் வீட்டுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பணி பரியும் சிலர் வந்திருந்தார்கள்.

"மெடம் நாங்க ஒங்க வீட்டுல இருக்கிற ரமீஸா சம்பந்தமாக வந்திருக்கோம். அவ சம்பந்தமான எல்லா விபரமும் எங்களுக்குத் தெரியும். ஒரு அனாதைய, ஒரு அப்பாவிய நீங்க நடத்தின விதம் அநியாயமானது. அவவ உரிய எடத்துல சேக்குறதுக்காகவும், ஒங்க மேல்ல நடவடிக்கை எடுக்கிறதுக்காகவும் தான் நாங்க வந்திருக்கிறோம்." என்று ஒருவர் விபரம் கூறிய போது அதிர்ந்து நின்றாள் பரீதா. குற்ற உணர்வோடு அவள் கூனிக் குறுகியபடி நின்றிருந்தாள்.

"சேர்... மெடம் மேல்ல எந்த நடவடிக்கையும் எடுக்க வேணாம். இந்த பேங் புத்தகம் சேர் மௌத்தாக முன்னால எனக்கிட்ட தந்தது. இதிலுள்ள சல்லி ஒரு சதமும் எனக்கு வேணாம், அது அந்த ரெண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளகளுக்கும் ஈச்சட்டும். என்ன ஏன்ட வாப்பாக்கிட்ட சேத்தாப் போதும்." கண்ணீருடன் வேண்டி நின்றாள் ரமீஸா.

"சரி நீங்க ரெடியாகுங்கோ. இன்டைக்கே ஒங்கள வாப்பாக்கிட்ட ஒப்படைக்கிறோம்." என்று முடிவாகக் கூறினார் வந்தவர்களில் ஒருவர். மனம் நிறைந்த சந்தோசத்துடன் புறப்படத் தயாராகினாள் ரமீஸா. எதுவும் பேச சக்தியற்று மௌனமாய் நின்றிருந்தாள் பரீதா.

ஏதோ நினைத்துக் கொண்டவளாய் ரமீஸா உள்ளே ஓடினாள். அங்கேயிருந்த அந்த இரண்டு பிள்ளைகளையும் வாரியணைத்து முத்தமிட்டாள். அவர்களிடம் கையசைத்து கண்ணீருடன் விடை பெற்றாள். வந்தவர்களுடன் கேட் வரை புறப்பட்டு வந்தவள், அதற்கு மேல் ஒரு அடியும் வைக்க முடியாமல் அங்கேயே நின்று விட்டாள். அவள் மனதில் இனம் புரியாததோர் போராட்டம். இதயம் வெடித்து உயிரே போய்விடும் போல் இருந்தது அவளுக்கு. விம்மலுடன் அவள் வாயில் இருந்து வார்த்தைகள் வெளியாகின.

"சேர் என்ன மன்னிச்சிக் கொங்கோ... என்னால இந்த ஊட்ட உட்டு அந்தப் புள்ளைகள உட்டுட்டு வர ஏலா சேர். ஏன்ட உசிர் இருச்சும் வரைக்கும் நான் அவங்களோட இருந்து அவங்களுக்கு சேவ செய்யோணும்..." என்று அழுதழுது அவள் முடிவாகக் கூறிய போது அனைவரும் அதிர்ந்து தான் போனார்கள்.

இத்தனை நேரமும் நிலத்தைப் பார்த்தவாறு நின்றிருந்த பரீதா அதிர்ச்சியோடு நிமிர்ந்தாள். அவள் உள்ளம் உருகி கண்களின் வழியே கண்ணீராய் வழிந்தது. ஒரு தாய்க்குரிய பாச உணர்வோடு ரமீஸாவை ஆரத் தழுவிக் கொண்டாள் பரீதா. மற்றவர் உரிமைகளைப் பறிப்பது, துஷ்பிரயோகம் செய்வது பாரதூரமான குற்றம் என்பதை இனியாவது பரீதா உணர்வாளா???

**2011 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் பாணந்துரை "ஜனஸம் சதய" நடத்திய சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்ற கதை**

**2013 ஆம் ஆண்டில் சாகித்திய விழாவில் இரண்டாவது பரிசு பெற்ற கதை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயமே பதில் சொல்....!

கிராமத்தின் ஒதுக்குப்புறமாக உள்ள அந்த மலைப் பிரதேசத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில வீடுகள். அந்த மேட்டு நிலத்திலுள்ள சில காணித் துண்டுகளை ஊர்ப்பள்ளி வாசல் நிர்வாகம் வீடில்லாத மக்களுக்காக சில வருடங்களுக்கு முன் வழங்கியது. அவர்களும் தத்தமது வசதிகளுக்கேற்ப சின்ன வீடுகளையும் குடிசைகளையும் அமைத்து அந்த இடத்திலேயே வாழ்ந்து வருகிறார்கள்.

அங்கே ஒரு வீடு மட்டும் வித்தியாசமாகத் தெரிகிறது. அது வீடா? அல்லது சிறு பிள்ளைகளின் விளையாட்டு வீடா என தீர்மானிக்க முடியாத நிலை. நான்கு கம்புகளை நட்டி கூரையிலே ஓலைக் கிடுகுகளும் ஓரிரு தகரங்களும் பரத்தி வைக்கப்பட்டிருந்தன. கல் சுவருக்குப் பதிலாக பொலிதீனாலும், சாக்குகளாலும் மறைக்கப்பட்டிருந்தது. வரவேற்பறை, படுக்கையறை, சமையலறை எல்லாமே ஒரே இடமாக இருந்தது. ஆக மொத்தம் இருபது அடி நீளமும் பதினைந்தடி அகலமும் கொண்ட இருப்பிடமே அது. அந்த வீட்டுக்குள் (?) ஒரு மூலையில் ஒரு கயிற்றுக்கட்டில் காணப்பட்டது. மற்றப்படி தளபாடங்கள் எதுவுமில்லை. இன்னொரு மூலையில் ஒரு கொடி கட்டப்பட்டு அதில் அவர்கள் பாவிக்கும் பழைய உடுப்புக்கள் தொங்கின. வீட்டுக்கு வெளியே தண்ணீர் குடம், சட்டிபானைகள் என்று சில பொருட்கள். அந்த வீட்டைப் பார்த்தால் அதில் வாழும் குடும்பம் வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கி அவதிப்படும் நிலை எவருக்கும் இலகுவில் புரிந்து விடும்.

அந்தக் குடும்பத்தின் தலைவன்தான் பரீத். அவன் மனைவி மர்யம். அவர்களுக்கு இரண்டு ஆண்களும் மூன்று பெண்களுமாக ஐந்து பிள்ளைகள். மூத்த பெண் வயதுக்கு வந்து ஐந்து ஆண்டுகள். மற்றவர்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் பள்ளி செல்பவர்கள். அவர்களில் சிராஜ் இந்த முறை க.பொ.த சாதாரண தர பரீட்சை எழுத இருப்பவன்.

வாப்பா பரீத் கூலி வேலை செய்பவன். ஒரு நாள் வேலை இருந்தால் மூன்று நாட்களுக்கு எதுவும் இருக்காது. எனவே அவனின் உழைப்பு அவர்களின் வயிற்றைக் கழுவுவதற்கு பெரிதும் உதவவில்லை. எனவே மர்யம் மலைக்குக் கீழே உள்ள ஓரிரண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளுக்குப் போய் வேலை செய்துவிட்டு அவர்கள் தரும் பணத்தையும், மிஞ்சிய உணவுகளையும், பழைய உடுப்புக்களையும் கொண்டு வந்து தன் செல்வங்களுக்குக் கொடுத்து மகிழ்வாள். இதுதான் அவர்களின் அன்றாட வாழ்க்கை.

நோன்பு மாதமும் ஆரம்பமாகி விட்டது. அரைப்பட்டினியுடனும், நோன்புக் கஞ்சியின் உதவியுடனும் அத்தனை நோன்புகளையும் அவளும் பிள்ளைகளும் பிடித்து விட்டார்கள். பரீத் மட்டும் இடைக்கிடையே நோன்பு பிடிப்பான்.

அன்று பகல் மூன்று மணியிருக்கும். முற்றத்து மர நிழலில் நிலத்திலே உட்கார்ந்தவாறு படித்துக் கொண்டிருந்தான் சிராஜ். அவனருகே வந்த மர்யம்,

"மகன் மூனு மணியாகிட்டுது. இப்பவே கஞ்சிக்குப் போங்கோ. சொணங்கினா கஞ்சி ஈக்காது இன்டக்கி கொஞ்சம் கூடுதலா வாங்கிக் கொண்டு வாங்கோ. சஹறுக்கு ஆக்குறதுக்கு அரிசி, கறி இல்ல. கஞ்சக் குடிச்சாவது நோம்பு புடிச்சோனும். சுருக்கப் போங்கோ மகன்" அவசரப்படுத்தினாள்.

குடும்பத்தின் நிலை தெரியாதவனா அவன்? குடும்பத்தை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டுமென்ற எதிர்பார்ப்புடனும், கடமையுணர்வுடனும் தானே அவன் முயற்சித்துப் படித்துக் கொண்டிருக்கிறான். தாயின் பேச்சுக்கு அடிபணிந்த அவன் உடனே எழுந்து நின்றான்.

"உம்மா கவலப்பட வாணாம். இந்தக் கஷ்டமெல்லாம் கொஞ்ச நாளக்கித்தான். நான் சோதினேல பாசாகி ஒரு தொழில் செய்யத் தொடங்கிட்டா அதுக்குப் பொறகு நீங்க கஷ்டப்படவே தேவல்ல. எனக்கு துவா செய்ங்கும்மா" என்று கூறியவன் தாய் கொடுத்த கஞ்சி வாளியை எடுத்துக் கொண்டு கீழே இறங்கினான். மர்யம் தன் சேலைத்தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

இப்போது நோன்பு காலமாதலால் வீடுகளில் மர்யத்துக்கு அவ்வளவாக வேலையுமில்லை. இடைக்கிடைதான் போவாள். எனவே வழமையான வருமானமும் இப்போது இல்லை. அன்று வேலைக்காக ஒரு வீட்டுக்கு போயிருந்தாள். வேலை முடிந்து வரும்போது அந்த வீட்டுப் பெண் பழைய உடுப்புக்கள் சிலவற்றையும், நூடில்ஸ் பக்கட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றையும் இவளுக்குக் கொடுக்க, அதை எடுத்துக் கொண்டு வந்து நோன்பு திறந்து உண்பதற்காக சமைத்து வைத்தாள்.

அன்று வேலைக்குச் சென்ற பரீத் ஒரு வேலையும் கிடைக்காததால் அலைந்து திரிந்து விட்டு மாலையில் வீடு திரும்பிக் கொண்டிருந்தான். ஒரு கடை முன்பாக ஊர் வம்பு அளந்து கொண்டிருந்த சில உதவாக்கரைகள் அவனை அழைத்து,

"ஆ... பரீது... இன்டக்கி ஒனக்கு நல்ல வாசிதான். பொண்ஜாதி பெரிய பார்சல் ஒன்ட தூக்கிக் கொண்டு போன. தார்தாரும் சாப்பாட்டு சாமான்களக் குடுத்தீக்கும். சுருக்கா ஊட்டுக்குப் போ. பொண்ஜாதி நல்ல சாப்பாடு செஞ்சி வச்சீக்கும்..." என்று அவனைத் தூண்டிவிட அந்த ஏழை உள்ளம் ஒரு கணம் சந்தோசத்தால் மகிழ்ந்து போனது.

"அல்லாஹ்...! இன்டக்காவது ஒரு நல்ல சாப்பாடு தின்னேலும். புள்ளைகளும் ஒழுங்கான தீனத்திண்டு எவளவு காலமீக்கும்?" என நினைத்துக் கொண்டு வீட்டை நோக்கி அவசரமாக நடையைக் கட்டினான்.

மாலை மங்கி மணி ஏழாகிவிட்டது. அந்த நானூறு கிராம் நூடில்ஸும் ஏழு பேரின் பசிக்குப் போதாத நிலையில் அதனை பிள்ளைகளுக்கு பகிர்ந்து கொடுத்து, கணவனுக்கும் கொஞ்சம் தட்டில் போட்டு வைத்து விட்டு தண்ணீரைக் குடித்தாள் மர்யம்.

அதோ பரீத் வந்து விட்டான்.

"மர்யம் சரியான பசியா ஈக்கு. சாப்பாட்டப் போடுங்கோ" என்று கூறியவன் தரையில் வசதியாக உட்கார்ந்து கொண்டான். கணவனுக்கென்று வைத்திருந்த உணவுத்தட்டை அவன் முன் வைத்தாள் அவள். உண்மையில் அந்த உணவு அவனின் கால் வயிற்றுப்பசிக்கும் போதாதுதான். வீதியில் வைத்து அந்த ஊர்பளாய் பேர்வழிகள் சொன்னது அவனது நினைவுக்கு வர, இயற்கையிலேயே கோபக்காரனான பரீதுக்கு அந்தக் கொஞ்சச் சாப்பாட்டைக் கண்டதும் கோபம் தலைக்கேறியது.

"அடியே... சின்னப் புள்ளக்கி மாதிரி தட்டுல கொஞ்சத்தப் போட்டு வச்சீரியே இது ஏன்ட பசிக்கு போதுமாடீ?" எனக் கோபத்தோடு எழுந்து நின்றான் அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த ஒரு நூட்லிஸ் பக்கட்டத்தான் அந்த ஊட்டுல தந்தாங்க. கொஞ்சம் பொறுங்கோ. சஹறுக்குத் தின்ன அடுப்புல சோறு வெந்து கொண்டீர. அது வெந்துட்டா தின்னேழும் இப்ப இதத் தின்னுங்கோ" என ஆதரவாகக் கூறினாள் அவள்.

"அடியே... கதையா உடுற... எனக்கிட்டயே ஒழிச்சி மறச்சப்பாக்குறியா...? இன்டக்கி வேல செஞ்சிட்டு வார நேரம் பெரிய பார்சலெல்லாம் கொண்டுவந்தியாமே...? அந்த சாமானால ஆக்கி வச்ச வேண்டியதுதானே...!" எனக் கோபத்தில் வெடித்தான் அவன்.

"மகள்ட வாப்பா... நான் கோந்தது நீங்க நெனச்சிற மாதிரி சாப்பாட்டுச் சாமானல்ல. எல்லாம் பழைய உடுப்புகள்தான்" அவள் கூறி முடிக்குமுன் அவன் கைகள் அவள் கன்னத்தில் பதிந்தன. அவன் வெறி இன்னும் அடங்கவில்லை.

"எனக்கிட்டியே பொய் செல்றியா?" எனக் கத்திக் கொண்டே அவளை நெருங்கிய அவன் மர்யத்தின் தலைமுடியைப் பிடித்து அவளை மீண்டும் தாக்கினான்.

இத்தனையும் பார்த்துக் கொண்டு நின்ற மூத்த மகள் பொறுமையிழந்து,

"வாப்பா.. நிப்பாட்டுங்கோ. உம்மா இன்டக்கி கொண்டு வந்தது சாப்பாட்டு சாமானல்ல. இந்த பழைய உடுப்புகளத்தான் கொண்டு வந்தா" என்று கூறியவள், அவன் காலடியில் அந்த உடுப்புக்களை கொண்டு வந்து போட்டாள். இப்போது அவன் வெறியும், கோபமும் தீர அப்படியே மலைத்து நின்றான். மனைவியை வேதனையோடு திரும்பிப் பார்த்தான். அவள் முகத்தை மூடிக் கொண்டு அழுது கொண்டிருந்தாள்.

"இந்தச் சாப்பாட்டு விசயத்துக்காக நா இப்படி முரடனாக நடந்துட்டனே! இதுக்கெல்லாம் காரணம் எங்கட வறுமதானே!" என விரக்தியோடு சிந்தித்தவன், தனது போர்வையை எடுத்துக் கொண்டு வெளியே சென்று விட்டான்.

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. இரவு பத்து மணியையும் தாண்டி விட்டது. இஷா தொழுகைக்காக பள்ளிவாசலுக்குச் சென்றிருந்த சிராஜ் தராவீஹ் தொழுகையையும் தொழுது விட்டு பயானுக்கும் இருந்து விட்டு வீடு வந்து சேர்ந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்மா... வாப்பா எங்கும்மா?" வாப்பாவை அங்கு காணாத மகன் இப்படிக் கேட்க,

"வாப்பா கோவிச்சுக் கொண்டு போன. வெளிய ஈரோண்டு பாருங்க மகன்" என்றாள் மர்யம்.

"உம்மா... இது நோம்பு காலமலியா வாப்பா கோபப்பட்டாலும் நீங்கதான் கொஞ்சம் பொறுமையா ஈக்கோணும். சரி சரி நீங்க சோத்தப் போடுங்கோ. நான் வாப்பாவக் கூட்டிக் கொண்டு வாறேன்" என்று கூறிய மகன் கற்பாறையை நோக்கிச் சென்றான். அங்கே சென்றவன் அப்படியே அதிர்ந்து நின்றான். பக்கத்தில் இருந்த மரத்தில் வாப்பாவின் உடல் தொங்கிக் கொண்டிருந்தது.

"ஏன்ட வாப்போ...!" என்று கதறியவாறு கத்தினான் சிராஜ். அவனின் அலறல் கேட்டு ஓடிவந்த மர்யம் அந்தக் காட்சியைக் கண்டு மயங்கிச் சரிந்தாள். சில நிமிடங்களில் அந்த இடத்தில் மக்கள் கூடி விட்டார்கள்.

பரீது தூக்குப் போட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டான் என்ற தகவல் பொலிஸ் நிலையத்துக்குத் தெரிவிக்கப்பட்டது. சிறிது நேரத்தில் பொலிஸாரும் திடீர் மரண விசாரணை அதிகாரியும் அந்த இடத்துக்கு விரைந்தார்கள். அந்த இடத்தையும், வீட்டையும் கண்ட அவர்கள் நிலைகுழைந்து போனார்கள். பிள்ளைகள் என்ற பெயரில் நின்றிருந்த அந்த ஐந்து எழும்புக் கூடுகளையும் கண்ட போது, அந்தக் குடும்பத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த வறுமையின் தாக்கம் எல்லோருக்குமே புரிந்தது. அவர்களின் உள்ளங்கள் உருகிப் போயின.

திடீர் மரண விசாரணை அதிகாரியான முபாரக்கினால் அந்தக் குடும்பத்தின் அவல நிலையையும், வறுமை நிலையையும் ஜீரணிக்க முடியவில்லை. அவர் உள்ளம் அமைதியாக அழுதது. அந்தச் சிறிய நிலப்பரப்புள்ள வீட்டுக்குள் ஏழு ஜீவன்கள் பசியோடும், பட்டினியோடும் இத்தனை நாளும் வாழ்ந்திருக்கிறார்கள். எங்கள் சமூகத்தின் கண்களுக்கு ஏன் இந்த ஜீவன்கள் தென்படவில்லை?

இந்த ஊரில் பணக்காரர்கள் நிறையப் பேர்கள் வாழ்கிறார்கள். பள்ளிவாசல் நிர்வாகம் வேறு. த.:.வாப்பணி என்றும், இயக்கப்பணி என்றும் கூறிக் கொண்டு திரிபவர்கள், கொள்கைகளால் முரண்பட்டுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாலும் முப்பெரும் இயக்கங்கள், அவற்றின் மாதர் அமைப்புக்கள், சங்கங்கள், சமூக சேவை அமைப்புக்கள் என்றெல்லாம் ஊரில் நிறையவே இருந்தும் என்ன பயன்...? இந்த ஏழைகளை இவர்கள் யாருமே கண்டு கொள்ளவில்லையே! இல்லை, கண்டும் காணாதது போல் இருந்து விட்டார்களா? இதற்கு மேல் அவரால் சிந்திக்க முடியவில்லை. இதயம் வலித்தது.

இது புனித ரமழான் மாதம். ஏழைகளும் உண்டு புசித்து சந்தோஷமாக நோன்பை நோற்க வேண்டும் என்பதற்காக சக்காத், சதகா என்று வசதி படைத்தவர்களால் அள்ளி வழங்கப்படும் மாதம். இந்த சக்காத்தும் சதகாவும் உரிய முறையில் தேவை உடையவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் இப்படியான அவலங்கள் நடந்திருக்குமா என்ன? இதற்கெல்லாம் யார் பொறுப்பு? நிச்சயமாக இந்த நிகழ்வுக்கு சமுதாயம் பதில் கூறியே ஆக வேண்டும்.

பொலிஸாரும், அதிகாரி முபாரக்கும் விசாரணைகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

"சரி உம்மா... ஒங்கட மாப்புள ஒங்கள அடிச்சிட்டு இரவு ஏழு மணிக்கு வெளிய போனாரு. இரவு பதினொரு மணிக்குத்தான் அவர்ட தற்கொல விசயம் தெரியும். இவ்வளவு நேரமும் நீங்க அவரத் தேடிப்பாக்கல்லயா?" என்ற கேள்வியைக் கேட்டார் முபாரக்.

"வழமையாகவே இப்பிடி நடக்குறதுதான். அவர் போர்வைய எடுத்துக் கொண்டு போனா வீட்டுக்கு பின்னால் உள்ள காட்டு மரங்களோட ஈர கல்லுக்குத்தான் போவாரு. வீட்டுல இந்த சின்ன எடத்துல ஏழு பேருக்கும் தூங்குறதுக்கு எடம் போதா. அதுவும் புள்ளைகளும் விபரம் தெரிஞ்சவங்க. இரவைக்கு அவர் பெட்சீட்டை எடுத்துக் கொண்டு அங்க போவாரு. கொஞ்ச நேரத்துல புள்ளைகள் தூங்கினதும் நானும் அந்தக் கல்லுக்குப் போவேன்..." அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. அவளையும் மீறி அழுகை பொத்துக் கொண்டு வந்து விட்டது. தன்னை சுதாகரித்துக் கொண்ட அவள் தொடர்ந்தாள்.

"தொர... இத்தன நாளும் நாங்க ரெண்டு பேரும் வாழ்ந்தது, குடும்பம் நடத்தினது எல்லாமே இந்த காட்டுக்கு நடுவுல ஈர கல் மேட்டுலதான். பெட்சீட்ட எடுத்துக் கொண்டு அவர் போனது தூங்குறதுக்குத்தான் என்டு நெனச்சேன். இப்பிடி தூக்குப் போட்டுக் கொள்ளுவாரென்டு நான் நெனச்சவே இல்ல" என்று கூறி விட்டு முகத்தை மூடிக் கொண்டு கேவிக்கேவி அழுதாள் மர்யம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விடயத்தை கேட்ட போது அவருக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. ஒரு கணம் இரத்தமெல்லாம் உறைந்துவிட உணர்வுகளற்று நின்றிருந்தார் அவர்.

பேரும் புகழோடும், பணத்தோடும், பகட்டோடும் வாழுகின்ற மக்களுக்கு மத்தியில் வாழும் இந்த குடும்பத்தின் வறுமை, இயலாமை யாருடைய கண்களுக்கும் தென்படவில்லையா? அல்லது சமுதாயத்தின் கண்களே குருடாகிப் போனதா?

பாதுகாப்பான இருப்பிடமில்லாத ஒரு குடும்பம், அதுவும் காட்டுக்குள் வாழ்கின்ற அவலம் மனிதாபிமானமுள்ள எந்த மனிதனாலும் ஜீரணிக்க முடியாதது.

எங்கள் சகோதரர்கள் தமது வீடுகளை இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் செலவழித்து, ஆடம்பரமாக கட்டுகிறார்கள். இந்த நோன்பு காலத்தில் ஆயிரக்கணக்கில் செலவழித்து ஆடம்பரமான முறையில் இப்தார் நிகழ்வுகளை அமர்க்களமாக நடத்துகிறார்கள். இவர்கள் மனம் வைத்தால் மர்யத்தைப் போன்ற பலரின் வாழ்விலும் ஓரளவாவது விடிவைக் காணலாம் தானே.

விசாரணைகள் முடிந்து பிரேத பரிசோதனைகளுக்குப் பின் மையித்தை அடக்கம் செய்வதற்காக பள்ளிவாசலுக்கு கொண்டு வந்திருந்தார்கள். ஜனாஸா தொழுகைக்காக கூடியிருந்தவர்கள் கூட்டம் கூட்டமாக, அங்குமிங்குமாக, குழுக்களாக தங்களுக்குள்,

“இது தற்கொலை செய்து கொண்ட ஜனாஸா. தற்கொலை ஹறாம்தானே, இதை தொழ வைக்கேலுமா? எங்கட மையவாடியில் அடக்கேலுமா?” என்று பேசிக் கொண்டிருந்தார்கள். இதனை அவதானித்த பள்ளிவாசல் கதீப் பேசத் துவங்கினார்,

“சகோதரர்களே! இங்கே கொஞ்சம் அவதானியுங்கள். இந்த ஜனாஸாவை தொழுவிக்கும் விடயத்திலும், அடக்கம் செய்யும் விடயத்திலும் நாம் கருத்துக்களை தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக இந்த நிலைக்கு அவர் வருவதற்கு காரணமே வறுமைதான் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். எமது சமுதாயத்தில் உள்ள தனவந்தர்கள் மற்றும் தாங்கள் பேருக்கும் புகழுக்குமாக செலவு செய்யும் போது இவர்களைப் பற்றி யாரும் சிந்திக்கவில்லை. இவரின் மரணத்துக்குக் காரணமே இந்த சமுதாயம் கண்மூடித்தனமாக இருந்ததுதான் என்பதை நாம் மறந்து பேசக் கூடாது. இதற்கு நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருமே பதில் சொல்ல வேண்டும். இப்பொழுது கருத்து வேறுபாடுகளை விட்டு விட்டு அந்த குடும்பத்தையும், அவ்வாறுள்ள ஏனைய குடும்பங்களையும் இனங்கண்டு உதவி உபகாரங்களையும் செய்ய முன்வாருங்கள். இந்த ரமழானிலிருந்தாவது நாம் சமூக உணர்ச்சியோடும் மனித நேயத்தோடும் வாழ பழகிக் கொள்வோம்" என்று அனைவரின் பேச்சுக்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்தார் கதீப். ஒருவாறு மையவாடியில் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டு விட்டது.

* * *

ஒருமாத காலமாக நோன்பிருந்த மக்கள் நோன்புப் பெருநாளை மகிழ்ச்சியோடு கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த மகிழ்ச்சி மர்யத்துக்கும், பிள்ளைகளுக்கும் எட்டாக்கனியாகி விட்டது. அவர்கள் ஆளுக்கொரு மூலையில் சோகத்தோடு உட்கார்ந்திருக்கிறார்கள்.

இப்போது வாப்பாவும் உயிரோடு இல்லை. உம்மாவும் நான்கு மாதங்களுக்கு மேல் "இத்தா" கடமையை நிறைவேற்ற வேண்டும். எனவே அவளின் உழைப்புக்கூட குடும்பத்துக்கு இல்லை என்றாகிவிட்டது. இந்த நிலையில் குடும்பத்துக்காக உழைக்க மர்யத்தின் மூத்த மகள் வீட்டு வேலைக்குப் போக வேண்டுமா? அல்லது சிராஜ் படிப்பை இடைநடுவில் விட்டு விட்டு வேலைக்குப் போக வேண்டுமா? இந்த குடும்பத்தின் துயர் துடைக்க, வறுமையைப் போக்க நீ என்ன செய்யப் போகிறாய்...? சமுதாயமே பதில் சொல்...!

**நன்றி தினகரன் வார மஞ்சரி பெருநாள் சிறப்புச் சிறுகதை 19.08.2012**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயை தத்தெடுத்தவர்கள்...!

அது பார்வையாளர்களுக்கான நேரம். அந்த அரசாங்க வைத்தியசாலை கலகலத்துக் கொண்டிருந்தது. நானும் எனது கணவரின் வருகையை எதிர்பார்த்தவளாக வாசலை நோக்கியபடி காத்திருக்கிறேன். வைத்தியசாலை சிற்றூழியர்கள் தள்ளு வண்டியிலே வயதான ஒரு பெண்ணைத் தள்ளிக் கொண்டு வந்து எனது பக்கத்துக் கட்டிலில் படுக்க வைத்துவிட்டுச் செல்கிறார்கள். அந்த வயதான தாய் வருத்தம் காரணமாக முனகியபடியே இருக்கிறாள்.

"பாவம் வயசான காலத்துல இவங்க புள்ளைங்க தாய வீட்டுல வச்சிக்காம வயோதிபர் இல்லத்துல கொண்டு போய் சேத்துட்டாங்க. அங்க பாத்ரூமுல வழுக்கி விழுந்து கால் ஒடஞ்சி போச்சு..." யாரோ ஒரு பெண் கூறுவது என் காதுகளில் விழுகிறது. அந்த அம்மாவை ஒரு முறை திரும்பிப் பார்க்கிறேன்.

வயது எழுபது இருக்கலாம். உழைத்து உழைத்து ஓடாகிப் போன தோற்றம். மெலிந்த உடல். கட்டிலில் இருந்து அவளால் எழ முடியவில்லை. என்னைப் பக்கத்தில் அழைத்து சாடையால் குடிக்க ஏதாவது கேட்கிறாள். மெதுவாக எழுந்து போய் எனக்காக ஊற்றி வைத்திருந்த பாலை அந்த அம்மாவுக்குப் பருக்கி விடுகிறேன். நன்றியோடு புன்னகைக்கிறாள் அவள். சில நாட்களில் எமக்குள் ஒரு நெருக்கமான உறவு உருவாகி விடுகிறது. அந்த அம்மாவின் காலுக்கு 'பென்டேஜ்' போட்டு விட்டார்கள். இருந்தும் அந்தத் தாயால் எழவோ, நடக்கவோ முடியவில்லை. படுக்கையிலே இருக்கின்ற அவளுக்கு என்னாலான உதவிகளையெல்லாம் செய்து வருகிறேன். இதனால் அந்த ஜீவனுக்கு என்மேல் பாசமும், பற்றும் ஏற்பட்டு விட்டது.

அந்தப் பெண் வைத்தியசாலைக்கு வந்து இரண்டு வாரங்கள் கழிந்து விட்டன. இத்தனை நாளும் அவளைப் பார்ப்பதற்காக யாருமே வரவில்லை. மெதுவாக அவளை நெருங்கிய நான்,

"பாப்பாத்தியம்மா... ஒங்களப் பாக்க இதுவரைக்கும் யாருமே வரலயே. ஒங்களுக்கு புள்ளைங்கள் இல்லையா?" என் மனதில் தோன்றியதை இப்படிக் கேட்டு விட்டேன். சில நிமிடங்கள் பதிலேதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறாமல் மௌனமாக இருந்த அவள் கண் கலங்கிய படி என்னைப் பார்த்தாள். பின் விரக்தியாகச் சிரித்தபடி,

"தாயே... ஒன்னப் பாத்துப் பழகியதும் என் கவலையெல் லாத்தையும் ஒன்கிட்டச் சொல்லனும் போல இருக்கும்மா. ஒன்னப்போல நாலு பொம்புளப் புள்ளைங்களையும், மூனு ஆம்புளப் பசங்களையும் பெத்தவ நான். என் ஊட்டுக்காரர் புள்ளைங்க சின்னவங்களா இருக்கும் போதே மரத்திலிருந்து விழுந்து செத்துப் போயிட்டாங்க. அதுக்கப்புறம் இந்தப் புள்ளைங்களுக்கு அம்மா வாகவும், அப்பாவாகவும் இருந்து ரெம்பக் கஷ்டப்பட்டு அதுகள வளத்து ஆளாக்கினேன். தோட்டத்துல வருஷக்கணக்கா ஓய்வில்லாம ஒழச்சி எம்புள்ளைங்கள வளத்தேன். அவங்க எல்லாருக்கும் கலியாணமும் பண்ணி வச்சேன். இப்ப எல்லாருமே நல்லாத்தான் இருக்காங்க. இருந்தாலும் இந்த வயசு போன காலத்துல என்ன வச்சிப் பராமரிக்க யாருக்குமே மனசு வரல்ல. என்னக் கொண்டு போய் முதியோர் இல்லத்துல சேத்துட்டாங்க. என்ன செய்றது? இந்தத் தள்ளாத வயசுல அவங்க நிழல்ல வாழவோ, பேரன் பேத்திகள கொஞ்சவோ நான் கொடுத்து வைக்கல்லம்மா..." என்று தன் சோகக்கதையைக் கூறிய பாப்பாத்திக் கிழவி முந்தானையால் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

கிழவியின் கதையைக் கேட்ட போது எனக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. நானும் வயிற்றில் ஆப்ரேஷன் ஒன்றுக்காகவே அனுமதிக்கப் பட்டிருக்கிறேன். இன்னும எனது ஆப்ரேஷன் நடைபெறவில்லை. நாட்கள் சில கழிந்து விட்டன. இப்போது பாப்பாத்திக் கிழவியின் நிலைமை தேறி இருந்தது. கட்டிலில் இருந்து எழவும், மெதுவாக அடிவைத்து நடக்கவும் அவளால் முடிந்தது.

அன்று ஒரு ஞாயிற்றுக் கிழமை மதிய நேரம். வாட்டில் பார்வையாளர்கள் நிரம்பி வழிந்தனர். பாப்பாத்திக் கிழவியின் கட்டிலைச் சுற்றி சிலர் நின்றிருந்தனர். அது எனக்கு அதிசயமாக இருந்தது. அவர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். கணவனும், மனைவியும், பிள்ளைகள் இரண்டு பேரும் வந்திருந்தார்கள். அவர்களைப் பார்த்தால் படித்தவர்களாகவும், வசதி படைத்தவர்களாகவும் தோன்றியது. பெண்ணின் கணவன் கிழவியின் தலையைத் தடவியபடி மிகவும் அன்பாகவும், ஆதரவாகவும் அவளோடு கதைத்துக் கொண்டிருந்தான். அந்தப் பெண் கிழவியைக் கட்டிப்பிடித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தம் கொடுத்து விட்டு, அவளைத் துப்பரவு செய்து, உடைகளை மாற்றி, தலையை வாரிப் பின்னல் போட்டு பவுடரும் பூசி விட்டாள். கையோடு கொண்டு வந்திருந்த பழக் கூடையையும், பொருட்களையும் கட்டிலில் வைத்து விட்டு அந்தக் கணவன் டாக்டரைக் காண சென்று விட்டான். பதினைந்து வயது மதிக்கத்தக்க அவர்களின் பெண் பிள்ளை பாலைக் கரைத்து பாப்பாத்தியம்மாவுக்குப் பருக்கி விட்டாள். பத்து வயது மதிக்கத்தக்க பையன் பழங்களை வெட்டித் தட்டில் போட்டுக் கிழவியிடம் கொடுத்தான். அவர்களின் அன்பையும், அத்தனை உபசரிப்புக்களையும் கண்கலங்கியபடி அனுபவித்துக் கொண்டிருந்தாள் பாப்பாத்திக் கிழவி.

இந்தக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. கிழவியின் சந்தோஷம் எனக்கு மிக்க ஆறதலைத் தந்தது. இருந்தாலும் பாப்பாத்தியம்மாவோ ஒரு தமிழ்ப் பெண். வந்திருப்பவர்களோ பெரும்பான்மை இனத்தவர்கள். இவர்களுக்குள்ளே என்ன உறவு...? என்ற கேள்விக்கு விடை தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தேன் நான்.

சில நிமிடங்களில் அவர்கள் புறப்படத் தயாரானார்கள். கிழவியின் கையிலே பண நோட்டுக்களைக் கொடுத்து விட்டு மருத்துவத் தாதியைச் சந்தித்து,

"இந்த அம்மாவுக்கு டிகட் வெட்டியதும் எனக்கு டெலிபோன் பண்ணுங்க. நான் அவவ அழைத்துப் போக வருவேன்" என்று கூறி விட்டு அவர்கள் விடை பெற்றார்கள்.

கிழவியின் முகத்தைப் பார்க்கிறேன். இதுவரை காணாத சந்தோஷமும், ஆறுதலும் அவள் முகத்தில் திரையிட்டிருந்தது. அவளின் கட்டிலை நெருங்கினேன். என்னைக் கண்டதும் பழங்களையும், பிஸ்கட்களையும் எனக்கு நீட்டியவள் தன் பொக்கை வாய் திறந்து சிரித்தாள்.

"அம்மா... இப்ப வந்துட்டுப் போனாங்களே அவங்க யாரு...?" எனது நீண்ட நேரக் கேள்விக்கு விடை தேடும் பணியில் நான்.

"அதுவாம்மா... அது நான் பெறாத என் புள்ள. தோட்டத்துல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செஞ்சி ஓய்வடைஞ்சதும் அந்த அம்மா வீட்டுலதான் நான் வேல செஞ்சேன். அவங்க வீடு டவுனுல இருக்கு. அவங்க ரெண்டு பேருமே அரசாங்க உத்தியோகம் பாக்குறவங்க. ரெண்டு பேருக்குமே அம்மா, அப்பா கிடையாது. அதனால அவங்க வீட்டுப் புள்ளைகள கவனிக்குறதுக்காக அங்க வேலக்குச் சேந்தேன். சும்மா சொல்லப்படாது அந்த மகாராசி என்ன ஒரு வேலக்காரியா நடத்தவே இல்ல. பெத்த தாயப் போலத்தான் என்னப் பாத்தாங்க. பிள்ளைகளும் என்ன 'ஆச்சி... ஆச்சி...' என்று சுத்திச் சுத்தி வந்தாங்க. அவங்க வேல விட்டு வரும் வரைக்கும் சின்னதுகள நான் பத்திரமாக பாத்துக் கொள்வேன். சமையல் வேலைகளையும் செய்வேன். என் கெட்ட காலம் அவங்க ரெண்டு பேரும் புள்ளைங்களையும் எடுத்துக் கொண்டு வெளிநாட்டுக்குப் போயிட்டாங்க. அவங்க வீட்டுச் சாவியை என்கிட்டத் தந்து அவங்க வரும்வரைக்கும் அங்கே எனக்கு இருக்கச் சொன்னாங்க. அந்தப் பெரிய வீட்டுல தனியா என்னால் இருக்கேலா என்டு சொல்லிட்டு தோட்டத்துல இருக்கிற என் புள்ளைங்களுக்கிட்ட போனேன். ஒரு வருஷம்கூட அவங்க என்ன வச்சுப் பாக்கல்ல. கவனிக்கல்ல. முதியோர் இல்லத்துல சேத்துட்டாங்க. நாலஞ்சு வருஷமா நான் அங்கதான் இருக்கேன்" கூறி விட்டு பெருமூச்சு விட்டாள் அவள்.

"அதுசரி... நீங்க இப்போ சுகமில்லாம இங்கே இருக்கிறது அவங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்கிறேன்.

"அவங்க ரெண்டு நாளக்கி முன்னாலதான் இலங்கைக்கு வந்தாங்களாம். உடனே தோட்டத்துக்குப் போய் என் புள்ளைங்களுக் கிட்ட என்ன விசாரிச்சிருக்காங்க. அவங்கதான் நான் முதியோர் இல்லத்துல இருக்கிறதா சொல்லியிருக்காங்க" என்று விபரம் கூறினாள் பாப்பாத்தியம்மா.

சில நாட்களில் எனக்கும் ஆப்ரேஷன் செய்து விட்டார்கள். அன்று பாப்பாத்திக் கிழவி என் கட்டிலுக்கருகே வந்து கண்ணீருடன்,

"மக... எனக்கு டிகட் வெட்டிட்டாங்க. நீங்க எனக்கு செஞ்ச ஒதவிகள நான் மறக்க மாட்டேன். நீங்க நல்லா இருப்பீங்க." என்று என்னை வாழ்த்தி விட்டு தனது மூட்டை முடிச்சுக்களை கட்டத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினாள். அதோ அந்தக் குடும்பத்தினரும் அந்தக் கிழவியை நோக்கி வருகிறார்கள்.

"அம்மா... ரெடியா?" என்று கேட்டுக் கொண்டே வந்த அந்தப் பெண் கையோடு கொண்டு வந்திருந்த புதிய உடுப்புக்களை கிழவிக்கு அணிவித்து விடுகிறாள். கிழவியின் பொதிகளை பிள்ளைகள் தூக்கிக் கொள்கிறார்கள். அந்தத் தம்பதியர் பாப்பாத்தியம்மாவை தாங்கிப் பிடித்தபடி நடக்கிறார்கள்.

"அம்மா... என்ன இப்படியே அந்த முதியோர் இல்லத்துலே கொண்டு போய் விட்டுடுங்க." என்று கிழவி கூற,

"என்ன சொல்றீங்க அம்மா. இனிமே எங்க பாப்பாத்தியம்மா அந்த இல்லத்துக்கு வர மாட்டாங்க. இனிமேல் எப்பவும் எங்ககூட எங்க வீட்டுலதான் இருப்பாங்க என்று நான் சொல்லிட்டு வந்துட்டேன்."

இந்த வார்த்தைகளைக் கேட்டபோது பாப்பாத்தியம்மா மட்டுமல்ல அங்கிருந்தவர்களும், நானும் அப்படியே மலைத்துப் போய் உணர்ச்சிப் பிழம்பாக நின்றிருந்தோம்.

குழந்தைகளை தத்தெடுத்தவர்களை, தத்தெடுப்பவர்களை நான் கண்டிருக்கிறேன். ஆனால், ஒரு தாயையே தத்தெடுத்தவர்களை முதல் தடவையாக இன்றுதான் காண்கிறேன்.

இனம், மதம், மொழி என்ற வேறுபாடுகளைக் கடந்து மனித நேயத்தோடு அந்த ஏழைத்தாயை அரவணைத்தபடி அவர்கள் செல்வதை வைத்தகண் வாங்காமல் விழிகளில் இருந்து நீர் வடிய பார்த்துக் கொண்டே இருக்கிறேன்.

**2013 ஆம் ஆண்டு மலை நாட்டு எழுத்தாளர் மன்றம் நடத்திய தேசிய சிறுகதைப் போட்டியில் சிறப்புப் பரிசு பெற்ற கதை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தைத் தொலைத்தவர்கள்...!

புனித ரமழான் மாதம் ஆரம்பமாகி விட்டது. ளுஹர் தொழுகைக்காகப் பள்ளிவாசலுக்குப் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தார் மஹ்மூத் மௌலவி. உள்ளே வேலைகளில் மூழ்கியிருந்த அவர் மனைவி ஸல்மா,

"இங்க பாருங்கோ... இண்டைக்கு அந்தக் கடிதத்த பள்ளி நிர்வாகத்திட்ட கட்டாயம் குடுங்கோ...." என ஞாபகப்படுத்தி விட்டு நிமிர்வதற்குள் மழை கொட்டத் தொடங்கி விட்டது.

மழை வந்துவிட்டால் அவர்கள் மிகவும் சிரமப்படுவார்கள். வீட்டின் பல இடங்களில் ஓட்டை கூரையிலிருந்து தண்ணீர் ஒழுகத் தொடங்கி விடும். தண்ணீர் விழும் இடங்களைப் பார்த்துப் பார்த்து அந்த இடங்களில் பாத்திரங்களை வைத்துக் கொண்டிருந்தாள் அவள்.

மஹ்மூத் மௌலவி பக்கத்துக் கிராமத்துப் பள்ளிவாசலிலே இமாமாகப் பணி புரிகிறார். ஒரு வருடம் இரண்டு வருடமல்ல பத்து வருடங்களுக்கும் மேலாக அதே பள்ளிவாசலிலே தான் வேலை. இருந்தாலும் அவரின் சம்பளம் என்னவோ பதினைந்தாயிரம் ரூபாய்கள் தான். விலைவாசிகள் இமய மலையளவு உயர்ந்துள்ள இந்தக் காலகட்டத்தில் அந்தச் சம்பளத்திற்குள் வாழ்க்கை நடத்துவதென்பது பெரிய சாதனை தான்.

அவருக்கு நான்கு பிள்ளைகள், மூத்தவர்கள் பெண்கள். இளையவர்கள் ஆண்கள். மூத்தவர்கள் பாடசாலை வாழ்க்கையை முடித்து விட்டு கல்யாணத்திற்காகக் காத்திருக்கிறார்கள். ஆண் பிள்ளைகள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சின்னச் சம்பளத்திற்கள் முழுக் குடும்பத்தினரின் வயிற்றைக் கழுவுவதற்கும், பிள்ளைகளின் படிப்புச் செலவுகளுக்கும், மனைவியினதும், அவரினதும் வைத்தியச் செலவுகளுக்கும் அவர் ஒரு பெரும் போராட்டமே நடத்த வேண்டியிருக்கிறது.

தனது சம்பளத்தைக் கூட்டித் தரும்படி பலமுறை அவர் பள்ளி நிர்வாகத்தினரிடம் கேட்டும் பயன் இல்லை. அவர்களைப் போன்று இவர்களுக்கும் வாய்கள், வயிறுகள், தேவைகள், ஆசாபாசங்கள் இருக்கின்றன என்பதை அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை.

பிள்ளைகள் இருவரும் கல்யாண வயதில் இருக்கிறார்கள் என்பதை மனைவி ஸல்மா சாடைமாடையாகவே நினைவு படுத்துவாள். பிள்ளைகளுக்கு மாப்பிள்ளை தேடுவதற்கு முன் அந்தப் பழைய வீட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரளவாவது திருத்தியமைக்க வேண்டிய தேவை இருக்கிறது. அவர் சிறுவனாக இருந்த போது அவரது தந்தையால் கட்டப்பட்ட வீடு அது. வீட்டின் சுவர்கள் உடைந்தும், வெடித்தும் வீட்டுக் கூரைத்தகரங்கள் பழமையடைந்தும் உடைந்தும், ஓட்டை விழுந்தும் காணப்படுகின்றன. அந்த வீட்டில் கை வைப்பதானால் சில இலட்சம் ரூபாய்களாவது தேவைப்படும். பெரும் குழப்பத்தில் இருந்தார் மௌலவி.

குடும்பத்தில் நான்கு பெண்களுக்கு அண்ணனாய் தனி மகனாய்ப் பிறந்தவர்தான் அவர். தந்தையின் மறைவுக்குப் பின் தாயையும் நான்கு சகோதரிகளையும் பராமரித்து ஒருவர் பின் ஒருவராக தங்கைகளுக்கு மாப்பிள்ளை தேடி மணமுடித்துக் கொடுத்து விட்டு நிம்மதியாக நிமிரும் போது அவருக்கு வயது முப்பத்தைந்தையும் தாண்டி விட்டது. அவரும் ஒரு ஏழை அனாதைக்கு வாழ்வு கொடுத்து இப்போது அவருக்கும் நான்கு பிள்ளைகள். அவரின் பெண் பிள்ளைகளும் கல்யாணத்துக்காக காத்திருக்கிறார்கள். நாட்கள் தான் எவ்வளவு வேகமாக ஓடிவிட்டன..?.

மழை நின்று விட்டது. பள்ளிக்குப் புறப்படத் தயாரானார் மௌலவி. ஒருமுறை ஜுப்பா பக்கட்டில் வைத்திருந்த அந்த விண்ணப்பக் கடிதத்தை எடுத்து ஒரு முறை படித்துக் கொண்டார்.

கணம் பள்ளிவாசல் நிர்வாகத்தினருக்கு!
உங்களது நிர்வாகம் கூட்டு ஸக்காத் மூலம் ஒவ்வொரு ரமழானிலும் மக்களின் தேவைகளுக்கேற்ப அந்த ஸக்காத் நிதியை பகிர்ந்தளிப்பது மிகப் பெரிய நன்மையான காரியமாகும்.

நானும் இந்தப் பள்ளிவாசலில் பல வருடங்களாக பணி புரிந்து வருவதை அறிவீர்கள். எனது வீடு திருத்தியமைக்கப்பட வேண்டிய கட்டாய நிலையில் இருக்கிறது. அதற்கான வசதிகள் என்னிடமில்லை என்பதை தாங்களும் அறிவீர்கள். எனவே உங்களது ஸக்காத் நிதியத்திலிருந்து ஒரு தொகையைத் தந்து உதவி செய்யும்படி வேண்டிக் கொள்கிறேன்.

கடிதத்தைப் படித்து பத்திரமாக வைத்துக் கொண்டு புறப்பட்டார் மௌலவி.
நேரம் சென்று கொண்டிருந்தது. கடிதத்தை வைத்துக் கொண்டு தடுமாறிக் கொண்டிருந்தார் அவர்.. கடிதத்தைக் கொடுப்பதா வேண்டாமா....? என அவர் மனம் போராடிக் கொண்டிருந்தது. தன்மானம் அவரைத் தடுத்துக் கொண்டிருந்தது. அப்போதுதான் அங்கே வந்த முஅஸ்ஸின்,

"என்ன ஹஸரத் ஒரு மாதிரியா கொழப்பத்தோட இருச்சிய.....! காரணம் கேட்டார்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அது வந்து... பள்ளீட ஸக்காத் சல்லீலிருந்து வீட்டைத் திருத்த உதவி கேட்டு கடிதம் ஒன்று குடுக்கத்தான்....” என விவரம் கூறினார்.

“கட்டாயம் குடுங்கோ. பத்து வருஷத்துக்கும் மேலாக இந்தப் பள்ளீல வேல செய்த. இந்த மக்களின் ஹயாத்து மௌத்து எல்லாத்துலயும் கலந்து கொள்ளிய. இந்த ஸக்காத்த எடுக்கத்துக்கு ஒங்களுக்கு தகுதியும் ஈச்சி. கட்டாயம் ஒங்களுக்கு அது கெடச்சும்.... கடிதத்த இன்டைக்கே பள்ளி செகட்ரிக்கிட்ட குடுங்கோ....” ஆர்வத்தையும் நம்பிக்கையையும் ஊட்டினார் முஅஸ்ஸினார். சில நிமிடங்களில் கடிதம் கைமாறிவிட்டது.

ஊர் தனவந்தர்களிடமிருந்து வருடம் முழுவதும் பெறப்பட்ட ஸக்காத் பணத்தை ஒன்றாகத் திரட்டி ஸக்காத் பெற தகுதியான மக்களுக்கு நோன்பு காலத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இது பல வருடங்களாக இப்பள்ளிவாசலில் நடைமுறைப் படுத்தப்படும் விடயமாகும். இந்த ஸக்காத்தைப் பெறுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படும் போது வசதியில்லாதவர்கள் தத்தமது தேவைகளை முன்வைத்து விண்ணப்பிப்பார்கள். இந்த ஸக்காத் பணம் மூலம் கற்கும் மாணவர்கள், கடனாளிகள், வீடற்றோர், நிலமற்றோர், தொழில் இல்லாதோர், வீடுகளில் திருத்த வேலைகள் செய்வோர், குமர்ப் பிள்ளைகளை வைத்துக் கொண்டு சிரமப்படுபவர்கள். எனப் பலதரப்பட்ட தேவையுடைய வறுமைப்பட்ட பயனாளிகளும் பயன் பெற்று வருகிறார்கள்.

இந்த ஸக்காத்தானது தனவந்தர்களிடம் வந்து தங்கியிருக்கின்ற ஏழைகளின் சொத்தாகும். இது தகுதியுள்ள ஏழைகளுக்கே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். சில இடங்களில் இந்த ஸக்காத் பணத்தை வேறு விடயங்களுக்கும், கொள்கைகள், இயக்கங்கள் சம்பந்தப்பட்ட வேலைகளுக்கும் பயன் படுத்துவதைக் காண்கிறோம். இது கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும்.

ஸக்காத் பணத்தை ஒன்று திரட்டி வழங்குபவர்களின் அசமந்தப் போக்குகள் காரணமாக ஸக்காத் பெறத் தகுதியானவர்கள் இனங்காணப்படாமையும், புறக்கணிக்கப்படுவதையும் சில நேரங்களில் காண முடிகிறது. ஒருவர் வசதியுடையவரைப் போல் வெளித் தோற்றத்தில் தென்பட்டால் அவருக்கு ஸக்காத் வழங்கப்படுவதில்லை. அதே போல் எல்லோருடைய ஸக்காத்தையும் ஒன்று திரட்டி வழங்கும் போது இப்படிப்பட்டவர்களுக்கு கூட்டு ஸக்காத்தும் கிடைப்பதில்லை, தனிப்பட்டவர்களின் ஸக்காத்தும் அவருக்குச் சேர்வதில்லை. எனவே ஸக்காத்தை வசூலித்து வழங்குவோர் தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் போது மிகவும் கவனமாக செயல்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் நகர்ந்தன. ஒருநாள் மௌலவியை நெருங்கிய நிர்வாகச் செயலாளர்,

"ஹஸரத் இன்டைக்கு தராவீஹுக்குப் பொறகு நாங்க கொஞ்சபேரு ஒங்கட ஊட்டப் பாக்க வாற" என்ற தகவலை அவரிடம் சொல்ல அவர் மகிழ்ந்து போனார். இந்த ஸக்காத் பணம் கிடைத்தால் எப்படியும் வீட்டை ஓரளவுக்காவது திருத்தி விடலாம் என்ற நம்பிக்கை அவருக்கு.

அன்று தராவீஹ் தொழுகையின் பின் பள்ளி நிர்வாகத்தைச் சேர்ந்த நான்கைந்து பேர் அவரின் வீட்டுக்கு வந்தார்கள். அவர்களை வரவேற்று உபசரித்தார் மௌலவி. வந்தவர்கள் வீட்டை உள்ளேயும், வெளியேயும் சுற்றிப் பார்த்தார்கள். வீட்டின் கோலத்தைக் கண்டதும் அவர்களின் மனம் நெகிழ்ந்திருக்க வேண்டும்.

"ஹஸரத்துக்கு வீட்டச் செஞ்சி கொள்ள சல்லியக் குடுக்கோமா... இல்லாட்டி சாமான்கள வாங்கிக் குடுக்கோமா..." இப்படி அவர்களுக்குள் பேசிக் கொள்வது அங்கே வந்த மௌலவியின் காதுகளுக்குள் விழுந்தது. தன் வீடு முழுமையாக திருத்தப்பட்டு விட்டது போன்ற உணர்வுடன் உளம் பூரித்தார் மௌலவி. வந்தவர்கள் விடை பெற்று போய் விட்டார்கள்.

"வந்தவங்க ஊட்டப்பாத்துட்டு எனத்தியன் சென்ன....? ஒதவி கெடச்சுமா...?" ஆவலுடன் கேட்டாள் மனைவி ஸல்மா.

"அவங்கட பேச்சப் பாத்தா கட்டாயம் ஸக்காத் சல்லி கெடச்சும் போலத்தான் ஈச்சி. இனி ஊட்டப்பத்திக் கவலப்படத் தேவல்ல. மூத்தவளுக்கு மாப்புள பாக்கத் தொடங்கோணும்" கணவனின் இந்தப் பேச்சைக் கேட்டதும் ஸல்மாவுக்கும் நிம்மதியாக இருந்தது.

அன்று ஒரு திங்கட் கிழமை. பள்ளிவாசல் பரபரப்பாக காணப்பட்டது. பள்ளி நிர்வாகத்தினர்கள் அங்கு கூடியிருந்தார்கள் அப்போது தான் அங்கே வந்த முஅஸ்ஸின்,

"ஹஸரத் இன்டைக்குத் தான் ஸக்காத் சல்லி குடுக்கத் தெரிவு செய்யப்பட்வங்களுக்கு அதக் குடுத்துக் கொண்டீச்சியாங்க." என்று கூறிய போது மௌலவிக்குக் குழப்பமாக இருந்தது.

"நானும் எப்லிகேஷன் குடுத்த. அவங்க ஏன்ட ஊட்டையும் பாத்துட்டுப் போன. ஆனா ஸக்காத் சல்லி குடுக்கிய விஷயத்தப் பத்தி எனக்கிட்ட ஒன்டுமே செல்லலியே" கவலைப்பட்டார் மௌலவி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி சரி... அன்ன செகட்ரி இந்தப் பக்கம் வாற. போங்கோ... பெய்த்து ஒங்கட விஷயத்தப் பத்திக் கேளுங்கோ." என அவரை அனுப்பிவிட்டு, அவரைப் பின் தொடர்ந்தார் முஅஸ்ஸின். செகட்ரியை நெருங்கிய மௌலவி தயக்கத்துடன்,

"ஹாஜி... நானும் ஏன்ட ஊட்டுத் திருத்த வேலைக்காக ஸக்காத் சல்லி கேட்டு எப்லிகேஷன் தந்த. நீங்களும் ஊட்ட வந்து பாத்த. ஏன்ட விஷயமாக ஒன்டும் செல்லலியே....!" கேட்கக் கூடாததை கேட்டது போல் கூச்ச உணர்வோடு கேட்டார் மௌலவி.

"அன்டைக்கு எங்கட போட் மீட்டிங்ல ஒங்கட ஊட்டு விஷயத்தப் பத்திப் பேசின. அதுக்கு கொஞ்ச பேர் ஒத்துவரல்ல. நீங்க இந்த ஜமாத் அல்ல அடுத்த ஊர் ஜமாத் என்டதால இந்த ஸக்காத் சல்லிய ஒங்களுக்கு குடுக்கேலா என்டு முடிவாயிட்ட..." என்று கூறி விட்டு அந்த இடத்தை விட்டு மெதுவாக நகர்ந்தார் நிர்வாகச் செயலாளர்.

அவர் கூறுவதைக் கேட்ட போது தலை சுற்றிக் கொண்டு வந்தது மௌலவிக்கு. அரனாயக்கா மண்சரிவில் வீடுகளும், மனிதர்களும் புதையுண்டது போல் அவரின் வீடு பற்றிய கனவுகளும், எதிர் பார்ப்புக்களும் மண்ணுக்குள் புதையுண்டன.

"எங்கட மௌலவி இந்த பள்ளி ஜமாத்தைச் சேர்ந்தவரல்ல அடுத்த ஊர்தான். இருந்தாலும் பத்து வருஷத்துக்கும் மேல இங்கதானே வேல செஞ்சிக் கொண்டீச்சிய. அப்பிடிப்பட்ட ஏழ மனுஷனுக்கு இந்த ஸக்காத்துல பங்கில்லயாம். இவங்கட கல்புல ஈரமே இல்லையா? என்ற முஅஸ்ஸினாரின் ஆதங்கம் அவர் காதுகளில் விழுகிறது.

**நன்றி விடிவெள்ளி 24.06.2016**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொப்பி ...

அஸர் தொழுகைக்காக பள்ளிவாசலில் அதான் சொல்லப்படுகிறது. தொப்பியைத் தலையில் போட்டுக் கொண்டு பள்ளிவாசலுக்குச் செல்கிறார் உனைஸ். சிறுவர்கள், வாலிபர்கள் பலரும் பெரியவர்கள் சிலரும் தலையில் தொப்பியின்றித் தொழுவதைக் கண்டபோது அவருக்கு கவலையாக இருந்தது. சிலர் தலையைச் சொறிந்து கொண்டும், அடிக்கடி பிடித்துக் கொண்டும், கனைத்துக் கொண்டும் தொழுதார்கள். ஓரிருவர் தொப்பியை இடுப்பில் மடித்து வைத்துக் கொண்டும் தொழுதார்கள். இது சில காலங்களாகவே கண்டு கவலை கொள்ளும் விடயம்தான். தொழுது முடிந்ததும்,

"ஏ... வாப்பா... நீங்கெல்லாம் தொழத்துக்கு தொப்பி போடியல்ல. ஒங்களுக்கிட்ட தொப்பி இல்லயா...?" என்று அவர் கேட்டபோது பக்கத்தில் இருந்த அவர் நண்பன் இஸ்மத்,

"இவங்களுக்கிட்ட தொப்பி இல்லாமில்ல. பாவம் இவங்களுக்கெல்லாம் தல தான் இல்ல. தல இல்லாட்டி இவங்க எங்கயன் தொப்பி போடிய?" என்று விகடமாகக் கூறிய போது அவர்களுக்கு வெட்கமாக இருந்தது.

"மாமா" தொப்பி போடியது ஒன்டும் சுன்னத் இல்லயே" என்று ஒருவன் சொன்னது அவருக்கு கவலையைத் தந்தது. தொப்பி பற்றிய முக்கிய விடயங்கள் ஒன்றும் இவங்களுக்குத் தெரியவில்லை என்பது அவருக்கு புரிந்தது. அதை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு பேசினார்.

"தொப்பி, தலப்பா எல்லாம் எங்கட இஸ்லாமிய அடையாளங்கள் மகன். முஸ்லிம்கள காபிர்களுக்கிட்ட ஈந்து உலகத்துக்கு பிரிச்சிக் காட்டியது தொப்பியும், தலப்பாவும் தான். எல்லா நபிமார்கள்டயும் உடுப்புத்தான் இதுகள். இதுட ஆரம்பம் உலகத்துக்கு முதல் மனுஷன் ஆதம் (அலை) அவர்களுக்கிட்ட ஈந்து தான் தொடங்கின. தொப்பி போடியது எங்கட நாயகம் (ஸல்) அவங்க கவனமெடுத்துச் செஞ்ச கட்டாயமான சுன்னத்து. அரபு நாட்டுப் போர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்த காலங்கள்ளயும், நபிமார்களும், ஸஹாபாக்களும் தொப்பி, தலப்பா போட்டுத்தான் ஈந்தாங்கலாம். அதால நாங்க எந்த நேரமும் தொப்பி போடாட்டியும் தொழுகிய நேரம், தின்னிய நேரம், கக்கூசுக்கு, ஒன்டுக்கு ரெண்டுக்கு போற நேரம் கட்டாயம் தல மூடி ஈக்கோணும்'' என்று விபரமாகக் கூறிய போது அவர்கள் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். எந்தளவுக்கு நம்பினார்களோ தெரியவில்லை.

இஸ்லாமிய சமூகம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் அதன் தனித்துவம் பேணப்பட்டே ஆகவேண்டும். தனித்துவம் உடைகளில் பேணப்படுவது அந்தச் சமூகத்தின் தனிச் சிறப்புக்களில் ஒன்றாகும். அடுத்த மதத் தலைவர்களுக்கு உள்ள தீவிர சமூகப்பற்றும், வேட்கையும் முஸ்லிம் சமூகத்தின் தலைமைகளில் அமர்ந்திருக்கும் சில உலமாக்களுக்குக் கூட இல்லாமலிருப்பது தான் இன்றைய அவல நிலைக்குக் காரணமாகும். வெளிநாடு களிலிருந்து சில மடையர்கள் ஒரு ஹதீஸின் வியாக்கியானமாக ஒரு புதிய கண்டு பிடிப்பை அனுப்பி வைத்தால் அதையும் கூட அறைகுறையாக விளங்கிக் கொண்டு தாங்கள் தான் குர்ஆன் ஹதீஸை சரியாக ஒழுகும் மேதைகள் என்று இறுமாப்புக் கொள்வது இவர்களின் குணமாகும்.

அன்று இரவு உனைசின் நண்பன் ஒருவரின் வீட்டில் இரவுச் சாப்பாடு அனைவருக்கும் ஏற்பாடாகியிருந்தது. அவரும் அழைக்கப்பட்டிருந்தார். இஷாத் தொழுகையை முடித்துக் கொண்டு அங்கே செல்கிறார். பலரும் அங்கே உணவுண்டு கொண்டு இருந்தார்கள். அந்த இடத்தில் நண்பன் அவரை உட்கார வைத்தார். உனைஸ் உட்கார்ந்து கொண்டு உண்ணத் தொடங்கினார். அங்கே இளைஞர்கள் வெறும் தலையோடு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் உண்மையை உரைக்க வேண்டும் என்பதற்காக,

“எனத்தியன் மகன் நீங்கெல்லாம் தொப்பி பேடாம தின்னிய...? எங்கட நாயகமாங்க தொப்பி போட்டுத் தான் தின்டாம். தின்னிய நேரம் தொப்பி போட்டு தல மூடியது சுன்னத்து...'' என்று கூறிய போது ஒரு வாலிபன்,

“சும்மா... போங்கவா. நீங்க செல்லிய மாதி அவங்க தொப்பி போடல்ல...'' எனக் கூறியபோது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஓ... மகன் அந்தக் காலத்துல நான் ஈக்கல்ல தான். நீங்க அங்க மதீனால நபியாங்களோட ஈந்தாச்சும்” என்று கூறியதும் வெட்கத்தடன் அவன் அமைதியாகச் சாப்பிட்டான்.

தொப்பி அணிவதை புறக்கணித்துக் கொண்டும், தவிர்த்துக் கொண்டும் எமது ஆண்களில் பலர் இருப்பதைக் காணும் போதெல்லாம் அவருக்கு கவலையாகவே இருந்தது. சுன்னத்தான தொப்பியை தலையில் அணியாத சிலர் வெளிநாட்டவர்களும், அந்நியர்களும் அணிகின்ற பலவிதமான தொப்பிகளையும் அணிந்து கொண்டு திரிவதைக் காணும் போது அதிசயமாகத் தான் இருக்கிறது. இவர்களையெல்லாம் பார்க்கும் போது பெயரளவில் இவர்கள் முஸ்லிம்கள். ஆனால் இவர்களிடம் இஸ்லாமில்லை என்பது கவலையான விடயம் தான்.

அன்று ஊரில் தெரிந்த மனிதர் ஒருவர் மரணித்து விட்டார். மையத்தைப் பார்த்து துஆச் செய்வதற்காக அந்த வீட்டுக்குப் புறப்பட்டார் உனைஸ். ஊர் பள்ளிவாசலுக்கு இரண்டு தினங்களுக்கு முன் வந்திருந்த முஅத்தினாரும் அந்த மையத்து வீட்டுக்கு வந்திருந்தார்.

மையத்து வீட்டு முற்றத்தில் நிறையப் பேர் இருந்தார்கள். உனைஸை நெருங்கிய முஅத்தினார்,

“ஹாஜி... மௌத்தானவர் எல்லாரோடயும் நல்லம் போல. அது தான் அன்னிய ஆக்களும் மிச்சம் பேர் வந்தீச்சி” என்று கூறிய போது அவருக்குப் புதினமாக இருந்தது. அங்கு அன்னியர் யாரையும் காணவில்லை. இருந்தாலும் அவருக்குப் புரிந்து விட்டது. தொப்பியணியாது பலர் இருப்பதைக் கண்டுதான் ஊருக்குப் புதியவரான இவர் அவர்களை அந்நியர்கள் என்று நினைத்து விட்டார்.

“இங்க அப்பிடி ஒத்தரும் வந்தில்ல. எல்லாம் எங்கட ஆக்கள் தான். இப்ப இப்பிடித்தான் மிச்சம் பேரு தொப்பி போடியல்ல” என்று அவர் கூறிய போது முஅத்தினாருக்கும் வியப்பாக இருந்தது.

சில தொழிலகங்களிலும், பாடசாலைகளிலும் சீருடை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்பந்திக்கப்படுகிறது. வெளி நாட்டவர்களின் சின்னமான டையை (கழுத்துப் பட்டியை) க் கூட குர்ஆன் ஹதீஸில் ஆதாரம் தேடாமல் அணிகிறார்கள். ஆனால் முஸ்லிம்களின் அடையாளத்தை வெளிக்காட்ட வேண்டிய பள்ளிவாசல்களில் தலை திறந்து தொழுது, பிறரையும் அவ்வாறு தொழ நிர்ப்பந்திக்கின்றனர். தொப்பிக்கு கேள்விக் கனைகள் தொடுப்பது போல் தமது அலுவலகங்களில் டை அணியச் சொன்னால் அங்கு யாரும் கேள்வி கேட்க மாட்டார்கள். பயணங்கள், வைபவங்கள் எல்லாவற்றிற்கும் டை கட்டிப் போவார்கள். இவர்கள் பணம் என்றால் எதற்கும் தயார். சில பாடசாலைகளுக்கு வரும் தமது மாணவர்களைத் தொப்பி அணிய வற்புறுத்துவார்கள். ஆனால் பள்ளிவாசலுக்குத் தொப்பி அணிவதை எதிர்ப்பார்கள். அல்லாஹ்வின் மாளிகையை விட பாடசாலைதான் இவர்களுக்கு கண்ணியமாகி விட்டது.

உனைசின் ஊரிலுள்ள அவர் நண்பரான ஷியாம் சில வருடங்களாகவே தொழுவதற்குக் கூடத் தொப்பி அணிவதைக் காணமுடியவில்லை. அவன் கொஞ்சம் பிடிவாதக்காரன் தான். மார்க்க அறிவு அவனிடம் குறைவாக இருந்தாலும், நல்ல மனிதர்களை, ஆலிம்களை பின்பற்றி வாழக் கூடிய தன்மை அவனிடம் இருக்கவில்லை.

சில மாதங்களுக்கு முன் தான் அவனின் தந்தை திடீரென்று மரணமானார். பாவம் அவர். மிகவும் நல்லவர். எப்போதும் பள்ளிவாசலுக்குப் போய் தொப்பி அணிந்தே தொழுவார். பிறருக்கு உதவி வாழ்வதில் மிகவும் ஆர்வமுள்ளவராக வாழ்ந்தவர்.

அன்று ஊரில் இருந்ததால் உனைசும் மையத்து வீட்டுக்கு போயிருந்தார். ஷியாமின் தந்தையின் ஜனாஸா நல்லடக்கத்திற்காகப் பள்ளி வாசலுக்குக் கொண்டு செல்லப்பட்டது. ஜனாஸாவை தொழவைப்பதற்காக ஷியாம் தயாராயிருந்தான். அவன் தலை திறந்தே காணப்பட்டது. அவனின் அருகே வந்த மௌலவியான அவன் மாமா,

“மகன்... தலைல தொப்பிய போட்டுக் கொண்டு தொழுவீங்கோ...” அன்புடன் கூறியும் கூட அதை மதிக்காத அவன் தலையில் தொப்பியின்றி வெறுந்தலையுடனே தொழுவித்தான். இதைக் கவனித்த மனிதர்கள் பலரும் அவனை மதிக்கத் தவறிவிட்டார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஷியாமின் போக்கு உனைசுக்குப் பிடிக்கவில்லை அவனைச் சந்தித்த அவர்,

"மச்சான்... நீ செஞ்சது சரியில்ல. வாப்பாட ஜனாஸாவத் தொழுவிச்ச நேரம் தொப்பி போடாதது நல்லமில்ல. இதுக்கு பொறகு தின்னியநேரமும் தொப்பி போட்டு தல மறச்சியது ஒரு சுன்னத்துடா" என்று உனைஸ் கூறிய போது,

"அத எனக்கு நம்பேலா. மிச்சம் பேரு இப்ப தொப்பி போடியல்ல" என்று ஷியாம் கூறிய போது.

"ஷியாம்... தொப்பி போடியது ஒரு சுன்னத்து மட்டுமல்லடா. அது எங்கட நாட்டுல சட்ட அங்கீகாரம் பெறத்துக்கு எவ்வளவு தூரம் பழைய ஆக்கள் போராட்டம் செஞ்சண்டு ஒனக்குத் தெரியமா? அதப் பத்தி நான் மிச்சம் தெரிஞ்சி வெச்சீச்சி. அதக் கொஞ்சம் ஒங்களுக்கு சொல்லவா?" என்று கேட்ட போது, அவனும் தலையாட்டிவிட்டு கேட்கத் தயாரானான்.

"ஷியாம் நல்லாக் கேட்டுக்கோங்கோ. எங்கட முஸ்லிம்கள்ல மொதலாவது பட்டதாரியும், வழக்கறிஞருமான எம்.ஸி அப்துல் காதர் என்டவர் 1906 ஆம் ஆண்டு வழக்கறிஞராக தொழில் பாரமெடுத்தாராம். அவரு கோட்டும், களிசானும் உடுத்து எங்கட ஆக்கள். வழக்கமாக போடிய தொப்பியும் போட்டாராம். அந்த நேரம் எங்கட நாட்ட இங்கிலீஷ் காரர்கள் தான் ஆட்சி செஞ்சாம். மொதல் நீதவானாக ஈந்த சேர் சாள்ஸ் லயாட் என்பவரு பெரிய லீவுக்குப் பொறகு அடுத்த வருஷம் எங்கட நாட்டுக்கு வந்தாராம். ஏழு மாசமாக தொப்பி போட்டே நீதி மன்றத்துல வழக்கு பேசிய அப்துல் காதர் எப்பவும் போல கோட்டுக்குப் போன நேரம் அகங்காரம் புடிச்ச அந்த இங்கிலிஷ்கார நீதவான் அப்துல் காதருக்கு தொப்பியக் கழட்டச் செல்லி கட்டள போட்டீச்சி. இந்த அநியாயத்துக்கு அடங்காத அப்துல் காதரு எங்கட சமூகத்துக்கு இது அவமானம் என்று செல்லி கோட்டிலீந்து வெளீல வந்தீச்சி. அதுக்கு எங்கட முஸ்லிம் தலைவர்கள் இது அவருக்கு மட்டுமில்ல எங்கட முஸ்லிம் சமூகத்துக்கே வந்த அவமானம் என்று செல்லி எல்லாரும் இத எதிர்த்தீச்சி, போராடீமீச்சி. எங்கட முஸ்லிம் பெரியவங்க இந்த அநியாயமான கட்டளய இல்லாமச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யச் செல்லி இங்கிலாந்து அரசனுக்கு விண்ணப்பம் ஒன்டு அனுப்ப முடிவு எடுத்தீச்சி. இங்கிலாந்துல துருக்கித் தொப்பியோட வழக்குப் பேசிய ரபியுத்தீன் அஹமது மௌலவிய பெரிய பேச்சாளராக கூப்பிடியண்டு முடிவெடுத்தீச்சி இதுக்காக எங்கட நாட்டுல முப்பது கூட்டங்கள் நடந்தாம். தொன்னூத் தொன்பது பேர தெரிஞ்செடுத்தாம். நீதி மன்றத்துல இந்த உத்தரவ அரசன் இல்லாமச் செய்யோனுமென்டு எல்லார்ட பிரேரனையும் நிறைவேத்தப்பட்டீச்சி. இங்கிலாந்திலீந்து பதில் வாரத்துக்கு முன்னால எங்கட பெரிய நீதிமன்றம் அந்த நீதியரசர்ட உத்தரவ நீக்கிட்டு துருக்கித் தொப்பி போடறத்துக்கு எடம் கொடுத்தீச்சி" என்று கூறிய போது ஷியாம் மிக்க அதிசயத்தோடு அவரின் முகத்தைப் பார்த்தபடி கேட்டுக் கொண்டிருந்தான்.

"ஷியாம் அது மட்டுமல்ல. எங்கட கட்சீட தலைவர்களும், எங்கட அரசியல்வாதிகளும் தொழத்துக்கு மட்டுமல்லாம பார்லிமண்டுலயும் தொப்பி போட்டு பேசீச்சி. அது மட்டுமில்லாம ஊர்கள்ல நடக்கிய பங்ஷன்களிலயும் தலையில தொப்பி போட்டுக் கொண்டு பங்கு பத்தியத்த கண்டு கொண்டுதானே ஈச்சிய. இது எவளவு பெரிய நல்ல விஷயமென்" என்று உனைஸ் கூறிய விபரங்களை கேட்டு விட்டு அங்கிருந்து நகர்ந்தான் ஷியாம். இதன் பிறகாவது ஷியாமுக்கும் அவனைப் போன்றவர்களுக்கும் அல்லாஹ் கிருபை செய்ய வேண்டும் என்று மனதிற்குள் பிரார்த்தித்துக் கொண்டார் உனைஸ்.

சில வருடங்கள் சிறகடித்துப் பறந்து விட்டன. உனைஸ் சில வருடங்களாக அரபு நாட்டிலேயே தொழில் புரிந்து வந்தார். சில வருடங்கள் அங்கே உழைத்ததன் காரணமாகத் திருமணம் முடித்த மாவனல்லை மனைவியின் ஊரிலேயே வீடொன்றையும் கட்டிக் கொண்டார். சில வருடங்களுக்குப் பின் சில தடவைகள் இலங்கைக்கு வந்த போதும் அதிகமாக மனைவி பிள்ளைகளுடன் மாவனல்லை யிலேயே வாழத் தொடங்கி விட்டார். இப்போது அவர் மாவனல்லையிலேயே ஒரு கடையை நடத்திக் கொண்டிருக்கிறார். ஓரிரு தடவைகள் அவரது ஊரான தர்கா நகருக்குப் போனாலும் கூட நண்பர்களை அதிகம் சந்திக்கக் கிடைக்கவில்லை.

சில வாரங்கள் சென்றன. உனைஸின் நண்பன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்மத்திடமிருந்து ஒரு திருமண அழைப்பிதழ் தபாலில் வந்திருந்தது. அதனை ஆர்வத்தோடு படித்துப் பார்த்தார் உனைஸ். இஸ்மத்தில் இரண்டு மகன்களுமான பிலாலுக்கும், யூனுசுக்கும் ஒரே தினத்தில் திருமணமாம். உனைஸ் ஊரில் வாழும் போது அவர்கள் இருவரும் குழந்தைகளாகவே இருந்தார்கள். இப்போது வளர்ந்து விட்டார்கள். நண்பனின் பிள்ளைகளின் திருமணத்திக்கு கட்டாயம் குடும்பத்தோடு போய் வர வேண்டும் என முடிவெடுத்துக் கொண்டார் உனைஸ்.

அன்று ஞாயிற்றுக் கிழமை திருமணத்துக்காக குடும்பத்துடன் ஊருக்குப் போய்விட்டார். இஸ்மத்தின் பிள்ளைகளின் திருமணம் சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. அன்றைய தினம் தனது நண்பர்களையும், அயலவர்கள், உறவினர்கள் பலரையும் கண்டு கதைக்கக் கிடைத்தது உனைஸுக்கு உவகையாக இருந்தது.

சற்று தூரத்தில் நின்று கொண்டிருந்த ஒருவரைக் கண்ட போது உனைஸுக்கு ஆச்சர்யமாக இருந்தது. அந்த முகத்தை உற்றுப் பார்த்தார் உனைஸ். அது ஷியாம் என்பது அவருக்கு விளங்கிவிட்டது. அவனைக் கண்டதும் அவரின் மகிழ்ச்சிக்கு அளவில்லாமல் போய் விட்டது. காரணம் ஷியாம் தனது தலையில் தொப்பி அணிந்திருந்தான்.

"இப்ப அவன் திருந்திட்டான் போல ஈச்சி அல்லாட கிருபதான் இது. இப்பதான் அவனுக்கு தொப்பி போடியது சுன்னத்தென்ட விசயம் தெரியும் போல. அல்லாக்குத்தான் நன்றி செல்லோனும்" என்று ஷியாமையே பார்த்துக் கொண்டிருந்தார் உனைஸ். அப்போது அவரின் தோளைத் தொட்டது ஒரு கரம். திரும்பிப் பார்த்தார். அங்கே இஸ்மத் நின்றிருந்தான்.

"உனைஸ் எனத்தியனப்பா இன்னம் சாப்பாடு தின்னாம அங்க பாத்துக் கொண்டீச்சிய?" என்று இஸ்மத் கேட்க,

"நான் அந்த ஷியாமத் தான் பாத்துக் கொண்டீச்சிய. அவன் தொப்பி போட்டீச்சியத்த கண்டத்துல எனக்கு சந்தோசமா ஈச்சி. அவன் மிச்சம் நாளா தொப்பி போடியா?" என இஸ்மத்திடம் கேட்க,

"ஓ ஷியாம் மூணு நாலு வருஷமா தொப்பி போடிய. தொழுகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் தின்னிய நேரம் மட்டுமல்ல நாள் முழுக்க அவன் தொப்பி போடிய'' இப்படி இஸ்மத் கூறிய போது ஷியாமிடம் போய் கொஞ்சம் பேச வேண்டும் போல் இருந்தது. இஸ்மத்தையும் அழைத்துக் கொண்டு ஷியாமை நெருங்கினார் உனைஸ். அவனின் கைகளைப் பிடித்தபடி 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்று ஸலாம் கூறினார். அவனும் பதில் கூறினான். ஷியாமை நெருங்கிய இஸ்மத் அவனின் தலையிலிருந்த தொப்பியை கழற்றி கையில் எடுத்தான். ஷியாமின் தலையைக் கண்டதும் உனைஸ் அதிர்ச்சியால் அதிர்ந்து உறைந்து போனார். காரணம் ஷியாமின் தலை முழுக்க தட்டையாகவும், மொட்டையாகவும் இருந்தது.

"நான் நெனச்சிய மாதி இவனுக்கிட்ட திருத்தம் ஒன்டும் இல்ல. தலைல ஈச்சிய தட்டயயும், மொட்டயயும் மறச்சத்தான் தொப்பி போட்டிச்சிய. இது அவனுக்கு அல்லாட தண்டனையோ தாருக்கன் தெரியும்?'' என்று உனைஸ் மனதிக்குள் நினைத்த போது,

"எனத்தியன் யோசிச்சிய. ஷியாம் பாவம் தான். மூணு வருஷமா தல மொட்டதான். இப்ப தலேல கொண்டயே இல்ல. எத்தினயோ டொக்டர் மார்கிட்ட ஆயிரக் கணக்கில செலவளிச்சியும் பொரோசனம் இல்ல'' என்று விபரம் கூறினான் இஸ்மத்.

"யா அல்லாஹ்! தொப்பி போடாம ஈச்சிய எல்லாருக்கும் நல்ல திருத்தத்தக் கொடுக்கோனும். ஷியாமுக்கும் திருத்தத்த கொடுத்து அவன்ட தலைல ஈச்சிய நோயையும் சொகமாக்கோணும்'' என்று மனதிற்குள் பிரார்த்தித்துக் கொண்ட உனைஸ் உணவுன்பதற்காகத் தயாரானார்.

**நன்றி : விடிவெள்ளி 06.04.2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் பயணம்

ஹஜ்ஜுக்கான கடவுச் சீட்டை கையில் வைத்துக் கொண்டு புன்னகையோடு உட்கார்ந்திருந்தார் ராபியா உம்மா என்ற வயோதிபப் பெண். மார்க்க அறிவும், மார்க்கப் பற்றும் உள்ள நல்ல தாய் அவர். அவரின் கணவர் ஐந்து வருடங்களுக்கு முன் காலமாகி விட்டார். இவர்களுக்கு நான்கு பிள்ளைகள். இருவர் பெண் மக்கள் மற்றவர்கள் மகன்மார். எல்லோரும் திருமணம் முடித்து பிள்ளைகளோடு வாழ்கிறார்கள். சில பேரப் பிளைள்ளைகளுக்கும் திருமணம் முடிந்து விட்டது. மூத்த மகன் முஸ்தபாவுடனேயே சொந்த வீட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் அவர்.

நீண்ட காலமாகவே கணவருடன் சேர்ந்து ஹஜ்ஜுக்குச் செல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டார் ராபியா உம்மா. ஒருநாள் கணவர் காதரிடம்,

''இங்க பாருங்கோ அல்லாஹ் எங்களுக்கு நல்ல வசதிய தந்தீச்சி. சொத்து பத்து மிச்சம் ஈச்சி. அதால இந்த வருஷம் சரி நாங்க ரெண்டு பேரும் ஹஜ்ஜுக்குப் போகோணும்.'' என்று ராபியா உம்மா தனது ஆர்வத்தையும், ஆசையையும் கூறிய போது,

''சரி உம்மா அல்லா நல்ல வசதியும் சொகமும் தந்தீச்சி. கட்டாயம் ரெண்டு பேரும் இந் வருஷம் ஹஜ்ஜுக்குப் போம். எனக்கும் அதுதான் ஆச'' என்று கணவர் காதர் சந்தோஷமாகக் கூறினார். பயணத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதும் திடீரென ஒருநாள் கணவர் இருதய நோயினால் காலமாகி விட்டார்.

இருவருக்கும் ஹஜ்ஜுக்காக சேர்த்து வைத்திருந்த பணத்தை மூத்த மகன் முஸ்தபாவிடம் ஒப்படைத்தார் அவர்.

''உம்மா... நீங்க தந்த சல்லிய நான் ஏண்ட யாவாரத்துக்கு போட்டுக் கொள்ளிய. இத்தாவிலிருந்து நீங்க வெளியெறங்கிய பொறகு ஒங்கள ஹஜ்ஜுக்குக் கூட்டிக்கொண்டு போறன்.'' என்று கூறிக் கொண்ட முஸ்தபா அந்தப் பணத்தை வைத்துக் கொண்டே உழைக்கத் தொடங்கினான்.
நாட்கள் நகர்ந்தன. வருடங்கள் சில கழிந்தன. இருந்தும் ராபியா உம்மாவுக்கு ஹஜ் பயணம் இதுவரை நடக்கவில்லை. இதனால் மிகவும் கவலைப் பட்டார் அவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகன்... ஹஜ் கிட்டவாகிட்ட. இந்த மொறையாவது நான் ஹஜ்ஜுக்குப் போகோணும். எங்களப் பாக்க வசதி இல்லாதவங்களே அத செஞ்சிட்டு வார. வாப்பாவும் ஹஜ்ஜுக்குப் போகாம எனக்கிட்ட தந்த சல்லிய வச்சிக் கொண்டு இன்னமும் நீங்க யாவாரமே செய்த. எனக்கு ஒங்கட போக்கே புடிச்சல்ல. நாளைக்கு அல்லாக்கிட்ட பதில் செல்ல வரும். சல்லி சம்பதிச்சோனும் எண்டத்துக்காக நன்மையை சம்பாதிச்சியத்தையும், அல்லாவ சந்தோசப்படுத்தியதையும் பின்னாக்கியது அவ்வளவு நல்லமில்ல. நன்மையச் செய்ய நாங்க சொணங்கப் படாது. நல்லா கொஞ்சம் யோசிச்சி நடங்கோ மகன்" என மகனோடு கவலையுடன் கதைத்தார் ராபியா உம்மா.

சில நாட்கள் கடந்த பின் அவருக்குரிய கடவுச் சீட்டு தயாரிக்கப்பட்டு விட்டது. அவர் மிகவும் மகிழ்ந்து போனார்.

"உம்மா இந்த மொற எப்பிடியாவது நா ஒங்கள ஹஜ்ஜுக்கு அனுப்பிய. கவலப்படாம சந்தோசமா இரீங்கோ" என தாயாருக்கு ஆறுதல் கூறினான் முஸ்தபா.

இம்முறை ராபியா உம்மா ஹஜ்ஜு செய்ய இருப்பது ஊர் முழுக்க பரவி விட்டது. பலரும் வந்து அவரைச் சந்தித்து அவருடன் கதைத்து முஸாபஹா செய்து விட்டுப் போனார்கள். ஹஜ் பயணத்துக்குரிய உடைகளும் அவருக்கு தயாராகி விட்டன.

அன்று மாலை வேளை வீட்டில் ஓய்வாக இருந்தான். அப்பொழுது, "அஸ்ஸலாமு அலைக்கும்" என்றவாறு அங்கு வந்தார் அடுத்த கடைக்காரர் பஷீர் நானா. அவரைப் பெரிய பணக்காரர் என்று கூற முடியாவிட்டாலும். சிறியதோர் பெட்டிக்கடை வைத்து ஹலாலாக உழைக்கும் ஒரு மனிதர் அவர்.

"வஅலைக்கும் ஸலாம் வாங்க பஷீர் நானா" என்று அவரை வரவேற்றான் முஸ்தபா.

"முஸ்தபா நானும் ஏண்ட பொண்டாட்டியும் இந்தப் பைணம் ஹஜ்ஜுக்குப் போகப் போற துஆச் செய்ங்கோ" என்று கூறியதும் ஆச்சரியத்தால் அதிர்ந்து போனான் முஸ்தபா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எனத்தியன் நீங்க ரெண்டு பேரும் ஹஜ்ஜுக்குப் போகப் போறா?” நம்ப முடியாதவனாகக் கேட்டான் முஸ்தபா.

“அல்லா வசதியத் தந்தீச்சி. அதாலதான் நாங்க ரெண்டு பேரும் போறத்துக்கு நிய்யத்து வச்சீட்ட” என்று கூறிய பஷீர் நானாவை இடைமறித்த அவன்,

“பஷீர் நானா செல்லியத்துக்கு ஒன்டும் நெனச்ச வேணாம். ஒங்கட பொட்டிக் கடய பெரிசாக்காம, ஊட்டுல கலியாணத்துக்கு ஈச்சிய மகளயும் வச்சீட்டுப் போகப் போறே. அதுதான் புதினமா ஈச்சி” என்று தனது அதிர்ச்சியை வெளிக் காட்டினான் முஸ்தபா.

“அதுல எனத்தியன் புதனம் ஈச்சிய. அதுக்கெல்லம் அல்லா ஈச்சி. அவன் தாரோண்டு. அதப் பத்தி எங்களுக்கு ஒரு பயமும் இல்ல” என்று கூறி விட்டு விடை பெற்றுச் சென்று விட்டார் பஷீர் நானா.

ஹஜ்ஜுக்குரிய காலம் நெருங்கி விட்டது. மகனைத் தன்பக்கம் அழைத்த ராபியா உம்மா,

“மகன்... முஸ்தபா எனக்கு பாஸ்போட் எடுத்துத் தந்துட்ட. ஹஜ்ஜுக்குப் போக சல்லிய ஏஜென்ஸிக்கு கெட்டீட்டா?” ஆர்வத்தோடு கேட்டார்.

“இல்லும்மா இன்னும் கெட்டல்ல. ஒன்டும் நெனச்ச வேணாம் என்ன மன்னிச்சிக்கோங்கோ. இந்த வருஷம் நீங்க போகத் தேவல்ல. அடுத்த வருஷம் கட்டாயம் அனுப்பியன். எங்கட கடைக்கு முன்னால ஈச்சிய கடயையும், காணியையும் விச்சப்போறன்டு அதுட சொந்தக் காரன் சென்ன. ஒங்களுக்கு வெச்சீந்த சல்லிக்கு நான் அத வாங்கீட்ட. வாங்காட்டி எனக்குத்தான் நஷ்டம். ஹஜ்ஜ வேணுமென்டா அடுத்த வருஷம் செய்யேலும்” என்று முஸ்தபா உறுதியாக கூறியபோது அதிர்ந்து போனார் அந்தத் தாய். மகனின் பேச்சைக் கேட்டதும் அவரின் நெஞ்சம் பதறியது. கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.

“மகன் வசதியும் சொகமும் ஈச்சிய நேரம் ஹஜ் கடமய பொறக்கணிச்சிட்டு கடைசியில கடமையச் செய்யாம மௌத்தாப்போனா ஏன்ட கெதி எனத்தியன் ஆகிய? நாளைக்கு அல்லாட கேள்வி கணக்குக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரும் பதில் செல்ல ஏலா. எங்கட கபுருக்கு நாங்கதான் தேடிக் கொள்ளோனும். நல்லா யோசிச்சுப் பாரு மகன்'' என உள்ளத்தை உருக்கும் விதம் அவர் உரைத்தும் அவை செவிடன் காதில் ஊதிய சங்காகின. முஸ்தபா தனது போக்கில் விடாப்பிடியாகவே இருந்து விட்டான்.

முஸ்தபாவின் செய்கையை அவன் மனைவியினால் பொறுக்க முடியவில்லை.

''எனத்தியன்வா நீங்க செய்த. மாமி பாவம்வா. அந்தச் சல்லியால கட காணி வாங்காம மாமிய எப்பிடியாவது ஹஜ்ஜுக்குக் கூட்டிக் கொண்டு போகோணும். நீங்க அதயும் இதயும் செல்லி சமாளிச்சிக் கொண்டு ஈச்சிய. ஒங்களுக்கு சல்லிக்கு மேல்ல சல்லி சேக்கியத்தத் தவிர அத அல்லாட பேருல செலவலிச்ச மனசில்ல. அதாலதான் காலத்தக் கடத்திக் கொண்டே போற'' என்று மனைவி கவலையோடும், ஆதங்கத்தோடும் கூறிய போது அவனுக்கு அவள் மீது கோபம் கோபமாக வந்து விட்டது.

''அடியே... நீ ஓண்ட வாயப் பொத்திக் கொண்டு இரி. இதப்பத்தி நீ பேசத் தேவல்ல. ஏண்ட வாப்பாட சல்லி அது. எனக்கு அதால எனத்தயும் செய்யேலும்'' என்று கோபத்தோடு அவன் கத்திய போது அவள் வாயை மூடிக் கொண்டாள்.

தாயார் ராபியா உம்மாவுக்கு கல்பு நிறையக் கவலையாகவே இருந்தது. பண வசதி இருந்தும் ஹஜ் கடமையைச் செய்ய முடியாமல் போனதை அவரால் தாங்க முடியவில்லை. எந்தச் சந்தோசமுமின்றி சோகமாகவே இருந்து விட்டார் அவர்.

சனிக் கிழமை ஹஜ் பெருநாள் கொண்டாடப்பட்டது. பெருநாள் தொழுகையை முடித்தபின் ஆறாத துயரத்தோடு இருந்தார் ராபியா உம்மா. சில நாட்கள் கடந்ததும் வெள்ளிக் கிழமை வந்து விட்டது. அன்று ஜும்ஆத் தொழுகைக்காக பள்ளிவாசலுக்குப் போயிருந்தான் முஸ்தபா. இமாம் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். அது ஹஜ்ஜைப் பற்றியதாகவே இருந்தது.

''அல்லாஹ்வின் நல்லடியார்களே! இன்று எம்மில் பலர் வசதியும் வாய்ப்பும் இருந்தும் கூட இந்த வருடம் வேண்டாம் அடுத்த வருடம் ஹஜ் செய்வோம் என்று காலத்தைக் கடத்திக் கொண்டே வருகிறார்கள். அடுத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹஜ் வரும் போது இத்தகையோர் பண வசதி குறைந்து வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டாலும் கூட, வசதியிருக்கும் போது ஹஜ் செய்யாத குற்றத்திற்கு அவர்கள் ஆளாவார்கள். அந்தக் கடமை, கடன் இவர்கள் மீது இருந்து கொண்டே இருக்கும். மேலும் போதியளவு வசதியும், தகுதியும் உள்ள ஒருவர் ஹஜ் கடமையை நிறைவேற்றாத நிலையில் மரணித்தால் அவர் யஹூதியாகவோ, நஸாராவாகவோ மரணிக்கட்டும் என நாயகம் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்'' என இமாம் கூறக்கூற முஸ்தபாவின் இதயம் விம்மி அழுதது. அவன் இதயத்தில் இனம் புரியாததோர் பயமும் நடுக்கமும் ஏற்படத் தொடங்கியது. உம்மாவை ஹஜ்ஜுக்கு அனுப்பாததை நினைத்த போது உள்ளம் பதற கண்கள் கண்ணீரை வடித்தன. அவசரமாக உம்மாவைக் காண வேண்டும் என உள்ளம் துடித்தது. தொழுது முடிந்தவுடன் வீட்டை நோக்கி அவசரமாக நடக்கத் தொடங்கினான். அப்போது அவனது கையடக்கத் தொலைபேசி மணியடித்தது. ஹலோ எனப் பேசத் தொடங்கினான்.

''ஹலோ நான் ஒங்கட பொம்புள பேசிய. அவசரமா வாங்கோ. ஏன்ட மாமிக்கு... ஒங்கட உம்மாக்கு எனத்தையோ வருத்தமா ஈச்சி'' என்று கவலையோடு கூறினாள் அவன் மனைவி.

மனைவி சொன்ன செய்தியைக் கேட்டதும் முஸ்தபாவுக்கு பதட்டமாகவும் இருந்தது. பயமாகவும் இருந்தது.

''யா அல்லாஹ் ஏன்ட உம்மாக்கு எந்த நோயும் வராம சொகத்தக் கொடு நாயனே'' மனம் நிறைய அல்லாஹ்விடம் வேண்டியபடி விரைவாக வீட்டைச் சென்றடைந்தான் முஸ்தபா. உடனே உம்மாவின் அறைக்குள் ஓடினான். அங்கே பக்கத்து வீட்டுப் பெண்களும் உறவினர்களும் குழுமியிருந்தார்கள். உம்மாவின் கட்டிலை நெருங்கியவன் அதிர்ச்சியடைந்தான். உம்மா கதைக்க முடியாதவாறு தடுமாறியபடி, எழும்ப முடியாமல் படுக்கையில் படுத்திருந்தார்.

''ஏன்ட உம்மா... நான் வந்துட்ட... என்னோட பேசுங்கோ. ஒங்களுக்கு என்னத்தியன் வேணும்'' என்று உம்மாவின் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு கண்ணீர் வடித்தபடி கேட்டான் முஸ்தபா.

''மக..ன் மக...ன் எனக்...கு ஸம் ஸம் தன்..னி கொ..ஞ்சம் பரு..க்கி உடுங்..கோ'' எனத் தடுமாறியபடி திக்கித் திக்கிக் கூறிய அவரின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. ஸம் ஸம் தண்ணீரை எடுத்து உம்மாவின் வாய்க்குள் பருக்கி விட்டான் முஸ்தபா.

"லா இலாஹ... இல்...ல..ல்லாஹ் முஹம்மதுர் ரசூ..லு...ல்லாஹ்" ராபியா உம்மா திணறித் திணறி கலிமாவைக் கூறத் தொடங்கினார்.

"உம்மா ஓங்களுக்கு நான் என்னத்தியன் செய்யோணும்" ஆர்வத்தோடும், கவலையோடும் கேட்டான் முஸ்தபா.

"எனக்கு ஒன்...டும் வேணா..ம். நா..ன் ஹஜ்..ஜுக்குப் போக வெச்...சிருந்த சல்...லியால ஏன்ட தங்க...ச்சி மரி...யத்தயும், வாப்பாட தங்...கச்சி ஓன்ட ரா..ஹிலா மாமியை...யும் அடுத்த ஹஜ்..ஜுக்கு அனு...ப்பு மக...ன்...." அதற்கு மேல அவரின் வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை. கைகள் இரண்டும் தக்பீரைக் கட்டிக் கொண்டன. கண்கள் இரண்டும் மூடிக் கொண்டன.

உம்மா உம்மா என்று கதறியழுதபடி நின்றிருந்தான் முஸ்தபா. ராபியா உம்மாவைத் தொட்டுப் பார்த்தபடி இருந்த அடுத்த வீட்டு மாமி,

"மகன் அழ வேணாம். சத்தம் போட வேணாம் உம்மா மௌத்தாகிட்ட. உம்மா சென்னத்தச் செய்ங்கோ. இப்ப துஆவும் செய்ங்கோ. அல்லா அவக்கு சொர்க்கத்தக் குடுக்கோணும்" மாமி சொன்னதைக் கேட்டதும் அவனின் தலையில் இடி விழுந்ததைப் போல் இருந்தது. உம்மாவின் பிரிவை அவனால் தாங்க முடியவில்லை.

"ஏன்ட உம்மோ... என்ன மன்னிச்சிக்கொங்கோ... யாஅல்லாஹ் என்ன மன்னிச்சிக்கோ நாயனே ஏன்ட உம்மாக்கு சொர்க்கத்த குடு நாயனே" என கதறியழுதபடி மன்னிப்புக் கேட்டான் முஸ்தபா.

**இன்றே தாயின் பயணம் தொடங்கப் போகிறது.**

**நன்றி விடிவெள்ளி - 08-09-2017**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம்...!

முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்தார்கள் இர்ஷாத் மௌலவியும், அவர் அருமை மகன் இஷ்பாக்கும். வெள்ளிக் கிழமை ஜூம்ஆத் தொழுகையின் பின் உணவுண்டு விட்டுத்தான் வாப்பாவும் மகனும் பயணிக்கிறார்கள். பாவம் அவர் மனைவி சுமையா ஒரு வருடத்தின் பின் தான் அவளின் ஊருக்குச் சென்றிருக்கிறாள். கடந்த மாதம் கடைசித் திகதி பாணந்துறையிலுள்ள அவள் மாமா வீட்டிலும், இந்த மாதம் முதலாம் திகதி அவளின் ஊரில் நானாவின் பிள்ளைக்கும் திருமணம். இரண்டு வீடுகளுக்கும் செல்ல வேண்டிய அவசியம் இருந்ததால் இரண்டு தினங்களுக்கு முன்பே அவளை அவர் அங்கு கொண்டு போய் விட்டு விட்டார். நீண்ட நாட்களுக்குப் பிறகு குடும்பத்தாருடனும், உறவினர்களுடனும் ஒன்று சேர்ந்ததில் அவளுக்கு அளவிட முடியாத மகிழ்ச்சி. ஐந்து நாட்களின் பின் அங்கு போய் அவளை அழைத்து வரவே இந்தப்பயணம்.

இர்ஷாத் மௌலவி நீண்ட காலமாகவே பள்ளிவாசல்களில் பணி புரிபவர். திருமணத்திற்கு முன்பிருந்து இன்று வரை முப்பது வருடங்களுக்கு மேலாகப் பள்ளி வாசல்களிலே கதீபாக பணி செய்பவர் அவர்.

அவருக்கு மூன்று பிள்ளைகள். ஒரு மகனும், இரண்டு மகள்மாரும் தான் அவரின் அன்புச் செல்வங்கள். மகன் இஷ்பாக் பல்கலைக் கழகக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறான். தற்போது விடுமுறைக்காக ஊரில் இருக்கிறான்.

இர்ஷாத் மௌலவி பன்னிரெண்டு வருடங்களாக ஊர் பள்ளிவாசல் ஒன்றில் தொடர்ந்து கதீபாகப் பணி புரிந்தாலும் கூட அவரின் சம்பளம் சாதாரணமாகத் தான் இருக்கிறது. பள்ளிவாசல் நிர்வாகம் அதனை இன்னும் கூட்டிக் கொடுப்பதற்கு தயாராகவில்லை என்பது கவலையான விடயம் தான்.

நீண்ட காலங்களாகவே பள்ளிவாசல்களில் பணிபுரிபவர்கள் வயோதிபம் அடையும் போதோ, நிரந்தர நோயாளிகளாகவோ மாறும் போதோ அவர்களின் நிலை கவலைக்குரியதாக ஆகிவிடுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பளமோ, ஓய்வூதியமோ இன்றி அத்தகையோரில் பலர் துயரத்தின் எல்லைக்கே போய் இவ்வுலகை விட்டும் பிரிந்ததையும், அவர்களின் குடும்பங்கள், பிள்ளைகள் அதனால் பெரிதும் பாதிக்கப்படுவதையும் யாரும் அறியாமல் இல்லை. இத்தகையோருக்கு உதவுவதற்கு உலமா சபையோ, சமூக அமைப்புக்களோ முன்வர வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இர்ஷாத் மௌலவி குறைந்த சம்பளத்தில் வாழ்ந்தாலும் அவரின் பிள்ளைகளை நன்றாக வளர்த்து சிறப்பாக கல்வி பயில வைத்தும் விட்டார். எளிய வாழ்க்கையாக இருந்தாலும் அவரின் குடும்பம் அல்லாஹ்வின் கிருபையால் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறது.

அவர் பணவசதி குறைந்தவராக இருந்தாலும் தன்னிடமிருந்த மோட்டார் சைக்கிளை விற்று விட்டு மனைவி தந்த இரண்டு பவுண் தங்க மாலையையும் விற்று விட்டு பல சிரமங்களுக்கு மத்தியில் ஒரு பழைய ஆட்டோவை வாங்கி வைத்திருக்கிறார் அவர். பள்ளிவாசலுக்கும், தேவையான பயணங்களுக்கும் அதனை பயன்படுத்தி வருகிறார்.

ஆட்டோ மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. அதனை வாப்பாவும், மகனும் மாறி மாறி நகர்த்திக் கொண்டிருந்தார்கள்.

"வாப்பா... இப்ப எங்கட ஆட்டோ அவசரமாகப் போறல்ல. கொஞ்சம் சிலோவாகத் தான் பெய்த்துக் கொண்டு ஈர" என்று மகன் கூற,

"ஓ மகன்... இது பழய ஆட்டோ. மிச்சம் நாளா பாவிச்சிட்ட. கொஞ்சம் ரெப்பயாருக்கும் போட்டுப் பாக்கோணும். அதுக்குப் பொறகு சரியாகும். மிச்சம் அவசரம் வேணாம். கவனமாக ஓட்டுங்கோ" என்று மௌலவி கூற,

"வாப்பா... இப்ப கொழும்பால போறல்லயா...? செல்லுங்கோ" மகன் கேட்க,

"இல்ல மகன் அங்கால ட்ரெபிக் கூட. பஸ்யால கிட்டவாகிட்ட.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்யாலைக்குள்ளால ஹொாரனைக்குப் பெய்த்து அளுத்கமைக்குப் போம்'' என்று வாப்பா கூறிய விதம் இஷ்பாக் ஆட்டாவை ஓட்டிக் கொண்டிருந்தான்.

இப்போது அவர்கள் நீண்ட தூரம் பயணித்து விட்டார்கள். இர்ஷாத் மௌலவி ஆட்டாவை ஓட்டிக் கொண்டிருந்தார். பாதுக்கையைத் தாண்டி சிறிது தூரம் சென்றதும் ஆட்டா இயங்காமல் நின்று விட்டது. வாப்பாவும் மகனும் ஆட்டாவை ஓட்டுவதற்கு முயற்ச்சித்தார்கள். இருவராலும் முடியவில்லை. நேரம் இரவு ஏழு மணியை அண்மித்து விட்டது. என்ன செய்வதென்று புரியாமல் அவர்கள் தடுமாறிக் கொண்டிருந்தார்கள்.

அது பெரும்பான்மையினர் வாழும் ஊர். ஒரு கிராமப் பகுதி வேறு. அதிகமாக மனிதர்களைக் காண மடியவில்லை. முச்சக்கர வண்டியை ஒரு ஓரமாக தள்ளி வைத்தக் கொண்டு அவர்கள் முயற்சித்தார்கள். அந்த இடத்திற்கு முன் ஒரு சிறிய கடை காணப்பட்டது. அந்தக் கடையின் முன் பக்கம் மூன்று பேர் உட்கார்ந்திருந்தார்கள். மூவரும் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள். சுவாரஸ்யமாக கதைத்துக் கொண்டிருந்த அவர்கள் மூவரும் இவர்களை நோக்கி எழுந்து வந்தார்கள்.

"மஹத்தயா என்னத்தன் நடந்த ?" ஆர்வத்தோடு கேட்டான் ஒருவன்.

"திடீரென்டு ஆட்டா நின்டிருச்சி ஸ்டார்ட் படுகுதில்ல" என்று சொன்னார் இர்ஷாத் மௌலவி.
"கொஞ்சம் இரிங்க பாப்பம்" என்று அவனும் முயற்சி செய்தான். அதுவும் தோல்வியாகவே முடிந்தது.

"மஹத்தயா ஆட்டா ரெப்பியார் பாக்குற ஆள் ஒத்தர் ஈர. டெலிபோன் பண்ணிப் பாக்குறன்" என்று கூறியவன் தொலைபேசியில் யாருடனோ பேசினான். பிறகு,

"மஹத்தயா... ஆள் கொஞ்சம் வேலயா ஈர போல. கொஞ்சம் நேரத்துல வாரானாம்" என்று கூறியவன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஒங்கட ஆட்டாவ தள்ளி இந்த கடைக்கு முன்னால போடுங்க. இங்க இருட்டா ஈக்கு. என்று சொல்லி விட்டு அவனும் சேர்ந்து ஆட்டாவை தள்ளி கடை முன்னால் நிறுத்தினான். களைப்படைந்த இர்ஷாத் மௌலவி செய்வதறியாது கொஞ்சம் உட்கார்ந்து கொள்வோம் என்று எண்ணிய போது, ஒரு கதிரையை எடுத்து வந்து உட்காருமாறு கூறினான் அவரை அறிந்திராத மனிதன்.

“மஹத்தயா நீங்க எங்கெயன் ஊரு. எங்கயன் போற” ஆர்வத்தோடு கேட்டான்.

“ஐயா! நாங்க மாவனல்ல. இப்ப அளுத்கமைக்கப் போற. ஏன்ட பொம்புள அங்கதான் ஈர. அவவும் கொஞ்சம் நோயாளி. இன்டக்கி அங்க கலியாணமும் ஈர. அதுக்கும் போயிட்டு அவவையும் நாளைக்கி கூட்டிக் கொண்டு வரோணும். அதுதான் இப்ப போற என்று மௌலவி விபரம் கூறியதும்,

“சரி... இது இங்க ஈக்குற ஆட்டா ஏன்ட தான் பாஸ் வந்தா ஒங்கட ஆட்டாவ நான் செஞ்சி வச்சுறன். இப்ப இந்த ஆட்டாவ எடுத்துக் கொண்டு போங்கோ ஒங்கட வேலய முடிச்சிட்டு காலையில வாங்கோ” என்று கூறினான் அவன்.

இது ஏதோ பேச்சுக்காகத் தான் சொல்கிறான் என்று மனதில் நினைத்துக் கொண்ட இரஷாத் மௌலவி,

“சரி... இப்ப பாஸ் வாரன்டு சென்னதானே... கொஞ்ச நேரம் பாப்போம்” என்று கூறினார்.

சிறிது நேரம் கழிந்தது. பாஸ் வரவில்லை. மீண்டும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விசாரித்த அந்த நபர்,

“அவருக்கு கொஞ்சம் பெரிய வேல போல. வர லேட்டாகுமாம். நீங்க இந்த ஆட்டாவ எடுத்துக் கொண்டு போங்கோ” என்று மலர்ந்த முகத்துடன் உளப்பூர்வமாக கூறியபோது இர்ஷாத் மௌலவிக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

“ஐயா! இது நீங்க ஹயர் போற ஆட்டாவா” என்று கேட்ட போது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘இல்ல மஹத்தயா எனக்கு ஹயர் ஒன்டும் தேவையில்ல. நீங்க ஒங்கட வேலய முடீங்க’’ என்று முடிவாகக் கூறி விட்டான்.

‘‘எனக்கு மிச்சம் சந்தோசம் ஐயா! நாங்க ரெண்டு பேருமே ஒருத்தர ஒருத்தர் தெரியாதவங்க இன்டக்கிதான் கண்டீர. ஒங்கட நல்ல மனசுக்கும், மனிசத் தன்மைக்கும் மிச்சம் தேங்ஸ்’’

இப்படி பேசிக் கொண்டிருக்கும் போது அங்கு வந்த அவனது மைத்துனன்,

‘‘மச்சான் இன்டக்கி கொழும்புல ஈக்கர மாமா ஊட்டுக்குப் போகோணும்டு சென்னதானே’’ என்று நினைவூட்டிய போது.
‘‘பரவாயில்ல மச்சான். வேறொரு நாளைக்கு அங்க போற. இவரு பாவம். இவரே ஆட்டாவக் கொண்டு போகட்டும். என்று கூறி தனது பயணத்தையும் கைவிட்டான் அவன்.

இனமத வித்தியாசங்கள் பார்க்காது, முன் பின் தெரியாத தனக்கு மனித நேயத்தோடு அவன் உதவி செய்ததை அவரால் மறக்க முடியவில்லை. அவர் இதயத்தில் அவன் இமயமாகிப் போனான்.

‘‘சரி ஐயா. இதுல ஏன்ட ஐடீன்டி நம்பர், டெலிபோன் நம்பர், எட்ரஸ் எல்லாம் ஈர. நான் நாளைக்கு மோனிங் வார. இந்தாங்கோ இந்தச் சல்லிய வேணான்னு செல்ல வேணாம்’’ என்று கூறியவர் அவன் கையில் விஸிடிங் காடையும், ஆயிரம் ரூபாய் பணத்தையும் கொடுத்து விட்டு தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

மனைவி சுமையாவின் ஊர் போனதும் அவளிடமும் அவள் குடும்பத்தாரிடமும் இந்தச் சம்பவத்தைக் கூறிய போது, அவர்களுக்கு ஆச்சரியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது.

‘‘இந்த விசயம் கேக்குறத்துக்கு மிச்சம் சந்தோசமா ஈர மச்சான். ஒத்தன் சாதி மதம் பாக்காம தன்ட வாகனத்த தந்தது பெரிய விஷயம் தான். எங்களுக்கு தெரிஞ்ச ஒத்தனே கொஞ்ச நேரத்தக்கு தர மாட்டான்’’ அவரின் மைத்துனி நூருல் ஐன் கூறிய போது,

‘‘நீங்க செல்றது சரிதான் மைனி. அந்தப் பக்கத்தால ஆட்டா,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார், வேன் என்டு எத்தினயோ வாகனங்கள் பெய்த்த. அதுல ஏத்திக் கொண்டு போகவாவது தாருமே நெனச்சல்ல. இதுதான் உலகத்துட போக்கு. இருந்தாலும் அந்நிய ஒத்தன் செஞ்ச ஒதவிய என்டக்கிமே மறக்கேலா'' என உணர்ச்சி பூர்வமாகக் கூறிக் கொண்டார் இர்ஷாத் மௌலவி.

மறுநாள் காலை ஆட்டாவை உரியவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதற்காக மகனுடன் புறப்பட்டார் அவர். சில மணி நேரங்களில் அந்த ஊருக்கும் வந்து விட்டார்கள்.

"மஹத்தயா! இரவு அந்த பாஸ் வந்து ஆட்டாவப் பாத்த. அத செய்ய ஏலாண்டு சென்ன. இங்க இன்னொரு பாஸ் ஈர. ஆனா கொஞ்சம் தூரம். அங்க போனா செஞ்சிக் கொள ஏலும்'' என்று கூறிய அவனே பல சிரமங்களுக்கு மத்தியில் சில மேடு பள்ளங்களைக் கடந்து அந்த வண்டியை அங்கு கொண்டு வந்து சேர்த்தான். அங்கு வேலை பார்ப்பவனும் கால்களை மடிக்க முடியாதவனாக கால்களை நீட்டியபடியே ஒரு நோயாளியாக இருந்தான். அவனும் பல சிரமங்களோடு முயற்சித்து பார்த்து விட்டு,

"ஆட்டாட எஞ்சின்ல தான் பிரச்சின ஈர. அதக் கலட்டித் தாரன் ஒங்கட ஊர்ல கொண்டு பெய்த்து செஞ்சிக் கொண்டு வாங்கோ'' என்று கூறி அந்த எஞ்சினைக் கழட்டிக் கொடுத்தான். இதனை அவதானித்துக் கொண்டிருந்த ஆட்டாவின் சொந்தக்காரன்.

"மஹத்தயா ஏன்ட ஆட்டாக்குள்ளயே எஞ்சினப் போட்டுக் கொண்டு போங்கோ. வேணுமண்டா ரெண்டு நாளக்கி ஏண்ட ஆட்டாவ நீங்க வச்சிக் கோங்கோ. பொறகு ஆட்டாவத் தாங்கோ'' என்று கூறிய போது இர்ஷாத் மௌலவியும் மகன் இஷ்பாக்கும் வியப்பின் எல்லைக்கே போய் விட்டார்கள்.

"சரி ஐயா! நீங்க செய்ற ஒதவிக்கு மிச்சம் தேங்ஸ்'' என்று கூறியவர் தன்னுடைய இக்கட்டான நிலைக்கு உதவி செய்ய அவனை உருவாக்கித் தந்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு மனப் பூர்வமாக நன்றி கூறிக் கொண்டார்.

அன்று இரவே அவரும், மனைவியும், மகனும் ஊர் வந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து விட்டார்கள். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் தனது கணவருக்கு உதவி செய்யும் உயர்ந்த உள்ளத்தோடு மூன்று தினங்களுக்கு அவரது வண்டியை வழங்கியது மௌலவியின் மனைவி சுமையாவுக்கும் மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. மறுநாள் காலை ஆட்டாவுக்குரிய எஞ்சினை ஒரு இடத்துக்கு கொடுத்து அதனை திருத்துவதற்கும், தேவையான உபகரணங்களை வாங்குவதற்கும் பணத்தை கொடுத்தார் அவர். அன்றே முழு வேலையும் முடிந்து விட்டது.

"ஏ... இஷ்பாக்குட உம்மா கொஞ்சம் வாங்கே. எங்களுக்கு ஒதவி செஞ்ச அந்த ஆட்டாக் காரனுக்கு ஏதாவது ஒதவி செய்யோனும் போல ஈர. நீங்க எனத்தியன் செல்ற?" என்று கணவர் கேட்ட போது,
"கட்டாயம் ஏதாவது ஒதவி செய்யத் தான் வேணும். அந்த ஆக்கள் எங்கட ஆக்கள் செய்ற வட்டிலாப்பத்தத் தின்னத்துக்கு மிச்சம் விருப்பம். அதால இருபது முட்டைக்கு வட்டிலாப்பத்தச் செஞ்சி குடுக்கோம்" என்று மனைவி மகிழ்ச்சியோடு கூறிய போது, அவருக்கும் அது விருப்பமாக இருந்தது.

இரவோடு இரவாக வட்டிலாப்பம் செய்யப்பட்டது. அடுத்த நாள் அதனையும் எடுத்துக் கொண்டு, இன்னும் பழ வகைகளையும் வாங்கிக் கொண்டு வண்டியின் என்ஜினையும் எடுத்துக் கொண்டு அவரின் நண்பர் ஒருவருடன் புறப்பட்டுச் சென்றார் இர்ஷாத் மௌலவி.
வரகாபொலையை ஆட்டா தாண்டி விட்டது. இர்ஷாத் மௌலவி பெற்றோால் நிலையத்தில் ஆட்டாவை நிறுத்தினார்.

"ஹஸரத்... பெற்றோல் முடியல்லையே. இப்பதான் மாவனல்லையிலும் பெற்றோல் அடிச்சோமே" என்று அவர் நண்பர் கேட்ட போது,

"முன்னுக்குப் பின் தெரியாத எனக்கு மூனு நாளைக்கு அந்த ஆள் ஆட்டாவத் தந்துட்டான். அதுக்காக ஆட்டோ புல்லாக பெற்றோல் அடிச்சிக் குடுக்கோணுமெண்டு எனக்கு மிச்சம் ஆச. அதுதான் இங்க வந்த" என்று விபரம் கூறினார் அவர்.

சில மணி நேரங்களுக்குள் அந்த ஊர் போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் கொண்டு சென்ற என்ஜின் அவரின் ஆட்டாவுக்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்தப்பட்டது. ஆட்டாவுக்குச் சொந்தமானவனைத் தேடினார் அவர். அவனை அங்கு காண முடியவில்லை. சிறிது நேரத்தில் அவனுடன் தொலைபேசியில் கதைத்த போது அவனும் அங்கு வந்து சேர்ந்து விட்டான்.

"எனக்கு நீங்க செஞ்சது பெரிய ஒதவி. இத நான் எப்பவும் மறக்க மாட்டன். ஒங்களுக்கிட்ட ஈக்குற மனிசத் தன்மையும் நல்ல மனசும் எல்லார்கிட்டயும் இருக்கோணும்" என்று கூறியவர் தான் கொண்டு வந்த வட்டிலாப்பத்தையும் பழங்களையும் அவனிடம் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்ட அவன் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்து கொண்டது.

"மஹத்தயா... ஒங்களுக்கு மிச்சம் தேங்ஸ். ஒங்கட ஆக்கள் செய்ற இந்த வட்டிலாப்பத்துல எங்கட ஆக்கள் எல்லாருக்கும் மிச்சம் விருப்பம்" என்று புன்னகைத்தபடி அவன் கூறிய போது,
"ஐயா! ஒங்களுக்கு எத்தனையோ வேலைகள், தேவைகள் ஈந்தும் ஊர் பேர் தெரியாத என்ன நம்பி ஒங்கட ஆட்டோவ மூனு நாளைக்கு தந்துட்ட. இப்பிடி தாரும் செய்றல்ல. இந்தாங்கோ இந்த சல்லியையும் வச்சிக்கோங்கோ" என்று கூறிய இர்ஷாத் மௌலவி அவன் கையில் இரண்டாயிரம் ரூபாவைக் கொடுத்தார்.

"சல்லி எனத்துக்கன்? எனக்கு வேணாம்" என்று அவன் மறுத்த போதும், அவன் சேட் பாக்கட்டுக்குள் அதனைப் போட்டு விட்டார். அவனது கைகள் இரண்டையும் அன்போடு பிடித்துக் கொண்ட அவர்,

"நா ஒங்கள ஒரு நாளும் மறக்க மாட்டன். எப்ப சரி எங்கட ஊர் பக்கம் வந்தா என் ஊட்டுக்கும் கட்டாயம் வாங்கோ" என்று அன்போடு கூறியவர், இனமத வித்தியாசம் பார்க்காம இவன் காட்டிய மனிசத் தன்ம எல்லார்ட மனசுலயும் கட்டாயம் ஈக்கோணும்" என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டு தன் நண்பருடன் மன நிறைவோடு ஊர் திரும்பினார் இர்ஷாத் மௌலவி.

(இது கற்பனைக் கதையல்ல நிஜம். பெயர்கள் மட்டும் மாற்றப்பட்டுள்ளன.)

**நன்றி : விடிவெள்ளி 23.02.2018**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூலின் பின்புற அட்டையை பெரும்பாலும் எழுத்தாளரே சுவீகரித்துக் கொள்வது வழக்கம். அந்த மரபினை மீறி எழுத்தாளரின் எழுத்துக்கு அழுத்தம் சேர்க்கும் ஒருவரை பின்புற அட்டையில் அறிமுகப் படுத்துவதில் பெருமை யடைகிறேன்.

அவர் எழுத்தாளர் சுலைமா சமி இக்பாலின் அன்புக் கணவர் மாவனல்லையைச் சேர்ந்த மௌலவி ஏ.ஸீ.எம் இக்பால் (பாஸி) அவர்கள். பின்புற அட்டையில் இடம்பெற மிகப் பொருத்தமானவர், திருத்தமானவர் என்பது என் கணிப்பு.

எழுத்தாளர் சுலைமா சமியின் ஏராளமான தொகுப்புக்கள் வெளிவர உந்து சக்தியாக அமைந்தவர். அதிக சிறுகதைகளுக்கு கருக்களை ஈந்து அவை உருப்பெற்று உயிர் பெற உரமூட்டியவர். தனது மனைவிக்காகவே எக்மி பதிப்பகத்தை ஏற்படுத்தி அவரது படைப்புக்களுக்கு வலது கரமாக இயங்கியவர். இன்று இப்பதிப்பகம் மூலம் ஏனைய எழுத்தாளர்களுக்கும் கரம் நீட்டுபவர்.

ஒரு முஸ்லிம் பெண் எழுத்தாளர் திருமணத்தோடு காணாமல் போவது இலக்கிய உலகின் சம்பிரதாயமாக மாறி விட்டது. ஆனால் சுலைமா சமி உச்சம் கண்டு பலரும் மெச்சப் புகழ் பெற்றது திருமணத்திற்குப் பின்பாகும். இதற்கு பக்க துணையாக நின்று மிளிர வைத்த பெருமை கணவர் இக்பால் அவர்களையே சாரும்.

சிறந்த பேச்சாற்றல் படைத்த அன்னார் ஆக்க இலக்கியத் துறையிலும் ஆர்வலர். பல தொலைக் காட்சி - வானொலி நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர். மனைவியின் நூல் வெளியீட்டு விழா - அறிமுக விழாக்களை தரமான இலக்கிய நிகழ்வாக நடாத்திக் காட்டுவது இவரது இலக்கிய ஆளுமைக்கு ஊன்றிய சான்றாகும்.

**கலாபூஷணம் - திக்குவல்லை ஸப்வான்**

ISBN: 978-955-1825-15-7

வெளியீடு
ACMI Padhippaham

விலை ரூபா 400/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org